# ஓர் ஸத்தான! மாணவனுக்கு,
# ஸ்ரீஸத்குரு! சொல்லும் உபதேசம்!
## மலர் - 2



பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா

ஸ்ரீ ஸத்குரு திருவடி துணை!

# ஓர் ஸத்தான! மாணவனுக்கு, ஸ்ரீஸத்குரு! சொல்லும் உபதேசம்!

## மலர் - 2

தூளி பாபா

வெளியீடு :
**அன்பின் குடில் நிர்வாகம்,**
253/1, மேட்டூர் - பவானி மெயின் ரோடு,
கோம்பூர், நெரிஞ்சிப்பேட்டை,
அந்தியூர் தாலுக்கா, ஈரோடு மாவட்டம்,
தமிழ்நாடு - 638 311
தொலைபேசி : 04256 - 290655
அலைபேசி : 94439 63060/94425 46557
மின்னஞ்சல் : anbinkudil@yahoo.co.in

முதல் பதிப்பு : ஜனவரி 19, 2022
ஸ்வய ஞான அனுபவம் - அகண்ட பாராயணம்.

பிரதிகள் : 500

அட்டைப்படம் : ஸ்ரீஸத்குரு, ஸ்ரீஸத்சிஷ்யன்

அச்சிட்டோர்:
ஆரித்ரா பிரிண்டர்ஸ்
பெங்களூர் - 560 003
தொலைபேசி : (080) 23346025

# பொருளடக்கம்


| வ. எண். | | பக்கம் |
|---|---|---|
| 1. | விஷயானந்தம், பேரானந்தம், பிரம்மானந்தம், யோகானந்தம் | 1 |
| 2 | மஹான்களின் பாதச் சுவடுகள் | 6 |
| 3. | கேள்வியும், பதிலும் | 7 |
| 4. | ஆத்ம ஸாந்தியும் ஜனாபாயும் | 8 |
| 5. | சித்திரை 16, 108 ஞானானுபவம்!, 6 நீதிக்கதைகள்!! | 14 |
| 6. | உதகையில் ஓர் உரையாடல் குருபூர்ணிமா | 32 |
| 7. | தர்மம் - 16, கலைகள் | 38 |
| 8. | ஆன்ம உணர்வு | 46 |
| 9 | ஜக, ஜீவ, பர, ஐக்கியம் | 51 |
| 10 | பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி | 66 |
| 11 | ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் | 85 |
| 12 | அகண்ட ஏக ரஸம் (அல்லது) அகண்ட ஐக்கிய ரஸம் | 99 |
| 13 | மனமே ஜகத், மனமே மஹத் | 101 |
| 14 | 4வது முறை பத்ரியில் அகண்டானந்தம் | 113 |
| 15. | தர்மம் - திருஅண்ணாமலை | 121 |
| 16 | பூரண நிறைவு | 121 |
| 17 | பரிபூரணம் | 125 |
| 18 | புதிய படைப்பு | 132 |
| 19. | நாம் யார்? | 155 |
| 20. | கண்டுணர்வது | 157 |
| 21. | அரிய கருத்து | 160 |
| 22. | பரிபூரண பிரம்ம ரகஸ்யம் | 169 |
| 23. | பழமை | 175 |
| 24. | பழமையின் ரகஸ்யம் | 177 |
| 25. | கண்ட ஆனந்தம் | 182 |

26. அன்பின் குடில் நிலை, உயிர், உயில் ........................................ 187
27. பரிபூரண அறிய கருத்து ........................................ 189
28. அருளுரை ........................................ 195
29. குரு கிருபை ........................................ 200
30. குரு பரம்பரை ........................................ 203
31. ஒரு பைத்தியத்தின் பயணம் ........................................ 204
32. அகண்டானந்த யாத்திரை (கனடா) ஸத்ஸங்கங்கள் ........................................ 209
33. வெள்ளை புத்தகம் ........................................ 220
34. ஞான தீப மலர் இதழ் 2 ........................................ 222
35 மஹான்கள் வரலாறு ........................................ 223
36. ஸ்வய ஞானானுபவ விளக்க உரை ........................................ 224
37. காவிரி அன்னையுடன் உரையாடல் ........................................ 225
38. பக்தர்கள் சரித்திரம் ........................................ 225
39. பிராரப்தத்தை பரகர்மா வெல்லும் ........................................ 227
40. திருவடியின் ரகசியம் ........................................ 229
41. பொங்கல் பரிசு ........................................ 229
42. ஜெயம் கடிதம் ........................................ 231
43. ஓர் உண்மை ........................................ 231
44. ரிபு முனிவரும் ரிபு கீதையும் ........................................ 232
45. பொறுமையின் பெருமை ........................................ 234
46. கடோபநிஷத் ........................................ 235
47. கலியுக தர்மம் ........................................ 236
48. கடிதம் ........................................ 240

**எல்லாம் நீ!**

1. **இதய சுகம்!** என்றால்:- தெய்வ, குரு சம்பந்தமான **"எண்ணத்துடன்"**, இனிமையான வார்த்தை, இதமான வார்த்தை, மிதமான வார்த்தைகளை **நிலை**கண்டு, பொருள் கண்டு, இடம் கண்டு **சுருங்கச் சொல்லி பேசி,** பேசாமல் அடங்கி இருத்தலினாலும், சாட்சியாக இருப்பதினாலும் "**இதய சுகம்**" கிடைக்கும்!

விஷயானந்தம், பேரானந்தம், பிரம்மானந்தம், யோகானந்தம் - 1

2. **எளிமை** என்பது:-

உணவு, உடை, இருப்பிடம், படிப்பு ஆகிய நான்கிலும் அடங்கும்.

விஷயானந்தம், பேரானந்தம், பிரம்மானந்தம், யோகானந்தம் - 2

3. **"எளிமை இனிமை"** என்றால்:-
   1. எதிலும் **"விகாரம்"** தோற்றாமலும் அது பற்றி **"விவரிக்காமலும்"** வாக்கும் எண்ணமும் அடங்கி இருப்பதாகும்.
   2. **"போட்டி, பொறாமை, கூச்சல், குழப்பம், பயம், கவலை"** ஆகிய எந்த குணாதிசயங்களும் இல்லாமல் அடங்கி இருப்பதாகும்.
   3. எந்நிலையிலும் எக்காலத்தும் **"காண்பதிலும், கேட்பதிலும், பேசுவதிலும் உணர்வுபூர்வமாய் அஹங்கார அபிமான"** மில்லாதிருப்பதாகும்.
   4. எந்த வினாடியும் இறை நாம ஸ்மரணையும் குரு நாம ஸ்மரணையும் கொண்டு **இருப்பதையும் நடப்பதையும்** அமைதியாக ஏற்றலாகும்.

5. எங்கும் **குறைவு நிறைவுகள்** தோற்றினால் **“மஹா சாந்தியாக”** ஏற்று **“எண்ணங்களை”** அழித்து வாக்கை நிறுத்தி அமைதி காத்தலாகும்.
6. உணவோ, உடையோ, இருப்பிடமோ எத்தனை குறைவாக மிக மிக ஏழ்மையாக (எளிமையாக) கிடைத்தாலும் அவற்றை ஈஸ்வரார்ப்பணமாக ஏற்றல்.
7. உணர்வுபூர்வமாக **“வாக்கில் இனிமையும்; வாழ்க்கையில் எளிமையும்;”** கொண்டு இறை நிறைவாக இருப்பதாகும்.

விஷயானந்தம், பேரானந்தம், பிரம்மானந்தம், யோகானந்தம் - 6

௪. **ஆனந்தம் நான்கு வகைப்படும்** அவைகளாவன!

1. விஷயானந்தம்;
2. பேரானந்தம்;
3. யோகானந்தம்;
4. பிரம்மானந்தம் என நான்காகும்.

விஷயானந்தம், பேரானந்தம், பிரம்மானந்தம், யோகானந்தம் - 7

5. **யோகானந்தம்!**

1. பேரின்பமாகிய பேரானந்தத்தில் அனுபவித்து அந்த **ஸ்ரீபகவான் கிருபை பெற்றும்** யோகானந்தத்திற்கு! போகலாம்.
2. **விஷய சுகம் நிக்ரஹம் செய்து** பேரானந்தம் பெறாமலும் அந்த யோகானந்தம் செல்லலாம்!

விஷயானந்தம், பேரானந்தம், பிரம்மானந்தம், யோகானந்தம் - 11

6. **பிரம்மானந்தம்!**

1. விஷய சுகம் நிக்ரஹித்து பேரானந்தமும் பரிபூரணமாக அனுபவிக்கும் போது **"யோக சாதனை"** செய்து **"பக்தியும் யோகத்தையும் இணைத்து"** பிரம்மானுசந்தானம் செய்தால் பிரம்மானந்தம் அதி சுலபமாக கிடைக்கும்!

2. யோகசித்தி பெறாமல் **"யோகத்தோடு கூடி ஞான விசாரணை செய்தால் அது பிரம்மானந்தமாகும்"!!!**

விஷயானந்தம், பேரானந்தம், பிரம்மானந்தம், யோகானந்தம் - 12

7. **அஷ்ட சித்தி!**

யோகானந்தம். இந்த யோகத்தை முறையாக தொடர்ந்து செய்து **"யோகசித்தி பெற்றால் அது அஷ்ட சித்தியாகும்"!!**

விஷயானந்தம், பேரானந்தம், பிரம்மானந்தம், யோகானந்தம் - 12

8. 1. **பக்தி**:- விபரம் அறியா குழந்தையாகும்!

2. **யோக சித்தி:-** இது வாலிப நிலையாகும்!

3. **ஆத்ம ஞானம்:-** ஒன்றும் இயலாத வயோதிக நிலையாகும்!

விஷயானந்தம், பேரானந்தம், பிரம்மானந்தம், யோகானந்தம் - 12

9. **"பக்தி"** என்றால்:- ஓர் தாயின் கைகளில் **அவளால் பற்றப்பட்டு** தாயின் அரவணைப்பிலே நடந்து விளையாடும் ஓர் விபரம் அறியா குழந்தையாகும். இது **"முழு சரணாகதியினால்"** பெறுவதாகும்!

விஷயானந்தம், பேரானந்தம், பிரம்மானந்தம், யோகானந்தம் - 14

10. **"யோகம்"** என்றால்:- வாலிப நிலையில், தான் எந்த உதவியும் நாடாமல் **"தானே இயங்குவதாகும்".** இங்கு **நான்** செய்கிறேன், **என்னால்** முடியும் என்ற அஹங்காரம் மிகுதியாக இருக்கும்! **இங்கு சரணாகதி இல்லை!**

விஷயானந்தம், பேரானந்தம், பிரம்மானந்தம், யோகானந்தம் - ௰௫

11. **"ஆத்ம ஞானம்"** என்றால்:- எதுவும் இயலாத ஓர் **வயோதிக தன்மையாகும்.** இங்கு இவனுக்கு ஓர் **ஊன்றுகோல்** அவசியம் வேண்டும். இந்த ஊன்றுகோலே **ஸ்ரீஸத்குருவாகும்!** இங்கு தம் ஸ்ரீஸத்குருவிடம் முழுமையான சரணாகதி உண்டு!

விஷயானந்தம், பேரானந்தம், பிரம்மானந்தம், யோகானந்தம் - ௰௫

12. **அதுவே அனைத்தும்!**

**இந்த பிரம்மானந்தம் ஒன்றே** நித்தியமானது; ஸத்தியமானது; ஒரே ஆனந்தமயமானது; ஸ்வயமானது; பரப்பிரத்யக்ஷமானது; சுயம் பிரகாசமானது; பரமானது; பராபரமானது; பூரணமானது; குறையாத நிறைவானது; சாந்தியானது; அமைதியானது; மஹாமௌனமானது; தான்தானானது; மஹா ரகஸ்யமானது; பரம் பொருளானது; தேஜோமயமானந்தமானது; விவகரிக்க முடியாதது; எந்த விவகாரமும் அற்றது; **அது அதுவானது! ஸத்தும் அதுவே! சித்தும் அதுவே!! அதன் ஆனந்தமும் அதுவே!!! அது யாமே! அது நீயே!!** "அதுவே அனைத்தும்"!!!

விஷயானந்தம், பேரானந்தம், பிரம்மானந்தம், யோகானந்தம் - ௩௧

13. **ஜாக்ரதாவஸ்தையில் நீ விழிப்புடன் இருப்பதென்பது "இறை உறவு; குரு உணர்வும்"** ஆகும்.

1. **இறை உறவில்** *"அனைத்தும் அவனுடமையே என்றும் அனைத்தும் அவனே" என்றும்;*
2. **குரு உணர்வில்** *அனைத்தும்* காலாதீத ஒன்றே; அங்கு எந்த சஞ்சல குணங்களுக்கும் இடமில்லை என்றும், **அந்த "ஒன்றே நாம்; நாமே அது"** என்ற பேருணர்வோடு அதாவது மிகப்பெரிய உணர்வோடு இருப்பாயாக! ஆனால் சாதனை கடினம் தான். **"முயற்சி திருவினையாக்கும்".** "முயற்சி உன்னுடையது, செயல் அவனுடையது".

விஷயானந்தம், பேரானந்தம், பிரம்மானந்தம், யோகானந்தம் - 34

14. **மனதின் மயக்க மாயா விளையாட்டு!**

1. அந்த காலாதீத ஒன்றே மஹத்தான மனமாகி ஈஸ்வராதிகளை தோற்றுவித்துக்கொண்டு; மலின மனமாகி ஜீவர்களை தோற்றுவித்துக்கொண்டு; கீழான குணமாகி உலகை தோற்றுவித்துக்கொண்டு; ஜடத்தை ஜகமாக பாவித்து! குணத்தை பேதமாக பாவித்து! தம்மை அதன் உயிராக பாவித்து! **விளையாடிக் கொண்டிருக்கிறது!!!**
2. இதை **"மனதின் மயக்க மாயா விளையாட்டு"** என அறிவு பூர்வமாக என்று உணர்கிறாயோ அந்த க்ஷணமே, **மனப்பிடியிலிருந்தும்** விலகலாம்; ஜாக்ரதா அறியாமை உறக்கத்திலிருந்தும் **விழிக்கலாம்.** அனைத்து

**குணதோஷங்களிலிருந்தும்** விடுபடலாம்; மரண பயம் என்ற **கால பாசத்திலிருந்தும்** விடுபடலாம்.

விஷயானந்தம், பேரானந்தம், பிரம்மானந்தம், யோகானந்தம் - 38

15. **ஞானம் அடையும் வழி முறைகள்!**

1. ஞானம் என்பது எந்த கர்மாவினாலும் அடைய முடியாது. ஆனால் ஞானம் அடையும் முன் எந்த கர்மாவையும் துறக்க முடியாது.
2. ஞானம் என்ற மேல் தளத்திற்குச் செல்லும் படிக்கட்டுகளே ஸத்கர்மா, (நிஷ்காமிய கர்மா). அதுவே முடிந்த முடிவாகாது. ஞானம் அடையும்போது **"உலக மயக்கமும்" தெய்வ "பயத்தையும்"** விட்டே ஆக வேண்டும்.

மஹான்களின் பாதச் சுவடுகள் - 80

16. 1. **தூல விருத்தி**யை, சாட்சி விருத்தியில் (தெய்வத்தில்) ஒடுக்க வேண்டும்.
2. **சாட்சி விருத்தி**யை, அகண்ட விருத்தியில் (சர்வ சாட்சித் தன்மையில்) ஒடுக்க வேண்டும்.
3. **அகண்ட விருத்தி**யை, அகண்டைக ரஸத்தில் கலக்க வேண்டும், அதுவே ஜீவன் முக்தி.

மஹான்களின் பாதச் சுவடுகள் - 80

17. ஞானானுபவம் இல்லாதவர்களுக்கு **பேதமே!** ஞானானுபவம் உள்ளவர்களுக்கு **அபேதமே!!** பேதம் குற்றம் குறையே! அபேதம் ஆனந்த நிறைவே!!

மஹான்களின் பாதச் சுவடுகள் - 95

## 18. ஞானியாக எளிய வழி!

1. மண், பொன், பெண் மயக்கத்தை விட்டவனே **"ஞானி"!**
2. நான், என்னால், என்னுடையது என்ற அஹங்கார, அதிகார, அபிமானங்களை விட்டவனே **"ஞானி"!**
3. குற்றம் குறை காணாதவனே **"ஞானி"!**
4. பேத பார்வையும், பேத உணர்வும் இல்லாதவனே **"ஞானி"!**
5. விருப்பும், வெறுப்பும் முழுமையாக அற்றவனே **"ஞானி"!**
6. பிற சாதகர்களை கவனியாதவனே **"ஞானி"!**
7. தற்கவன சக்தி உள்ளவனே **"ஞானி"!**
8. முற்கவன சக்தியற்றவனே **"ஞானி"!**
9. பட்டம், பதவி, புகழ், கௌரவம் அற்றவனே **"ஞானி"!**
10. வாழ்க்கையில் **"எளிமையும்"**, வாக்கில் **"இனிமையும்"**; இறை சொரூப நாமாவில் பூரணமான **"நம்பிக்கையும்"!** ஸ்ரீஸத்குரு வாக்கிய சிரத்தையில் அசைக்க முடியாத மஹாமேருவை ஒத்த திட **"வைராக்கியமும்"!** உடையவனே **"ஞானி"!**

மஹான்களின் பாதச் சுவடுகள் - 124

## 19. ஞானேந்திரியம், கர்மேந்திரியம்!

1. "ஞானேந்திரியம் **ஐந்தும்** வினைகளை பெருக்கும்"!
2. கர்மேந்திரியம் **ஐந்தும்** வினைகளை முடிக்கும்! என சொல்லலாம்.

கேள்வியும், பதிலும் - 12

20. **எமதய்யன் (திருடன்) ஸ்ரீகண்ணன் தம் ஸத்திய வாஸகத்தில் சொன்னது:-**

1. **"கடும், சுடும், கபடம்"** வாக்கு உன் வாயில் வந்தால் நீயே **"கலிபுருஷன்"!**

2. இறை சிந்தனையோடு கூடிய **"இதம், மிதம்"** வாக்கு உன் வாயில் வந்தால் எம் அம்ஸமாகிய **"கற்க்கி"** அவதாரம் நீயே என்றான். ஆகையால் நாவாகிய வாக்கில் அதிக கவனம் வேண்டும்.

கேள்வியும், பதிலும் - 14

21. **கடும்:-** வஞ்சகம், பொறாமை வார்த்தை.

**சுடும்:-** கோபம், குரோதம், விரோத வார்த்தை.

**கபடம்:-** ஏளனம், பழிபாபம், சந்தேகம், சூழ்ச்சி, வம்பு, குற்றம் குறை ஆக இந்த ஆறு வார்த்தை.

**இதம்:-** பொறுமை, நிதானம், அன்பு, கருணை, இறை சிந்தனையோடு இனிமை, ஆனந்தம் ஆக இந்த ஆறு வார்த்தை.

**மிதம்:-** குறைவான, ஆதரவான, இறை உணர்வோடு வரும் வாக்கு மிதமாகும்.

கேள்வியும், பதிலும் - 15

22. **அறியாமையின்! உறக்கம்!**

நாம, ரூப, ஜக, ஜீவ தோற்றத்தில் **மனம் மயங்கி** அனுவிப்பது

ஆத்ம ஸாந்தியும் ஜனாபாயும் - 1/11

**23. தூங்காமல் தூங்கும் நிலை:-**

நாம, ரூப, ஜக, ஜீவ தோற்றத்தில் **மனம்** மயங்காமல், இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என **ஸாந்தியின் அமைதி** பெற்று அடங்கி உணர்வுடன் கூடி இருப்பது தூங்காமல் தூங்கும் நிலை.

ஆத்ம ஸாந்தியும் ஜனாபாயும் - 1/12

**24. மனம் ஆகும் நிலை:-**

1. **நாம ரூப!** கற்பனை பண்ணினால் மனம் ஆகும்.
2. **நாம ரூப!** கற்பனையின் குணம் எழுந்தால் மனம் ஆகும்.
3. **நாம ரூப!** கற்பனையில் நான்! எனது! புகுந்தால் மனம் ஆகும்.
4. **நாம ரூப!** பேதம்! விருப்பு! வெறுப்பு! குற்றம் குறை! தோற்றினால் மனம் ஆகும்.
5. **நாம ரூப!** சொந்தம்! பந்தம்! பாசம்! பற்று! இவைகளில் அசைந்தால் மனம் ஆகும்.

ஆத்ம ஸாந்தியும் ஜனாபாயும் - 1/13

**25. அறிவு ஆகும் நிலை:-**

நாம ரூப! அனைத்து **தோற்றமும்! இருப்பும்! இயக்கமும்! ஸ்ரீபகவானுடையதே! ஜீவன்!** உடையதல்ல என்பதே மனமானது அறிவாகும் நிலையாகும்.

ஆத்ம ஸாந்தியும் ஜனாபாயும் - 1/13

26. **பேரறிவு! ஆகும் நிலை:-** நாம, ரூப, ஜக, ஜீவ எந்த **தோற்றமும்! மண்ணாகிய!** பரமே! **பரமாகிய!** மண்ணே! அதுவே நாம்! நாமே அது! என **சந்தேக கலக்க பயம்** இல்லாமல் உணர்வதே பேரறிவாகும்.

ஆத்ம ஸாந்தியும் ஜனாபாயும் - 1/13, 14

27. **ஓர் சாதகனுக்கு அகண்டான்ம பாவனை சாத்தியமாக!**

1. பூர்வ புண்ணிய தர்மமும்!
2. முன் ஜன்மாவின் சர்வார்ப்பணம் பூர்த்தி ஆன நிலையும்!
3. சிரத்தை, நம்பிக்கையின் வைராக்கியம் இருந்தால்! **அகண்டான்ம பாவனை,** சாத்தியமாகும்.
4. முன் மூன்று இல்லாமலும்; **திட நம்பிக்கையில், திட வைராக்கியம்!** இருந்தாலும்; ஸாத்தியமாகும் என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

ஆத்ம ஸாந்தியும் ஜனாபாயும் - 1/21

28. **மனதை விட்டு நாம, ரூபம் விலக!**
மனதை விட்டு **விகல்பம்** (குற்றம் குறைகள்) நீங்கி விட்டால் **விறகு தீர்ந்தவுடன்** அக்கினி எப்படி **தான் தானாய்!** ஸாந்தி ஆகுமோ அப்படி உன் மனதை விட்டு **இயல்பாகவே** நாம, ரூப ஜகம் விலகிவிடும்.

ஆத்ம ஸாந்தியும் ஜனாபாயும் - 1/23

29. சர்வார்ப்பணம் ஒன்றே சித்த சுத்திக்கு வழி வகுத்து கொடுக்கும். **சர்வார்ப்பணமானது மாயாவை வலு** இழக்கச் செய்யும். **மனதை! செயல் இழக்கச் செய்யும்.**

ஆத்ம ஸாந்தியும் ஜனாபாயும் - 1/28

30. **மாயா & மனம் அழும் நிலை!**

1. என் சிருஷ்டியை விட்டு விட்டுப் போகிறாயே என **மாயா அழுகிறது.**

2. என்னால் உண்ண முடியவில்லையே! நான் உண்ணாமல் சாகிறேனே என **மனம் அழுகிறது.** இவையே மாயா & மனம்! அழும் நிலையாகும்.

ஆத்ம ஸாந்தியும் ஜனாபாயும் - 1/33

31. **பிரமை:-** மனமயக்க நாம, ரூப, குண போதை.

**பிரேமை:-** இறை! குரு! பர! உணர்வோடு ஒன்றுதல்.

ஆத்ம ஸாந்தி ஜனாபாயும் - 1/39

32. மண்ணாக **உண்டு. நாம, ரூப,** பாத்திர பாண்டங்களாக **இல்லை.** அப்படி நாம, ரூபம் பெற்றால் இயக்க குணமும் புண்ணிய பாபமும் பின்னலிடும்.

ஆத்ம ஸாந்தியும் ஜனாபாயும் - 1/40

33. **ஸம்ஸாரம்:-** கடல் அலைபோல் சர்வசதாவும் அசைந்து அசைந்து! இன்ப துன்பத்தில் அலைக்கழித்து ஆழ்த்துவது.

ஆத்ம ஸாந்தியும் ஜனாபாயும் - 1/41

34. வலியின் உபாதையையும்! ருசியின் சுவையையும்! ஒருவருக்கு ஒருவர் எப்படி விளக்கம் கொடுக்க முடியாதோ! அதே நிலையில் **அந்த ஒன்றின் ஆத்மானுபவ சுவையை** ஒருவர் ஒருவருக்கு **விளக்க முடியாது. உணரலாம்.** இது ஸத்தியம்!

ஆத்ம ஸாந்தியும் ஜனாபாயும் - 2/59

## 35. நிகழ்ச்சிகள் மாறும் நிலை!

1. உன்னுடைய முன் பின் தீவினையால் உன்னை பிறர் சொல்லாலோ, செயலாலோ, ஓர் துன்பம் தரும் போது **சற்று அடங்கி இறை & குரு உணர்வுடன் இருந்தால்** காலக்கிரமத்தில் **நிகழ்ச்சிகள் சற்று மாற்றி** அமைக்கப்படும்.

2. இல்லாவிடில் அந்நிகழ்ச்சி உன்னை தாக்கா வண்ணம் கருத்துக்கள் மாறவோ! விலக்கவோ! ஶ்ரீபகவானின் மாயா துணை இருக்கும். இங்கு உனக்கு ரக்ஷையாக அமைவதெல்லாம், இறை குரு உணர்வுடன் கூடிய **பொறுமை! பணிவு! நம்பிக்கை!** இவைகளேயாகும்.

ஆத்ம ஸாந்தியும் ஜனாபாயும் - 2/72, 73

## 36. புருஷோத்தமன்! என்றால்:-

**பிரபஞ்சம்** என்ற **இயற்கையோடு!** எவ்விதத்திலும்; எந்நிலையிலும்; **எதிர்ப்பும்! எரிப்பும்! மறுப்பும்!** இல்லாமல் ஒன்றி வாழ்பவனே புருஷோத்தமனாவான்.

ஆத்ம ஸாந்தியும் ஜனாபாயும் - 2/78

## 37. விஞ்ஞானி! ஞானி!

1. **விஞ்ஞானி! இயற்கையோடு!** மறுத்தும்! எதிர்த்தும்! போராடுபவன் **விஞ்ஞானியாவான்.**

2. **ஞானி! இயற்கையோடு!** ஒன்றி இணைந்து வாழ்பவனே **ஞானியாவான்.** முந்தையவன் அழிவுப்பாதையை நோக்கி வேகமாகப் போகிறான்.

பிந்தையவன் ஆக்கப் பாதையில் அமைதியாக செல்கிறான். இது ஸத்தியம்.

ஆத்ம ஸாந்தியும் ஜனாபாயும் - 2/79

## 38. தெய்வ தர்மம்:-

1. ஜனாவின் ஸத்திய வாக்கு எப்படி அமைகிறது என்றால்? உடல், உலக உறவுகளை! விட்டால் **அவன் (ஸ்ரீபகவான்)** வந்தே ஆக வேண்டும். அப்படி வரவில்லையானால் **தெய்வம் உண்மை என்பது பொய்யாகிவிடும்.**
2. உடல்! உலக! உறவுகளை! **மெய்** என்று **நம்பும் வரை** அவன் **வரமாட்டான்! வர முடியாது!! வர இயலாது!!!** அதுவே தெய்வ தர்மம்.

ஆத்ம ஸாந்தியும் ஜனாபாயும் - 3/98, 99

## 39. விட்டல் வாசகம்:-

குழந்தாய் ஜனா! முன் இரு ஜன்மாவிலும்; **(மந்தாரை & வக்கரை!)** உன் அங்கம் ஹீனமாக (கூனியாக) இருந்தது. அது உன் **வலிய** கர்மாவாகும். ஆனால் உன் உள்ளம் **ஏக்கத்தின் துடிப்பினால்!** அதீத பக்குவமாய் இருந்தாய். அப்பக்குவமே இச்ஜன்மாவில் **இறை & குரு கிருபை** கூட்டி முடித்துவிட்டது.

ஆத்ம ஸாந்தியும் ஜனாபாயும் - 3/132, 133

## 40. ஸ்ரீபாத சேவையின் சிறப்பு!

1. ஸ்ரீபகவானின் இரு திருவடிகளையும் ஜனா தம் **துடைமீது!** வைத்துக் கொண்டு, **ஸ்ரீபாத சேவையை!** சிறப்பாக செய்தாள்.

௨. குறிப்பு:- துடையின் மீது, ஏன் **பாதம்!** வைக்கப்படுகிறது என்றால்! **துடை! என்றால்,** அது **பாபச் செயலின்!** ஓர் அங்கம். **அத்துடைகளின் மீது, ஸ்ரீபாதம் படும்போது. அங்கு பாபங்கள் துடைக்கப்** படுகின்றன! என, அனுபவ ஸ்ரீமஹான்களின், வாயிலாக அறிகிறோம், (ஸ்ரீபாத சேவையை, துடையின் மீது, வைத்து கொடுப்பது சிறப்பாகும்).

ஆத்ம ஸாந்தியும் ஜனாபாயும் - 3/13௯

௫1. **ஆலிலையின் கண்ணன்** என்பது:- ஆலமரம் **ஞான மரம்** என்பதாகும். ஆலிலையின் மேல்பகுதி **அதி** மிருதுவாக இருக்கும். அதுவே எம்பெருமான் பள்ளிகொள்ள தகுந்த ஓர் இடமாகும் என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

ஆத்ம ஸாந்தியும் ஜனாபாயும் - 3/1௫0 A

௫2. **பெண்களிடம் நம் அன்பர்கள்தானே!** என **நெருங்க வேண்டாம்,** உன் **அன்பர் தூலமல்ல ஆத்மா ஆகும்.** ஆகவே **அத்யாவஸ்யம்** இல்லாமல் பேச்சோ! கொடுக்கல் வாங்கலோ! நெருங்கிய பழக்க வழக்கமோ, **நீ** பக்குவப்படும் வரை வேண்டாம்.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 1/௫

௫3. ஒவ்வொரு **தூலங்களையும் பொருள்களையும்,** காணும் போதும், கொடுக்கல் வாங்கல் பண்ணும் போதும்; பதுமைகள் வினையை வைத்து மண்ணை! பண்டப்

பரிவர்த்தனம் செய்கின்றன. இங்கு ஆசையோ! தேவையோ! இல்லை. எல்லாம் நலமே என எண்ணு.

*சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 1/5*

44. **நீ உன் மட்டில் ஆத்திரம் வேகம்** இல்லாமலும் **பிறரை கண்டு கொள்ளாமலும்! கண்டிக்காமலும்!** உன்மட்டில் அடங்கினால் உன் வைப்ரேஷன்! உன்னை நம்பியவர்களை மட்டும்! ஸத்திய பாதையில் அழைத்து செல்லும். போதியாதே, சாதிப்பாயாக.

*சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! 1 - 1/6*

45. **ஆசையை குறைத்தால்** வேகம்! குறையும், வேகம் குறைந்தால் கர்மா அழியும். அழியும் என்றால் **வலிய கர்மா வலு இழக்கும்.** முக்கியமாக கர்மாவின் அவஸ்தைகள் முழுமையாக குறையும்.

*சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 1/7*

46. சாதனையாளர்கள் உங்கள் சாதனையின் காலத்தையும் பிறர் சாதனையின் காலத்தையும் கணக்கு பார்த்தால் போட்டி & பொறாமை! அவஸ்யம் உண்டாகும். பிறரை காணாமல் **தற்கவன சக்தி**யோடு இருக்கவும்.

*சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 1/8*

47. **உருகி அழுதால் ஆனந்தம் எப்படி பெற முடியும்?** என தோற்றலாம்? மனம் உருகி அழும்போது உள்ளம் கழுவப்படுகிறது, அதனால் தோஷ குணங்கள் நாசமாகும்.

அங்கு ஸத்வகுணம் ஒன்றே நிலவும். அச் ஸத்வகுண அம்ஸமே ஆனந்த மயமாகும் என உணர்க.

*சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 1/9*

48. **நாம, ரூப ஆவரண மயக்கம்** என்பது:-

நான்! என்னால்! எனது! என்ற ஜீவகர்த்தத்துவத்தாலும்; உடைமை, உரிமை பாராட்டும் அதிகார ஆதிக்கத்தாலும் உண்டாகும், மனோமய போதை மயக்க ஆவரண நாம ரூபங்களாகும்.

*சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 1/10*

49. **விட்க்ஷேப கலக்கம் ஒழிய!**

ஜீவ கர்த்தத்துவம் ஒழிந்தாலே போதும். உடைமை, உரிமை! இல்லாத தன்மையால் எல்லாம் ஜடமாகி விடும். பிரம்மார்ப்பணத்தால் ஈச கர்த்தத்துவமும் நாசமாகும் போது; எல்லாம் மண்ணாகிவிடும். அதனால் **விட்க்ஷேப கலக்கம் ஒழியும்.**

*சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 1/11*

50. **உள்ளம், உடல்** இவ்விரண்டும்! ஒன்றாக இணைய வேண்டும். அந்நிலையில் உடல் நாணல் புல்லைப்போல் வளைந்து பணிந்தால் **வினையும்** இயல்பாக முடியும். **மனமும்!** உலர்ந்து பக்குவப்படும்.

*சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 1/12*

51. 1. **நீ** செல்வதோ ஜீவன் முக்தி பாதை ஆகும். அதன் அஸ்திவாரமே **பொறுமை** ஆகும்.

2. **அறியாமையின் ஜீவ குணங்களை மன்னிக்க** உன்னால் இயலவில்லையானால் நீ சாதனை செய்வதில் அர்த்தமே இல்லை.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 1/13

52. **சோதனையும்! வேதனையும்! உண்மை அல்ல!**

உன் வினையை வைத்து **சோதனையும்! வேதனையும்!** வருவதைப் போல் ஓர் தோற்றம் தெரியும். அது **உண்மை அல்ல.** அது உன் வைராக்கியத்தை ஸ்திரப்படுத்தும் நிலையென்று உணர வேண்டும்.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 1/15

53. ஸத்சிஷ்யனின் **சிரத்தையே ருது!** ஆகும் என உணர்வாயாக. இங்கு உன் ஸத்குருவின் **உபதேசமே விந்து** ஆகும். அதில் தோன்றும் **ஞானமே கர்ப்பம்** ஆகும். அக்கர்ப்பத்தின் **சிசுவே ஆனந்தம்** ஆகும்.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 1/16

54. **மனதின் திறமை** என்றால்:-

நாம, ரூப தோற்றங்களையும், ஜீவ சொரூபங்களையும் உடைமை & உரிமை என்றும், நான் எனது என்றும் பின்னிப் பிணைந்து மோதுவதும்! அழிவதும்! பின் எழுவதும்! இப்படியே விளையாடி களிப்படைவது, **மனதின் திறமை ஆகும்.**

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 1/17

55. **அறிவு** என்றால்:-

**நன்மை தீமை**, புண்ணிய பாபம், **படித்தவன்** படிக்காதவன், பெரியவர் சிறியவர், நல்லவன் கெட்டவன், ஞானி அஞ்ஞானி! பக்தன் பாமரன், **இவை** அனைத்தும், நாம, ரூப, **குண** பேதமே தவிர இருப்பில் ஒன்றே என உணர்வது அறிவு.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 1/18

56. 1. நாம் அதுவாக இருக்கிறோம் என்பது **விஸிஷ்டாத்வைதம்.**

2. நாம் இருக்கிறோம் என்பது **அத்வைதம்.**

3. இருக்கிறோம் என்பது **ஸ்...வ...ய அ...னு...பூ...தி!** என ஸ்ரீமஹான்கள் வாயிலாக அறிகிறோம்.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 1/21

57. **அனைத்தும் மண்ணே!** அனைத்து நாம, ரூபமும் மண்ணே! **எழுவதும்!** எழுந்து **ஆடுவதும்!** ஆடி ஆடி **வீழ்வதும்!** வீழ்ந்து **தூஸி!** ஆவதும் **தூஸி அணு ஆவதும்!** அணுவே பரமாத்மா! **பரம் பொருள்** என ஆவதும், மண்ணே!

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 1/22

58. 1. மன **எண்ணம்** இல்லாமல்; வினை இல்லை.

2. **வினை** இல்லாமல் தூலம் (உடல்) இல்லை.

3. **தூலம்** இல்லாமல் புண்ணியம் & பாபம் இல்லை.

4. **புண்ணிய பாபம்** இல்லாமல் ஜன்மா இல்லை.

5. **ஜனன மரணம்** இல்லாமல் நாம, ரூப, ஜகம் இல்லை.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 1/27

59. 1. அனைத்து நாம, ரூப, ஜீவ, ஜக தோற்றங்களும்; உன் சர்வார்ப்பணத்தால்தான் **ஜட** ரூப பதுமைகளாகும்.

2. பின் ஸ்ரீஸத்குரு அருளும்! பிரம்மார்ப்பணத்தால் மட்டும் **மண்ணாகிய! பரசொரூபமாகும்! நீ** ஜீவன் முக்தனாவாய்.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 1/35

## 60. எது பந்தம்!

1. **ஆத்மா** பந்தப்பட்டிருக்கிறது எனவும்!
2. **உயிர்** பந்தப்பட்டிருக்கிறது எனவும்!
3. **உடல்** பந்தப்பட்டிருக்கிறது எனவும்! இன்னும் பலவாறாக சொல்வது எல்லாம், அறியாமையே.
4. **மனமே!** நான்! எனது! என ஜீவகர்த்தத்துவத்தால் பந்தப்பட்டிருக்கிறது.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 1/36

## 61. இறைவனை காண முடியாத நிலை!

1. மனிதனாக பிறந்த ஒவ்வொருவனும்! ஸ்ரீபகவானை காணவும் பரத்தை நாம் என உணரவும்தான் வந்தான்.
2. ஆனால் இது கலியுகமாக இருப்பதால் இரையை தேடிவிட்டு; இறைவனை காண முயல்கிறோம். ஆகவே இறைவனை காண முடியவில்லை. இது ஸத்தியம்.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 1/38

62. **குடும்ப பாரம் இல்லை!**

ஸ்ரீபகவானை வேண்டி அழுதால் **உனக்கு வேண்டியது கிடைக்கும், வேண்டாதது அகலும்.** அதனால் ஆத்திரம், ஆவேசம்! கோப தாபங்கள் சர்வநாசம் ஆகும். அவன் கிருபை கிடைக்கும்போது, **குடும்ப பாரம்** உன்னை அழுத்தாது. அதை அவன் மாயா கவனித்துக் கொள்ளும்.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 1/43

63. **ஸ்ரீபகவானின் இருப்பிடம்!**

மண்ணாலும் கல்லாலும் ஆன ஆலயங்களில் **ஸ்ரீபகவானை காண முடியாது.** அவன் **உன் இதய குகையினுள் உள்ளான்.** உன் உருக்க ஏக்க கண்ணீர் பெருக்கத்துடன் உன் உள்ள கோயிலுள் தரிசித்த பின்னரே, அவன் **எங்கும்! எதிலும்!** உள்ளான் என உணர முடியும்.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 1/47

64. **உன் உடலும் உலகும்** அனைத்து நாம, ரூபமும் உன் மனமானது முதலில் **மறந்து,** பின் **மரத்து** அனுபவத்தில் **இறந்து** போகும் வரையில் ஸ்ரீபகவானின் நாம, ரூபமும், உன் மனதில் நிலைத்து நிற்கும். ஸ்ரீபகவானும் நீயும் ஒன்றான பின், **எல்லாம் மறையும்.**

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 1/48

65. **ஸ்ரீபகவானை காண மறைக்கும் திரை!**

அம்மா! அப்பா! கணவன்! மனைவி! குழந்தைகள்! அண்ணா! தம்பி! அக்காள்! தங்கை! மாமன்! மாமி! இப்படி **உறவு முறை பற்றின் மோஹத்** திரையே! அவைகளுள்

இருக்கும் ஸ்ரீபகவானை நீ காண ஒட்டாமல் மறைக்கிறது. ஸ்ரீபகவான் மறையவில்லை.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 1/49

66. **அகண்டமான மண்!** எப்படி சர்வ வியாபகமோ அதே போல் **அந்த ஒன்றும்** சர்வ வியாபகமேயாகும். அதற்கு **தோற்றம், இருப்பு, நாமம்** எவையும் பிரமாணமாக இல்லவே இல்லை.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 1/51

67. **பக்தீ** ஸ்திரமாகாமல், **அத்வைத ஞானம்!** பெற முடியாது என்பது ஸத்தியமாகும்.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 2/53

68. பக்தீ செய்து வினைகளை நாசம் செய்யாமல், ஞானானுபவத்தினால், **மனோ நாசம்** பெற முடியாது.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 2/53

69. அத்வைத ஞானம் பெறாமல், பிறவா நிலையாகிய, **ஜீவன் முக்தி!** பெற முடியாது.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 2/53

70. அனைத்து சாதனைகளும், **சக்தியை** கொடுக்கும். ஜீவன் முக்தி ஒன்றே, சக்தியை கெடுத்து, **பிறவா நிலையை,** கொடுக்கும்.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 2/53

71. இக்கலியில் பெரும்பாலும் **குடும்பிகளே ஆத்ம ஞானிகளாக இருக்கிறார்கள்** என்பது ஸத்தியமே!

மற்றும் மடாதிபதிகளும்! பீடாதிபதிகளும்! துறவி வேஷத்தில் நின்றுவிட்டார்கள், துறவி ஆகவில்லை.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 2/55

72. **கர்மா சாம்பலாகும் நிலை!**

கர்மாவில் மூழ்கிய ஒருவன் சர்வார்ப்பணத்தில் நிலை பெற்று விட்டால், இத்தனை காலமும் இவன் பாபம் செய்தவன்தானே? என ஸ்ரீபகவான் உன்னை தள்ளமாட்டான். சர்வார்ப்பணத்தால் உன் கர்மா சாம்பலாகி விட்டதென உன்னை ஏற்பான். இது ஸத்தியம்.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 2/56

73. **இருப்பது ஒன்றே** என்ற ஸத்திய வாக்கின்படி **காணும்! கேட்கும்! நீ!** எல்லாம் ஒன்றே என்பது ஸத்தியம். பேதம்! விருப்பு வெறுப்பு! குற்றம் குறை! இந்த நாம, ரூப பேதம் மனதால் வந்தது. அந்த மனம் நாம, ரூபத்தைவிட்டு பரபாவனை செய்தால் அவஸ்யம் **ஜீவன் முக்தி உண்டு.**

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 2/61

74. **துவைதம் தோற்றும், அத்வைதம் பிரகாசிக்கும்!**

1. கல்லை கண்டால் நாய் இராது. நாயை கண்டால் கல் இராது. இதே போல் நாம, ரூபமாக கண்டால் அத்வைதம் மறையும், **துவைதம் தோற்றும்.**
2. எல்லாம் மண்ணாக உணர்ந்தால் துவைதம் நாசமாகும். **அத்வைதம் பிரகாசிக்கும்.** காணும் நிலை ஒழிந்து உணரும் நிலை பெற வேண்டும்.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 2/62

75. **ஸ்ரீதுகாராம் ஸ்வாமிகளின் இறை நம்பிக்கை!** மார்வாடியும்! மளிகை கடைக்காரனும்! மனைவியும்! குழந்தைகளும் **எல்லாம்!** ஸ்ரீபகவானாக ஆகும் போது; கஷ்டம்! கவலை! துன்பம்! துயரம்! பயம்! கலக்கம்! ஆகிய மனோ சிரமம் வர இயலாது. இது ஸத்தியம்.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 2/67

76. நாம, ரூப, ஜக, ஜீவ தோற்றங்கள் பதுமைகளாக மாறாமல் **மனம்!** அமைதியும்! ஸாந்தியும் அடையாது! என்பதே உண்மையாகும். இந்நிலை **சர்வார்ப்பணத்தால்** தான் முடியும். **வேறு எதாலும் முடியாது.**

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 2/80

77. **மனோ ஜயம் பெற்ற நிலை:-**

1. நாம, ரூப, ஜக, ஜீவ பதுமைகள் **இயக்கம் அற்ற நிலையில்** மனம் அறிவாகிவிடும்.
2. இந்த அறிவே! பேரறிவாக மாறும் நிலையில்; ஈசனுடைய **மாயா** காரியமும் இயல்பாக நின்று விடுவதால் எல்லாமே பரமாகிய **மண்** மயமாகிவிடும். இங்கு பயிற்சியோ! முயற்சியோ! தேவை இல்லாமல் போகும்.
3. மனம் அறிவாகி! அறிவு பேரறிவாகி! முடிந்த முடிவாகும் நிலையே, மனோ வியாபாரமற்று! மனோ ஜயம் பெற்ற நிலையாகும். அதாவது ஜீவன் முக்தியாகும்.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 2/81, 82

78. 1. **ஜட** சொரூபத்தின் ஆதாரம் **மாயா!**

உ. நாம, ரூப, ஜக, ஜீவ தோற்ற ஆதாரம் **மனம்!**

௩. இவை அனைத்திற்கும் ஆதாரம் **ஸ்ரீபகவான்!** ஆகும்.

௪. அப்பகவான் **பரத்தின்!** அம்ஸம் ஆவான்.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - உ/௯௫

79. **மன மடமை** என்றால்!

1. மின்சாரத்தின் இயக்கத்தை! மிக்ஸி & கிரைண்டர்! இயக்கம் என சொல்ல முடியாது சொல்லக்கூடாது.

உ. அதேபோல் சூட்சும ஸ்ரீபகவானின் இயக்கத்தை மறந்து, நாம, ரூப ஜீவ சொரூபங்கள்! இயங்குகின்றன என எண்ணுவது **மன மடமையாகும்.**

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - ௩/10௪

80. **மாயா, மனம், குணம்!**

ஓர் ரகஸ்யம் உணர வேண்டும். தோற்றத்திற்கு **மாயா!** நாம, ரூபத்திற்கு **மனம்!** நாம, ரூப பின்னலுக்கு **குணம்!** இங்கு ஸ்ரீபகவானானவன் மாயாவை உடையவனாவான். மாயா! மனதை உடையது. மனம்! குணத்தை உடையது என அறிய வேண்டும்.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - ௩/117

81. **பாடம்! படிப்பு,** அனுபவம் கூடும் போது தாமே நின்றுவிடும். **நீ** நிறுத்த முயற்சி செய்தால் **நீ** பழுக்கவில்லையென பொருள்படும்.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - ௩/1௩1

82. இது இன்னார் இது இன்னார் **இது! அது!** என்ற பேத குற்றம் தோன்றும் வரை! பாராயணமும்; ஸத் விசாரமும்! அவஸ்யம் மனதுக்கு தேவை. **மனம் அறிவானால் தேவை இல்லை.**

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 3/132

83. 1. **நான்** என்பது:- **துவைத பயம்** ஆகும்.
    2. **நாம்** என்பது:- ஸ்ரீபகவானையும் இணைத்த **விஷிஸ்டாத்வைத பயம் அற்ற நிலை**யாகும்.
    3. **யாம்** என்பது:- எந்த இணைப்பும் இல்லாத **அத்வைத குணாதீத ஜீவன் முக்தியின் நிலை**யாகும். வரிசையாக ஏற்கவும்.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 3/139

84. முற்கவன சக்தியை நாசம் செய்து! தற்கவன சக்தியில் **தடையற்ற** அப்யாசம் தொடர்ந்து செய்தால், மாபாவி மனம் பாவனாதீத! மனமாகி ஜீவன் முக்தியும் அவஸ்யம் பெறும்.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 3/143

85. **அங்க சுத்தி!**

விபூதி! குங்குமம்! சந்தன திலகம்! திருநாமம்! துளசி & ருத்திராக்ஷம் அணிதலும் அங்க சுத்தியில் அடங்கும். இதனால் சித்த சுத்தி ஸ்திரமாகும்.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 3/148

86. **சித்த சுத்தியின் ஸ்வய அனுபவம்!**

அமைதி! ஸாந்தி! மௌனம்! ஆனந்தம்! இயல்பானவுடன். அங்க சுத்தி நின்றுவிடும். மேலே சொன்ன நான்கும் சித்த சுத்தியின் ஸ்வய அனுபவம் ஆகும். ஞான ஸித்தி ஆனவுடன் அவ்விரண்டும் இயல்பாகவே நின்றுவிடும்.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 3/149

87. **குறையாத ஆனந்தம்!**

1. வினை & விதி! வசத்தால் நடைபெறுவதை, கேள்வி கேட்டு! அலசி! ஆராய்ந்தால் சோதனையும் வேதனையும் உன்னை மூடிவிடும்.
2. எல்லாம் நீயே! உன்னையல்லால் வேறு கதி இல்லை என சரண்புகுந்தால் **குறையாத ஆனந்தம் உண்டு.**

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 4/153

88. **ஸ்ரீபகவானே நாம்!** என்ற மெய்யுணர்வை பெற்றுவிட்டால் **மனச் செயலை கண்டு வேதனை அடையமாட்டோம்.** நீ பணிந்து எதிராளிக்கு விட்டுக் கொடுத்தால் அம் மனம் போராட உன் மனம் இல்லாமையால் தானே செயலற்று அடங்கி அழிந்துவிடும்.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 4/156

89. **தற்புகழ்ச்சி** என்பது:-

1. **நீ** செய்த குற்றம் குறைகள் பிறரிடம் சொல்லி முறையிட்டால் உன் குற்றம் குறைகள் உன்னை விட்டு ஓடிவிடும்.
2. அதே போல் உன்னுடைய ஸத் காரியங்களை பிறரிடம்

சொல்லி முறையிட்டாலும்; உன் ஸத்காரியமும் மறைந்துவிடும். இது **தற்புகழ்ச்சி** ஆகும்.

*சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 4/157*

**90. குற்ற தோஷ குணங்கள் மறைய!**

பிறர் செய்யும் எந்த காரியங்களையும்! வார்த்தைகளையும் இறை குரு! உணர்வோடு சற்று பொறுமையாகவும், சற்று நிதானமாகவும் மிக, மிக, மிக, **சாந்தியான** பார்வையால் பார்த்தால் எல்லா குற்ற தோஷ குணங்களும் மறையும்.

*சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 4/165*

91. **அதுவே நாம்! நாமே அது!** என்ற பர **உணர்வோடு எல்லாம் நீயே!** என்ற **இறையுணர்வு** சந்தேக கலக்க பயமின்றி கலந்து விட்டால் **அந்த அறிவு!** ஸ்ரீபகவானையும் **தம்முள் அடக்கிய** நிலையில் மாயா இல்லாத நிலையில் பேரறிவாக மாறிவிடும் என உணர்க.

*சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 4/172*

**92. மனதால் நமக்கு நாமே, எழுதிக் கொள்வதே விதி!**

1. மனம் இன்றி வினை இல்லை. வினையின்றி விதி இல்லை. இம் **மனம்! வினை! விதி!** இம்மூன்றும் இல்லையேல், **நாம, ரூப, ஜக, ஜீவ!** எத்தோற்றமும் இல்லவே இல்லை.
2. ஆகவே நன்மை தீமை என்பது, ஸ்ரீபகவான் ஒவ்வொருவனுக்கும் எழுதவில்லை. **மனதால் நமக்கு நாமே, எழுதிக் கொள்வதே விதி ஆகும்.**

*சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 4/183*

௧௩. பணிவினாலும்! பொறுமையினாலும்! உள்ளம் பள்ளமானவனே! ஓர் **ஸத் சிஷ்யன்** ஆகும்.

*சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - ௪/௧௯௨*

௧௪. **மாசற்ற மாணாக்கன்!** என்றால்:-

பிரவர்த்தியை முழுமையாகவிட்டு நிவர்த்தியில் முழுமையாக ஈடுபடுபவன் என பொருள்படும். மனதை நாசம் செய்யும் நிலையில்; சிரத்தை! நம்பிக்கையின்! வைராக்கியம் உடையவனே! மாசற்ற மாணாக்கன் ஆவான்.

*சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - ௪/௧௯௩*

௧5. ஜீவன் முக்திதான்! உங்கள் லக்ஷியமேயன்றி, **குரு ஸ்தானம்! உங்கள் லக்ஷியமல்ல.** ஸ்ரீஸத்குரு ஸ்தானம்! பெறுவது காலாதீத பரமே ஆகும். அந்த ஸ்தானத்தை எவரும் யாசிக்க வேண்டாம்.

*சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - ௪/௧௯௩*

௧6. **ஹரே ராம்! ஹரே கிருஷ்ணா! என்பதின் பலன்!**

1. காம, தோஷ குண நிவர்த்தி **ஹரே ராம்!** ஆகும்.
2. கலி தோஷ கோர குண நிவர்த்தி **ஹரே கிருஷ்ணா!** ஆகும் என ஸ்ரீமஹான்கள் வாயிலாக அறிகிறோம்.

*சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 5/௨1௨*

௧7. ஆரம்ப சாதனையாளன் தாம் அறியாமல் **ஸ்ரீராம் என ஒரு தரம் சொன்னாலும்;** அவன் நிலை கண்டு அது உடனே பலன் தந்தே தீரும். இது ஸ்ரீஆஞ்சநேயர் ஸத்திய வாக்காகும்.

*சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 5/௨15*

## 98. **பாதம், பாதுகை!**

1. நம் ஸ்ரீஸத்குரு! **தூலம்**! என கண்டால் அது **பாதம்!** ஆகும்.
2. நம் ஸ்ரீஸத்குரு **சூட்சுமம்!** என உணர்ந்தால் **பாதுகை!** ஆகும்.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 5/222

99. அந்த ஒன்றுக்கு எங்கும் கை! கால்! கண்! காது! வாய் (வாக்கு) உள்ளது என கூறுவது **சர்வசாட்சி** நிலையாகும். **இதை அகண்டாகார விருத்தி!** என்றும் சொல்லலாம்.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 6/261

100. **பதிவிரதை யார்?** என்றால்:-

பதி வார்த்தையை மீறாதவளும்! பதியின் ஸ்ரீபாத சேவை செய்பவளும்! பிற ஆண்களை ஏறிட்டு நோக்காதவளும்! எப்போதும் ஸ்ரீபகவானை வழிபடுவதை விட! ஸ்ரீபதி பரமேஸ்வரா என்ற உணர்வோடு இருப்பவளும்! பதி விரதை ஆவார்.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 6/275

101. **ஸ்ரீபாகவதர்! ஸ்ரீபாகவதோத்தமர்! யார்** என்றால்:-

1. ஸ்ரீபகவானின் கதை சொல்பவர் **ஸ்ரீபாகவதர்.**
2. ஸ்ரீபகவானிடம் பக்தீ செய்து, அவனோடு ஒன்றி கலந்தவர் **ஸ்ரீபாகவதோத்தமர்.**

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 6/281

102. 1. பொறுமையை மிஞ்சிய **சாதனை** இல்லை.

2. இது **போதும்** என்ற நிறைவை மிஞ்சிய **ஆனந்தமும்** இல்லை என்பதே ஸத்தியம்.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 6/284

103. **மனதளவில் வேதனை, அறிவில் ஆனந்தம்!**

வினை & மனம்! மனம் & வினை! இப்படிப் பின்னி பிணைந்து இணைந்து ஒருங்கிணைந்து செயல்படுவதால் **விதி!** என்ற ஸ்ரீபகவான்! மாயாவை உடையவனாக இருந்தாலும். மனதிற்கோ, வினைக்கோ, பாதகமாக செயல்படமாட்டான். சாதகமாய் வரும் வரை, காத்திருப்பான். அதுதான் ஸ்ரீபகவானின் (விதியின்) சாதனை ஆகும். அது பக்தனுக்கு மனதளவில் வேதனையாகும், அறிவில் ஆனந்தமாகும்.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 6/285, 286

104. **வினை தேடாதிருக்க!**

மனதால் தேடிய வினையை! உடல் அனுபவிக்கிறது. இனி மனதால் வினை தேடாதிருக்க **நாவு அடங்கி! தேவையும் ஆசையையும் குறைத்து,** நடப்பது நலமே என்றும் அந்த மனமும்! உடலும்! நாமும் அல்ல, நமதும் அல்ல. நாம் அவன் குழந்தையே! என சும்மா இரு.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 6/290

105. **ஜீவ அழிப்பு** என்பது:-

நான் ஓர் பந்த ஜீவன்! என்ற எண்ணத்தை அழித்து! யாம்

ஜீவனுமல்ல, ஸம்ஸாரி என்ற குடும்பியும் அல்ல, யாம்! ஆத்மாவே என உணர்வது ஜீவ அழிப்பாகும்.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 6/294

106. **ஜீவ ரக்ஷிப்பு** என்பது:-

நான் ஓர் மனிதன்! ஓர் ஸம்ஸாரியின் நிலையில் ஓர் குடும்பியே என சொந்த, பந்த, பாச சேற்றில் அமிழ்ந்து ஓர் ஸ்ரீபகவானின் சிருஷ்டியை! நான் எனது என புசிப்பது ஜீவ ரக்ஷிப்பு ஆகும்.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 6/295

107. **ஸ்ரீஸத்குருவின் கார்யம்!**

ஓர் முக்கியம் என்னவென்றால் ஆசி வசனங்கள்! கூறி காலத்தை விரயம்! செய்வது ஓர் ஸ்ரீஸத்குருவின் கார்யமல்ல. அவர் ஜீவ அழிப்பின் நிலையில் வந்தவராதலின்; **தம் மாணவனின் உள்ளம் பள்ளமாகி இருக்கிறதா என சரி பார்ப்பது ஒன்றே!** அவர் கார்யம். அவர் வாக்கு விரயம் ஆகாது என்பதே ஸத்தியமாகும்.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 6/297, 298

108. **மாணவனின் உள்ளம் பள்ளமான நிலை!**

பொறுமை, பணிவு, சிரத்தையில், பூரண நம்பிக்கை இருந்தால் தம் மாணவனின் உள்ளம் பள்ளமாகி விட்டதென உணர்ந்து அதை பரகருணை நிலையில் நிரப்பிவிடுவார். அதுவே ஜீவன் முக்தி.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 6/299

109. தம் வாழ்வை ஓர் சாதனை கூடம்! என ஏற்று சாதனையில்; உருக்கம்; ஏக்கம்; கண்ணீர் பெருக்கம்; உடையவர்களுக்கு ஸ்ரீஸத்குருவும் உண்டு. அவர் கிருபையும் உண்டு. ஜீவன் முக்தியும் உண்டு.

சித்திரை 16, 108 ஞானானுபவம்! 6 நீதிக்கதைகள்!! - 6/300

110. **திரு ஆலவாய் (மதுரை) பணிவின் குடில் என ஆன காரணம்:-**

1. உதகையில் ஓர் மஹாத்மாஜீயுடன் உரையாடலின் போது திரு ஆலவாய் குழந்தை! யாம் ஸ்ரீசொக்கநாதரின் கை! பதுமையாக வந்திருக்கிறோம் என்றது.

2. அதன் பொருள் **எம் பரமஹம்ஸருடைய வாக்கு,** ஒருவன் தம்மை ஈசன் கை! பதுமையாக்கி! **வாழ்வில் பணிந்து நின்றானானால்,** அவனுக்கு வேறு சாதனை தேவை இல்லை என்றார். அதை அப்படியே ஏற்றுக் கொண்ட தன்மையால் **திருஆலவாய் (மதுரை) பணிவின் குடில் ஆனது.**

உதகையில் ஓர் உரையாடல் குருபூர்ணிமா - 5, 6

111. **மேலான மேட்டூர் என ஆன காரணம்:-**

அங்கு **அன்பும் & பணிவும்!** இணைந்த தன்மையால் அது மேலான மேட்டூர் என பேர் உண்டானது.

உதகையில் ஓர் உரையாடல் குருபூர்ணிமா - 6

112. **திருஅண்ணாமலை ஞான பூமி ஆனந்த குடில்** என நாமம் பெற்றதன் காரணம்:-

**அன்பும்! பணிவும்! இணைந்து ஞானானுபவம்!** ஆன நிலையில் **ஆனந்தம் நிரம்பி! ததும்பி! நின்றது.** ஆகவே அது! ஆனந்த குடில் ஆனது என உணர்க.

உதகையில் ஓர் உரையாடல் குருபூர்ணிமா - 7

113. **எங்கள் அப்பா!**

**(நம்முடைய ஸ்ரீஸத்குருநாதர் தூளி பாபா)**

1. தெய்வ நிலையில் கண்ணனின் இடம் பெறுகிறார். அந்நிலையில் **ஸ்ரீசொக்கநாதர்** அவருடைய மைத்துனர் ஆவார்.
2. **ஸ்ரீமீனாக்ஷி** அன்னை அவருடைய தங்கை ஆகும்.
3. மற்றுமோர் நிலையில் எங்கப்பாவின் அப்பாவான பரமகுரு பிரம்மஸ்ரீ வடிவேல் ஸ்வாமிகள் **ஸ்ரீவேத வியாசர்** ஆகும்.
4. அந்நிலையில், எங்கப்பா ஸ்ரீஸத்குரு **சுகப் பிரம்மம்** ஆவார்.

உதகையில் ஓர் உரையாடல் குருபூர்ணிமா - 8

114. **ஸ்ரீபகவான்** என்றால்:-

**நம் அறிவின் ஸ்திர கற்பனையில்; தோன்றும்; ஓர் மாயா கருணா! சொரூபமாகும்.** ஆனால் அது தோன்றும், பின் மறைந்து விடும்.

உதகையில் ஓர் உரையாடல் குருபூர்ணிமா - 10

115. **44 அத்யாயங்கள் கொண்ட ஸ்ரீமத் ரிபுகீதை!**

1. ஆரம்ப பாராயணம்! **திருஅண்ணாமலையாகும்.**
2. இரண்டாவது பாராயணம் **மேலான மேட்டூர்** ஆகும்.
3. மூன்றாவது பாராயணம் **திருஆலவாய்** ஆகும்.

உதகையில் ஓர் உரையாடல் குருபூர்ணிமா - 15

116. தூளி பாபாவின் பதிவு நாமா! மேலான மேட்டூர்.

அது ஸ்திரமானது திருஅண்ணாமலை ஆகும்.

உதகையில் ஓர் உரையாடல் குருபூர்ணிமா - 15

117. **மூன்று நிலைகள் இணைவதே பணிவு ஆகும்:-**

1. **உடலால் பணிவு:-**

நிலை கண்டு சாஷ்டாங்கமாகவோ! மண்டியிட்டோ! நின்ற நிலையிலோ! இருகரம் கூப்பி நமஸ்கரிப்பதாகும்.

2. **உள்ளத்தில் கனிவு:-**

கருணையின் பார்வையும்! காருண்யத்தின் செயலும்! இணைந்த நிலையில், ஓர் நாம ரூப இறைவனிடம்! சர்வார்ப்பணம் செய்வது உள்ளக்கனிவாகும்.

3. வாக்கில் இனிமை:-

கடும்! சுடும்! மறுப்பு! எதிர்ப்பு! வார்த்தை பேசாமலும், இனிமையாக இறை குரு உணர்வோடு பேசுவதாகும். ஆகிய இம் மூன்றும் இணைவதுவே **பணிவு!** ஆகும்.

உதகையில் ஓர் உரையாடல் குருபூர்ணிமா - 52, 53

118. **அன்புக்கும்! பாசத்துக்கும்! உள்ள வித்தியாசம்:-**

1. **பாசம்** என்பது:- **நாம ரூப!** சொந்த! பந்த! பாச! பற்றோடு! உரையாடுவதும்! உறவாடுவதும்! **பாசம்!** ஆகும்.
2. **அன்பு** என்பது:- அனைத்து **ஜீவ!** வேஷத்தினுள்ளும், அந்தந்த ஜீவ வேஷம்! போட்டுக்கொண்டு அவரவர் வினைக்கூட்டை, அவரவர் வினையின்படி (ஸ்ரீபகவான்) நடத்துகிறான்; நடிக்கிறான்; என எண்ணி சந்தேக, கலக்க, பய, துக்கத்தை! நீக்கி ஆனந்திப்பது! அன்பாகும் ஐயா!

உதகையில் ஓர் உரையாடல் குருபூர்ணிமா - 54, 55

119. **தூல வேஷம்** என்பது:-

1. அறியாமையின் ஜீவன்! ஜன்ம ஜன்மமாக ஏற்று வந்த கர்மாவின்! வேஷமாகும்.
2. வேஷம் தரித்தது மனம் ஆகும்.
3. அவ்வேஷத்தை நிலை கண்டு, இயக்கி ஆட்டி (ஆட) வைப்பது **விதி** என்ற ஸ்ரீபகவானின்! **மாயா** ஆகும்.
4. அதாவது இயக்க **காரியம் மனம்.** இயங்கும் **காரணம் மாயாவின் ஸ்ரீபகவானாகும்** (அந்தர்யாமியாகும்), வெளியில் காண்பது வினையின் தூலமாகும் என உணர்க.

உதகையில் ஓர் உரையாடல் குருபூர்ணிமா - 1/56, 2/57

120. 1. வெளிவேஷத்தைக் கண்டு, இது இன்னார் என வினையில் மயங்கி மேலும் மேலும், வினையை சேர்ப்பது **மனம்** ஆகும்.

2. இது **இன்னார் இல்லை,** இது ஸ்ரீபகவானே! என **உள் உணர்வால்!** உணர்வது **அறிவாகும்.**

உதகையில் ஓர் உரையாடல் குருபூர்ணிமா - 2/58

121. **விஷயானந்தம்!** என்பதும் சிற்றின்பம் என்பதும் ஒன்றே. நாம ரூப, ஜக, ஜீவ தோற்றமே! விஷயங்களை! (விஷ! குணதோஷங்களை) பற்றியதாகும். அது புண்ணிய, பாப! ஜனன, மரண! சம்பந்தமாகும். ஆகவே அது விஷயானந்தமாகும்.

உதகையில் ஓர் உரையாடல் குருபூர்ணிமா - 2/60

122. **பேரானந்தம்!** மனமே அறிவாகும்! நிலையில் பெறுவது **பேரானந்தம்** ஆகும். இதை அறிவால் அறிவுடையோர்க்கு சற்று விளக்கலாம்.

உதகையில் ஓர் உரையாடல் குருபூர்ணிமா - 2/61

123. **பிரம்மானந்த நிலை!**

1. பரப்பிரம்ம சாக்ஷாத்காரம்! இரண்டற்ற! நாம்! நாமாக! பயிற்சி & முயற்சி! இல்லாமல், இயல்பாகவே! **சுகமாக! சுலபமாக!** இருக்கும். இதுவே பிரம்மானந்த நிலையாகும்.

2. **பணிவால்! பொறுமையும்! அன்பினால்! அறிவும்!** பெற்றால் பேரானந்தமும்! பின் இயல்பாக பரப்பிரம்மானந்தமும்! பெற முடியும்.

உதகையில் ஓர் உரையாடல் குருபூர்ணிமா - 2/63

124. எல்லாம் மண்ணே! என்ற உணர்வு! எப்படி **சத்தியமாகும்? என்றால்** கொடுப்பவனும், ஏற்பவனும், ஏற்கும் பொருளும்!

ஒருவனுடையதே (ஒன்றே) என்பது உறுதி நிச்சயமானால், ஸ்ரீபகவானும் மாயாவும், நாமும் நம்முடைய பொருளும் ஒன்றே என ஆக வேண்டும்.

உதகையில் ஓர் உரையாடல் குருபூர்ணிமா - 2/67

125. நாம, ரூப பொருள்கள் குணதோஷ சம்பந்தம், அக்குணதோஷம் மாயா சம்பந்தம். அம்மாயா! ஸ்ரீபகவானின் சம்பந்தம். ஸ்ரீபகவானோ, **பர சொரூப** ஆத்மா அம்ஸம். நாமும் ஸ்ரீபகவானாகிய ஆத்மாவே என உணர்க.

உதகையில் ஓர் உரையாடல் குருபூர்ணிமா - 2/69

126. எல்லாம் அவனே என ஆகிவிட்டால் மனதின் கற்பனா நாம ரூபம்! இருக்க முடியாது! இருக்க இயலாது. நாம ரூபம் இல்லையாயின் அதன் இயக்கமும், இயக்க குணதோஷமும்! சர்வநாசமாகிவிடும். அங்கு ஆனந்தம் ஒன்றே தோற்றும்.

உதகையில் ஓர் உரையாடல் குருபூர்ணிமா - 2/77

127. **தியானம் நிலை பெற!** அதிகாலையில் 03.00 *to* 05.00 மணிவரை தியானம் செய்வதினாலும், தேவையில்லாத பகல் பொழுது கற்பனையை குறைப்பதனாலும், நாம் அடங்கி பிறரை அடக்காமல் இருப்பதினாலும், பொறுமை & பணிவினாலும், இறை & குரு உணர்வினாலும் தியானம் நிலை பெறும்.

உதகையில் ஓர் உரையாடல் குருபூர்ணிமா - 2/96

128. **சகுண தியானம்!** என்றால்:- இல்லை இல்லை! இல்லவே இல்லை! என நாம ரூபத்தை! தள்ளுவது **சகுண தியானம்** ஆகும்.

உதகையில் ஓர் உரையாடல் குருபூர்ணிமா - 2/108

129. **நிர்க்குண தியானம்!** என்றால்:-

1. எல்லாம் ஒன்றே என **அபேத** நிலையில் ஐக்கியப்படுத்துவது **நிர்க்குண தியானம்** ஆகும் என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.
2. வெட்டவெளி தியானம் என்பது ஒன்றை ஒன்றால் நாசம் செய்து அவ்விரண்டையும் நாசம் செய்து, சும்மா சுகமாக இருக்கலாம்.

உதகையில் ஓர் உரையாடல் குருபூர்ணிமா - 2/108

130. காலாதீத பரமும்! திரிகர்த்தாக்களும்! ஆதி & அந்தம் இல்லையெனச் சொன்னாலும் **பரம் அகண்டம் ஆகும். கர்த்தாக்கள் கண்டம் ஆகும்.** பரம் சமுத்திரம், திரி கர்த்தாக்கள், குட அளவுள்ள அதே ஜலம். ஆனால் அளவில்தான் கூடுதல் குறைவே தவிர, இருப்பில் ஒன்றே! என உணர்க.

தர்மம் - 16, கலைகள் - 7

131. சமுத்திரத்தின் உப்பைப் போன்று; நாம, ரூப, ஜக, ஜீவ! ஈஸ்வராதிகளும்! அந்த ஒன்றில் மறை பொருளாகவே இருக்கிறார்கள். ஆகவே எல்லாமே! அந்த ஒன்றுக்கு, அன்னியமில்லையென உணர வேண்டும்.

தர்மம் - 16, கலைகள் - 16

132. மனோ சபலத்தால் அறிவில் நிலைக்க முடியாமல்; நம் வினையை! நாம் உணர முடியாமல்; வினையை வழி நடத்தும் விதியை குறை கூறி மோஹாவேசத்திலும்; கோபாவேசத்திலும் விழுந்து நாசமாகும் மனதிற்கு உடைமை & உரிமை! கொண்டாட இடமே இல்லை.

தர்மம் - 16, கலைகள் - 24

133. 1. வினை விளையாட்டின்! இன்ப, துன்ப சுவையானது, அறிவின் **ஆனந்தத்தை!** மறைத்து விடுகிறது.

2. ஆனந்தம் சுவைக்க ஆரம்பமானவுடன்! வினையின் இன்ப துன்பம்! மறைந்துவிடும்.

தர்மம் - 16, கலைகள் - 35

134. **பந்தம், பந்த நிவர்த்தி!**

1. பிறர் குறை நிறைவுகளை கண்டு; அபிமான முறையில், ஆறுதல் சொன்னால் **நீ பந்தப்படுவாய்.** உன் மன நிறைவும் மறைபடும்.

2. அங்கு நீ அடங்கினால்! உன்னுள் இருந்து அவன் (ஸ்ரீபகவான்) பேசுவான். அது **பந்த நிவர்த்தி ஆகும்.**

தர்மம் - 16, கலைகள் - 36

135. 1. மனத்திரை **மூடினால்!** இந்த ஆத்மாவானது, பந்த ஜீவ **மனிதனாகிறான்.**

2. மனத்திரை **அகன்ற** மறுவினாடியே! அறிவு! நிலையில் மாயாவை பற்றிய **ஸ்ரீபகவானாகிறது.**

3. அம் மாயாவை! விட்டுவிட்டால், அதுவே **காலாதீத பரம் என ஆகிறது.**

தர்மம் - 16, கலைகள் - 39

## 136. **பந்தமும் இல்லை! மோக்ஷமும் இல்லை!**

1. **லோகோபகார!** (உலக உபகார) **ஜீவோத்தாரண!** நிமித்தமாகவும் (ஜீவனை கடைத்தேற்ற) பந்தம்! என ஒன்றுண்டு, அது ஜீவ தளையாகும். அப்பந்தத்தை! ஸ்ரீஸத்குரு! கிருபையினால் நாசம் செய்து, பிறவா நிலையாகிய மோக்ஷம்! அடைவாய் என, அறியாமையின் மாந்தருக்காக சொல்லப்பட்ட கதையாகும்.
2. அறிவுடையோர்க்கு **பந்தமும் இல்லை!** பந்த ஜகமும் இல்லை. **மோக்ஷமும் இல்லை** அது அதுவாக! அதுவே நாமாக! இருக்கிறோம், இது ஸத்தியம்.

தர்மம் - 16, கலைகள் - ௪0

## 137. **மனம், அறிவு, பேரறிவு!!!**

1. நாம ரூப! உறவு சுற்றம் நட்பாகவும்! எல்லா பொருள்களாகவும்! கண்டால் **மனம் உண்டு.**
2. எல்லாம் வினையை முடிக்க வந்த **பதுமைகள்!** என கண்டால்; அது **அறிவாகிய ஸ்ரீபகவான் உண்டு.**
3. எல்லாம் மண்ணே! மண்ணுக்கு அயலாக எதுவுமில்லை என **உணர்ந்தால்; அது பேரறிவாகும்.**

தர்மம் - 16, கலைகள் - ௪௨

## 138. **இனம், ஜனம், மனம்:-**

A. **இனம்:-** நடப்பன! பறப்பன! ஊர்வன! நீந்துவன! மற்றும் தாவரங்களும் **ரக ரகமாக காண்பதாகும்.**

B. **ஜனம்:-** ஜாதி! மதம்! ஆண்! பெண் மனித **இன பேதம்!**

8. **மனம்:-** இவை அனைத்திலும், இதால் ஆனது! இன்னது செய்யும்! என்ற கர்ம **குணபேதம்! ஆகும்.**

தர்மம் - 16, கலைகள் - 43

139. 1. **எண்ணம்** இல்லாமல், வாக்கு இல்லை என அறிக.
2. **முற்கவனம்** இல்லாமல் எண்ணம்! இல்லை என அறிக.
3. **குற்றம் குறை** இல்லாமல் முற்கவனம்! இல்லை என அறிக.
4. **விருப்பு வெறுப்பு** இல்லாமல் குற்றம் குறை இல்லை என அறிக.
5. **பேதம் இல்லாமல்** விருப்பு வெறுப்பு இல்லை என அறிக.
6. சர்வார்ப்பணம்! அனுபவ நிலையில் இல்லாததே **இன......ஜன.........மன** பேதம் தோற்ற காரணம் ஆகும்.
7. சர்வார்ப்பணத்தால் மனம் தேடும் வினையும் இல்லை. வினை தேடும் ஜனன, மரணமும் இல்லையென உணர்க.

தர்மம் - 16, கலைகள் - 43

140. 1. நான், எனதை! விட்டால்! **மன விளையாட்டு** நாசமாகும்.
2. எல்லாம் பதுமைகளே! எல்லாம் பொம்மலாட்டமே என உணர்ந்தால் **மாயா! விளையாட்டு** நாசமாகும்.
3. எல்லாம் மண்ணே! மண்ணே எல்லாம்! மண்ணாகிய பரமே! பரமாகிய நாமே! என்ற பிரம்மார்ப்பணம்! உறுதி நிச்சயமானால் **ஜீவ! விளையாட்டு** நாசமாகும்.

தர்மம் - 16, கலைகள் - 50

1௪1. **துன்பத்திற்கு காரணம்:-**

1. எந்த மனிதனும் தம்மை! இன்னார் என உணராததே இவன் துன்பத்திற்கு காரணமாகிறது.
௨. மஹத்தான ஓர் சக்தி! இருக்கிறது. அது ஸ்ரீபகவானாக! இயங்குகிறது, என்று உணராததே துன்பத்திற்கு காரணமாகிறது.
௩. அந்த ஸ்ரீபகவான்! பொருளே! அனைத்தும் என்றும், அந்த ஸ்ரீபகவானின் நாமாவை சொல்லி இந்த நாம ரூப வஸ்துக்களை ஏற்காததே துன்பத்திற்கு காரணம் ஆகிறது.
௪. நம் துன்பத்திற்கு நம் வாக்கே காரணம் என உணர்ந்து வாக்கை அடக்காமலும், பணியாமலும் பிறரை அடக்கி ஆள்வதே துன்பத்திற்கு காரணம் ஆகிறது. **அடங்கினால் ஆனந்தம் அடையலாம்.**

தர்மம் - 16, கலைகள் - 55, 56

1௪௨. **ஏமாற்றமே, மன தடுமாற்றம்!**

1. எதிர்பார்ப்பே **ஏமாற்றம்** ஆகும் என உணர்.
௨. ஏமாற்றமே! **மன தடுமாற்றம்** ஆகும் என உணர்.

தர்மம் - 16, கலைகள் - 55, 56

1௪௩. எந்த ஓர் ஜீவனும் தவறுவது மன இயல்பு, சர்வார்ப்பண நிலையில் சற்று மனம் உருகி ஸ்ரீபகவானிடம் பிரார்த்திப்பது! தனது மன முயற்சி. இதனால் மனம் பக்குவம் அடையவும் முடியும். வினையின் கடுமை! கொடுமையிலிருந்தும் விடுபடலாம்.

தர்மம் - 16, கலைகள் - 58

144. **தடுத்தாட்கொள்ளும் நிலையென்பது:-**

1. உன் வினையை அனுசரித்து சிறிது சிரமம் கொடுத்து உன்னை ரக்ஷிப்பது **மறக்கருணை** ஆகும்.
2. உன் வினையை அனுசரித்து எந்த சிரமமும் இல்லாமல் உன்னை ரக்ஷிப்பது **அறக்கருணையாகும்** என உணர். மேலே கூறிய இரண்டும் பகவான் நிலையில் இருந்து கொண்டு குரு செய்வார் என உணர்க.

தர்மம் - 16, கலைகள் - 59

145. **ஓர் ரகசியம்!**

ஸ்ரீஸத்குரு ஒருவரே நிலை கண்டு **ஸ்ரீபகவானாகவும்! ஸ்ரீஸத்குருவாகவும்! இருக்கவும்; இயங்கவும்; முடியும்** என, ஸ்ரீமஹான்கள் வாயிலாக அறிகிறோம். ஆனால் ஸ்ரீஸத்குரு! இந்த ரகஸ்யத்தை! சொல்லலாகாது, சொல்ல முடியாது, சொல்ல இயலாது.

தர்மம் - 16, கலைகள் - 60

146. **ஆனந்தம்** என்பது:- படிப்போ! தொழிலோ! உன் குடும்பமோ! பொறுமையாகவும்! நிதானமாகவும்! இறை & குரு உணர்வோடும் உன் மன எண்ணம் இருந்தால், அங்கு இன்ப, துன்பம் அணுகாது. **ஆனந்தம் நிறையும்.** இது ஸத்தியம்.

தர்மம் - 16, கலைகள் - 63

147. **உன் பகைவன்** என்றால்:- ஆத்திரம்! அவசரம்! படபடப்பு! வேகதாபம்! கடும் எதிர்பார்ப்பு! ஒருவரை ஒருவர் பார்க்கும்

முற்கவனத்தால்! போட்டி & பொறாமை! இவைகள் **உன் பகைவன் ஆகும்.**

தர்மம் - 16, கலைகள் - 63

148. எவருக்கும் எவரும் பொறுப்பல்ல, அவரவர் கர்ம காரியங்களை! அவரவர் மனதை வைத்து அவரவர் அந்தர்யாமி குறைவின்றி செய்து முடிக்கிறான். எல்லாம் ஒழுங்காகவும், பாரபக்ஷ தோஷமில்லாமல் விகிதாச்சாரப்படி ஆனந்த நிலையில் அனைத்தும் நடைபெறுகின்றன. மனமே எதிர்பார்ப்பில் சிக்கி துன்பப்படுகிறது.

தர்மம் - 16, கலைகள் - 64

149. உன் படிப்போ, முயற்சியோ முன்பே நீ ஏற்று வந்தபடிதான் முடியும். சற்று பொறுமையுடன் கவனித்தால் எது நடக்கிறதோ? எது கிடைக்கிறதோ? அதை, இதுவே நம் படிப்பும் அதன் முயற்சியும் என பூரண நிறைவாக ஏற்க முடியும். உன் முற்கவனமும், தற்காப்பும், உன் எண்ணத்தையும், செயலையும் முறியடித்து துக்கத்தை கொடுக்கும்.

தர்மம் - 16, கலைகள் - 65

150. **வினைப் பின்னல் நாசமாக!**

நீயும்! யாமும்! ஒன்றே. ஆனால் நாம, ரூப மயக்கத்தினால் எம் இணைப்பின் நாம் என்பதை மறந்து; உன் முற்கவனத்தால்! நான்! நான்! என புலம்பி, புலம்பி அதிலேயே ஊறிப்போன தன்மையினால், வினையின்

பின்னலில், மாட்டிக் கொண்டாய். **எல்லாம் நீ! என, எம்மை உணர்ந்தால் வினைப் பின்னல் நாசமாகும்.**

தர்மம் - 16, கலைகள் - 66

151. கர்ம காரியங்களில் அவை இயல்பாக நடைபெறுவதை! **கடும் வேகமும், பேராசையின் எதிர்பார்ப்பும்,** உன்னை சிதறடிக்கிறது. எல்லாம் நலமே என்ற நம்பிக்கை வர மறுக்கிறது. எல்லாம் நலமே! எல்லோரும் நல்லவர்களே! என்ற நம்பிக்கை வந்தால், உடனே மனம் அறிவாக மாறிவிடும்.

தர்மம் - 16, கலைகள் - 67

152. **மனோ சிரமம், வினை பெருக்கம்!**

1. நடக்கப் போவதை தடுக்க உன்னால் முடியாது. சில உன் வினையின்படி, முடிந்தால் நான்! நான்! என்று மார்தட்டுகிறாய், முடியவில்லையாயின் சோர்வடைகிறாய். இதுவும் தேவையில்லை.
2. சில சமயம் நடந்து முடிந்ததை! எண்ணி, எண்ணி உன் மனதை புண்படுத்துகிறாய், அதை கனவாக தள்ள முடியவில்லை, இதுவும் தேவையில்லை.
3. கார்ய பற்றே! உன் மனோ சிரமத்திற்கும், உன் வினை பெருக்கத்திற்கும் காரணமாக அமைகிறது.

தர்மம் - 16, கலைகள் - 68

153. 1. உன் கனவில் நடைபெறும் இன்பமோ! துன்பமோ! விழித்தவுடன் இது கனவு! என தெளிவது போல்;

2. உன் வினையின்படி முன் நடைபெற்றதோ! இப்போது நடைபெறுகிறதையோ! இது முன்பே திட்டமிட்ட காரியமாகும்.

3. இவ்விரண்டையும் எண்ணுவதால் எப்பயனும் இல்லை. எண்ணினால் மனோ துன்பம், எல்லாம் நலமே என ஏற்றால் ஆனந்தம் உண்டு.

தர்மம் - 16, கலைகள் - 69

154. **சாஸ்திரம்!** என்பது கருவி கரணங்களின்! ஒழுக்க கட்டுப்பாடே சாஸ்திரம். அது சமஸ்கிருத பாடம், படிப்பல்ல.

ஆன்ம உணர்வு - 1/13

155. **வேதம்** என்பது:-

ஸ்ரீபகவானை! வெளியில் தேடி அலையாமல், தன்னுள்ளேயே உணர்ந்து தான் தானாய் இருந்து, அனைத்து **நாம ரூபங்களிலும்** ஸ்ரீபகவானே! அந்தந்த வேஷமிட்டு நடிக்கிறான் என்று, உணர்ந்த நிலையில், பாசமற்ற **அன்பு** செலுத்தி அனைத்தையும் அனைவரையும், பேதம் இல்லாமல் வணங்கி பணிவதே **வேதம்** கற்பதாகும்.

ஆன்ம உணர்வு - 1/14, 15

156. **வேதாந்தம்** என்பது:-

அனைத்து நாம ரூபங்களும், நாம ரூபம் இல்லாத நிலையில், எல்லாம் மண்ணே, மண்ணாகிய பரமே! **பரமாகிய யாமே!** என உணர்வது வேதாந்தம் ஆகும்.

ஆன்ம உணர்வு - 1/16

157. **நல்ல மனம் (அறிவு):-**

1. எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உனதே! என்ற நிலையில் ஜீவ கர்த்ருத்வம்! அழிந்தால்; அது ஈச கர்த்ருத்வமே ஆகும். இந்த **சர்வார்ப்பணம் ஒன்றே நல்ல மனமாகும்.**

2. ஜீவ கர்த்ருத்வம்! அழிந்த மறு வினாடியே உள்ளம் **பள்ளம்** என ஆகும் (நல்ல மனமாகும்). மறு வினாடியே ஸ்ரீபகவானின் கருணைப்பிரவாகம் அப்பள்ளத்தில் நிறைந்து விடும். இதுவே ஸ்ரீபகவான் கருணையை பெறும் மார்க்கமாகும்.

ஆன்ம உணர்வு - 1/51

158. **கள்ள மனம்:-**

1. பொம்மலாட்டமான; அதுவும் மண்ணாலான, ஜக! ஜீவ! தோற்றமனைத்தும்; பழக்க, வழக்க தோஷத்தினாலும்; மூற்கவனத்தினாலும்; இவைகளின் நான் எனதை! விடாமையினாலும்; ஸ்ரீபகவானிடமே! **எதிர்பார்ப்பு!** என்ற வியாபாரம் விடாமையினாலும்; இன்ப துன்பத்தின், புண்ணிய பாபமான, கர்மாவை விடாத மனம் **கள்ள மனம்!** ஆகும்.

2. மேலும் காம காஞ்சன (பெண் & பணம்) ஆகிய இந்த இரண்டு ஆசைகளையும்! விட முடியாத மனமே! கள்ள மனம் ஆகும்!

ஆன்ம உணர்வு - 1/51, 52

159. 1. தோற்றத்திற்கும், இருப்புக்கும் **மாயா!** ஆதாரம்.

2. இயக்கத்திற்கும், இயக்க குணங்களுக்கும் **மனம்!** ஆதாரம்! ஆதரவு! ஆகாரம்! ஆகும்.

ஆன்ம உணர்வு - 1/93

160. **மனம் அறிவாகும் நிலை!**

காணும் நிலையில் நாம, ரூபம் அனைத்தும் பதுமைகளாக தோற்றிவிட்டால், உன் மனம் **அறிவாக!** மாறிவிட்டதென ஸத்தியமாக நம்புவாயாக.

ஆன்ம உணர்வு - 1/95

161. **பேரறிவு பிரகாசிக்கும் நிலை!**

உணரும் நிலையில் அனைத்து நாம, ரூபமும்! **மண்ணாக!** உணரும் நிலை பெற்றுவிட்டால், (பதுமைகள் தோற்றினாலும் அவை மண்ணே! என உணர்ந்தால்) **பேரறிவு** பிரகாசிக்கிறது என ஸத்தியமாக நம்புவாயாக. அதுவே முடிவு.

ஆன்ம உணர்வு - 1/96

162. **ஸ்ரீபகவானை! இல்லை என சொல்லும் நிலை!**

1. உன் உடலும் மற்றும் எல்லாம், நாம, ரூபமாக தோற்றும் வரை! ஸ்ரீபகவானுக்கும் நாம, ரூபம் கொடுக்க வேண்டும்.

2. உன் உடலும் உடைமையும் மண்! என சந்தேக கலக்க பயமின்றி உணர்ந்து விட்டால், ஸ்ரீபகவானின் நாம ரூபமும் இல்லை. **அங்கு அந்த ஸ்ரீபகவானை!** இல்லை என சொல்லலாம். காரணம் அங்கு அவனும், நீயும் ஒன்றாகிவிட்டீர்கள். ஆகவே ஸ்ரீபகவான் நாம, ரூபமாக இல்லை.

ஆன்ம உணர்வு - 1/97

**163. பாராயணம் பண்ண முடியும் நிலை!**

அகம் பிரம்ம பாவனையின்! பாராயணம் வேண்டும். **நாம, ரூபம்! அனைத்தும் பதுமைகளாக மாறும் வரை,** உன்னால் பாராயணம் பண்ண முடியும்!

ஆன்ம உணர்வு - 2/159

**164. பாராயணம் பண்ண முடியாத நிலை!**

**நாம, ரூபம்!** எல்லாம் **மண்ணாக உணர்ந்து விட்டால்;** உன்னால் பாராயணம் பண்ண முடியாது. பண்ண இயலாது. சிரத்தையில் கவனம் தேவை.

ஆன்ம உணர்வு - 2/159

165. நம் ஆத்மாவும்! நம் மனமும்! நாம் தூங்கும் போது சேர்வதால், கனவின் பொருள்கள்! தோன்றி மயங்கி மறைகின்றன. இதன் காரணம்:- பகல் காலங்களில், இம் மனம்! ஆகாமிய கர்மாவாலும், நாம ரூப வஸ்துக்களின், மோஹத்தாலும், எண்ணங்களை விருத்தி! செய்வதே காரணம் என உணர்க.

ஆன்ம உணர்வு - 2/196

**166. சுகமான தூக்கம்:-**

1. மனம், பகல் காலங்களில், கர்மாக்களை பண்ணும் போது, சர்வார்ப்பண நிலையில்! உறுதியாகவும்! சிரத்தையாகவும்! நம்பிக்கையாகவும்! பரிபூரண வைராக்கியமாகவும்! செய்தால், நாம் தூங்கும் போது, நம் மனம்! எண்ணங்களை இழந்துவிடுகிறது. அங்கு மாயா! அவ்வெண்ணங்களை மறையச் செய்து விடுகிறது.

2. ஆகவே அக்காலங்களில் சுகமாக தூங்கும்; தூக்கம்! இயல்பாகிறது. சர்வார்ப்பணம்! சரி இல்லையானால், கனவு உண்டு என அறிக. **கனவற்ற தூக்கமே, சுகமான தூக்கம் ஆகும்.**

ஆன்ம உணர்வு - 2/196

## 167. பிராமணன்! பிரம்மச்சாரி!

1. பிரம்மத்தை! உணர்ந்தவன் **பிராமணன்!** என்றும்.
2. பிரம்மத்தையே சார்ந்திருக்கப்பட்டவன், பிரம்மார்ப்பணத்தோடு! கூடியவன்! **பிரம்மச்சாரி!** என்றும் உணர வேண்டும். அதாவது **பிரம்மச்சாரி! ஆகாமல்; பிராமணன் ஆக முடியாது.**

ஆன்ம உணர்வு - 3/260

## 168. நீ ஓர் ஸாமான்யனானால்:-

1. நான் & எனதை! விடாத்தன்மையால்! நீ அறிந்தோ, அறியாமலோ! பிறரை போற்றும் & தூற்றும்! ஆகாமிய கர்மா! காரியங்கள்! அக்கர்மா சம்பந்தம்! உடையவர்களை மட்டும், கொடுத்ததை வாங்குகிறாய்! வாங்கியதை கொடுக்கிறாய்! என்ற கர்ம, பரிமாற்ற நிலையில்! அங்கும்! இங்கும்! பகிர்ந்தளிக்கப்படும்.
2. குறிப்பு:- இக்கர்மாவின் பரிமாற்றம் இருமடங்காக பெருகி **பிராரப்தத்தில் பாதியும்! சஞ்சிதத்தில் பாதியும்,** விகிதாச்சாரப்படி சேரும்.

ஆன்ம உணர்வு - 3/293

169. **நீ ஓர் பக்தனானால்:-**

நீ அறிந்தோ! அறியாமலோ! செய்யும்! புண்ணிய, பாபங்கள்! உன்னை **போற்றுபவர்களுக்கு! புண்ணியமும்; தூற்றுபவர்களுக்கு! பாபமும்;** பகிர்ந்து கொடுக்கப்பட்டு, உன் புண்ணிய பாபங்கள்! நாசமாகி; கர்ம பந்த! நிவர்த்திகிட்டும்.

ஆன்ம உணர்வு - 3/293

170. **நீ ஓர் ஞானியானால்:-**

யோக மாயாவின் **(பர)** கருணையினால்; (கர்மாவை ஏற்கும் மனம்! இல்லாமையால்) கர்மாவை! தகிக்கும் அக்கினி!யாக இருப்பதனால்; உன்னை அறிந்தோ! அறியாமலோ! போற்றும்! & தூற்றும்! கர்ம வாக்குகள்! அனைத்தும் பஸ்பமாகிவிடும். அவன்! நிலை கண்டு! நல்லவனாகவும், மாற வாய்ப்பு உண்டு. ஆனால் உன்னை தூற்றுவதால் அவன் கெட்டுப்போக வாய்ப்பில்லை. இதுவே யோக மாயாவின் கருணையால், லோக மாயா (ஸ்ரீபகவான்) கார்யமாகும்.

ஆன்ம உணர்வு - 3/294

171. 1. **வினை!** (உடலால்)**யில் பணிவு** வேண்டும், **மனதில்!** அஸாத்திய **பொறுமை!** வேண்டும்.
    2. **பணிவு!** நதியைப் போல் வளைந்து நெளிந்து செல்வது.
    3. **பொறுமை!** மலையைப் போல் உன் லக்ஷியத்தில்! உறுதியாயிரு என்பதாகும்.

ஜக, ஜீவ, பர, ஐக்கியம் - 1/7

**172. வணக்கம் வேண்டும், வழிபடுவது வேண்டாம்!**

1. அத்வைதிகளுக்கு, வணக்கம் வேண்டும். வழிபடுவது! வேண்டாம் என, ஸ்ரீமஹான்கள் வாயிலாக அறிகிறோம். மேலும்:- வழிபடுவதால் கர்மா! தோன்றும்! பிணையும். 2. வணங்குவதால் கர்மா! தோன்றாது! தொடராது. வணங்குவதால் பணிவும்! பொறுமையும்! இயல்பாகவும் வேறு பயிற்சி & முயற்சி! இல்லாமலும் ஸாத்தியமாகும்.

ஜக, ஜீவ, பர, ஐக்கியம் - 1/8

**173. மாயா, மனம்!**

1. **மாயா - இதன் தன்மை:-**

தோற்றமும்; அதன் இருப்பும்! மட்டுமேயாகும்.

2. **மனம் - இதன் தன்மை:-**

A. மாயாவின் தோற்றத்தை எடுத்து நாம ரூபத்தை! உண்டு பண்ணி அதன் இயக்க குணதோஷத்தை! உண்டு பண்ணுவதாகும்.

B. இந்த மனமானது **நான் & எனதை!** புகுத்தி நாம ரூப! தோஷ குணத்தை! **வலிய!** ஏற்றுக் கொண்டு; வினைக்கு! (புண்ணிய பாபத்திற்கு) வித்திடுகிறது!!!

C. இப்புண்ணிய பாபம்! இல்லாமல் வினையென ஒன்றில்லை. இந்த வினை வித்தில்லாமல்! ஜனன மரண! **பலன்!** இல்லவே இல்லை. இப்பலனை கொடுப்பது காலம்! என்ற **விதி** தேவன் ஆகும்.

ஜக, ஜீவ, பர, ஐக்கியம் - 1/62, 63

174. **விஷய இன்பம் நாசமாக!**

**மனம்!** வசப்பட்ட நாம்! **நாம ரூப!** விஷய இன்ப **கற்பனையை!** நாசம் செய்து; **அறிவால்!** சர்வார்ப்பணமும்! **பேரறிவால்!** பிரம்மார்ப்பணமும்! ஸ்திரமாக பற்றினால்; முறையே பதுமையாகவும்! பின் மண்ணாகவும்! உணரும் நிலையில்; முறையே பேரானந்தமும்! பின் பிரம்மானந்தமும்! பெற்றுவிடுவோம்; இவ்வானந்தத்தால்; **விஷய இன்பம் (துன்பம்) நாசமாகும்.** அதுவே ஜீவன் முக்தி! ஆகும் என அறிக.

ஜக, ஜீவ, பர, ஐக்கியம் - 1/66

175. **பொய் எது, மெய் எது!**

1. நாம, ரூப, உலகமாக, காண்பது **பொய்** ஆகும்.
2. இயங்கும் நிலையில், ஸ்ரீபகவானின்! பொருளாகவும், இயக்கமற்ற நிலையில்; எல்லாம் மண்ணாகவும்; அதுவே பரமாகவும்! அதுவே நாமாகவும்! உணர்வது; **மெய்** ஆகும்.

ஜக, ஜீவ, பர, ஐக்கியம் - 1/67

176. **ஆதி ஸ்ரீமஹான்களின் ஸத்திய வாக்கு!**

உலக! கர்ம காரியங்களுக்கு! முக்கியத்துவம்! கொடுக்க வேண்டாம். அது நடந்து முடிந்த கதை, அதை; மாற்றவோ! மறுக்கவோ! விலக்கவோ! யாராலும் முடியாது.

ஜக, ஜீவ, பர, ஐக்கியம் - 1/103

177. **தனது மன முயற்சி** என்பது:- பத முக்தியோ! பர முக்தியோ! சர்வார்ப்பணத்தால்! வினைபரிபாகமும்,

பிரம்மார்ப்பணத்தால்! மனோ நாசமும்! பெற்று ஆனந்தமும் அடையலாம்! பின் பிரம்மானந்தமும் அடையலாம். என ஸ்ரீமஹான்கள்! சொல்லக் கேள்விப்படுகிறோம்.

ஜக, ஜீவ, பர, ஐக்கியம் - 1/103

178. **சாதனை - எதை செய்ய வேண்டும்?**

1. **நான்! எனதை!** விட வேண்டும்.
2. சர்வார்ப்பணம் **அனுபவம்!** ஆக வேண்டும்.
3. எதையும் **நலமே** என ஏற்க வேண்டும்.
4. இறை & குருவின்! மேல் நம்பிக்கையில், வைராக்கியம் வேண்டும்.
5. **பொறுமையுடன்! பணிவும் &** கருணையும்! வேண்டும்.
6. எல்லோரும்! **நல்லவர்களே!** எல்லோரும் **நம்மவர்களே!!** என்ற **திட** உறுதி! வேண்டும்.
7. நாம்! **ஜீவன் முக்தனே!** என்ற வைராக்கியம் வேண்டும்.

ஜக, ஜீவ, பர, ஐக்கியம் - 1/104

179. **சாதனை - எதை செய்ய வேண்டாம்?**

1. நான் ஆண்! நான் பெண்! நான் குடும்பி, ஸம்ஸாரி என்ற **ஜீவ!** மயக்க வேண்டாம்.
2. **முற்கவனம் & தற்காப்பு!** கண்டிப்பாக வேண்டாம்.
3. குடும்பம்! தொழில்! போக்கு வரவு! கொடுக்கல் வாங்கலில்! **அவசரம்! ஆவேசம்!** படபடப்பு! வேண்டாம்.
4. படிப்பினால் பெறும், பட்டம்! பதவி! இவைகளை தேடுவதில், **போட்டி! பொறாமை!** வேண்டாம்.

5. சொந்த! பந்த! உறவுகளில், நாம ரூப! **மயக்கம்!** வேண்டாம்.

6. தேவை ஆசை! ஆசை தேவை! இவைகளால் உண்டாகும் **சபலம்!** (சின்ன, சின்ன ஆசைகள்) **சலனம்!** (அவைகளின் ஆழ்ந்த எண்ண விருத்தி) **சந்தேகம்!** (பிளவுபட்ட எண்ணம்) கண்டிப்பாக வேண்டாம்.

7. ஶ்ரீபகவானக பாவனை பண்ணும் நிலையிலும்; பர பாவனை நிலையிலும், **அணு அளவும்! சந்தேகம் கூடாது.**

ஜக, ஜீவ, பர, ஐக்கியம் - 1/105

180. ***அனாதை, தீனன்!*** என ஆகாதவர்களுக்கு ஶ்ரீபகவான் ரக்ஷகன் இல்லை. எப்படி ரக்ஷகனாக ஆக முடியும்?????? எவரும் அற்றவனே அனாதை ஆகும். எதுவும் இல்லாதவனே தீனன் ஆகும்.

ஜக, ஜீவ, பர, ஐக்கியம் - 1/115

181. சர்வார்ப்பணம்! என்ற தற்கவனத்தால்! எல்லோரும் நல்லவரே! எல்லோரும் நம்மவரே! நடப்பதெல்லாம் நலமே! என சந்தேக; களங்க; கலக்க; பயமின்றி! ஆனந்தமாக ஏற்றுக்கொண்டால், மனமும்! அதன் நாம ரூபமும்! சர்வ நாசமாகி உடனே ஜீவன் முக்தியும் பெறலாம்.

ஜக, ஜீவ, பர, ஐக்கியம் - 1/119

182. **மனோ நலம்!** பெற வேண்டும் என்றால், **மனம் மறைந்தாக!** வேண்டும் என்று பொருள் கொள்க.

ஜக, ஜீவ, பர, ஐக்கியம் - 2/159

183. **ஆன்ம சுகம் பெற வேண்டும்** என்றால்!

1. ஆன்மா! என்றால், **சைதன்யம்!** ஸ்வயம் ஜோதி ஆகும். அது போக்குவரவற்றதாகும், அது சுகஹீனம் ஆகாது; என்பதே ஸத்தியம்.

2. அப்படியானால் ஆன்ம சுகம் என்பது ஆன்மாவை அஹங்காரம்; மமஹாரம்! என்ற நிலையில்; **நான்! எனது!** என்ற **ஜீவத் திரை!** மூடியிருப்பதுவே! ஆன்மா! சுகவீனமாக இருக்கிறது! என பொருள் கொள்ளல் வேண்டும்.

3. **அந்த ஜீவத்திரை! விலகி நாசம்! ஆக வேண்டுமானால்!**

   A. **ஜீவ!** கர்த்ருத்வம்! நாசமாக வேண்டும்; ஜீவ கர்த்ருத்வம்! நாசமாக வேண்டுமானால்; **சர்வார்ப்பணம்!** ஒன்றே உரிய, உயரிய, மார்க்கமாகும் என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

   B. ஜீவ கர்த்ருத்வம்! நாசமாகி ஈச கர்த்ருத்வம்! நிலை பெறும் போது, **மனோ!** பக்குவத்தால்! **ஆன்மா! சுகம்!** அடைகிறது என்று, பொருள் கொள்ள வேண்டும்.

ஜக, ஜீவ, பர, ஐக்கியம் - 2/159, 160

184. **தோஷ குணம், வக்ர குணம்!**

1. **மாயாவின்! முதல் மகன்! மனமாகும், இரண்டாவது மகன்! கலிபுருஷன்!** ஆகும் என ஸ்ரீமஹான்கள் சொல்வர். மனம் தோஷ! குணமுள்ளவன். கலி வக்ர! குணமுள்ளவனாகும் என அறிக.

2. மனதின்! **நான்! எனதால்!** விளைவது **தோஷ குணமாகும்.**

3. **போட்டி பொறாமையால்!** விளைவது! கலியின் **வக்ர குணமாகும். மனம்** (நான், எனது) அழிந்தால் (மஹறத்தானால்) **கலியும்** நாசமாகும்! என ஸத்தியமாய் உணர்க.

ஜக, ஜீவ, பர, ஐக்கியம் - 2/179, 180

185. **மனம் மடியும் நிலை!**

1. நாம ரூபம்! நாசமானால் **மனம் மடியும்.**
2. நாம ரூபம்! பதுமைகளானால் **மனம் மடியும்.**
3. தோஷ குணமும்! வக்ர குணமும்! நாசமானால்; **மனம் மடியும்.**
4. நாம் ஈசன் கைப்பதுமையானால் **மனம் மடியும்.**
5. சர்வார்ப்பணமும் & பிரம்மார்ப்பணமும்! அனுபவமானால் **மனம் மடியும்.**
6. பாடம், படிப்பு! பட்டம் பதவி! போட்டி! பொறாமை! இவைகளின் முற்கவனம் நாசமானால், **மனம் மடியும்.**

ஜக, ஜீவ, பர, ஐக்கியம் - 2/181

186. **சாட்சி பாவனை** என்பது தராசின் நிறைவைச் சொல்லலாம். அதாவது ஓர் தட்டில் இரும்பு படிக்கல்லும்! ஓர் தட்டில் விலை மதிப்பற்ற நவரத்தினங்களையும்! வைத்து, இதுக்கு! இது சமம்! என கூறும் நிலையில்; படிக்கல்லும்! நவரத்தினமும்! **பேதமற்ற நிலையில் சமமே! (ஒன்றே)**

என உணர்த்தும் நிலையில்; புண்ணிய பாபச் செயல்களை தராதரம் பிரிக்காமல்; ஒன்றே என **சம நீதி!** வழங்குதலே; **சாட்சி நிலை!** ஆகும் என ஸ்ரீமஹான்கள்! சொல்வர். இதுவே சாட்சி நிலையாகிய ஸ்ரீபகவான் நிலையாகும். சாட்சியே மனசாட்சி ஆகும்.

ஜக, ஜீவ, பர, ஐக்கியம் - 2/187

187. ஸ்ரீபகவான் எவரையும் **பாபீ** என தள்ளுவதும் இல்லை. **பக்தன்** என ஏற்பதும் இல்லை. இதுவே சாட்சி பாவனை ஆகும்.

ஜக, ஜீவ, பர, ஐக்கியம் - 2/187

188. 1. **மனம்!** என்பது இல்லாத ஒன்றாகும், மனம் என்பது எண்ணத்தால்! தோன்றுவதாகும். எண்ணம் ஓய்ந்தால்; மனமும் ஓய்ந்து விடும்.

2. இந்த எண்ணம், **நாம ரூப! ஜக! ஜீவ!** நிலையின் எதிர்பார்ப்பு! என்ற வலிய பிடிப்புடன்! ஆத்திர, அவசர; வேகத்தின் வெளிப்பாடாகும்.

3. அப்போது, அந்த அவசரத்தால்; பிராரப்தத்தை மனம் மறந்துவிடுகிறது என்று சொல்வதை விட, மனம் மறுத்து! விடுகிறது என்றே சொல்லலாம். இதன் காரணம் புதிய ஆகாமிய கர்மாவின் மோஹத்தின் **எதிர்பார்ப்பின்!** மோஹாவேசமும்! கோபாவேசமும்! ஆகும் என மட்டும் உணர்க.

ஜக, ஜீவ, பர, ஐக்கியம் - 2/194, 195

189. **மனதின் வேலை:-**

நாம, ரூப, ஜக, ஜீவர்கள் மீது பேதம்! அதனால் விருப்பு வெறுப்பு! அதனால் குற்றம் குறை! இவைகளின் **தோஷ!** கற்பனை கொண்டு, பிற ஜீவர்களை! அல்லல்படுத்துவதும், **தாம்!** அல்லல்படுவதும்! ஆகும்.

ஜக, ஜீவ, பர, ஐக்கியம் - 2/211

190. **மனசாட்சி (அறிவின்) வேலை:-**

மனதின் தோஷ குணங்களை கண்டுகொள்ளாமலும், கண்டிக்காமலும், மனதின் அறியாமையின் புண்ணிய பாபம் **சரியாக!** பகிர்ந்தளிக்கப்படுகிறதா? என சாட்சியாக **விழி கண் குருடுபோல!** பார்த்துக் கொண்டிருப்பதாகும்.

ஜக, ஜீவ, பர, ஐக்கியம் - 2/211

191. **லோக! மாயாவின் வேலை:-**

மனமாகிய தன் மகனின் காரியங்களை! ஜீவ நிலையில் செய்கிறானா? அல்லது ஈச நிலையில் செய்கிறானா? என சரிபார்த்து மனம் எண்ணுவதை, மனம் அறியாவண்ணம் கர்ம காரியங்களை! **குறைவின்றி!** செய்வது மாயாவின்! வேலையாகும்.

ஜக, ஜீவ, பர, ஐக்கியம் - 2/211, 212

192. **சர்வ சாட்சியாகிய பேரறிவின்! வேலை:-**

1. அறிவு மாயாவை வைத்து இயங்கும் நிலையையும்.
2. அறிவு & மனம் **இணைந்து!** இயங்கும் நிலையையும்.
3. யோக மாயாவினால்! கண்காணித்துக் கொண்டு, புண்ணிய பாபத்திற்கும்! ஸத்திய தர்மத்துக்கும்!

விகிதாச்சாரப்படி! பாரபட்ச தோஷமில்லாமல்! நடைபெறுவதையும்!

4. கோடானு கோடி **கோள்களும்! சூர்ய சந்தி**ராதிகளும்! அதனதன் இயக்கம் யோக மாயாவினால் எப்படி இயங்குகிறது? என சரி பார்த்த நிலையில், **பழையன!** கழிதலும்! **புதியன!** உடனுக்குடன் நிர்மாணம்! செய்தலும்.

5. இவர் (பேரறிவின்) பார்வையில்! அவள்! (யோக மாயா!) **செய்தாலும், தாம் விழி கண்! குருடான!** நிலையில் **சர்வ பூத சாட்சியாய்!** இருப்பதுவே! பேரறிவின்! (மஹேசனின்!) காரியமென்று, ஸ்ரீமஹான்கள் வாயிலாக அறிகிறோம்.

ஜக, ஜீவ, பர, ஐக்கியம் - 2/212, 213

193. **யோக மாயாவின்! வேலை:-**

1. யோக மாயாவுக்கு, முக்கியமான கார்யம் இரண்டாகும். **ஸித்தர்கள்! & ஆத்மஞானிகள்!** ஆகிய இவ்விருவரையும்! ஆதரித்து; அரவணைத்து; செல்லும் கார்யம்! இந்த யோக மாயாவுடையதாகும் என ஆதி ஸ்ரீமஹான்கள் வாயிலாக அறிகிறோம்.

2. இவ்விருவர் **பணிக்காகவே!** தமக்கென! மணிக்ரீவம்! என்ற ஓர்! மாயா! எந்திர! தந்திர! உலகத்தையும்! சிருஷ்டித்து; அங்கு நவ(9)கோடி **ஸித்தர்களையும்!** பாதுகாத்து வருவதாக மஹான்கள் சொல்வர்.

ஜக, ஜீவ, பர, ஐக்கியம் - 2/219

194. 1. ஓர் ஞானியானவன் **தூல!** சஞ்சார இயக்க நிலையில் மட்டும்! யோக மாயா! பயன்படும்.

2. **இருப்பு!** ஸ்தானம்! பெறும் வரை மட்டும் **பேரறிவு!** உண்டு.

3. அவன்! (ஞானி) **பர!** சொரூப ஸ்திதி (பிரம்மம்) ஆகி விட்டால் எதுவும்! இல்லை, அங்கு சொல்லவோ! கேட்கவோ! எதுவும்! எவரும் இல்லை. அது! அதுவாகவே! இருக்கும் என ஆதி ஸ்ரீமஹான்கள் வாக்காக அறிகிறோம்.

ஜக, ஜீவ, பர, ஐக்கியம் - 2/221

195. 1. மண்ணே! தூஸி ஆகும்!

2. தூஸியே அணுவாகும்.

3. அணுவே **நிலை!** கண்டு; ஜீவ அணுவும்! பரம அணுவும்! ஆகும்.

4. அப்பரமாணுவே! ஆத்மா! ஆத்மாவே பரமாத்மா! பரமாத்மாவே பரப்பிரம்மம்! பின் அதுவே நாம்! நாமே அது என! சும்மாவே சுகமாக இருக்கலாம்.

ஜக, ஜீவ, பர, ஐக்கியம் - 2/243

196. ஒலி & ஒளி! ர...க...ஸ்...ய...ம்:-

1. ஒலியை **கேட்கலாம்.** ஒளியை **காணலாம்.** கேட்பது **சூட்சுமம்.** காண்பது **தூலம்.**

2. **ஒலியைவிட, ஒளியின் வேகம் அதிகமாகும்.** இவ்விரண்டும், இணைவதே **நாம ரூபம்!** ஆகும். இது செயற்கையின்! வடிவமாகும்

3. இயற்கையின் நிலை **ரூப, நாமம்** ஆகும்.

4. இயற்கையென, ஸ்ரீமஹான்கள் சொல்லும்போது; காலாதீத அந்த ஒன்றை! **ஸத்** என கொள்ளவும். **அது இருக்கிறது என்ற இருப்பை மட்டும்,** உடையதாக கொள்ளவும். அந்த இருப்பை மட்டும் உடைய ஒன்றை, **வெளிப்**படுத்தும் நிலைக்காக; மாயா! பீஜமாகிய **ஓம்** என்ற **பிரணவநாதம்!** (ஒலி வடிவில்) தோன்றியதாக, ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

ஜக, ஜீவ, பர, ஐக்கியம் - 2/246

## 197. ஒலி, ஒளி விளக்கம்!

1. ரூபமாகிய **ஒளி!** முந்தையது என்றும், நாமமாகிய **ஒலி!** பிந்தையது என்றும்; கொள்ள வேண்டும்.

2. இருப்பின் **ரூபமும்!** அதை விளக்கும் இயக்க ஒலி நிலையின்! **நாமமும்!** வந்தது **மாயா பீஜமே!** (விதையே) ஆகும் என உணர்க.

3. தோற்றம் என்ற **ஒளி** (ரூபம்) இல்லாமல்; அதை விளக்கும் **ஒலியாகிய, நாமம்** இருந்தும் இல்லாததே. என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

ஜக, ஜீவ, பர, ஐக்கியம் - 2/248

## 198. ஒளி இல்லாமல், ஒலி இல்லை!

1. இயல்பாக வருவது, **நாதம்** என்றும்; இசையாக பெறுவது **கீதம்** என்றும் உணர்க.

2. **நாதம்** இயற்கையாகும். **கீதம்** செயற்கையாகும்.

3. ஒலியாக உணர்த்தாமல் ஒளியை உணர முடியாது.

4. **ஒளி இல்லாமல் ஒலி இல்லை.** இதுவே ஆதி ஸ்ரீமஹான்களின் வாக்காகும்.

ஜக, ஜீவ, பர, ஐக்கியம் - 2/250

199. **கடவுளை (பரத்தை) அடையும் வழி!**

1. நீயே கடவுளாகிய பரமே. **அது பேரறிவு** ஆகும்.
2. நீயே பரமாகிய நிலையில் இருந்து, தெய்வமாக மாறி அனைத்தையும் சிருஷ்டித்தாய், **அது அறிவு** ஆகும்.
3. நீ விளையாட்டின் நிமித்தமாக, உன் **மனதை பற்றினாய்.** குணதோஷங்களால், காரசாரமாக விளையாடிக் கொண்டிருக்கிறாய். இந்த ஜக விளையாட்டு போதும் என நிறைவு கொள்க.
4. உன் சர்வார்ப்பணத்தினால் ஜீவ கர்த்ருத்வத்தை! நாசம் செய்தால், **நீயே தெய்வமாவாய்.** பின் உன் ஸ்ரீஸத்குரு! அருளிய, பிரம்மார்ப்பணத்தால்! ஈச கர்த்ருத்வத்தை! நாசம் செய்வாயாக.
5. **சர்வார்ப்பணத்தால் வினை நாசமாகும். பிரம்மார்ப்பணத்தால் மனம் நாசமாகும்.** வினையும்! மனமும்! நாசமாகாமல், நீ கடவுளாக ஆக முடியாது. நீயே தெய்வமாக ஆகாமலும்; கடவுளாக முடியாது.
6. **சாதனை** என்றால்:- உன் ஸ்ரீஸத்குருவின்! வாக்கிய சிரத்தையே சாதனையாகும். உடலில் பணிவு, மனதில் பொறுமை, கருணை! அன்பு! வாக்கில் கனிவு! இவை ஐந்துமே உன் சாதனையாக கொண்டால் **நீ கடவுளாகலாம்.**

ஜக, ஜீவ, பர, ஐக்கியம் - 2/251

## 200. மனம் அறிவானால், பிரார்த்தனை இல்லை!

1. அறியாமையின் (கவனக்குறைவின்) ஜீவ மயக்கமே மனமாகும். அதை உவமானமாக சிஷ்யர்களாக சொல்வதாலும், இம் **மனதை உடையவர்கள் உய்வடைவதற்காக, பரசொரூபமே! ஸ்ரீஸத்குருவாக வருவதால்**, தம்மை நம்பும் சிஷ்யர்களுக்காக ஸ்ரீஸத்குருவே! பிரார்த்தனை செய்கிறார்.

2. இவ்விருவருக்கும் (குரு & சிஷ்யன்) பேதம் வரலாகாது; என்பதற்காகவே, குருவே பிரார்த்தனை செய்கிறார். மனம் அறிவானால், பிரார்த்தனை செய்பவரும் இல்லை. பிரார்த்தனையை ஏற்பவரும் இல்லை.

ஜக, ஜீவ, பர, ஐக்கியம் - 2/258

## 201. சுய நலம்! ஸ்வய நலம்! வித்தியாசம் என்ன?

1. **சுய நலம்** என்பது தற்காப்பு சக்தியாகும்.
2. **ஸ்வய நலம்** என்பது தற்கவன சக்தியாகும்.
3. **சுய நலம்** நான் எனதை! விடாத நிலையாகும்.
4. **ஸ்வய நலம்** நாம் என ஆன நிலையில் பேதமும்! விருப்பு வெறுப்பும்! குற்றம் குறையும்! நாசமான நிலையாகும்.
5. **சுய நலம்** நான் நலமாக இருக்க வேண்டும் என்ற நிலையானது, ஜீவ கர்த்ருத்வத்தோடு இருப்பதாகும்.
6. **ஸ்வய நலம்** நாம் நலம்பெற வேண்டும் என்பது, எல்லோரும் நல்லவரே! எல்லோரும் நம்மவரே! என்ற நிலையில், ஆன்ம நேய ஒருமைப்பாட்டுடன்! கூடியதாகும்.

7. **சுய நலம்** புண்ணிய பாப! பிறவிப் பிணியை பிணைப்பதாகும்.

8. **ஸ்வய நலம்** ஸத்திய தர்மத்தோடு கூடி, தெய்வ நிலையை பெற்று, ஸ்ரீஸத்குரு கிருபையால், ஜீவன் முக்தியையும் பெற வாய்ப்புடையதாக அமையும். ஆகவே, **சுய நலம் வேண்டாம், ஸ்வய நலம் வேண்டும்.**

ஜக, ஜீவ, பர, ஐக்கியம் - 2/259

202. ***ஸத்வ! குணத்தால் பெறுவது என்ன?***

1. ஸத்வ குணத்தால் பார்வையில் ஸாந்தீயும்!, எண்ணத்தில் அமைதீயும் பெறமுடியும்.

2. ஸத்வ குணத்தால் நாம் நல்லவனாகவும், நாம் காணும் அனைவரும் & அனைத்தும் நல்லவனாகவும் காண முடியும்.

3. உலக இயக்கம், அமைதி! ஆனந்தம்! உடையதாகவும் உணர முடியும்.

4. இந்த ஸத்வகுணத்தின்! அஸ்திவாரமே பொறுமை! பணிவு! அன்பு! கருணை! இறை & குரு நம்பிக்கை! என்ற இந்த, ஐந்தாகும்.

5. இவன் & இவள்! இது & அது! என்ற பேதம் மறையும். எல்லாம் ஒருவனின் இயக்கமே. அவனே நம் தந்தை, நாம் அவனுடைய குழந்தையே! என்ற தெய்வீக அன்பு! இயல்பாகும்.

ஜக, ஜீவ, பர, ஐக்கியம் - 2/263

## 203. மனம் எண்ணுவது பிராரப்தமா, ஆகாமியமா!

1. மாயாவும்! மனமும்! இணைந்து கூத்தடிக்கும் நாடக மேடையே, இவ்வுலகமாகும். இதன் உண்மை:- எண்ணுவது **மனம்,** அம்மனம் எண்ணுவது, பிராரப்தமா? ஆகாமியமா? என கவனிப்பது **மாயா.**
2. அவ்வெண்ணம் **பிராரப்தமாக** இருந்தால், அக்கர்மா சுகமாக இருக்கும். **அக்கர்மா ஆகாமியமாக** இருந்தால் துன்பமும் அதன் இன்பமும்! அதன் தொடர் கர்மாவும்! தொடரும்.

ஜக, ஜீவ, பர, ஐக்கியம் - 2/265

## 204. **ஜகத்** என்றால்:-

**நாம ரூப!** ஜக ஜீவ தோற்றம் எது எதோ? எவை எவையோ? எவரெவரோ? அனைத்தும்; ஜகத்தே ஆகும்.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 1/35

## 205. **மஹத்** என்றால்:-

**நாம ரூபம்!** எல்லாம் நாசமான! நிலையில் உள்ள **ஸ்ரீமஹான்கள்!** அதாவது யோகி & சித்தர்கள், ஞானிகள்! தேவ தெய்வங்கள்! அனைத்தும் மஹத்தாகும்.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 1/35

## 206. ஸ்ரீமஹான்கள் யார்?

1. நாம, ரூபம்! குணம், குறி! கடந்த நிலை! **பேரன்பாகும்!** இது பக்தியின் முதிர்வு.

2. **பேரறிவு!** என்பது **சர்வசாட்சி!** நிலை ஆகும். இது **அகண்ட பரபாவனை!** ஆகும். ஜீவன் முக்தியின் தகுதி உடையவர்கள் ஆகும்.

3. இவர்களையே ஸ்ரீமஹான்கள் என்று, ஆதி ஸ்ரீமஹான்கள் வாயிலாக அறிகிறோம்.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 1/52

207. ஸ்ரீபாத & பாதுகை சேவையினால்தான் தாஸி! ஆக முடியும்.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 1/63

208. எவனொருவன் தன் தூலத்தை அவன் (ஸ்ரீபகவான்) கை பதுமையாக ஆக்கிக் கொண்டானோ, அவன் கர்ம காரியம் அனைத்தும் ஸ்ரீபகவானே (மாயாவே) ஏற்றுக்கொள்கிறான் என அறிக.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 1/67

209. ஸ்ரீபாதசேவை செய்பவரை விட, செய்யாது **உள்ளம் உருகுபவர்** சீக்கிரம் பலம் & பலன் பெறுவர்.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 1/68

210. 1. ஸ்ரீமஹாத்மாவான! **குறு (குரு) முனிவர்!** ஸ்ரீஅஹஸ்திய பிரானின்! (ஸ்ரீஸப்த ரிஷிகளில் ஒருவரான & ஸ்ரீஸத்குருவின்) பரிபூரண! கிருபை பெற்றவர் ஸ்ரீகாவிரி அன்னை. மற்ற மூவரும் (ஸ்ரீகங்கா! ஸ்ரீயமுனா! ஸ்ரீவாணி!) **தேவ தெய்வ!** நிலையிலும்; புண்ணிய **தீர்த்தம்!** நிலையிலும் சேர்க்கலாம்.

2. ஆனால் **ஸ்ரீகாவிரி அன்னை, குருமாதாவும்! புண்ணிய தீர்த்தமும் ஆகும்.** இந்த ரகஸ்யத்தை இந்த ஏழை வைத்தியம்! ஸ்ரீஸத்குரு அகஸ்தியபிரான்! திருவாக்கால், அவருடன் உரையாடும் போது கேட்டதாகும்.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 2/133

211. ஸ்ரீஅகஸ்தியபிரான் ஸ்ரீஸத்குரு! ஆவார். ஸ்ரீகாவிரி அன்னை ஸத்சிஷ்யை ஆவாள் என உணர்க.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 2/138

212. **காவிரி அன்னையின் ஆசி!** காவிரியில் உங்கள் அனைவரின் பாதங்கள் படுவதால் **மாந்தரின் பாபம் அகலும்,** எம் பார்வையினால் உங்கள் அனைவருடைய பாதக எண்ணங்கள் நாசமாகும். **காவிரி அன்னை.**

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 2/146

213. **பாசம், அன்பு!**

1. இன்னார்! இன்னார்!! என காண்பது **பாசம்** ஆகும்.
2. இந்த இன்னாருக்குள்! **ஸ்ரீபகவான் & குரு என உணர்வது அன்பாகும்.**

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 2/170

214. **சேவையின் முக்கிய கணிப்பு!**

1. **நித்திய!** பாராயணம், ஸத்ஸங்கம் **சிரத்தை!**யோடு! செய்பவர்கள் **மட்டும்** சேவையின் **பலத்தை!** ஏற்க முடியும்.

2. அதேபோல், **சேவையில்!** முன்கூறிய நிலையில் **சிரத்தையோடு!** ஈடுபடுபவர்கள் **மட்டும்** அவர்களுடைய ஆத்மஞான அனுபவ **பலனை!** முழுமையாக ஏற்க முடியும். இது **இறை & பர! கருணையாகும்!**

3. ஒருவருடைய குற்றம் குறை! பாப பாதகச் செயல்களை! முழுமையாக மறந்து! அவரை உயர்வாக; நீ கருதினால்; நீ உயர்ந்து விடுவாய்.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 2/172

215. **அகண்ட:-**

1. (**அகண்ட**) புள் பவர் ஸ்டேஷன், **சதாசிவம், பரம்.**
2. ஸப் பவர் ஸ்டேஷன், **மஹேசன் & யோக மாயா.**
3. மெயின் டிரான்ஸ்பார்மர் **லோக மாயா.**
4. மஹேசனை பாறை! என்றோ; குட அளவுள்ள ஜலம்! என்றோ; கொள்ளலாம். இவற்றின் நிழலே! **யோக மாயா! ஆகும்** என அறிக.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 2/179, 180

216. எவரிடமும்! எதனிடமும்! அலட்சியம்! கூடவே கூடாது. அப்படி செய்தால் நம் **லக்ஷியத்தை!** இழந்து விடுவோம், இது உறுதி.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 2/213

217. சிறியவர்! பெரியவர்! கற்றவர்! கல்லாதவர்! என்ற **பேதம்!** கூடவே கூடாது. (அனைவரிடமும்! அனைத்திடமும்!) சிறு

துரும்பும் பல் குத்த உதவும்! என்ற நிலையில், மதிப்பு! மரியாதை! வேண்டும்.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 2/213

218. வெளிவேஷம் கண்டு! முடிவெடுக்கலாகாது. அவ்வேஷத்தினுள் ஸ்ரீபகவான் உள்ளான் என உணர்க. வேஷம் கண்டால் துவேஷம்! அதன் **உள்!** உணர்வால் **ஆனந்தம்!** பெற முடியும்.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 2/213

219. **ஸ்ரீமஹான்களின் உச்சிஷ்டம் இரு வகைப்படும்**:-

1. **வாக்கு!** 2. **உணவு!** என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

1. **வாக்கு**:-

A. **ஸ்ரீஸத்குரு**வாக இருந்தால் அவர் வாக்கு! **பரஒலி!** ஆகும்.

B. **சாமான்ய குரு**வாக இருந்தால் அவர் வாக்கு! **இறை ஒலி!** ஆகும்.

C. **சக்தி குரு**வாக! இருந்தால் (ஸித்தர்கள் யோகிகளும் அல்ல. செப்படு வித்தைகளும் (கண் கட்டு வேலைகளும்) பில்லி சூன்யம்! பரிஹாரம்! என்ற **காரிய சித்தி!** உடைய குருவாக இருந்தால்) அவர் வாக்கு! **ஜீவ ஒலி!** ஆகும் என உணர்க.

2. **உணவு**:- உச்சிஷ்டம் இது **ஸ்ரீஸத்குரு!** ஒருவருக்கே பொருந்தும். ஏனைய **குரு!**மார்களுக்கு! பொருந்தாது

என்பது, ஆதி ஸ்ரீமஹான்களின் வாக்காகும். உச்சிஷ்டம் மகிமையால் வினை நாசமாகிறது.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 3/239, 241, 242

220. **அத்வைதி - ஓர் ரகஸ்ய குறிப்பு:-**

1. **மித்தை** என்றால் **பொய்** என பொருள்படும்.
2. **அவித்தை** என்றால் **அறியாமை** என பொருள்படும்.
3. **வித்தை** என்றால் **அறிவு** என பொருள்படும். ஆனால் இங்கு நம் ஸ்ரீபகவானை! அனைவரும் **மாயா!** என சொல்வதுண்டு.
4. **மாயா!** என்றால் இல்லாததை இருப்புடையதாக தம்! சாமர்த்தியத்தால் காட்டுவது மாயாவாகும். அதாவது ஸ்ரீபகவானை! சொல்லும்போது; (வெயிலில்) **கானலில்!** தோன்றிய **ஜலம்** ஆகும் என அறிக.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 3/248, 249

221. **ஸ்ரீபகவானின் வடிவம் கானல் ஜலமே!**

1. கானல் ஜலமானது; கடும் சூரிய வெப்பத்தால் இல்லாத வெட்ட வெளியில் குளத்து ஜலம் போலோ! நீரோடை போலோ! அலை அலையாக; **ஜலம்!** இருப்பதை போல் தோற்றும். ஆனால் ஜலம் இல்லை.
2. அதே போல், உன் உபாசன மூர்த்தியாகிய ஸ்ரீபகவானும்! உன் **அறிவால்! நீ! எந்த!** வடிவம் கொடுக்கிறாயோ; (**பயம்** அற்ற நிலையில்) **அந்த வடிவில்! மாயா!** (தோன்றுவான்) தம் காரியத்தை பண்ணும்.

3. கானல் என்ற வெயிலுக்கு எந்த அதிஷ்டானமும்! இல்லையென்பதே ஸத்தியம். ஆதலினால்தான் **மாயா வடிவம் ஸ்ரீபகவானாகும்!** என அனுபவ ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

4. அந்த கானல் ஒளியை! அதாவது **சூரிய ஒளியை! அதிஷ்டானம்** என்றோ; **ஆரோபம்** என்றோ; சொல்லக்கூடாது. சொல்ல முடியாது. சொல்ல இயலாது.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 3/249, 250

## 222. ஸ்ரீபகவானை காணும் நிலை:-

1. நாம, ரூபம் அனைத்தும் பதுமைகளாக தோற்றும் நிலை அறிவால் பெறவேண்டும்!

2. பேதம்! விருப்பு வெறுப்பு! குற்றம் குறை! சர்வ நாசமாக வேண்டும்.

3. அணு அளவேனும் **எதிர்பார்ப்பு!** கூடவே கூடாது. அவனை காணும் எதிர்பார்ப்பும்! அவனோடு பேச வேண்டும் என்ற அளவு கடந்த ஆசையும்! உள்ளத்தில் நிறைந்து; மற்றும் வேறு **எந்த!** எண்ணமும் இல்லாதிருக்க வேண்டும். அவஸ்யம் அவனை காணலாம். இது ஸத்தியம்.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 3/261

## 223. மனோ நாசம்!

1. ஓர் சாதனையாளனுக்கு **திரை!** மறைப்பு! என்பது **மன!** திரையே தவிர, **மாயாவின்** திரையல்ல.

இம்மனத்திரையை, அகற்றுவதே சாதனையாகும். இதை **மனோ நாசம்** எனச் சொல்வர்.

2. மனம் தோன்றிய இடம் மாயாவாகும். அம்மாயா! இயங்கும் போது அறிவு! நிலையில் உள்ள, ஸ்ரீபகவானாகும். ஸ்ரீபகவான்! **பர!** அம்ஸ ஸ்வரூபமாகும். அப்பகவான்! மாயாவை! பற்றினால் ஸ்ரீபகவானாவான். மாயாவை விட்ட மறுக்ஷணம் **பரமே** ஆவான்.

3. இம் மனம் படைத்த மனிதனும்! மனதைவிட்ட! **மறுக்ஷணம்**! பர!மேயாவான். இம் மனித வடிவின்! **பரமும்!** ஸ்ரீபகவான்! வடிவின் பரமும்; ஒன்றே! ஆனால் அளவு நிலையில் சற்று கூடுதல் குறைவு உண்டு. இருப்பு நிலையில் பேதமில்லை.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 3/286, 287

224. 1. **மனம்** நாம, ரூபத்தை நம்பும்.

2. **அறிவு** உள் இருப்பை உணர்வுடன் நம்பும்.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 3/289

225. சாஸ்திரவாதிகளுக்கும், வேதாந்திகளுக்கும் பிரவர்த்தியே மூலதனமாகும், ஆகவே ஸ்ரீபகவத் சொரூபத்தை ஏற்கார்.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 3/291

226. **மாயா, மனம், ஆகாமியம், பிராரப்தம்!**

1. ஓர் தோற்றத்தை! காட்டுவது **மாயாவாகும்.**

2. அத் தோற்றத்தை! **தேவை & ஆசை! ஆசை & தேவை!** என கற்பனை செய்வது **மனமாகும்!**

3. அவசர, வேக கற்பனை! **ஆகாமியமாய்** தொடரும்.

4. நிதானம், பொறுமையின்! கற்பனை **பிராரப்தமாய்** முடிந்து நிறைவு பெறும். அது சுக கர்மாவாகும். கற்பனையின் எண்ணம் மனதினுடையது! அதை நிறைவேற்றுவது, மாயா! ஆகும்.

5. மனதின் வேகத்தினால்; பிராரப்தம் எது? ஆகாமியம் எது? என **மனம்** உணர முடியாது, உணர இயலாது. இங்கு இம்மனதிற்கு, ஓர் நாம ரூபமுள்ள ஸ்ரீபகவான் **துணை!** இருந்தால் **மட்டும்!** மாயாவின் **சகாயம்!** பெற முடியும்; என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 3/293

227. **இக்கலியில்!** ஸ்ரீபகவான் துணை! இல்லாமலும்! மாயாவின்! சகாயம் இல்லாமலும்! **கர்ம!** பாரத்தை அழிக்க முடியாது.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 3/294

228. **வினைப் பெருக்கம்** என்றால்!

இந்த **மனிதனின்!** அதாவது **மனதின்** கர்ம காரியங்களை, இந்த **மாயா!** அதி சிரத்தையுடன்! **ஜீவ!** ஆக்ரமிப்பு என்ற **ஜீவ** கர்த்ருத்வம்! **(நான்! என்னால்! எனது!)** இருந்தால் மாயாவின் கார்யம் வினைப்பெருக்கமாய் முடியும்.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 3/295

229. **வினை நாசம்** என்றால்!

சர்வார்ப்பணமாக எல்லாம் **நீயே!** எல்லாம் உன்னால்! எல்லாம் உனது! என இருந்தால், அது ஈச கர்த்ருத்வமாக

இருப்பதால், அம்மாயா! **வினையின்!** சிக்கலை அவிழ்த்து! **(வினை!** நாசமாய்) மாயா முடித்துவிடும் என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 3/295

230. ஸ்ரீபகவத் தர்ஸனமும்! ஸ்ரீபகவத் கிருபையும்! பெறும் வழி உருக்கம்!, கண்ணீர் பெருக்கம்!, அதுவே நம் லக்ஷியம்! என்ற; துடிப்பின் **ஏக்கம்!** ஒன்றே சாதனையாகும். இதனால்தான் மனம்! அறிவாகும்! என மட்டும் உணர்க.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 3/297

**231. ஜீவ அணு, பர அணு!**

1. **ஜட** சொரூபமாக (மண்! மலை! தாவரங்கள்! ஜீவ சரீரங்கள்) இருக்கும் நிலையில்; அவை அனைத்தும் அணுக்களின்! **தொகுப்பாகும்!** அதாவது, இணைந்து பிணைந்த ஒன்றாகும். (களிமண் போலாகும்). அவைகள் நாம, ரூப, **இயக்க!** நிலையில், இயங்கும் போது **ஜீவ!** அணுவாகும்.
2. அவைகள் நாம ரூப! இயக்க குணதோஷம்! நாசமான நிலையில்; (பரமாத்ம) **தூஸி** நிலையில்; **பரமாணு!** என்ற நிலையில், ஆத்மா! பரமாத்மா! பரப்பிரம்மம் என்ற நிலையில்; காலாதீத பரம்! என ஆகிறது என உணர்க.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 3/298

**232. பரமாத்ம! புத்தி தோன்ற தடை! செய்வது எது???**

1. **மனதின்!** நாம ரூப! கற்பனையும்; அதன் **குண!** தோஷங்களும் ஆகும்.

2. அக்குணதோஷம்! எதனால் பிணைகிறது என்றால்???
அக்குணதோஷம்! **நான்! எனதால்!** பிணைகிறது.

3. நான், எனதின்! உண்மை சொரூபம் என்ன என்றால்???
ஆசை தேவை! தேவை ஆசைகளின்! பின்னலாகும்.

4. இதன் நிவாரண மார்க்கம் என்ன? என்றால்? நிக்ரஹும் (வெறுப்பு) இல்லாத **நிறைவே!** நிவாரணம் ஆகும். இது சர்வார்ப்பணம்! ஒன்றால் தான் சாத்தியமாகும்.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 3/299

233. **புண்ணியம்!** சொர்க்கத்தை மட்டும் கொடுக்கும், பதமுக்தியை கொடுக்காது.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 3/303

234. **தர்மம்!** பத முக்தியை! மட்டும் கொடுக்கும். சொர்க்கத்தை கொடுக்காது.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 3/303

235. **ஸத்தியம்!** இது **வாக்காக!** அமைவதால்; இது பதமுக்தியையும்! கொடுக்கும். அதனினும் அதீத பரமுக்திக்கும் நிலைகண்டு வழி வகுத்துக் கொடுக்கும் என உணர்க.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 3/303

236. 1. நான்! எனது! என்றால் **மனம்.**

2. நீ! உனது! என்றால் **அறிவு.**

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 3/304

237. 1. நான் எனது! **உற்று!** செய்வது புண்ணிய பாபமாகும்.
நான் எனது! **அற்று!** செய்வது தர்மமாக மாறும்.

௨. பிராரப்த கர்மாவாக இருந்தால்; முந்தையது! தொடர் **வினை!**யாக; தொடரும். பிந்தையது! **முடியும்!** வினையாக முடிவுறும்; என மட்டும் அறிக.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - ௩/௩0௫

௨௩௮. **ஆத்மா அஸங்கன்** என்றால், அசைவில்லாதது என்றும், வாக்கால் விளக்க முடியாதது என்றும், பற்றில்லாதது என்றும் பொருள் கொள்க.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - ௩/௩1௫

௨௩௯. **ஜீவன் முக்தி!** என்பது மனதிற்கே உண்டு. ஆன்மாவுக்கு இல்லை என்பதே ஸத்தியம்.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - ௩/௩1௫

௨௪0. **ஸத்திய, தர்மம்** என்பது:-

1. ஸத்தியம் **வாக்காகும்!** தர்மம் என்பது அவ்வாக்கை! **நிலை** கண்டு **பொருள்!** கொண்டு **ஒருவர்க்கு!** ஒருவர் கொடுப்பதாகும். (போதிப்பதாகும்) அதுவே செய்கை. தெய்வீகத்தையும்! பரமார்த்தீக நிலைகளையும்! போதிப்பதே **ஸத்திய வாக்கை தர்மம் செய்வதாகும்.**

௨. நாம ரூப! சம்பந்த, லௌகீக, சொந்த, பந்த, பாச பற்றின்! வார்த்தைகளை பேசாதிருத்தலே **உயர்! தர்மமென்று ஸ்ரீமஹான்கள் கூறுவர்.**

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - ௩/௩15

௨௪1. நிஷ்காமிய பக்தீ & கர்மா தர்மமாக மாறுவதையே, **சுகிர்தம்** என்று சொல்லப்படும்.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - ௩/௩16

**252. பதமுக்தி (அல்லது) பரமுக்தி ஓர் பக்குவ ஆன்மாவுக்கு, கிடைப்பது என்றால்?**

1. பூர்வ **சுகிர்தம்!** (தர்மம்) வேண்டும். பிராரப்தம் வேண்டாம் அல்லது
2. ஸ்ரீபகவத் கிருபை! பரிபூரணமாக பெற்றிருக்க வேண்டும். அல்லது
3. இச்ஜன்மாவில் ஸ்ரீஸத்குரு! திருஷ்டியும்! ஸத்ஸங்க ஈடுபாட்டினால்! உருக்கம்! ஏக்கம்!, அதை அடைய வேண்டும் என்ற இதய துடிப்பு! நாம, ரூப, ஜக வாழ்வில் போதும் என்ற ஓர் நிறைவும்! பெற்றிருக்க வேண்டும்.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 3/316

253. எம் ஸ்ரீஸத்குருதேவர் வாக்கு உலக நிலையில் அபத்தமே, உண்மையில் ஸத்தியமே ஆகும்.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 3/318

**254. ஆசியும்! ஆசியின் பலனும்!**

1. **ஆசி** என்பது கொடுப்பதும் அல்ல, வாங்குவதும் அல்ல, என பிரமாணமாக நம்பவும்.
2. ஸ்ரீபகவானோ! ஸ்ரீமஹாத்மாக்களோ! அவர்கள் **கருணை!** என்ற **அமுத பிரவாகம்!** ஆகும்.
3. அங்கு உன் உள்ளமானது (மனமானது!) இறை உணர்வின் நடை! உடை! பாவனையில்! பொறுமையும்! பேதம் அற்ற நிலையில், அனைவரிடமும் உன் தூலத்தினால் **பணிவும்!** செய்து கொண்டு **பள்ளமானால்!** அக்கருணை பிரவாகமானது!

தாமே வந்து நிரம்பிவிடும். இதுவே ஆசியும்! ஆசியின் பலனுமாகும்! என ஸ்ரீமஹான்கள் வாயிலாக அறிகிறோம்.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 3/321

245. 1. **விஷ்ணு:-** பரந்து விரிந்த ஆகாயமாகும். இது யோக மாயாவின்! அம்ஸமாகும்.

2. **நாராயணா:-** பரந்து விரிந்த அலையற்ற அகண்டானந்த சமுத்திரம் ஆகும். இதை மங்களம்! என்றும்; யோகமாயாவின்! அம்ஸம் என்றும், கொள்ளலாம்.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 3/329

246. **அஞ்ஞானம், ஞானம்!**

1. நாம, ரூப **தோற்றமாய்!** காண்பது **அஞ்ஞானம்** ஆகும்.
2. அவைகளை **மண்ணாய்!** காண்பதல்ல, உணர்வது **ஞானம்!** ஆகும்.
3. இங்கு காண்பது **மனம்!** ஆகும். உணர்வது **அறிவு!** ஆகும்.
4. காணும் நிலையில் **உணர்ச்சி!** உணரும் நிலையில் **ஆனந்தம்!**
5. காணும் நிலையில், உணர்ச்சிகளை அடக்கி அழித்து, எல்லாம் ஒன்றே, எல்லாம் நலமே! எல்லாம் நாமே! என அடங்கினால் எங்கும் எல்லாம் ஆனந்தமே!. அதுவே **ஞானம்.**

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 3/332

௨௪௭. **எத்தனம்! பிரயத்தனம்! தெய்வத்தனம்!** என்பது:- **பத & பர முக்தியின் தனது மனமுயற்சி** ஆகும். உலகியல் கர்மாவின் புண்ணிய, பாப வினையின்! இயக்கத்திற்கல்ல. அது உன் தலைவிதி (பிராரப்தம்) ஆகும்.
பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - ௪/௩௫௩

௨௪௮. நாம, ரூப மயக்கத்தினால் உன்னால் பொன்னாக முடியவில்லை. **நாம, ரூப, ஆவரண மயக்கத்தை விட்டால்,** அதுவே போதும் என்ற நிறைவை பெற்றதாகும். அந்நிலையில்தான், ஸ்ரீபகவான் என்ற பொன்னாக முடியும்.
பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - ௪/௩௭௨

௨௪௯. **வேகம்:- சீக்கிரம், சீக்கிரம்** என்ற **அவசரம்!** ஆகும். இதனால் அக்கர்மாவை செய்யும் மனம்! பல பல **ஆசை!** எண்ணத்தால் சிதறடிக்கப்படுகிறது. நடந்து முடியும் கர்மா, **தொடர்!** கர்மாவாகிறது.
பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - ௪/௩௭௩

௨௫௦. **காரிய பற்று:-** இதன் முக்கியம் என்னவென்றால் ஒவ்வொரு **வினாடியும்!** இயல்பாக நடைபெறும் கர்மா! ஒழுங்காக நடைபெறுகிறது. **ஆ.......னா.......ல்? ஆசை!** வசம் கொண்ட **மனம்!** பலனின் எதிர்பார்ப்பால், **வேகம்!** அடைகிறது. வேகத்தால் கர்மா சிதறடிக்கப்படுகிறது.
பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - ௪/௩௭௪

௨௫௧. அருளும்! பொருளும்! (பணமும்) ஒன்று சேராது. **பணத்தால் தோஷகுணம்** சேரும். **அருளால் ஸத்வ குணமும்,** தேவைக்கு பணமும் இயல்பாக கிடைக்கும்.
பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - ௪/௩௭௫

**252. கல்வி வேண்டும்! படிப்பு வேண்டாம்!**

1. **கல்வி!** என்றால் **ஞானம்!** ஞானம் என்றால் **அறிவு!** அறிவு! என்றால் **ஆத்மா!** ஆத்மா! என்றால் **பரமாத்மா!** பரமாத்மா! என்றால் **காலாதீத பரம்** (பரப்பிரம்மம், பரம்பொருள்).
2. **படிப்பு!** என்றால் **பட்டம்!** பட்டம் என்றால் **பதவி!** பதவி! என்றால் **பணம்!** நிலையில் வரும்; அந்தஸ்து! கௌரவம்! அதிகாரம்! ஆதிக்கம்! அஹங்காரம்! அபிமானம்! நிலையில் அறிவுக்**கண்ணை!** (கல்வியை) மறைக்கும். கலிதோஷ! மன மாயயையின்! திரை! ஜனன மரண படுகுழியாகும் என உணர்க.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 4/375

**253. பொறுமையும்! பணிவும்!** உள்ளத்தை பள்ளம் ஆக்கும் கல்வி ஆகும். அக்கல்வி நிலை பெறும்போது, இறை & குரு கருணையின் பிரவாகம் தானே நிரம்புகிறது. ஜீவன் முக்தியின் வாசலும் தாமே திறந்துவிடுகிறது.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 4/376

**254. ஐந்து மணிக்காவது எழுந்திரு கொழுந்தே! நீ** ஸ்வய ஞான அனுபவ புஸ்தகம் திறந்து ஓர்மித்து அமர்ந்தால் போதும். உன் கதையை யாம் முடித்து விடுகிறோம் என உறுதியுடன் நம்புவாயாக. நம்பிக்கையின் வைராக்கியமே உன் பலம்.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 4/382

255. **நம்பும்!** அன்பர்கள் அனைவருக்காகவும் காலாதீத ஒன்றே ஓர் காலத்தை ஏற்படுத்திக் கொண்டு; **உங்களுக்காகவே! அது!** பாராயணம் செய்கிறதென்று உணர்க.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 4/383

256. **கலி கோர! மனோ தோஷ! குணங்களை நாசம் செய்ய!**

1. கிருதயுகம் (ஸத்திய யுகம்), ஒரு மணி நேரமும்; கலியுக முடிவின் ஒரு மணி நேரமும்; இணைத்து கலி கோர! மனோ **தோஷ! குணங்களை**யும் நாசம் செய்யும் பாராயணமாகும்.
2. அதிகாலை 05.00 *to* 07.00 வரை உங்கள் ஸ்ரீஸத்குருதேவர் உங்களுக்காவே பாராயணம் செய்கிறார் என உணர்க.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 4/384

257. வறுமை என்ற விதி உன் தூலத்தை நசுக்கட்டும் ஆனால் மனதை மட்டும் இறை & குரு உணர்வில் ஆழ்த்துவாயாக. அவஸ்யம் நலமும், ஆனந்தமும் பெறுவாய்.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 4/385

258. நீ நன்றே செய்வாய், பிழையும் செய்வாய், யாமே இதற்கு நாயகன்:- மனம் தேடிய வினை (உடலை)யை வைத்து விதி விளையாடும். யாம் **மனமும்! வினையும்! விதியும்!** அல்ல. யாம் அசையும் நிலையில் உன் குழந்தையே.

அசையா நிலையில் யாமும் **நீயும்**! அக்காலாதீத பரமே! என உணர்வாயாக.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 4/386

259. எம் கடும் வினையினால் பிழை செய்வோம். உம் கருணையினால்; நன்மையே செய்வாய். எமக்கு எந்த பயமும் கவலையும் இல்லை.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 4/387

260. **இயலாத்தன்மை மனதிற்கு வந்தால்தான்,** அம் மன அஹங்காரம்! அதிகாரம்! ஆதிக்கம்! அபிமானம்! முதலிய அனைத்தும் சர்வநாசமாகும் என அறிக.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 4/388

261. **தேன் மாயாவாகும்** ஆகவே அது இயக்கம் ஆகும். **பால் அதுவான ஞானம்!** ஆகும். இது இருப்பு நிலையில் நாம ரூபம் அனைத்தையும் பாலில் ஜலம் போல் தம்மோடு மறைத்து அழித்த நிலையாகும்.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 4/392

262. **நாதம், கீதம்!**

பிரணவ நாதமும்! வீணையின் கீதமும்! **மட்டும்!** இணைந்த நிலையில் **நா...த...ம்** என ஸ்ரீமஹான்கள் சொல்வர். மற்றும் அனைத்து ஓசைகளும் **கீதம்** ஆகும் என உணர்க.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 4/396

263. **ஆகாயம்** என்றால் யோக மாயா! நாதப்பிரம்மமும்! ஸப்த பிரம்மமும்! ஒன்றாக இணைந்த அம்ஸமே ஆகாயம்

ஆகும் என உணர்க. ஆகாயம் பஞ்ச பூதங்களில் அதீதமானதாகும்.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - ௫/௩௯௭

௨௬௪. ௧. ஓர் உண்மையான பக்தன்! ஸ்ரீபகவன் நாமாவை! இடையறாது ஜபிப்பதனாலும்; ஸ்ரீமாதா! ஸ்ரீபிதா! ஸ்ரீகுரு! ஸ்ரீதெய்வம்! என்ற **இல்லற & ஸ்ரீபாகவத!** தர்மத்தை! பணிவோடும்! பொறுமையோடும்! ஏற்றுக் கொள்வதாலும்; தூல வினையின் கடுமை & கொடுமைகளை! மாயா கவனித்துக் கொள்கிறது.

௨. வினையின் **பாரம்!** குறைபட்டு, குறைபட்டு; அழிவதால்; **மனம்!** காற்றைப்போல் லேசாகிறது. அதுவே **மேல்!** நோக்கிப் போய் மஹத்தாகவும்; ஜீவன் முக்தி பெறவும் வாய்ப்பு உண்டாகிறது, என உணர்ந்தால் போதும்.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - ௫/௫௧௫

௨௬௫. ௧. **மனோ!** நாசம் ஆனாலன்றி; ஜீவன் முக்தி! இல்லையென்பதே ஸத்தியம்.

௨. வினை பரிபாஹமும் பின் நாசமும், ஆவதற்கு சர்வார்ப்பணம்! எப்படி முக்கியமோ?

௩. அதே போல் மனோ நாசத்திற்கு; **பிரம்மார்ப்பணம்!** மிக! மிக! மிக! மிக! முக்கியம்.

இதன் அப்யாசம்:- எல்லாம் ஒன்றே! எல்லாம் மண்ணே! எல்லாம் பரமாகிய சிவமே! அது நாமே! நாமே அது! என்பதாகும்.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - ௫/௫௩௯

266. 1. சர்வார்ப்பணம் **பொறுமை!** ஆகும்,
2. பிரம்மார்ப்பணம் **பணிவு** ஆகும்.

பத்திரியில் கங்கா, யமுனா, சரஸ்வதி, காவிரி - 4/441

267. ஓ எம் ஆத்மானந்த குழந்தைகளே! உங்கள் **பொறுமை & பணிவினால்** காலாதீத **அந்த ஒன்றை!** அடைந்துவிட்டீர்கள் என்றும், **இனி அடைய** வேண்டியதொன்றில்லை! என ஆசி கூறி வாழ்த்துகிறோம்.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 2

268. **பிரணவநாதம்** அனைத்து ஜீவ கோடிகளுக்கும் ஆதாரம்! ஆதரவு! ஆகாரம்! **ஓசை!** என்றும்; அதுவே அனைத்து ஸப்தார்த்தம்! என்றும்; எல்லா இயக்கமும் அதுவே என்றும்; ஆதி ஸ்ரீமஹான்கள் வாக்காக அறிகிறோம்.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 10

269. ஸ்ரீவினாயகன் **மூலப் பரம் பொருள்!** என ஆதி ஸ்ரீமஹான்களின் வாக்காக அறிகிறோம்.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 11

270. ஸ்ரீமுருகன்! திரிகர்த்தாக்களிலும்! அதீதமானவன் என்றும்; இவனை **பேரறிவு** சொரூபன் என்றும்; ஆதி ஸ்ரீமஹான்கள் வாக்காக அறிகிறோம்.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 12

271. **ஞானிகளின் இருப்பு மண்ணே!** மண்ணாகிய பரமே! பரமாகிய மண்ணே! மண்ணே போக்கு வரவற்றது. எந்த குணதோஷமும் இல்லை. ஆகவே **பரம்! முருகன்! ஞானி! ஒன்றே.**

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 27

**272. ரூப நாமம், நாம ரூபம்!**

1. ஓர் தோற்றத்தின் பின் நாமம் பெறுவது; **ரூப, நாமம்** ஆகும்.
2. இன்னது வேண்டும் என்ற, ஓர் நாமாவை எண்ணி, பின் ஓர் தோற்றத்தை உருவாக்குவது **நாம, ரூபம்** ஆகும் என உணர்க.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 30

**273. கூர்க்கத் தெரிந்த மருந்து!**

மனம் அறிவானால் அவ்வறிவு மனம் ஆகவும் வழி உண்டு. அவ்வறிவு கூர்ந்த அறிவானால் (இது பேரறிவுக்கும் அறிவுக்கும் இடைப்பட்ட காலமாகும்.) திரும்ப மனமாகாது என உணர்க. இதைத்தான் **கூர்க்கத் தெரிந்த மருந்து!** என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 33

274. 1. சிரமத்தின் மூலதனமே **மனம்!** தான். சர்வார்ப்பணத்தால்தான் மனம் அமைதி! ஸாந்தியுறும்.
2. பிரம்மார்ப்பணத்தால்தான் மனம் மஹத்தாகி, அறிவாகி, பேரறிவாகி, ஜீவன் முக்தியும் **மனம்!** பெறும்.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 39

275. 1. பாண்டங்களை காணலாம், மண்ணாக உணரலாம். அதே போல்?
2. நாம, ரூப, ஜகமாக காணலாம். அவைகளை காலாதீத பரமாக உணரலாம். ஆனால் பரமாக காணமுடியாது.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 40

276. ஸ்ரீபகவத் குணானுபவம் பெற்றால்; **கலிதோஷ & வக்ர குணங்கள்!** ஒளியை கண்ட இருள்போல் நாசம் அடையும். வினையின் அழுத்தமும்! மனோ பாரமும் நீங்கும் போது, பிரம்மார்ப்பணத்தால் மனோ நாசமாகி! ஜீவன் முக்தி இயல்பாகும்.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 44

277. **வேஷமும்! துவேஷமும்!**

வெளியே தெரியும் **நாம ரூப!** ஜீவ தோற்றத்தின் செய்கை அவரவர் கர்மாவால் பிணைவதால்; வேஷமும்! துவேஷமும்! தோற்றுகிறது. **உள் இருப்பை உணர்ந்தால்** வெளி வேஷமும் அதன் துவேஷமும்! சர்வநாசமாகும் என உணர்க!

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 48

278. ஜலத்தில்தான் **நீந்தக்** கற்றுக்கொள்ள முடியும், தரையில் **நீந்தக்** கற்றுக் கொள்ளமுடியாது. **உன் மனதை தீனன்! பராரி!** என்று ஆக்கிக்கொள்ளாமல், ஸ்ரீபகவத் சொரூபத்தை! அடையவும்! காணவும் முடியாது.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 52

279. கொடுத்தவனை மறந்து, கொடுத்தவைகளை எண்ணி! எண்ணி! விரும்புவதால், கொடுத்தவன் உன் அருகில் இருந்தும், அவனை நீ காண முடியவில்லை.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 53

280. **உன் வாக்கே விதை வாசல்.** உன் கஷ்டம் கவலைகளை சொல்லிச், சொல்லி, கஷ்டங்களை! நீயே இஷ்டப்பட்டு!

வாங்காதே. அனைத்தும் நன்மையாகவே எண்ணு. நலத்தையே பேசு. நலமே அடைவாய். இது உறுதி.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 54

281. **பாராயணம், ஸத்ஸங்கத்தின் மஹிமை!**

1. பாராயணம், ஸத்ஸங்கம் இவ்விரண்டும் வெவ்வேறு அனுபவமாகும் என உணர்க.
2. ஜீவன் முக்தியை! நோக்கி சாதனை செய்பவன் ஒருவன், ஸத்ஸங்கத்தில் கலந்து தத்துவ ஞான விசாரணை செய்ய வேண்டும்.
3. அவன் **மனோ சந்தேகம் நாசமான பின்னரே, பாராயணம்! செய்வானாயின்** சீக்கிரம் பலன் பெற்று ஜீவன் முக்தனாவான். பூர்வ சுகிர்தம்! உடையவனுக்கு; இக்கடினம் இல்லாமலேயே ஜீவன் முக்தி உண்டு என அறிக.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 55, 56

282. ஓர் உண்மையை உணர்க. ஜீவன் என ஒருவனோ? ஒன்றோ? தனியே இல்லவே இல்லை, **மனமே ஜீவன் ஆகும். மன எண்ணமே ஜீவ பந்தம் ஆகும்.** மன எண்ணத்தை, மன எண்ணத்தால்தான் அழிக்க வேண்டும், அழிக்க முடியும்.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 64

283. **ஜீவ பந்த நிவர்த்தி!**

**நான் & எனதே!** ஜீவ பந்த எண்ணமாகும். **எல்லாம் நீயே! எல்லாம் உனதே!** என்ற சர்வார்ப்பண ஸ்ரீபகவத்

எண்ணமே, **ஜீவ பந்த நிவர்த்தி** ஆகும். ஜீவ நாசம் என்பது மனோ நாசமே.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 65

284. **பக்தீயில்** அழுது! உருகி! கண்ணீர் பெருகினால்; **அ...து...வே** அகண்ட ஏக ரஸமாக! மாறிவிடும் என்பது ஸ்ரீமஹான்கள் வாக்கு.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 66

285. **ஜன்மா உண்டு! ஜனன, மரணம் இல்லை!**

1. பக்தீயில் ஓர் நாம, ரூபமுள்ள ஸ்ரீபகவானை தரிசிப்பது அறிவு நிலையாகும். அந்த அறிவு மனமாகவும் வாய்ப்பு உண்டு. அதனால் **ஜன்மா உண்டு.** ஜன்மாவில் மாற்றமும் உண்டாகலாம்.
2. ஞான நிலையில் நம் புண்ணிய பாப உடலும் கலந்து கரைந்து விடுவதால் **ஜனன, மரணம் இல்லை.**

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 67

286.
1. **உருகும்** பக்தீக்கு மிஞ்சிய **சா.......த.......னை........ இ...ல்.....லை.**
2. உருக்கத்தினால் பெறும் அகண்ட ஏக ரஸத்திற்கு மிஞ்சிய **ஞானமும்** (அனுபவ ஞானமும்) **இல்லவே இல்லை.**

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 68

287. அவன் கொடுத்தவைகளை உன் மனம் மெய்யாகவே **மறந்து!** விட்டால்; மறுக்ஷணம் கொடுத்தவனை நீ

காணலாம். அவனே நீயும்! நீயே அவனாய்! **ஆ....க......லா........ம்!**

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 6௯

உ88. ١. ஸ்ரீபகவானாக காண்பது **பழம் ஆகும்.**

உ. அதன் சுவையை சுவைத்து உணர்வது **ஞானம் ஆகும்.**

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 7௯

உ8௯. ***மனித பக்தன்*** தம் உருக்க ஏக்க கண்ணீர் பெருக்கத்தினால் அம்மனத்திரையை நாசம் செய்கிறான், இவனும் அந்நிலையில் ஸ்ரீபகவான் நிலையை பெற்றுவிடுகிறான்.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 8١

உ௯0. **லௌகீக தர்மம், தெய்வீக தர்மம்!**

١. **லௌகீக தர்மம்:- உடலை** காக்கும்.

உ. **தெய்வீக தர்மம்:- மனதை** பக்குவ படுத்தும். இவ்விரண்டும் இணையும் போது ஜீவன் முக்தியின் திறவு கோல் வெகு, வெகு, வெகு, வெகு எளிதாய் முடியும்.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 87

உ௯١. **ஸ்ரீதுளசிதாஸ் ஸ்வாமிகள் அவசரம் & வேகம்!** மிகுந்த பக்தீயினால், மனம் பக்குவமாகவில்லையென, **ஸ்ரீகுருதேவர் ஸ்ரீஆஞ்சநேயர்!** சொல்ல; ஆனாலும் அம்மாணவனின் **ஆத்திர தாப ஏக்கத்தை!** கண்டு; ஸ்ரீபகவான் வருவார் என்ற, ஸத்திய வாக்கை! மட்டும் தந்து போனார் ஸ்ரீகுருதேவர். ஆனால் **வந்த**

**ஸ்ரீபகவானோ! ஓர் பக்ரி வேஷத்தில் வந்து போனான்.** உருக்கம்! ஏக்கம்! இருந்தும்; ஆத்திர! அவசர! வேகத்தினால்! அப்பக்தன் ஸ்ரீபகவானை கண்டும்! உணர முடியவில்லை. ஆனாலும் அவன் கடும் சாதனையால் மீண்டும் கண்டு கொண்டான்.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 88, 89

292. **ஸ்ரீபத்ராசல ராமதாஸரும்!** ஆத்திர, அவசர, வேகத்தினால் ஸ்ரீபகவானை காணத் துடித்தார். இவருடைய **ஸ்ரீகுருதேவரான ஸ்ரீகபீர்தாஸரும்!** அவருடைய மாணவனுக்கு! ஸ்ரீபகவான் வருவார் என, ஸத்திய வாக்கை சொல்லிப்போனார், ஆனால் **வந்த ஸ்ரீபகவானோ! ஓர் எருமை கன்றின் ரூபம் தாங்கி வந்ததால்,** அம்மாணவனும் ஸ்ரீபகவானை கண்டும் **உணர** முடியவில்லை. பின் 12 ஆண்டுகள் சரியாக **ஊண் & உறக்கம்** இல்லாமல், **கடும்!** சாதனை பண்ணிய தர்மத்தால் சில நாட்களில் ஸ்ரீபகவானை தரிசிக்கும் பாக்கியம் பெற்றார். அக்கடும் சாதனையாவது:- **ஏக்கம்! உருக்கம்! கண்ணீர் பெருக்கமாகும்.**

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 89, 90

293. மனித இனம் உட்பட 84 லக்ஷம் ஜீவ கோடிகளையும்! ஸ்ரீபகவானாக காணும் நிலை பெற்ற பின்னரே **ஸ்திர அறிவு பிரகாசிக்கும்.** அந்த அறிவு பிரகாசித்த மறுவினாடியே ஸ்ரீபகவான் காட்சி கிடைக்கும்.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 91

## ௨௭௪. ஸ்ரீபகவானை காண மறைக்கும் திரை!

1. நாம, ரூப, ஜக, ஜீவ! தோற்றமனைத்தும் அவரவர் வினையால்; **திட்டமிட்டபடி மாயா** (ஸ்ரீபகவானால்) நடத்தி முடிக்கிறதென்றும்; எல்லாம் பொம்மலாட்டமே என்றும்; **திட** உணர்வு ஸ்திரமான மறுவினாடி, ஸ்ரீபகவான் காட்சி! அவஸ்யம் ஸ்பஷ்டமாகும்.
2. **உன் நாம ரூப! பாச பிணைப்பே** ஸ்ரீபகவானை காணவொட்டாமல் மறைக்கும் திரையாகும். வேறு எந்த திரையும் இல்லை. இது ஸத்தியம்.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - ௭௨, ௭௩

௨௭௫. உலகமும் உடைமைகளும் மாயாவுக்கும் மனதிற்கும் உரியவைகளாகும் அவை உன்னுடையதல்ல, அது நீயும் அல்ல. இது ஸத்தியம்.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 100

## ௨௭௬. கலிபுருஷனின் (தோஷ) ஸத்திய வாசகம்!!!!!!

1. **கடவுளை** (தேவ தெய்வங்களை) உண்டு! என்பவனை **நம்பு** (உருப்படுவாய்!) உரு பெறுவாய்!
2. **கடவுளை** (தேவ தெய்வங்களை) **இல்லை!** என்பவனை **நம்பு** (உருப்படுவாய்!) உரு பெறுவாய்!
3. **கடவுளே!** (தேவ தெய்வங்களே!) **நாம்! என்பவனை; மட்டும்! ந...ம்...பா...தே!!!** உருப்பட மாட்டாய். அதாவது உருப் பெறமாட்டாய்! என்பதாகும். முன் சொன்ன இரு வாசகங்களை ஏற்பவர் மட்டும் நாம

ரூப! ஜனன மரணம் உண்டு என அறிக, கடைசி வாசகம் எவர் ஏற்கிறாரோ அவருக்கு ஜனன, மரணம் இல்லை! **ஜீவன் முக்தி உண்டு.**

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 101

297. 1. சலிப்பும்! சஞ்சலமும்! தோற்றினால், அந்த வெறுமையில் **உன் அனுபவம் சரி இல்லையென அறி.**

2. நிறைவும் ஓர் ஆனந்தமும் தோற்றினால் அது வெறுமையில்லை. **உன் அனுபவம் சரி என அறி.**

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 103

298. **பேரறிவாளன்!**

பேரறிவின் நிலையில் 84 லக்ஷம்! ஜீவ கோடிகளிலும்! நாமே சர்வ வியாபகமாய் நிறைந்திருக்கிறோம் என்ற உணர்வை! உணர்வு பூர்வமாக உணர்ந்தவன் **எவனோ!** ஸ்வய அனுபவ நிலையில் உள்ளவன் **எவனோ! அவனே பேரறிவாளன்** என ஆதி ஸ்ரீமஹான்கள் வாக்காக அறிகிறோம்.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 104, 105

299. **சாட்சி நிலை!**

அஹங்காரம்! மமஹாரம்! **முழுமையாக!** அழிந்தவனே **சாட்சி!** நிலை பெற முடியும். ஏனையோர் பெற முடியாது என்பதே ஸத்தியம்.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 106

300. **சர்வ சாட்சி நிலை!**

செத்தாரை போல் திரிவான் சகஜ ஞானி! என்ற நிலையில் **உணர்ச்சிகள் நாசமாகி மெய்யுணர்வு எய்தியவனே!** சர்வ சாட்சி நிலை! பெற்றவனாகும்.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 107

301. **ஓர் சாதகன் ஸ்ரீபகவான் ஆகும் நிலை!**

A. நாம, ரூபமாக கண்ட மனம், அறிவாக மாறும் நிலையில்; நாம, ரூபம் **அனைத்தும் அதன்!** இருப்பையும்! இயக்கத்தையும்! **இழக்கிறது!**

B. நாம, ரூப இருப்பையும்! இயக்கத்தையும்! இழந்த மனமானது! **அறிவாகும்!** நிலைபெற்று விடுகிறது. இந்நிலையில் சாதகன்! ஸ்ரீபகவானாகும் நிலைபெற்று விடுகிறான். இச்சாதகன்! ஸ்ரீபகவானாகும் நிலை பெற்றபின், ஸ்ரீபகவானின்! ஜப தபம்! பூஜை! அபிஷேகம்! ஆராதனை! நிவேதனம்! இவை அனைத்தும் ஒன்றன் பின் ஒன்றாக **இயல்பாகவே!** மறையும்.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 115, 116

302. **பேரறிவு!** என்றால் நாம, ரூபம் தோற்றும் போதே இது மண்ணாலானதே என உணர்வதே பேரறிவாகும்.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 117

303. **அறிவு!** என்றால் நாம, ரூபம் அனைத்தையும் பதுமைகளாக காண்பது அறிவாகும்.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 117

304. **மனம்!** என்றால் நாம, ரூபம் மயக்கம் தோற்றினால் அது மனமாகும் என உணர்க.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 117

305. **சூரியன்!** அகண்டபேரொளியின் ஓர் அணு. அங்கு **யாம்!** நீங்கள் அவ்வணுவுக்கும் அணுவாகும், ஆகவே அவ்வணுவை வணங்குகிறோம் என உணர்க.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 118

306. **கடலே!** (சமுத்திரமே) மழை ஆகவும், மழையே நதியாகவும், பின் நதியே யதாஸ்தான **கடல்!** ஆக ஆகிவிடுவதால்; நதியே கடலின் ஓர் அங்கம். ஆகவே நதியே அகண்டத்தில் அடங்கி விடுகிறது, ஆகவே நதியை வணங்குகிறோம்.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 119

307. **மலை!** ஓர் ஜடமே. மலை யோக மாயாவின் சிருஷ்டியும், அங்கமுமாகும். அசையா & அசைக்கா! ஸ்திரத்தன்மைக்கு மஹாமேருவை உவமானமாக ஸ்ரீமஹான்கள் குறிப்பிடுவதால் **மலையை!** வணங்குகிறோம் என அறிக. இவை அனைத்தும் மெய்யன்பர்களுக்கே.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 120

308. மனதின் தடை ஜீவ கர்த்ருத்வமாகும். அறிவின் தடை ஈச கர்த்ருத்வமாகும். மனோ நிலையில் **நான்!** நாசமாக வேண்டும். அறிவின் நிலையில் **நாம்** நாசமாகி, **யாம்** ஆக வேண்டும்.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 121

309. மனதால் விளையும் **நான்! எனதின்!** தோஷ குணமும்; கலியால் விளையும் மூர்க்கமான **போட்டி & பொறாமையும்!** (வக்ர குணமும்!) இணைவதே புண்ணிய பாபத்தின் ஜனன, மரணம் ஆகும்.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 149

310. **திரோதனம்** இதற்கு ஸ்ரீமஹான்கள்! இரு நிலைகளில் விளக்கம் சொல்வார்கள். **மறைப்பு!** என்றும்; **மறைபடுதல்!** என்றும்; சொல்வர். மறைப்பு என்றால் ஓர் **திரை** என்றும்; மறைபடுதல் என்றால், அத்திரையின் **பின்!** மறைபட்டு நிற்கும் ஓர் **பொருள்** என்றும் கொள்ளலாம்.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 149

311. 1. மாயாவின் திரையால் **மண்! களிமண் ஆகிறது.**
2. மனதின் திரையால் **களிமண்! பாண்டம் ஆகிறது.**

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 150

312. **அனுக்ரஹம்:- திரை! நீக்கம்.** இதன் சுருக்கமான விளக்கமும்! அனுபவ விளக்கமும்! எப்படி ஸ்ரீமஹான்கள் சொல்கிறார்கள் என்றால்?

1. **சர்வார்ப்பணத்தால்!** (நாம ரூபமுள்ள, ஓர் ஸ்ரீபகவானிடம்! எல்லாம் **நீயே!** எல்லாம் உன்னால்! எல்லாம் உனதே! என! சரண்புகுந்தால்) **மனத்திரை! நாசமாகும்.**
2. **பிரம்மார்ப்பணத்தால்!!** (ஸ்ரீஸத்குருவின் ஸத்திய வாக்குப்படி, எல்லாம் மண்ணே! எல்லாம் பரமே!

பரமாகிய நாமே!! நாமாகிய பரமே!!! என அறிவால் உணர்ந்து விட்டால்) **மாயாவின் திரை நாசமாகும்.**

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 151

313. 1. **மனத்திரை விலகும்போது,** எல்லா நாம, ரூபம் கெட்டு பதுமைகளாக மாறும், மறையும்.

2. **மாயாவின் திரை விலகும்போது,** எல்லாம் மண்ணாக உணரப்படும், அதுவே நாம் எனவும் உணர முடியும்.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 151

314. பூஜ்யஸ்ரீ என்று ஸ்ரீமஹான்களுக்கு வழங்கும் பட்டமானது ஒன்றும் இல்லை என்றும்; ஆனால்? அனைத்தும் அதனுள் அடங்கும் என்றும் பொருள்படும்.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 167

315. **8 எழுத்து புகட்டுவது (மூன் கணக்கு)**

1 X 8 = 8 = 8 5 X 8 = 40 = 4

2 X 8 = 16 = 7 6 X 8 = 48 = 12 = 3

3 X 8 = 24 = 6 7 X 8 = 56 = 11 = 2

4 X 8 = 32 = 5 8 X 8 = 64 = 10 = 0

எட்டு என்ற எண் முடிவில் சூனியம் ஆகும். அனைத்து எண்களும் 0 பூஜ்யத்தில் நிறைவுபெறும். அனைத்து நாம ரூபங்களும் பூஜ்யமாகி முடிவில்; காலாதீத பரமே எஞ்சி நிற்கும்.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 168

316. **எண்ணும்! எழுத்தும்! கண் என தகும்.**

ஒன்றிலிருந்து ஒன்பது வரையிலும்தான் விளக்கப்பட்டும்! துலங்கப்பட்டும்! விளம்பப்பட்டும்! வருகிறது காரணம் யாதெனில்?

1 X 9 = 9 = 9

2 X 9 = 18 = 9

3 X 9 = 27 = 9

4 X 9 = 36 = 9

5 X 9 = 45 = 9

6 X 9 = 54 = 9

7 X 9 = 63 = 9

8 X 9 = 72 = 9

9 X 9 = 81 = 9

இப்படியாக ஒன்பது வரையிலும் பெருக்கி வரும் நம்பரும்! ஒன்பதிலேயே நிறைவு பெற்று அந்த ஒன்பதே பூரணமாக! நிலைத்து நிற்பது போலவும், 1. பிரம்மம், 2. பரம் & ஈசன், 3. திரிகர்த்தாக்கள், 4. வேதம் நான்கு, 5. பஞ்ச பூதங்கள், 6. சரவண பவ என்ற சிருஷ்டி, 7. ஏழு கண்டம், ஏழு சமுத்திரம், 8. முன் கணக்கு, 9. பின் கணக்கு இந்த ஒன்பதும் 0 பூஜ்யத்தில் பூரணமாகும் என ஸ்ரீமஹான்களின் கணிப்பாகும். ஆகவே **எண்ணும்! எழுத்தும்! கண் என தகும்** என உணர்க.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 169

317. **சாதனை** என்றால்:-

வருவது வரட்டும், போவது போகட்டும், நடப்பது நடக்கட்டும், கிடைப்பது கிடைக்கட்டும், வினை விதியின்படி ஒழுங்காக நடக்கிறது என **ஆனந்தம்**

**அடைவதே** சாதனை ஆகும். சர்வார்ப்பணத்தில் நிலை பெற்றால் சாத்தியமாகும்.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 173

318. **மரண பயம் நீங்க!**

1. நான் எனதை விடாத நிலையில், மரண பயம் உண்டு.
2. **நான்! எனது! நாசமானால்** மரண பயம் இல்லை. தெய்வ கிருபையும்! அதனால் ஆனந்தமும் உண்டு என அறிக.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 174

319. 1. சொந்த, பந்த, பாச, பற்றில் சிக்கியவர்களுக்கு **காலன் பயம் உண்டு.**

2. சர்வார்ப்பணமாக அனுபவம் பெற்றவர்க்கு **காலன் பயம் இல்லை.**

3. பிரம்மார்ப்பணம் தாமே ஆனவர்களுக்கு **காலனும்! காலமும்! ஊறுகாய் போன்று** உணவாகி, சுவடு தெரியாமல் அழிந்துவிடும்.

ஸ்ரீவினாயகன், ஸ்ரீமுருகன் சிறப்பிதழ் - 177

320. **மோஹ வலை அறுபடும்** என்றால்:-

1. மனித உடலும்; மற்றும் ஜீவராசிகள் உடலும்; நாமும்! அல்ல. நம்முடையதும்! அல்ல. எல்லாம் பதுமைகள் என்றும் உணரலாம். அந்தந்த வடிவம் தாங்கி ஸ்ரீபகவானே நடத்துகிறான், நடிக்கிறான்.
2. எல்லாம் மண் மயமே! மண்ணாகிய பரமே! பரமாகிய நாமே! என்ற **ஏக பரபாவனை! செய்தால்**; மோஹ

வலை அறுபடும். ஜீவன் முக்தனும்! ஆவாய், இது ஸத்தியமே. இது பர பாவனையை உணர்த்துகிறது.

அகண்ட ஏக ரஸம் (அல்லது) அகண்ட ஐக்கிய ரஸம் - 1/76, 77

**321. கண்டு கொண்டால் பலன் தராது!**
**சுவைத்தால் தான் பலன்!**

1. **இந்த ஸ்வய ஞான அனுபவ நூலை!** பெற்றவரனைவரும்! மாபெரும் பாக்கியசாலிகளாகும். ஆனால்? இந்நூலை! அசிரத்தையுடன்! கண்டு கொண்டால் மட்டும் பலன் தராது.
2. **நூலை சுவைத்தால்தான் பலன் உண்டு** (பசியாற முடியும்). சுவைத்து முடித்து ஹரி துயில் கொள். அல்லது? **சுவைத்தவர்களுக்கு பலன் கருதா சேவை செய்.** இரண்டினாலும் ஜீவன் முக்தி உண்டு. **இது** ஸத்தியம்.

அகண்ட ஏக ரஸம் (அல்லது) அகண்ட ஐக்கிய ரஸம் - 2/194

322. 1. குடும்பியின் வாக்கு **நான் ஆகும்.**
2. பக்தனின் வாக்கு **நாம் ஆகும்.**
3. ஞானியின் வாக்கு **யாம் ஆகும்.**

அகண்ட ஏக ரஸம் (அல்லது) அகண்ட ஐக்கிய ரஸம் - 2/207

323. 1. ஜீவத்வம்! **தூல பாவனை ஆகும்.**
2. ஈசத்வம்! **சாட்சி பாவனை ஆகும்.**
3. பரத்வம்! **சர்வ சாட்சி பாவனை ஆகும்.**

அகண்ட ஏக ரஸம் (அல்லது) அகண்ட ஐக்கிய ரஸம் - 2/207

௩௨௪. 1. உலகம் வசம் ஜீவனாகும்.

௨. ஈசன் வசம் ஜீவன் ஆகும்.

௩. பரத்தின் அம்ஸம் (ஜீவ நாசமான) ஆன்மாவாகும்.

அகண்ட ஏக ரஸம் (அல்லது) அகண்ட ஐக்கிய ரஸம் - ௨/௨07

௩௨5. 1. பொம்மைகளும்! அதன் ஆட்டமும்! **மனதால்** காணும் நிலை ஆகும்.

௨. மண்ணும் & பரமும்! ஒன்றாக! **அறிவால்!** உணரும் நிலை ஆகும்.

௩. **காட்சி** மறையாமல் **உணர்வை!** பெற முடியாது.

அகண்ட ஏக ரஸம் (அல்லது) அகண்ட ஐக்கிய ரஸம் - ௨/௨11

௩௨6. **பெற்றோர்களின் கவனத்திற்கு!**

1. பெற்றோர்கள் தம் குழந்தைகளை! கடும்! சுடும்! வார்த்தைகளால் திட்டினால் அது சாப, பாபமாக மாறும். அது குழந்தைகளின் பிற்கால வாழ்வை பாழாக்கும்.

௨. அன்பினால் வளையும், அதிகாரத்தால் முறியும்.

௩. நம் குழந்தைகளுக்குள்ளும் ஸ்ரீபகவானே இருக்கிறான் என மெய்யாகவே உணர்ந்து விட்டால், குழந்தைகளிடம் அதிகாரம், ஆதிக்கம்! செலுத்த முடியாது.

௪. பாசமில்லாத அன்பாக உங்கள் குழந்தைகளை உணர்ந்தால் அங்கு ஸ்ரீபகவானைக் காணலாம்.

மனமே ஜகத், மனமே மஹத் - 1/6, 7

327. 1. சேமிப்பே லக்ஷியமாக எண்ணினால் **ஸ்ரீபகவானை நீ மறந்து விடுவாய்.**

2. ஸ்ரீபகவானையே நீ எண்ணினால் உன்னால் **சேமிக்க முடியாது.** எல்லாம் இயல்பாகவே ஆனந்தமாக நடைபெறும்.

மனமே ஜகத், மனமே மஹத் - 1/15

328. 1. ஸத்ஸங்கம் & பாராயணம்! இவைகளால் மனம் நாசம் அடைகிறது என உணரவும்.

2. சேவையின் பலத்தால் மூவினையும் நாசமடைகிறது என உணர்க.

3. மனதால் வினையும்; வினையால் மனமும் இணையும் நிலையில்; வினையின் ஆதாரமான உடல்! நாசமடைகிறது. **உடல் நாசமடையும் போது;** (வினை நசிக்கும் போது) **விதேக முக்தி!** இயல்பாகிறது.

4. ஸத்ஸங்க பாராயணத்தால்! **மனோ நாசமாகும் போது ஜீவன் முக்தி!** இயல்பாகிறது.

மனமே ஜகத், மனமே மஹத் - 1/31, 32

329. **ஸத்ஸங்கம் & பாராயணம்! சேவை** ஆகிய இம் மூன்றும்! வெவ்வேறு நிலைகளில் செயல் பட்டாலும், அனுபவம் முதிர்ச்சி ஆகும் போது ஜீவன் முக்தியையே கொடுக்கும் என உணர்க.

மனமே ஜகத், மனமே மஹத் - 1/35

330. **சேவையினால்!** கர்மாவின் நிவர்த்தி மார்க்கத்தை அடையலாம், ஜீவன் முக்திக்கு இதுவே அடிப்படை ஆகும் என உணர்க.

மனமே ஜகத், மனமே மஹத் - 1/35

331. **சேவை! & வேலை! விளக்கம்:-**

1. தற்கவனத்தோடு செய்வது **சேவை** ஆகும். முற்கவனத்தோடு செய்வது **வேலை** ஆகும்.
2. பலன் கருதாது செய்வது **சேவை** ஆகும். எதிர்பார்ப்புடன் செய்வது **வேலை** ஆகும்.
3. பிறரைக் கவனியாமல் தாமே ஸ்வயமாய் செய்வது **சேவை** ஆகும். பிறரை வேலை ஏவிக் கொண்டு குற்றம் பார்த்து செய்வது **வேலை** ஆகும்.
4. இறை & குரு நாம ஸ்மரணையுடன் செய்வது **சேவை** ஆகும். ஊர் வம்புடன் பேசிக்கொண்டே செய்வது **வேலை** ஆகும்.
5. சேவையினால் அனைத்தும் பெறமுடியும் என்ற நம்பிக்கையில் செய்வது **சேவை** ஆகும். கிடைக்குமா? கிடைக்காதா? நடக்குமா? நடக்காதா? என்ற சந்தேகமுடன் செய்வது **வேலை** ஆகும்.
6. சர்வார்ப்பணம் உறுதியுடன் செய்வது **சேவை** ஆகும். நான்! எனதுடன்! கூடிய கடும் உழைப்பும் **வேலை** ஆகும். இந்த ஆறும் போதும்.

மனமே ஜகத், மனமே மஹத் - 1/35

**332. எல்லாம் நீ(யே) குருதேவா!** என்றால்?

1. எல்லாம் **நீயே** என்றால்; அஹங்காரம் நாசமாகிறது.
2. எல்லாம் **நீயே** என்றால் அதிகாரம், ஆதிக்கம் நாசமாகிறது.
3. எல்லாம் **நீயே** என்றால் மானம், ஈனம், சூடு, சுரணை, லஜ்ஜை, வெட்கம், கூச்சம் முதலிய அபிமானம் உடைமை & உரிமை இவை அனைத்தும் சர்வநாசமாகிறது.

மனமே ஜகத், மனமே மஹத் - 1/36

**333. எல்லாமே குருதேவா!** என்றால்?

ஜட, கட, படாதிகள் (அசைவன! அசையாதன! எல்லாம் ஜீவ வர்க்கங்களும்) நாம ரூபத்துடன் சர்வநாசமாகும்.

மனமே ஜகத், மனமே மஹத் - 1/36

334. **குருநாதா!** என்றால் நமக்குள் இருக்கும் அந்தர்யாமியை மட்டும் குறிக்கும்.

மனமே ஜகத், மனமே மஹத் - 1/36

335. **குருதேவா!** என்றால் உன் உபாசனா மூர்த்தியாகிய ஸ்ரீபகவானையும்! குருவையும் சேர்த்து இணைக்கும்.

மனமே ஜகத், மனமே மஹத் - 1/36

336. **பரமாத்மா!** என்றால் **மாயாவை** வைத்து விளையாடும் ஓர் கண்ட பரம் என உணர்க.

மனமே ஜகத், மனமே மஹத் - 1/37

337. **ஜீவாத்மா!** என்றால் ***மனதை*** *வைத்து* விளையாடும் கண்ட பரம் என உணர்க.

மனமே ஜகத், மனமே மஹத் - 1/37

338. மண்ணில் (பரத்தில்) கோடானு கோடி நாம ரூபங்கள் தோன்றலாம்! இருக்கலாம்! விளையாடலாம் மாறலாம்! மறையலாம்! ஆனால், **மண்! மண்ணாகவே! இருக்கும்.** மண்ணுக்கு (பரத்திற்கு) அன்னியமாய் எவரும்! எதுவும்! இல்லவே இல்லையென்ற; திட உணர்வு ஒருவனுக்கு இருக்குமாகில், அவன் இந்த நாம, ரூப, ஜக தோற்றத்தில் மயங்கான்.

மனமே ஜகத், மனமே மஹத் - 1/40, 41

339. பரமாத்மாவும்! ஜீவாத்மாவும்! இயங்கவில்லை. ஆனால்? முறையே மாயாவும்! மனமும்! இணைந்தே இயங்குகிறது என உணர்க. மன எண்ணமே சஞ்சல துன்பமாகும்.

மனமே ஜகத், மனமே மஹத் - 1/42

340. **நாம்** மாயாவுமல்ல. மனமுமல்ல. குணமுமல்ல. வினையுமல்ல. விதியுமல்ல. இவை அனைத்தும் எம்மிடமே தோன்றி! எம்மிடமே ஆடி முடித்து! எம்மிடமே மறைந்துவிட்டது. அவைகளிடம் யாம் இல்லை. எம்மையல்லால் அவைகளில்லை. **அதுவே யாம்! யாமே அது! என அசைவற்றிருப்பாயாக.**

மனமே ஜகத், மனமே மஹத் - 1/62

**351. ஓர் உண்மை:-**

1. தம் கையை மட்டும் நம்பினால், அங்கு பிறர் கையும் உனக்கு உதவும்.
2. பிறர் கையையே நம்பினால்; அங்கு உன் கையும் உனக்கு உதவாது போகும்.

**பொருள்:-** முந்தையது தற்கவனமாகும். பிந்தையது முற்கவனமாகும் என உணர்க.

மனமே ஜகத், மனமே மஹத் - 1/63

**352. சர்வார்ப்பணம்:-**

1. ஜீவ கர்த்ருத்வம் சர்வநாசமாகும்.
2. வினையின் கடுமை கொடுமையின் வெப்பம் தணியும்.
3. மனதின் இயக்கம் ஓர் கட்டுக்குள் அடங்கும்.

மனமே ஜகத், மனமே மஹத் - 1/69

**353. வாக்கியார்த்த சிரத்தையின் உச்சிஷ்டம்:-**

1. சந்தேகம் கலக்க பயம் சர்வநாசமாகும்.
2. ஆசை தேவை & தேவை ஆசை! அடங்கி அழியும்.
3. பக்குவப்பட்ட மனம் மஹத்தாகும் (அழியும்).

மனமே ஜகத், மனமே மஹத் - 1/69

**354. அமுத உணவின் உச்சிஷ்டம்:-**

1. வினையைப் பக்குவப்படுத்தி எரிக்க உபகாரமாயிருக்கும்.
2. பார்வையையும்! கேட்கும் ஓசைகளையும் (வார்த்தைகளையும்) சுத்தப்படுத்தும்.

௩. மோஹம்! காமம்! விரோத குரோத! கோபாவேசம்! முதலிய குணதோஷங்களை சர்வநாசம் செய்யும்.

மனமே ஜகத், மனமே மஹத் - 1/6௯

௩௪5. **வாக்கை!** மட்டும் அடக்கினால் போதும். அங்கு **விதை வாசல்** அடைப்பட்டு வரும். ஏற்று வந்த வினை முடியும். ஏற்கா**வினை** தொடராது. அது **ஜீவன் முக்தியே!**

மனமே ஜகத், மனமே மஹத் - 1/71

௩௪6. **மனம் கர்மாவை ஏற்றால்** கஷ்டம்! கவலை! துன்பம்! துயரம்! கலக்கம்! மயக்கம்! பயம்! தோற்றும்.

மனமே ஜகத், மனமே மஹத் - ௨/௯௩

௩௪7. **மாயா! கர்மாவை ஏற்றால்:-**

கஷ்டம்! கவலை! துன்பம்! துயரம்! கலக்கம்! மயக்கம்! பயம்! ஆகிய தோஷ குணங்கள், உன்னை ஆட்படுத்தாது, அது ஓர் வித சுகமாகவும்! ஆனந்தமாகவும்! தோற்றும், இங்கு அவஸ்யம் நீ **மனோ பாரம்!** இல்லா நிலையை உணரலாம். ( முடிவுறுவது காரியம், முடிப்பது காரணம் ) இதன் காரணம்? **மாயா! காரணம்** ஆகும், **மனம் காரியம்** ஆகும் என உணர்க.

மனமே ஜகத், மனமே மஹத் - ௨/௯௪

௩௪8. வலிய **கர்மா தொடர்வுறும் என்றால்:-**

கொடுத்ததைதான் வாங்குகிறாய். வாங்கியதைத்தான் கொடுக்கிறாய். இங்கு ஆகாமியம்! **நான் எனது!** பின்னலிடும். வேகத்தால் வலிய கர்மா தொடர்வுறும்.

மனமே ஜகத், மனமே மஹத் - ௨/௯5

349. **வலிய கர்மா தொடராது முடிவுறும் என்றால்:-**
உன் **சர்வார்ப்பணத்தால்** வாங்கியதை கொடுத்தாலும்! கொடுத்ததை வாங்கினாலும்! ஆகாமியம்! பின்னலிடாது, வலிய கர்மாவும்! தொடராது முடிவுறும்.

மனமே ஜகத், மனமே மஹத் - 2/95

350. மனம் எண்ணியதைத்தான் மாயா! செய்ய முடியும். இங்கு உன் சர்வார்ப்பணத்தால்! நீ ஈசன் நிலையை பெற்று மனம் அறிவாகி! விட்டபடியால், **மாயா உனக்கு கீழ் உள்ள நிலையை! அடைந்து விடுகிறது** என மட்டும் உணர்க.

மனமே ஜகத், மனமே மஹத் - 2/95

351. **உலக நிலையில்** நான்! எனதுடன் செய்யும் எந்த கர்மாவும்! புண்ணிய பாபமும்! ஜனன, மரணமும்! ஆகும் என உணர்க.

மனமே ஜகத், மனமே மஹத் - 2/96

352. **தெய்வீக நிலையில்** எல்லாம் நீயே! எல்லாம் உனதே என செய்யும் எந்த கர்மாவும்! ஸத்திய தர்மமாய்! மாறி; பிறவா நிலையாகிய ஜீவன் முக்திக்கு வழிவகுக்கும்.

மனமே ஜகத், மனமே மஹத் - 2/96

353. **உண்மைத்தாய்:-** மாயாவின் ஸ்ரீபகவானாகும்.
**வளர்ப்புத்தாய்:-** உலக தற்காலிகத் தாய் ஆகும்.

மனமே ஜகத், மனமே மஹத் - 2/103

354. 1. நீ மனமாக இருந்தால் **வினையின் பாதிப்பு** உனக்கு தோற்றும்.

2. **நீ** அறிவாக மாறி! ஸ்திரமானால்; **வினை கனவாக** கூடத் தோற்றாமல் மறையும். முடிவாக யுவர்சாய்ஸ்!.

மனமே ஜகத், மனமே மஹத் - 2/111

355. ***சித்தத்தின் வேலை:-***

மனம், புத்தியினாலும், பிரிவின் வேற்றுமை! அடைந்தவைகளை; இது இன்னது! இன்னது செய்யும்! இது இன்னார்! இவர் இதை செய்வார்! என்ற குணதோஷ பேதங்களை! வலிய உண்டு பண்ணி; அதை உறுதி நிச்சயம் பண்ணி! அவைகளை, இயக்கத்தின் ஆதாரமாக்கியது சித்தம் ஆகும் என உணர்க.

மனமே ஜகத், மனமே மஹத் - 3/164

356. 1. **மனம்** என்றால் அதன் இயக்கம் **நான் ஆகும்.**

2. **அறிவு** என்றால் அதன் இயக்கம் **நாம் ஆகும்.**

3. **பேரறிவு** என்றால் இயக்கம் இல்லாத தோற்றம் & இருப்பு! மட்டும் உடைய **யாம் ஆகும்.**

மனமே ஜகத், மனமே மஹத் - 3/182

357. நான் ஒழிந்து நாம் ஆனால் அங்கு **இருமை நிலையில்** ஸ்ரீபகவானையும் நம்மோடு சேர்த்துக் கொள்வதால் ஜீவ கர்த்ருத்வம் நாசமாகும். மனோ தோஷ குணங்களும் சர்வ நாசமாகும்.

மனமே ஜகத், மனமே மஹத் - 2/184

358. 1. **யாம்** என்பது சர்வசாட்சி பாவனையாகும்.

2. **யாம்** என்பது பேரறிவின் பாவனையாகும்.

3. **யாம்** என்பது அகண்டான்ம பாவனையாகும்.

4. **யாம்** என்பது அஹண்டாஹார விருத்தியாகும்.

5. **யாம்** என்பது அகண்ட ஏக ரஸமும்! அகண்ட ஐக்கிய ரஸமும் ஆகும்.

மனமே ஜகத், மனமே மஹத் - 3/188

359. **நான்!** என்றால்:- ஜீவத்வமும்! ஜீவ கர்த்ருத்வமும்!! நாம ரூப! ஜக, ஜீவ! உறவு! சுற்றம்! நட்பு! பொன்பொருள் போகத்தின் மோஹ தோஷ குணமாகும். வினையின் பற்று வரவு & ஜனன மரண வாயிலாகும்.

மனமே ஜகத், மனமே மஹத் - 3/189

360. **நாம்!** என்றால்:- ஈச நிலையும்! ஈச கர்த்ருத்வமும்! ஏக குண சொரூபானந்தமாகும். ஜீவ கர்த்ருத்வத்தை நாசம் செய்வதும்; பேரானந்தமும் நிறைந்ததாகும்.

மனமே ஜகத், மனமே மஹத் - 3/189

361. **யாம்!** என்றால்:- ஜீவ கர்த்ருத்வமும் ஈச கர்த்ருத்வமும்! தூல பாவனையும்! சாட்சி பாவனையும்! சர்வசாட்சி பாவனையும் சர்வ நாசமாகி! எல்லாம் **மண்மயமாகி!** மண்ணில் எல்லாம் இல்லாமையாகி! மண் இல்லாமல், எவரும்! எதுவும்! இல்லாமல் ஆன நிலையில் **யாம் அதுவாகவே!** இருப்போம்.

மனமே ஜகத், மனமே மஹத் - 3/189

362. **பரமார்த்தீக பயிற்சியின் முன்னேற்றம் உள்ள சாதகனுக்கு!**

1. நாம ரூப! சொந்த பந்த, பாசப்பற்றின், பிணைப்பின், பிரிய வாஸனை! மிக மிக குறைவாக இருக்கும். (காலக்கிரமத்தில் உலர்ந்து விடும்)

2. **தீர்த்தம், மூர்த்தி, ஸ்தலம்! இவைகளில் அதிக நாட்டம் இராது!** (சமயச்சடங்குகள் இராது)

3. எல்லோரும் நல்லவரே! எல்லோரும் நம்மவரே! எல்லாம் நலமே! என்ற திட உறுதி! குலையாமல் இருக்கும்.

4. **முற்கவனம்!** வெகு வெகு குறைவாயிருக்கும், ஆகவே விஷய மறதி! அதிகம் உண்டாகும்.

5. பேச்சு வெகுவாக குறைந்து காணப்படும். தெய்வீக & பரமார்த்தீக வாக்கைத் தவிர, லௌகீக வாக்கு வெகுவாக குறைந்து காணப்படும். இவை ஐந்தும் பரமார்த்தீக பயிற்சி உள்ளவனிடம் சிறப்பான அம்ஸம் என உணர்க.

மனமே ஜகத், மனமே மஹத் - 3/222, 223

**363. பரமார்த்தீக பயிற்சி செய்பவனின் அனுபவம்:-**

1. இன்ப துன்பம் அவனை தாக்காது.

2. **பெண் & பணம்!** மயக்கம்! இராது (இவைகளில் பிராரப்தம் ஆனந்தமாக முடிவுறும்).

3. பொறுமையும் & பணிவும் இயல்பான குணமாகும்.

4. ஸ்ரீஸத்குருவின் வாக்கிய சிரத்தையை **கண்ணை! இமை!** காப்பது போல் பாதுகாப்பான்.

5. வாக்கில் இனிமை! வாழ்க்கையில் எளிமை! சாதனையில் பொறுமை! இவற்றில் ஆனந்தம் குறையாமல் இருப்பான். இவை ஐந்தும் அவனுடைய படிப்படியான அனுபவங்களாகும்.

மனமே ஜகத், மனமே மஹத் - 3/223

**364. ஞானியின் தால ரக்ஷிப்பு!**

1. பரஞானிக்குத்தான் ஸ்ரீபகவானும், அஷ்டதிக்கு பாலகர்களும்! அந்த ஞானியின் தாலத்தை! ரக்ஷிப்பார்கள் என பொருள் கொள்ளல் வேண்டாம்.
2. அத்வைதம் உணர்ந்து அனுபவம் பெற்ற எவராயினும் **(அந்த பக்குவ ஆன்மாவுக்கு)** அவர்களுக்கும் இதே நிலைதான். இங்கு எப்பேதமும் இல்லை. பரகருணை நிலையில் ஞானிக்கு ஓர் வரப்பிரசாதமாகும்.

மனமே ஜகத், மனமே மஹத் - 3/229, 230

365. அஷ்டதிக்கு பாலகர்களும், ஸ்ரீபகவானும் ஓர் ஞானியின் தாலத்தை ரக்ஷித்தாலும்! அவனுடைய அன்பர்களின் வினையை அவன் அனுபவித்தே ஆக வேண்டும்.

மனமே ஜகத், மனமே மஹத் - 3/231

366. **அவஸ்ய வாக்கு:-** பிராரப்தம் ஆகும்.

**அனாவஸ்ய வாக்கு:-** ஆகாமியம் ஆகும் என உணர்க.

மனமே ஜகத், மனமே மஹத் - 3/235

**367. அன்பின் குடிலின் சாதனை!**

1. ஒரு பிரார்த்தனை!!!!
2. ஓர் ஆரத்தி!!!!!!!!!
3. இரு குரு ஸ்துதி!!!!
4. இரு மந்திரங்கள்!!!! இவை நான்கும் போதும்!!!!

மனமே ஜகத், மனமே மஹத் - 3/251

368. 1. மனித இனம் உட்பட 84 லக்ஷம் ஜீவகோடிகளையும்! எல்லாம் **ஸ்ரீஸத்குரு! சொரூபமாக** காண வேண்டும்.

2. அனைத்து ஜீவ ஓசைகளையும்; மற்றும் அசைவு ஓசைகளையும்; **ஸ்ரீஸத்குருவின் வாக்காக** உணரவேண்டும்.

3. சாதனையாளர்களின் வாக்கானது ஜீவ ஒலியாய் வரலாகாது. **இறை, குரு & பர** வாக்காக வர வேண்டும். கடைசி வாக்கியம் அதி அதி ரகஸ்யமானதாகும்.

மனமே ஜகத், மனமே மஹத் - 3/254

369. அலங்கார வார்த்தைகளும், அனாவஸ்ய வார்த்தைகளும்! உங்கள் சாதனையின் **சத்ரு!** (விரோதி) என முதலில் உணருங்கள்.

4வது முறை பத்ரியில் அகண்டானந்தம் - 1/62

370. **பொறுமை** என்றால்:- எல்லாம் நீயே! என இறை & குரு! உணர்வினால் செயலிழந்து! இருப்பது பொறுமை ஆகும்.

4வது முறை பத்ரியில் அகண்டானந்தம் - 1/96

371. **சோம்பல்** என்றால்:- தொழிலும் பண்ணாமல், ஸ்ரீபகவானையும் எண்ணாமல்; நடக்கிறது நடக்கட்டும் என இருந்தால் அது சோம்பலாகும்.

4வது முறை பத்ரியில் அகண்டானந்தம் - 1/96

372. **நிவர்த்தி** என்றால்:- இறை & குரு உணர்வோடு இருப்பது நிவர்த்தி ஆகும்.

4வது முறை பத்ரியில் அகண்டானந்தம் - 1/96

373. **பிரவர்த்தி** என்றால்:- சொந்த, பந்த, பாசப் பிணைப்போடு இருப்பது பிரவர்த்தி ஆகும்.

4வது முறை பத்ரியில் அகண்டானந்தம் - 1/96

374. 1. நிவர்த்தி மார்க்கத்திலிருப்பவனுக்கு இயல்பாக, நிதானமாக, திருப்தியாக கர்மா நடைபெறும்.

2. பிரவர்த்தி மார்க்கத்திலிருப்பவனுக்கு ஆத்திரம், அவசரம், வேகம், படபடப்புடன் காரியப்பற்றுடன் கர்மா தொடரும்.

3. இறை குரு உணர்வுடன் செயலிழந்தவனே, அவன் அருளால் அவன் தாள் பணிபவனாகும் என அறிக.

4வது முறை பத்ரியில் அகண்டானந்தம் - 1/96

375. 1. **அனுபவம்** என்பது உணர்வு மயமானது.

2. அதை வாக்காலோ! வரியாலோ! வெளிப்படுத்தினால்!, **மனம்!** படைத்தோரால் விபரீத கற்பனைதான் பண்ண முடியுமேயன்றி; உண்மை விளங்காது.

3. அங்கு காண்பானும் & காட்சியும் இல்லை என்பதே ஸத்தியம்.

4வது முறை பத்ரியில் அகண்டானந்தம் - 1/98

376. **பாடம்** என்பது இதை வாக்காலும் & வரியாலும்! **சற்று!** விளக்கலாம். **அதிக!** விளக்கம் கொடுத்தாலும் உண்மை மறைபடும். இங்கும் விபரீதம் தோன்றும்.

4வது முறை பத்ரியில் அகண்டானந்தம் - 1/98

377. **அறிவு, பேரறிவு கலந்து மயமாகும் நிலை!**

1. **அகண்ட பரபாவனை!** முழு நிலை பெறும்போது, அறிவு! பேரறிவில் கலந்து மறைந்துவிடும் என உணர்க.

2. இவ்வனுபவம் எப்படி உண்டாகும் என்றால் **ஜீவ!** சொரூப காட்சிகள்! படிப்படியாக மறையும்.

3. இவை மறைய! மறைய!! ஜீவ சொரூபங்கள் இயல்பாகவே **பதுமை**களாக! மாறுவதைக் காணலாம், காண்பது மனமல்ல காண்பது அறிவாகும்.

சிவது முறை பத்ரியில் அகண்டானந்தம் - 1/105

378. அந்த ஒரு ஞானி நாம் எப்படி? ஆக முடியும்? என உன் கள்ள மனம் உன்னை ஏமாற்றும். **எல்லாம் ஒருவனே! எல்லாம் ஒன்றே! என அறிவால் உணர்க.** அவஸ்யம் ஜீவன் முக்தி பெறுவாய். இது ஸத்தியம்!

சிவது முறை பத்ரியில் அகண்டானந்தம் - 1/157

379. **ஆத்ம ஞானத்தை! சாதனை** செய். **போதனை** செய்யாதே. (உன் சாதனையே போதனையாக மாறும்) இதனாலேயே ஜீவன் முக்தியை இழக்க நேரிடும்.

சிவது முறை பத்ரியில் அகண்டானந்தம் - 1/159

380. 1. **சர்வார்ப்பணத்தால் மனம்!** நிதானமும்! அமைதியும்! சாந்தியும்! ஆனந்தமும் அடையும்.

2. **பிரம்மார்ப்பணத்தால் மனம்** நசிக்கும்.

சிவது முறை பத்ரியில் அகண்டானந்தம் - 1/160

381. ஆத்ம ஞானியின் லக்ஷியம் ஜீவன் முக்தியே. குரு ஸ்தானம் பெறுவதல்ல, கவனம் தேவை.

சிவது முறை பத்ரியில் அகண்டானந்தம் - 1/162

382. தன்னை உணர்ந்த ஞானிகள் அனைவரும்!!! ஒருவனே! (இருவரல்ல, பலருமல்ல) ஒருவனுக்கன்னியமில்லை, ஒன்றுக்கன்னியமில்லை, ஆகவே! **ஒ.....ன்.....றே!!!**

4வது முறை பத்ரியில் அகண்டானந்தம் - 1/162

383. **திரிலோகத்தில் ஒரு ஞானி!**

நாம ரூபங்கள் ஒன்று! பத்து! நூறு! ஆயிரம்! லட்சம்! கோடி! கோடானுகோடி! **என எத்தனை!** இருந்தாலும். (தோற்றத்தில்) **இருப்பில் ஒன்றே, மண்ணே!** அதாவது **பரமே!** ஆகவே **ஞானியும் ஒருவனே! அந்த ஒருவன் யாமே!** என்ற திட உணர்வோடு (உணர்ச்சியற்ற நிலையில்) இருப்பவர் எவராயினும் **அந்த ஒருவனே!** இதுவே திரிலோகத்தில் ஒரு ஞானி எனச் சொல்லும் வாக்கின் உள் கருத்தாகும் என ஆதி ஸ்ரீமஹான்கள் வாக்காக அறிகிறோம்.

4வது முறை பத்ரியில் அகண்டானந்தம் - 1/162, 163

384. சர்வார்ப்பணம் பண்ணாமல் ஸித்த சுத்தி பெற முடியாது. சர்வார்ப்பணம் பூர்த்தி ஆகி அதுவே அனுபவத்தின் பிரம்மார்ப்பணமாக! மாறும்போது ஸித்தம் **அறிவாகி!** அவ்வறிவானது; **பேரறிவாக!** மாறும் இயல்புடையதாகி விடுகிறது.

4வது முறை பத்ரியில் அகண்டானந்தம் - 1/172

385. பகவான் ஸ்ரீகிருஷ்ணன் கம்சனை வதம் செய்யும் போது அவனுக்கு வயது **8** என உணர்க. அந்த எட்டு வயதுக்குள் **நிக்ருது** என்ற அரசனுக்கும் மற்றும் சிலருக்கும் சுத்த

**நிராலம்ப!** (அசைவற்ற) மார்க்கம் என்ற வேதாந்த அத்வைத நூலை உபதேசித்து ஜீவன் முக்தி அருளியவனாகும்.

5வது முறை பத்ரியில் அகண்டானந்தம் - 1/182, 183

386. பகவான் ஸ்ரீகிருஷ்ணன் ஸத்திய யுகத்திற்கு தர்ம ஸ்தாபன **ஸ்ரீஸத்குரு** ஆகவும்; கலியுகத்திற்கு **ஸாமான்ய குரு** நிலையில்; ஸ்ரீபகவத் கீதை! என்னும்; சுத்த விசிஷ்டாத்வைத நூலையும் உபதேசித்தவனாகும். ஸ்ரீகிருஷ்ணன் ஸாமான்ய குரு! ஸ்ரீஸத்குரு! என இரண்டும் பெற்றவனாகும்.

5வது முறை பத்ரியில் அகண்டானந்தம் - 1/185,186

387. **உன் மானம்** போனால் மறு க்ஷணம் அது **அவன்! மானம்!** ஆகிவிடும் என அவன் ஸத்திய வாசகமாக சொல்கிறான்.

5வது முறை பத்ரியில் அகண்டானந்தம் - 1/188

388. இம்மனிதன் எந்த வினாடி! நான் எனதை! விடுகிறானோ; அந்த வினாடியே! நாம, ரூபம் மறைந்து நாசமாகும். நாம ரூபம் மறைந்து நாசமான மறுக்ஷணம்! **ஸ்ரீபகவான் பிரத்தியக்ஷமாவான்.** இது ஸத்தியம்.

5வது முறை பத்ரியில் அகண்டானந்தம் - 2/3, 5

389. **நான்! எனதை!** விட முடியாமையினால் ஸ்ரீபகவானின் மாயா விளையாட்டு பாரமாகவும்! மன அழுத்தமாகவும், இன்ப துன்பமாகவும் தோற்றுகிறது என உணர்க.

5வது முறை பத்ரியில் அகண்டானந்தம் - 2/5

390. ஸ்ரீபகவானே தம் மாயாவினால் கொடுக்கல் & வாங்கல், போக்கு & வரவு! லாபம் & நஷ்டம்! என வியாபார விளையாட்டு விளையாடுகிறான்.

4வது முறை பத்ரியில் அகண்டானந்தம் - 2/5

391. **எதிரும்! புதிரும்!** என்றால்:-

1. **எதிர்**:- எதிரில் இருப்பவனிடம் ஸ்ரீபகவான் இருப்பை மறத்தல்.
2. **புதிர்**:- நாம, ரூப, குண வெறியுடன் கூடிய மோதலே! **புதிர்!** என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

4வது முறை பத்ரியில் அகண்டானந்தம் - 2/7, 8

392. **கண்காணிக்கலாம்** என்றால்:-

இது தெய்வீக **சாட்சி!** பாவனையாகும். சாட்சி பாவனை என்றால்; காட்சிகளையும்! நிகழ்ச்சிகளையும்! வாக்குகளையும்! **நிதானம்! பொறுமையுடன்!** இறை & குரு **உணர்வுடன்!** (உணர்ச்சிக்கு அடிமையாகாமல்) **கண்!** காணலாம், **காது!** கேட்கலாம். ஆனால்? **வாய்** பேசலாகாது. **இதுவே கண்காணிப்பதாகும்.**

4வது முறை பத்ரியில் அகண்டானந்தம் - 2/9, 10

393. **கண்டிக்கலாம்** என்றால்:-

**அறிவுரை** கூறலாம். அதாவது சீறு! கடிக்காதே! என்ற நிலையில்; சற்று சீற்றத்தைக் காட்டி; **நீ போட்ட!** வேஷத்திற்கு; **நடிக்கலாம்.** சொந்த! பந்த! பாச!

**உணர்ச்சியோடு!** கண்டிக்கலாகாது. (டென்ஷன், எமோஷன்! வேண்டாம்).

4வது முறை பத்ரியில் அகண்டானந்தம் - 2/12

394. **தண்டிக்காதே** என்றால் ஒரு ஸத்திய வாக்கு, உலகையும்! ஜீவர்களையும்! **தண்டிக்க** உனக்கு அதிகாரம் இல்லை.

4வது முறை பத்ரியில் அகண்டானந்தம் - 2/15

395. **ச...ர்...வா...ர்...ப்...ப...ண...ம்** ஒன்றே கண்காணித்தல்! கண்டித்தல்!! தண்டித்தல்!!! ஆகிய இம் **மூன்றையும்!** சர்வநாசம்! செய்யும் என உணர்க.

4வது முறை பத்ரியில் அகண்டானந்தம் - 2/20

396. **கண்காணித்தால்தானே!** கண்டிக்கும் நிலையும்; சூழ் நிலையால் தண்டிக்கும் நிலையும் ஏற்பட்டுவிடுகிறது. கண்காணிக்காமல் இருந்து விட்டால்??? மு...டி...யு...மா? அவஸ்யம் மு...டி...யு...ம்.

4வது முறை பத்ரியில் அகண்டானந்தம் - 2/21

397. **துவைத பயம் எப்படி தோன்றுமென்றால்?**

1. முதலில் தோன்றுவது **சந்தேக! கு...ற்...ற...ம்!** ஆகும் என உணர்க.
2. சந்தேகத்தால் களங்கம்! களங்கத்தால் கலக்கம்! கலக்கத்தால் கலகம்! கலகத்தால் விரோத குரோதம்! விரோத குரோதத்தால் **ப...ழி & பா...ப...ம்!** (பழிச் சொல், பாபச் செயல்.) இவைகள் **ஜனன மரண!** வித்தாகிறது. இது **லோக மாயாவின்!** சூழ்ச்சியாகும்.

4வது முறை பத்ரியில் அகண்டானந்தம் - 2/32, 33

**398. உபாதி பேதம்:-**

1. பரத்தை **இது! இன்னது!** என உணர்த்த கூடியவர் ஸ்ரீஸத்குருவாகும். ஸ்ரீஸத்குரு உணர்த்தாமல் **பரம்** விளங்காது, துலங்காது.

2. **பரம்** இல்லாமல்; ஸ்ரீஸத்குருவுக்கு இயக்கம்! விளக்கம்! துலக்கம்! இல்லவே இல்லை. இதுவே **உபாதி பேதம்** ஆகும் என உணர்க. **இருப்பின் நிலையில்**! இரண்டும் **ஒன்றே!** (எல்லாம் ஒன்றே! அது சிவமே! அது யாமே! யாமே அது!)

4வது முறை பத்ரியில் அகண்டானந்தம் - 2/38, 39

399. கண்ணை! இமை! காக்கவாவது சற்று தாமதம் ஆகலாம். அதனினும் அதி துரிதமாக காப்பவன் ஸ்ரீபகவானாகும். உங்கள் இறை & குரு உணர்வு ரக்ஷிக்கும், இது ஸத்தியம்.

4வது முறை பத்ரியில் அகண்டானந்தம் - 2/75

**400. கால பயம் நமக்கு ஏன்?**

இறை & குரு உணர்வும்! ஒழுக்கக் கட்டுப்பாடும்; இருந்தால் காலனை நாம் உண்டு விடலாம்.

4வது முறை பத்ரியில் அகண்டானந்தம் - 2/98

**401. சொர்க்கமும், பரம பதமும் இல்லவே இல்லை!**

ஜீவன் முக்தி! பெற துடிக்கும் மெய்யன்பர்களுக்கும்! பெற்றுவிட்ட மெய்யன்பர்களுக்கும்! **சொர்க்கமும்! பரம பதமும்!** வேண்டாம், வேண்டாம் என்று சொல்வதை விட **இல்லை!!!** யென்றே பிரமாணமாகச் சொல்லுவோம்.

4வது முறை பத்ரியில் அகண்டானந்தம் - 2/111

502. ஸத்திய, தர்மத்தின் அடிப்படை, **பணிவின் ஸ்ரீபாத நமஸ்காரம்** என உணர்க.

தர்மம் - திருஅண்ணாமலை - 3

503. **சுத்த அத்வைதி ஆனாலும்!!!** இக்கலியுகத்தில் மட்டும்!!! ஸத்திய தர்மத்தை கடைப்பிடிக்கானாயின் அவன் அத்வைதத்தில் நிலைத்து நிற்க முடியாது. அவன் அனுபவம் வாய் ஞானமாகும்.

தர்மம் - திருஅண்ணாமலை - 3

504. 1. **அத்வைதம்** என்பது படிப்பதினாலும்! படித்ததை போதிப்பதினாலும்! **அடைய முடியாது.**

2. **சாதனையே அத்வைத ஞானம்** ஆகும். **சாதனை என்பது கரண ஒழுக்கம்** ஆகும். அவ்வொழுக்கமே! தர்மங்களாகும்!

3. தர்மங்களை ஒரு சாதகன் கடைப்பிடிக்கும் போதுதான், கர்ம பந்தங்களிலிருந்து **அவன் விடுபடுகிறான்** என உணர்க.

தர்மம் - திருஅண்ணாமலை - 8, 9

505. **சர்வார்ப்பணத்தை!** மிஞ்சிய **சாதனையும் இல்லை. பிரம்மார்ப்பணத்தை!** மிஞ்சிய **ஆத்ம ஞானமும் இல்லை.**

பூரண நிறைவு - 7

506. பிறருக்கு போதிப்பது! **வாய் ஞானம்.** தான் சாதிப்பது! **அனுபவ ஞானம்.** உன் சாதனையையே போதனையாக கொள்வாயாக.

பூரண நிறைவு - 8

407. **இறக்க** அதாவது **சாக வந்த!** (மனம் சாக வந்த) **உனக்கு பிறந்த நாள்!** (வினை பெருக்கம்) ஓர் கேடா? (தேவையா) உனக்கு தேவைதானா???

பூரண நிறைவு - 26

408. **மனம் படைத்தோர்!** மட்டுமே!!! (மனதின் பிடியில் அகப்பட்டோர்) உலகைப் பற்றி! கவலை கொள்கின்றனர். உண்மை பக்தனும்! உணர்ந்த ஞானியும்! உலகைப் பற்றி விசாரமடையான்.

பூரண நிறைவு - 52

409. மனம்! வினை! விதி! வசத்தால் தவறும் மாணவனை கண்டிக்கவும்! தண்டிக்கவும்! ஆசிரியர் ஒருவருக்கே உரிமை உண்டு என உணர்க....

பூரண நிறைவு - 67

410. ரூப **நாமம்!** இயற்கை! **நாம ரூபம்!** செயற்கை!
**இயற்கை:-** ரூபத்திற்கு பின் நாமம் உண்டு.
**செயற்கை:-** நாமத்தை அடிப்படையாக கொண்ட ரூபம்.

பூரண நிறைவு - 74

411. **ஓர் சாதகன் தன் சாதனையால்!** ரஜோ, தமோ குணங்களை முழுமையாக எந்த வினாடி நாசம் செய்கிறானோ! அந்த வினாடியே **ஸத்வகுணம்!** இவன் விரும்பாமலே இவனை ஆட்படுத்திக் கொள்கிறது. அந்த வினாடியே இவன் **ஈசன்!** நாம் என ஆகி விடுகிறான். **மறு வினாடியே!** இவன் ஸ்ரீஸத்குரு கிருபையினால் ஜீவன் முக்தனாகி விடுகிறான்.

பூரண நிறைவு - 81

512. 1. நாம ரூப! ஜக ஜீவ தோற்றம் எல்லாம்; **பதுமை**களின் ஆட்டமாகவும்; **பதுமை**களின் தோற்றமாகவும்; காண்பான்.

2. பதுமைகள் அனைத்தும் **மண்!** என உணர்வான்.

3. காணும் நிலை பெறாமல் உணர முடியாது இது ஸத்தியம்.

பூரண நிறைவு - 86

513. **அர்த்த! பாவனை! அனர்த்த பாவனை!**

1. **அர்த்த! பாவனை!** ஒளியின் அல்லது **அறிவின் அம்ஸமாகும்.**

2. **அனர்த்த! பாவனை!** ஒலியின் அல்லது **மாயா மனதின் அம்ஸமாகும்.**

3. முந்தையது **பிறவா!** நிலையின் **ஜீவன்!** முக்தியாகும். பிந்தையது **புண்ணிய பாப! ஜனன மரண! சுழற்சி!** ஆகும் என ஆதி ஸ்ரீமஹான்கள் வாக்காக அறிகிறோம்.

பூரண நிறைவு - 92

514. **ஞானம் லபிதமாக!**

ஸ்ரீஸத்குரு வாக்கு!!!!! **சிரத்தையில்** (தற்கவனத்தில்;) **நம்பிக்கையும்!** நம்பிக்கையில் அசைக்க முடியாத; **வைராக்கியமும்!!!** கொண்டால் **மட்டும்!** ஞானம் லபிதமாகும். இது ஸத்தியம்! ஸத்தியம்!! ஸத்தியம்!!!

**அதாவது?**

1. அடைந்து விட்டாய்.
2. பெற்று விட்டாய்.
3. உன்னால் முடியும்.

4. கதை முடிந்தது.

5. முடிக்காமல் முடியோம். 6. உங்களை முடித்து விட்டோம்.

பூரண நிறைவு - 104

415. **ஜீவன் முக்தி!** என்பது தூலம் மடிந்த பின்தான் பெறுவதல்ல, தூலம் இருக்கும் போதும் பெ.......ற.......மு.....டி......யு......ம்! **மனம் இறந்தவுடன்! பெ....று....வ....தா....கு.....ம்!**

பூரண நிறைவு - 107

416. **ஜீவன் முக்தனின் நிலை:-**

1. தன்னை அறிந்து தானாக இருப்பது.
2. நாம, ரூபம் நாசமாகி மண் ஆவது.
3. ஜீவனும்! ஈசனும்! அபேத நிலையில் ஒன்றாவது.
4. ஆணவம்! கர்மா! மாயா! நாசமான நிலை.
5. ஸ்ரீஸத்குரு ஒருவரால் தான் உணர்த்த முடியும். (காட்டவும் கொடுக்கவும் முடியாது).

பூரண நிறைவு - 109

417. **ஜீவன் முக்தி! பெற்றவர்கள் எப்படி நாம ரூப உலகை! காண்பர் என்றால்?**

1. அனைத்து ஜீவ வேஷம் போட்டுக் கொண்டு ஸ்ரீபகவானே இயங்குகிறான் என காண்பர்.
2. எல்லாம் பொம்மைகளே; எல்லாம் பொம்மலாட்டமே என காண்பர்.
3. வினையின்படி பதுமைகள் ஆடிக்களிப்பதால்; வினை ஆடி முடிகிறது என காண்பர்.

4. திட்டமிட்ட காரியம், திட்டமிட்டபடி; நடைபெறுவதால் சஞ்சலம் இல்லாதிருப்பர்.

5. இயக்க நிலையில் ஒருவனே என்றும்; இருப்பு நிலையில் ஒன்றே என்றும் அசைவற்றிருப்பர். உடலே சிதைந்தாலும்; உலகம் நிலை பெயரினும்; சஞ்சலம் இல்லாமல் கருங்கல்லை போல் இருப்பர்.

பூரண நிறைவு - 110

418. 1. அறிவு நிலையில்; **ஆனந்த** விளையாட்டு ஆகும்.

2. மனோ நிலையில்; **இன்ப துன்ப** வாழ்க்கையாகும்.

பரிபூரணம் - 1

419. **ஆனந்த நடனம்** என்றால் சொந்த பந்த, பாசப் பற்றற்ற அறிவின் ஐக்கியம் ஆகும்.

பரிபூரணம் - 2

420. **இன்ப துன்ப**மென்றால் சொந்த, பந்த, பாச மனம்! இன்ப துன்பமாகும்.

பரிபூரணம் - 2

421. 1. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து பேசுவதால், வினையை இருவரும் பகிர்ந்துக் கொள்கின்றனர்.

2. முகம் பார்த்து பேசாமல் இருந்தால் வினை முடிவுறும் என அறிக.

பரிபூரணம் - 12

422. **ஒளி & ஒலி விளக்கம்!**

1. குரு! என்றால் **ஒளியும் & ஒலியுமாகும்!**

2. **ஒளியை** விளங்கச் செய்வது **ஒலி** ஆகும்.

3. **ஒளி** இல்லாமல் **ஒலி** தோன்ற முடியாது. தோன்ற இயலாது.

4. **ஒளி** என்ற பரத்தை! அதில் தோன்றிய **ஒலியானது** விளக்கவில்லையானால், **ஒளியானது** நாம ரூப! ஜக ஜீவ! தோற்றமாக விளங்காது, விளங்க இயலாது.

5. ஒரு ஸ்ரீஸத்குருவானவர் பர அம்ஸமாக திகழ்வதால் அவர்தான் **பர ஒலியை** கொடுத்து; ஒரு பந்த ஜீவனை! கடைத்தேற்றி, ஜீவன் முக்தியை கொடுக்க முடியும் என உணர்க.

பரிபூரணம் - 18, 19

423. **உற்ற திட பாவனை!**

உனக்கு உன் கண் முன் தோற்றும் **குருவாகிய யாமும்!!!!!!!! சீடனாகிய நீயும்!!!!!!!!!!!** நம் இருவருக்கும் அயலாக இருப்பதை போல் தோற்றும் இந்த நாம ரூப உலகமும்!!!!!!!!! **மண்ணே!!!** மண்ணாகிய பரமே! பரமாகிய மண்ணே! அதுவே யாம்! யாமே அது!! என உற்ற திட பாவனையால், உன் மனதை வென்று; பிரம்மமாக பிரகாசிப்பாயாக.

பரிபூரணம் - 20

424. **வாய் ஞானம்:-** உடனே கேட்டு உடனே மறப்பது.

பரிபூரணம் - 21

425. **அனுபவ ஞானம்:-** கருத்துடன் கேட்பதால், மறந்து! மரத்து! இறப்பது.

பரிபூரணம் - 21

**426. மனோ விசாரணை** என்பது:-

1. ஒருவன் பொருளோ! ஒருவன் செயலோ! அந்த ஒருவனுக்கு அன்னியமாய் எவரும்! எதுவும்! யாமும்! இல்லவே இல்லை என்றும்;
2. எல்லாம் ஒன்றே! அது மண்ணே! அது பரமே! அது யாமே! யாமே அது! என்றும்; மனோ விசாரணை செய்தால்; மனம் அறிவாகும். அறிவு பேரறிவாகும். இதுவே மனோ நாசத்தின் வழியாகும்.
3. ஆகவே உன் உள் உணர்வு எப்படி இருக்க வேண்டுமென்றால் எண்ணமென்றும்! அதன் சொல் என்றும்! அதன் செய்கை என்றும்! இதற்கு **நான் கர்த்தா** என்னும்! எண்ணத்தை விட்டொழிப்பாயாக.

பரிபூரணம் - 24

**427. மனம் பக்குவபட்ட நிலை:-**

சர்வார்ப்பணத்தால் நாம, ரூப, ஜீவ உலகம்! **பதுமைகளாக காணலாம்.** இது மனம் பக்குவப்பட்ட நிலை.

பரிபூரணம் - 24

**428. மனோ நாசமான நிலை:-**

பிரம்மார்ப்பணத்தால்தான் பதுமைகள் மண் என உணர முடியும். **எல்லாம் மண்ணே என உணர்வதால்** மனோ நாசம் பெற முடியும்.

பரிபூரணம் - 24

**429. எமக்கயலாக எவரும்! எதுவும்! இல்லை!**

1. கனவில் காணும் பொருள் நனவில் இல்லை. நனவில் காணும் பொருள் கனவிலில்லை. இவ்விரு காலத்திலும்;

இவ்விருபொருள்களும்! **ஆன்மாவான எம்முன்னே!** வந்து! இருந்து! மாறி! மறைந்து விடுகிறது. இது பிரமாண உண்மையே.

2. அப்படியானால் எமக்கயலாக எவரும்! எதுவும்! எந்த ஈசனோ! தேவனோ! மனிதனோ! கொம்பனோ! வம்பனோ! இல்லை, இல்லை, இல்லவே இல்லையென்ற **திட உறுதி பாவனையால் மனோ நாசம் செய்வாயாக.**

பரிபூரணம் - 25

## 430. நீ அடங்கினால் உண்டாகும் நன்மைகள்!

1. நீ அடங்கினால் உலகம் உன்னுள் அடங்கும். உலகம் உன்னிடம் பணியும். உலகம் உனக்கு சேவை செய்யும். உலகம் உனக்காகவே இயங்குவதை நீ காணலாம்.
2. நீ அடங்கும் போது:- உலகம் உன் பணியாளனாகும். இது மனப்பரிபாஹப்படும் நிலை. பின் உன் பிரம்மார்ப்பணத்தால் மனோ நாசமாகி ஜீவன் முக்தி லபிதமாகும்.

பரிபூரணம் - 26, 27

431. **அமல மனம்** என்றால்:-

1. **ஆணவம்** - (நான்! எனது!) நாசமான நிலை.
2. **கன்மம்** - மூவினையும் கனவு காட்சியென சுவடு தெரியாமல் அழிந்து நிர்மூலமான நிலை.

௩. **மாயா** - இல்லாததை இருப்புடையதாக காட்டுவது, மன மிரட்சியும்! அறிவின் ஏக குணமும் நாசமான நிலை.

பரிபூரணம் - ௨௭

## ௪௩௨. ***ஸத், ஸித், சித்தம்!***

1. காலாதீத பரமே! **ஸத்தாகும்!**
2. அதுவே அசையும் நிலைக்கு ஆதாரமானால் **ஸித் ஆகும்.**
3. அசையும் நிலையை பெற்றுவிட்டால் ஸித்தே **சித்தமாகும் என உணர்க.**

பரிபூரணம் - ௨௮

௪௩௩. சர்வார்ப்பணம் செய்வது மனம் அறியும். பிரம்மார்ப்பணம் செய்வது அறிவு அறிய முடியாது. (தன்னை தானே கண்டு விளக்க முடியாது. இங்கு ஓர்மையே காரணம்).

பரிபூரணம் - ௨௯

௪௩௪. **சர்வார்ப்பணம்!** மன முயற்சி!! **பிரம்மார்ப்பணம்!** அறிவின் முயற்சி!! இப்படி சர்வார்ப்பண முயற்சி! செய்யச் செய்ய! மனம் மென்மையாகி பஞ்சு போன்றதாகி விடும்.

பரிபூரணம் - ௨௯

## ௪௩௫. **கலியுக பாடம், படிப்பின் பயன்!**

1. தற்காலிக! கலியுக பாடம் படிப்பெல்லாம் உடலுக்கும்! உலக வாழ்வுக்கு மட்டும் பயன்படும்.
2. பக்திக்கும்! முக்திக்கும்! கரண ஒழுக்கத்திற்கும் பயன் படாததாகும்.

பரிபூரணம் - ௩௨

436. 1. **மனோ நாசம்** என்பது காரியத்தை! காரணத்தில்! ஒப்படைத்து ஸாந்தி செய்து; பின் மஹாகாரணத்தால் எரிப்பதாகும்.

2. **காரியம்:-** மனம்! **காரணம்:-** அறிவு! **மஹாகாரணம்:-** பேரறிவு! அதாவது மனதை சர்வார்ப்பணத்தால் ஸாந்தி செய்து; பிரம்மார்ப்பணத்தால் எரிப்பதாகும்.

பரிபூரணம் - 44, 45

437. **பக்தி! ஒழுக்கம், கட்டுப்பாடு** இவைகள் அத்வைதத்தின் அடிப்படையாகும். இம் மூன்றும் இல்லாமல் அத்வைதம் நிலை பெறாது.

பரிபூரணம் - 52

438. 1. மனதை பேருணர்வினால் மஹத்தாக்கினால் **அறிவாகும்.**

2. அறிவை பர உணர்வினால் மஹத்தாக்கினால் **பேரறிவாகும்.** அதுவே ஜீவன் முக்தி ஆகும் என உணர்க.

பரிபூரணம் - 53

439. மனோமயப்பிராந்தி மயக்கம் என ஏன் சொல்கிறார்கள் என்றால்? குண தோஷங்களில் நான், எனது என மனம் பற்றியதால் சொல்கிறார்கள்.

பரிபூரணம் - 56

440. **அத்வைத உணர்வு! எப்படி இருக்க வேண்டுமெனில்?**

1. சமுத்திரத்தில் உப்பானது எப்பிரயத்தனமும் இன்றி இயல்பாக கலந்திருப்பது போன்றும்.

2. நாம, ரூப, ஜக, ஜீவ தோற்றம் எல்லாம் எப்படி மண்ணுக்கன்னியமாய் இல்லையோ; அதேபோல் எமக்கு அயலாய் எவரும்! எதுவும்! இல்லவே இல்லை என்ற திடவுணர்வு பயிற்சி & முயற்சி! இல்லாமல் இயல்பாகவே அது நாம்! நாம் அது! என இருப்பதே **அகண்டான்ம பாவனை** ஆகும் என உணர்க.

பரிபூரணம் - 58 *to* 60

## 441. அறிவு, பேரறிவில் இருப்பவர்கள் நிலை!

1. மனமும்! அறிவும்! ஓர் நிலையில் ஒன்றே! என அறிக. ஆனால் அறிவில் நிலைத்து நின்று விட்டால் அறிவு மனம் ஆகாது.

2. அப்படி **அறிவில்** நிலை பெற்றோர் மட்டும் நாம ரூப, ஜகத்தை **பொம்மலாட்டமாகவும்;**

3. பின் அறிவு! **பேரறிவு** ஆகவும் ஆன நிலையில் எல்லாம் **மண்மயமாகவும்** (பரமாகவும்) உணர முடியும்.

பரிபூரணம் - 81, 82

## 442. மனோ வருத்தத்தையும், மனதையும் நாசம் செய்ய!

1. அகம் பிரம்மம்! (யாமே அது) பிரம்மம் அகம்! (அதுவே யாம்) என்று மனம் வாக்கால் சொல்வதற்கு எந்த தடையும்! வருத்தமும்! இல்லவே இல்லை. மனோ வருத்தத்தை (பாரத்தை) நாசம் செய்வது **சர்வார்ப்பணம்** ஆகும்.

2. மனதை (மஹத்தாக்குவது) நாசம் செய்வது **பிரம்மார்ப்பணம்** ஆகும். முந்தையது ஸ்ரீபகவானைச்

சாரும் என உணர்க. பிந்தையது ஸ்ரீஸத்குருவைச் சாரும் என உணர்க.

பரிபூரணம் - 89

553. **பேத புத்தி நீங்க!**

**வேறு வேறாய்! வேறு வேறாய்!!** தோன்றும் பேத புத்தியானது! எந்த கர்ம காரியங்களினாலும்! தேவ தெய்வ பக்தீ உபாசணைகளினாலும்! நீங்காது என உணர்க. **அகம் பிரம்ம பாவனையால் நாசமாகும்.**

பரிபூரணம் - 93

554. **தெய்வ பந்தம்! ஆன்ம பலம்!**

திரிமூர்த்திகளையும் தெய்வங்களாக கண்டால் **தெய்வ பந்தம்** உண்டாகும். அவர்களை ஸ்ரீஸத்குருவாக கண்டால் **ஆன்ம பலம்** உண்டாகும் என உணர்க.

பரிபூரணம் - 94

555. **ஆய மனோ பேதமும்! ஆய ஜக & பரம் ஐக்கியமும்! இரு நிலைகளில் உணரலாம்.**

1. உலகை நாம ரூபமாக கண்டால், **மனோ பேதம்** ஆகும்.
2. உலகை மண்ணாக உணர்ந்தால், **ஆய ஜக & பரம் ஐக்கியமாகும்.**

பரிபூரணம் - 101, 102

556. **அண்ட:-** அகண்ட அனேக கோள்கள்.

**ரண்ட:-** சூரிய சந்திராதிகள்.

**பிண்ட:-** ஜீவ தோற்ற சரீராதிகள்.

**பிரம்மாண்டம்:-** இவையெல்லாம் அடங்கிய மொத்த நிலை, மற்றும் ஓர் நிலையில் இதை பிரம்மத்தின் அண்டங்கள் எனவும் சொல்லலாம்.

புதிய படைப்பு - 8, 9

447. **லோக மாயாவின் செயல்!**

வெளி நிலையில் செயல்படும் லோக மாயாவின் செயல்; **சிருஷ்டி, ரக்ஷிப்பு! மாற்றல்! & மறைத்தல்** ஆகிய நான்காகும் என மட்டும் உணர்க.

புதிய படைப்பு - 16

448. **யோக மாயாவின் செயல்!**

உள் நிலையில் செயல்படும் யோக மாயாவின் செயல்; **கண்காணிப்பு, கண்டிப்பு & தண்டிப்பு இல்லாமல்** லோக மாயாவை பயன்படுத்துவது.

புதிய படைப்பு - 17

449. 1. பேரறிவின் நிலையில் யோக மாயா இயங்கும். **பேரறிவை யோக மாயா இயக்க இயலாது.**

2. அதே போல், அறிவின் நிலையில் லோக மாயா இயங்கும், **அறிவை;** லோக மாயா இயக்க இயலாது.

புதிய படைப்பு - 19

450. **தெய்வம் தோன்றாத் துணைவன்** என்றால்:-

அதிசய பந்து என்ற (நேரில் தோன்றாத) நிலையில்; துணைவன் என்றபடி; **ஆப்த நண்பனாக!!!** எந்த **வினை** தொடர்பும் இல்லாமல்; அதிசயிக்கத்தக்க; நிலையில்;

அப்போதைக்கப்போது வருவான். இது ஸத்தியம், இது ஸ்வய அனுபவம்.

புதிய படைப்பு - 29

451. **தெய்வம் மனுஷ்யானாம்** என்றால்:-

1. சர்வ ஜீவ வடிவங்களில்; அப்போதைக்கப்போது தெய்வம் தோன்றும்! ஆனால் **மனித! வடிவில்** மட்டும்! **நிரந்தரமாய்!** தெய்வம் சூட்சுமமாய் காட்சி அருளும்.
2. ஆழ்ந்த **பக்தீ!** அனுபவ **ஞானம்!!** உள்ளவர்களுக்கு **மட்டும்! உணரும் நிலையில்** தெய்வம் பிரத்தியக்ஷமாகும். **மனித** ரூபம்! **தெய்வ வாக்கு & குணம்** என உணர்க.

புதிய படைப்பு - 30, 31

452. நாம, ரூப, குண **பேதத்தை** உண்டு பண்ணுவது **மனம்** ஆகும். நாம, ரூப, குண **பேதத்தை,** எல்லாம் ஒருவனே! ஒருவன் பொருளே! ஒருவன் செயலே! என **சர்வார்ப்பண!** திருஷ்டியால் நாசம் செய்வது **அறிவின்!** ஆற்றல் ஆகும்.

புதிய படைப்பு - 39

453. **புண்ணிய & பாப! விதைகளை விதைப்பது என்பது?** ஒரு ஜீவனின் வார்த்தையை கேட்டவுடனும்! செய்கையை கண்டவுடனும் பேதம்! விருப்பு வெறுப்பு! குற்றம் குறை! பழி பாபம்! முதலிய **தீய உணர்ச்சிகள்** உனக்கு தோற்றுமாயின்; அங்கு உன் மனோ கற்பனையின் மூலமாக

புண்ணிய & பாப! விதைகளை விதைக்கிறாய் என பொருள் கொள்வாயாக.

புதிய படைப்பு - 60 *to* 62

454. **அறிவின் பாவனை** என்றால்?

இங்கும்! அங்கும்! எங்கும்! ஸ்ரீபகவானே உள் இருந்துக்கொண்டு, அவரவர் வினைக்கு ஏற்றபடி தம் மாயாவை வைத்து, கர்ம காரியங்களை எக்குறையுமின்றி திறம்பட செய்கிறான் என்ற **திட உணர்வு** இருந்தால், அது அறிவின் பாவனை என உணர்க.

புதிய படைப்பு - 63 *to* 64

455. **மனோ மய சஞ்சல எண்ணம் நாசமாகும் நிலை:-**

நாம ரூப, உடல், உலக உறவு, சுற்றம் சம்பந்தப்பட்ட எண்ணங்கள் தியான காலங்களில் சஞ்சலமாகிய அசைவை கொடுக்கும்போது; ஏகமாகிய சர்வார்ப்பண நிலையில் எல்லாம் நீயே, எல்லாம் உன்னால், எல்லாம் உனதே என்ற ஓர் எண்ணத்தை மட்டும்; திரும்ப, திரும்ப எண்ணத்தில் கொண்டு வந்தால், மனோமய சஞ்சல எண்ணம் நாசமாகும் என உணர்க.

புதிய படைப்பு - 66 *to* 68

456. **தத்பத!** லக்ஷிய பரமாத்மாவும்.

**த்வம்பத!** லக்ஷிய ஜீவாத்மாவும்.

**அஸிபத!** லக்ஷிய பர சொரூபத்திற்கு; அயலில்லை என உறுதி கூறுகிறார் ஸ்ரீஸத்குருதேவர்.

புதிய படைப்பு - 71

457. **குணதோஷமில்லாத வார்த்தை!**

நான் & எனது என்ற **அஹங்கார, மமஹாரம்** ஒழிந்து மாறாக **நாம் & எமது** என ஆனால்; அது குணதோஷமில்லாத வார்த்தை ஆகி விடுகிறது.

புதிய படைப்பு - 73

458. மனதை உடைய மனிதனானவன் **மனதை வென்றால்**; மறு வினாடி **விதி நாயகன்** என ஆக முடியும். இது ஸத்தியம்.

புதிய படைப்பு - 75

459. ஏக குணத்திற்கு முதலில் ஏங்குக, அதனால் ஞானியை நீ உணர்வாய். பின் நிர்க்குணம் இயல்பாகும். அங்கு ஞானியின் பார்வை கிட்டும். **ஏக குணம் நீ ஆகாமல், நீ நிர்க்குணம் ஆக முடியாது.**

புதிய படைப்பு - 87

460. பழக்க வழக்க தோஷத்தால் வந்த பாசப்பசையானது, பழக்க வழக்க ஸத்வகுணத்தால் நாசமாகும். அதனால் தெய்வம் நீயென திகழ்வாய்.

புதிய படைப்பு - 88

461. **"அதுவே நாம்"** என்ற பர பாவனையால் ஸத்வகுணமும் நாசமாகி, நிர்க்குணமாய், காலாதீத பரமாய் நீ ஆவாய். பழக்க வழக்க கற்பனையை விட்டு பரபாவனையை ஏற்பாயாக.

புதிய படைப்பு - 89

462. *தனது மன முயற்சி என்பது எது என்றால்?*

**சர்வார்ப்பணம் ஒன்றே!** என உணர்க.

புதிய படைப்பு - 89

463. மனமே வினையை தேடினாலும் அதை அனுபவிப்பது **தூலமாகும். தூலம் ஜடமாகும், நான்! எனது!** என்ற எண்ணத்தால் தான் அவஸ்தை தோற்றுகிறது.

புதிய படைப்பு - 98

464. பரத்தின் பர கருணையால், ஸ்ரீபகவானும் அவன் **மாயாவும்,** அதன் மகனான **மனமும்** விளையாடும் விளையாட்டே நாம ரூப உலகமாகும்.

புதிய படைப்பு - 100

465. **யாம்** அதுவாக இருக்கிறோம் என்ற அறிவின் பாவனையை வைத்து, யாம்! யாமே!! என்ற உணர்வைப் பெறவேண்டும்.

புதிய படைப்பு - 109

466. **சூனியம் என்றால்?**

யாம் அதுவாக இருக்கிறோம் என்ற; பேரறிவின் நிலையில்; அமைந்த பரபாவனை ஆகும். இப்பரபாவனையும் நாசமாக வேண்டும். அப்படி நாசமானால்; **இருக்கிறோம்!** என்று அகண்ட ஐக்கிய நிலையில் பாவனாதீத நிலையில் பெறுவதே ஜீவன் முக்தி.

புதிய படைப்பு - 110, 111

467. **யாம்! யாம்! என்பது!** இருமை இல்லாத ஓர்மையின் **இருப்பின்!** நிலையாகும் என உணர்க.

புதிய படைப்பு - 112

**468. யாருக்கு பரம் வழிகாட்டும்:-**

ஒரு ஜீவனுக்கு பல கோடி பூர்வ சுகிர்தமானது தர்மமாக இந்த ஜன்மாவில் மாறி; அதனால் ஓர் நாம ரூப ஸ்ரீபகவானின் கருணை பெற்று, அக்கருணையால் ஓர் ஸ்ரீஸத்குருவின் கருணையைப் பரிபூரணமாக பெற்றவர் **எவரெவரோ அவரவரெல்லாம்** பர கருணையால் வழி காட்டப்படுவர். பர கருணை நிலையில் யோக மாயாவும்! பேரறிவும்! இணைந்து செயல்படும் என உணர்க.

புதிய படைப்பு - 117 *to* 119

469. யோக மாயாவும்! பேரறிவும்! **ஒன்றே!** யோக மாயா ஒலி வடிவில் உணர்த்தும், **பேரறிவு (ஸ்ரீஸத்குரு) வரி** வடிவில் உணர்த்தும். இவ்விரண்டின் நிலையில் பெறுவதே ஆத்ம ஞான! **ஜீவன்!** முக்தியும் **& ஜீவன்!** முக்தனும்; ஆகும்.

புதிய படைப்பு - 119

470. **தனக்குத் தானே உணர்த்தும் ஒருவர் மீது!** அவர் ஸ்ரீமஹானோ? மகனோ? எவராயிருப்பினும் உன் நம்பிக்கையின் வைராக்கியத்தால் சந்தேக கலக்க பயமின்றி அறிவின் ஸ்திர பாவனை பண்ணினால் அவர் அது அல்லது அவர் ஆகி மாறி விடுவார்.

புதிய படைப்பு - 126, 127

471. **அசையும் & அசைக்கும்** என்றால்:-

அறிவின் நிலையில்; சற்று அசையும். அசைக்கும்:- இது ஈசன் நிலையிலுள்ள ரூபலாவண்யமும்! மஹிமை பிரபாவமும் இணைந்த நிலையும்; அண்ட சிருஷ்டியின்

மஹத்தான மயக்க நிலையும்! இணைந்து **அசையும் &** **அசைக்கும்** என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

புதிய படைப்பு - 131, 132

## 472. அண்ட சிருஷ்டி, பிண்ட சிருஷ்டி!

**யோக மாயா!** அண்ட சிருஷ்டி ஆகும். **லோக மாயா!** பிண்ட சிருஷ்டி ஆகும். அண்ட சிருஷ்டியில் இருந்து தான், பிண்ட சிருஷ்டியை பண்ண முடியும். அண்ட சிருஷ்டி ஜடமாகும். பிண்ட சிருஷ்டி **ஜீவ** தோற்றங்களாகும். ஜீவ தோற்றங்களால்தான் **வினை** பெருக்கமும் **விதி**யின் விளையாட்டும் நடைபெற முடியும் என உணர்க.

புதிய படைப்பு - 134

## 473. லோக மாயாவுக்கு வேலையும் இருப்பும் இல்லாத நிலை!

**லோக மாயாவின் மனம்!** இல்லையானால்; **வினைப்!** பெருக்கமும்; **விதியின் ஜனன மரண!** விளையாட்டும் இல்லை. மனம் & வினை & விதியின்! விளையாட்டு இல்லையானால்; லோக மாயாவுக்கு வேலையும் இருப்பும் இல்லையென்றே சொல்வோம்.

புதிய படைப்பு - 134

## 474. காலாதீத பரத்தின் நிலை:-

1. தூய **பால்!** போன்று; வெண்மை ஆனது.
2. அனந்த கோடி **சூர்ய** பிரகாச **ஒளியை!** உடையது. ஆகவே **அகண்ட பேரொளி!** எனவும் சொல்லலாம்.
3. (ஒளி என்றவுடன் தகிக்கும் உஷ்ணம் என்ற

பொருளல்ல). **சந்திர!** ஒளியை போன்று **குளுமை** ஆனது என அறிக.

4. சமுத்திர **உப்பை!** போன்று; நாம, ரூப, **ஜக; ஜீவ!** தோற்றங்களையும்; சூட்சும **ரூப, நாம ஈஸ்வராதி!** வடிவங்களையும் தமக்குள் **தாமாக!** அடக்கி கொண்டு; **தமக்கு!** அன்னியமாய் எவரும் & எதுவும்! இல்லாததான அகண்ட **ஏக & ஐக்கிய!** ரஸ ஸ்வரூபமானது.

இப்படியாக நான்கு நிலைகளை! ஸ்ரீமஹான்கள் அந்த காலாதீத **பரத்திற்கு!** உவமானமாக சொல்லி வைத்தார்கள். (உண்மையில் பரம் அவையல்ல) **விளையாட்டின்!** நிலையில் அது தான் தானே **நான்கு!** வடிவெடுத்ததாக ஸ்ரீமஹான்கள் சொல்லக் கேள்விப்படுகிறோம் என உணர்க.

புதிய படைப்பு - 140 *to* 142

**475. பரத்தின் நான்கு வடிவங்கள்:-**

1. தாம் தாமான **இருப்பு!** நிலை. 2. தம் **ஆரம்ப!** தோற்றம். 3. தம் **ஈசனின்!** இருப்பு நிலை. 4. தம் நாம ரூப **ஜீவனின்!** இருப்பு நிலை.

**நான்கு வடிவங்களின் சிறிய விளக்கம்:**

1. வரியாலும், வாக்காலும் விளக்க முடியாத **அதீத!** நிலையாகும். **யாம் யாமாக!!!** இருக்கிறோம் என்ற **இருப்பு நிலை.**

2. **யாம்! அதுவாக!** இருக்கிறோம் என்ற தோற்ற நிலை. நிர்க்குணம் இது **பேரறிவின்! நிலை.**
3. **யாம்! அவனாக!** இருக்கிறோம் என்ற **ஈசன்!** நிலை **ஏக!** குணத்தின் **அறிவு! நிலை.**
4. **நான்! இன்னார்!** என்ற அஹங்கார! மமஹாரத்தோடு கூடிய; **ஜீவ!** நிலையின் அனேக **தோஷ!** குணத்தின் அறியாமையின் (அஞ்ஞானத்தின்) **ம....னோ.... வ....டி...வ...ம்**, இருப்பு & இயக்கம்! நிலையில் உள்ள இங்கு நம் **ஈசனையும்!** மறந்து அனைத்துக்கும் ஆதாரமான காலாதீத **பரத்தையும்!** மறந்து; நான்! என்னால்! எனதென்று! மார்தட்டிக்கொள்ளும் **அப்பாவி! மனித ஜீவ நிலை.**

புதிய படைப்பு - 143 *to* 145

476. **ஈசனையும்! பரத்தையும்! மறந்த! மறுத்த! காரணம்:-** நாம, ரூப, ஜக, ஜீவ, பொன் பொருள் மோஹ வேக வெறியே காரணமாகும்.

புதிய படைப்பு - 145

477. **நாம, ரூப, உலகையும், ஜீவர்களையும் மறக்க முடியாமல் சிரமப்படக் காரணம்:-**
1. **முற்கவனத்தால் வரும்** போட்டி பொறாமையும்.
2. **தற்காப்பால் வரும்;** பாடம்! படிப்பு! பட்டம்! பதவி! பேர்! புகழ்! அந்தஸ்து! பணத்தால் கௌரவ மோஹம்.
3. **எதிர்பார்ப்பால் வரும்** ஏமாற்றத்தின் தடுமாற்றமாகும் என உணர்க.

புதிய படைப்பு - 146 - 147

478. **காலாதீத பரமே!** எல்லாவற்றிற்கும் **மூல காரணமாக!** இருக்கிறது எனச் சொல்வதை விட; காலாதீத **பரமே! எல்லாமாக** இருக்கிறது என்றே சொல்ல வேண்டும். அதன் அங்கமான! **நாமும் அதுவே!** என திட உறுதியின் நம்பிக்கை வேண்டும்.

புதிய படைப்பு - 150

479. காலாதீத பரமே! ஈசனாகவும்! ஜீவனாகவும்! நாம ரூப! ஜக ஜீவ! எல்லா தோற்றமாகவும் இருப்பதால் **அது நாம்! நாம் அது!** என்ற அகண்டான்ம பாவணையால்! பாவனாதீத நிலையை அடைந்து, **யாம் யாமாக இருக்கிறோம்** என அது ஆகுக என வாழ்த்தி ஆசி வழங்குகிறோம்.

புதிய படைப்பு - 154

480. **மனம்! வினை & விதி!**

1. **மனமே! ஜீவன்! ஜீவனே! மனம்!** இதுவே நிரந்தரமான உண்மை. அதே போல்?
2. **மனமே! வினை! வினையே! மனம்!** இதுவும் நிரந்தர உண்மையே.
3. **வினையே! விதியை!** தேடிக்கொள்கிறது. இந்த மனம் & வினை & விதி! இம் மூன்றுமே; **இவ்வுலக!** விளையாட்டாகும்; இவ்விளையாட்டை மாற்றவோ! மறுக்கவோ! விலக்கவோ, திரிகர்த்தாக்களாலும் ஆகாது. இதை **மஹேந்திர ஜாலக் கோலம்!** என ஆதி ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

புதிய படைப்பு - 155, 156

481. ஆத்மாவாகவும்! பரமாத்மாவாகவும்! காலாதீத **பரமாகவும்!!!** இருக்கும் **நாம்!** இந்த சஞ்சலம் ஆகிய **மனோ** எண்ணத்திலிருந்து விடுபட வேண்டும். இவ்வெண்ணத்தை நாம் **எப்படி!** நீக்க வேண்டுமென்றால்??? காலாதீத பரமும்! பரமாத்மாவும்! ஆத்மாவும்! நாமே! என உணர்க.

புதிய படைப்பு - 156

482. **கண்காணிக்கும் நிலை!**

1. மனம்! வினை! விதி! ஆகிய மூன்றும், **நாம ரூபங்களுக்கே** உரியதாகும். நாம்! நாம ரூப உலகமல்ல. அதன் இயக்கமும் நாமல்ல.
2. ஆகவே இங்கு??? கண்டிப்பும் & தண்டிப்பும்! இல்லாமல் **நம்மில்** (மண்ணில்) தோன்றிய ஜகம் (பொம்மலாட்டம்) விளையாடுவதை; **கண்டும் காணாமல்; கேட்டும் கேளாமல்; வாய் இருந்தும் ஊமையாய் (சாட்சியாய்)** இருப்பதே கண்காணிக்கும் நிலையாகும்.

புதிய படைப்பு - 157

483. **சீதளமாம் மனம் என்றால் என்ன?**

1. சீதள மனம் என்பது **அறிவை!** குறிக்கிறது. இது **பேரறிவு!** ஆகும் நிலையில் உள்ளதால்; **சீதளம்!** என்ற வார்த்தையை போட்டார் ஸ்ரீரிபு மஹாத்மா.
2. பேரறிவு! பிரம்மத்தை! உணர்த்துவதாக அமைகிறது. ஆகவேதான் சீதள மனம் என்பதை அறிவும், பேரறிவும்

இணைந்த நிலையென ஸ்ரீமஹான்கள் சொல்வர் என உணர வேண்டும்.

புதிய படைப்பு - 173, 174

484. **பவதாபங்கள்** என்பது:-

**பவம்!** வேறு. **பாவம்!** வேறு. **பாபம்!** வேறு. என மூன்றாகும்.

1. **பவம்:- மும்மலம்!** ஆகும். ஆணவம்! கன்மம்! மாயை! என மூன்றாகும்.
2. **பாவம்:-** இது **பாவனை** ஆகும். இதில் **இறை பாவனை** என்றும்; **பர பாவனை** என்றும்; இரண்டாக பிரித்தார்கள். மேலும் **ஏக குண பாவனை** என்றும்; **நிர்க்குண பாவனை** என்றும்; சொல்லலாம். இறை பாவனை **சர்வார்ப்பணம்** ஆகும். பர பாவனை **பிரம்மார்ப்பணம்** ஆகும். இறை பாவனை **பத முக்தி** ஆகும்! பர பாவனை **ஜீவன்முக்தி** ஆகும்.
3. **பாபம்:-** நாம ரூப எந்த பொருளின் தானமும்! தர்மமும்! செய்வது **நிலை** கண்டு; புண்ணியமும் & பாபமும் ஆகும்.

புதிய படைப்பு - 176, 180, 181

485. **ஸின்மாத்திரத்திற்கும், ஸின்முத்திரை நிஷ்டைக்கும் உள்ள வித்தியாசம்:-**

1. ஸின்மாத்திரம் என்பது பரசொரூப அம்ஸ வடிவத்தை உணர்த்துகிறது.
2. ஸின்முத்திரை நிஷ்டை என்பது பரமாத்ம நிலை பொருந்துவதாகும் அதாவது ஆணவம்! கன்மம்! மாயை!

இம் மூன்றையும் மேல் நோக்கி தள்ளிவிட்டு ஜீவாத்மாவை! பரமாத்மாவோடு இணைத்து பரமாத்மாவே ஸத்தியம் என உணர்த்துவதாகும்.

புதிய படைப்பு - 18௨ *to* 18௪

௪86. **கற்பனையின் எண்ணங்கள்,**
**பாவனையின் எண்ணங்கள்!**

1. மனதின் அனேக குண எண்ணம் **கற்பனையே யாம்.**
௨. அறிவின் சாந்தியான எல்லா எண்ணங்களும் **பாவனையே.**
௩. **கற்பனையின்** எண்ணங்கள் தொடரும் வினையாகும்.
௪. **பாவனையின்** எண்ணங்கள் கர்மாவின் காரியங்களை முடித்து நின்றுவிடும். தொடராது.

புதிய படைப்பு - ௨௪0 *to* ௨௪1

௪87. 1. **மாயாவும்! மனமும்** இணைந்து செயல்படுவதே நாம, ரூப, ஜக, ஜீவ, ஈசன் விளையாட்டாகும்.
௨. **மாயா** இல்லையானால் **தோற்றம்** இல்லை.
௩. **மனம்** இல்லையானால் **புண்ணிய பாப** விஹார விவஹார விளையாட்டு இல்லை.

புதிய படைப்பு - ௨௪9, ௨50

௪88. **சகித்தல்** என்பது எல்லாம் இறைவனால்தான் நடைபெறுகிறதென்ற **திட** (அசைக்க முடியாத) **நம்பிக்கை!** இங்கு நமக்கன்னியமாய் அவனில்லை, அவனுக்கன்னியமாய் நாம் இல்லை. நமக்கன்னியமாய்; எவரும் & எவனும் எவளும் & எதுவும்! அங்கும்! இங்கும்!

எங்கும்! இல்லாமையினால், **இறைவனால்** நடைபெறும் அனைத்தும் **ஆனந்த** மயமே என்ற திட உறுதியின் நம்பிக்கையில்; பூரண வைராக்கியம் பெறுவதுவே (சகித்தல் ஆகும்.) இறை கருணையைப் பெறுவதும் ஆகும்.

புதிய படைப்பு - 3/4, 5

589. **ஸ்ரீபாத** சேவையை விட, **ஸ்ரீபாதுகா!** சேவையே ஓர் ஜீவனுடைய **ஜீவனை! (மனதை)** நாசம் செய்யும் என உணர்க.

புதிய படைப்பு - 3/7

590. **ஸ்ரீபாதுகா சேவை** என்பது:-

1. பாதுகைகளை கழற்றும் போது; அலக்ஷியம் கூடாது. இதமாகவும்! பதமாகவும் பொறுமையுடனும் திருவடியைக் கழற்றி ஓரமாக ஜோடி சேர்த்து வைக்கவும்.
2. மற்ற திருவடிகள் ஒழுக்கம் இல்லாமல் அங்கும், இங்குமாக கிடந்தால் அவைகளைக் காலால் தள்ளி ஒழுங்கு படுத்த வேண்டாம். குனிந்து கரங்களால் அத்திருவடிகளை தூக்கி ஜோடி சேர்த்து ஒழுங்கு படுத்துவது ஸ்ரீபாதுகா சேவை ஆகும் என உணர்க.

புதிய படைப்பு - 3/9, 10

591. **அன்பர்கள் ஒருவருக்கொருவர் ஸ்ரீபாத நமஸ்கரிக்கும் போது!**

1. குருதேவா என்றோ; அல்லது உங்கள் உபாசனா மூர்த்தியின் நாமம் எதுவோ அதை ஸ்மரித்துக் கொண்டோ; நமஸ்காரம் செய்யவும்.

2. சரீரங்களை நோக்க வேண்டாம். அதனால் ஜீவ உபாதையும்! எண்ணங்களினால் புண்ணிய பாபமும் சம்பவிக்க ஏதுவாகும். ஜாக்கிரதை.

3. இன்னார் இன்னார் என்ற ஆண் பெண் பேதத்தினால் அசூசை என்ற நிலையில் விருப்பும், வெறுப்பும் உண்டாகி மனம் தடுமாறி, சாதனை முழுவதும் கெடும் என அறிக.

4. ஸ்ரீபாதங்களை மட்டும் கண்டு நமஸ்கரித்தால் உங்கள் பாதகமலங்கள்!!! அனைத்தும் சாம்பலாகி, உங்கள் லக்ஷியத்தை அடைய முடியும்.

புதிய படைப்பு - 3/11 *to* 14

**492. முற்கவனத்தின் அங்கங்கள்:-**

a. பிறரிடம் குற்றம் குறை காண்பது.

b. போட்டி & பொறாமை.

c. தற்பெருமை & அதிகார ஆதிக்கம்.

d. பிறர் சாதனையை தம்மோடு ஒத்துப் பார்த்தல்.

e. தம்மை விட எவரையும் உயர்வாக கருதாமல்; தாழ்வாக கருதுவது.

f. சர்வார்ப்பணம் முழுநிலை பெறாமை.

g. பிறர் சேவையை ஏற்காமல்; அதில் ஏதேனும் குறை கூறிக்கொண்டே சேவை (வேலை) செய்தல்.

h. தன்னம்பிக்கை இல்லாமை. ஆகிய இந்த எட்டும், முற்கவனத்தின் அங்கங்கள் என அறிக.

புதிய படைப்பு - 3/32, 33

**௪௯௩. சைதன்யம்** (ஆன்மா) என்பது:-

1. **ஸ்வயம் பிரகாச ஜோதி ஆகும்.**
௨. அறிவே இயங்கும், அது இயக்க நிலையில் **அறிவை உடைய கண்ட! நிலையில் பிரகாசிக்கும்.**
௩. அது இயக்கம் அற்ற நிலையில் **பேரறிவை உடைய அகண்ட நிலையில் பிரகாசிக்கும்.**
௪. மனம் வசம் இருந்தால் காணவும் உணரவும் முடியாது. அறிவு நிலையில் இருந்தால் காணலாம் உணரலாம் (ஸ்ரீபகவானாக).
5. மனித இனம் உட்பட 8௪ லக்ஷம் ஜீவ கோடிகளிலும் உள் இருப்பின் ஆன்மா என்று உணர்க.

புதிய படைப்பு - ௩/௩௨, ௩௩, ௪/117

**௪௯௪. முற்கவனம் நாசமாக:-**

1. திட்டமிட்ட ஓர் நாடகம் என்ற நிலையிலும்;
௨. விகிதாச்சாரப்படி பகிர்ந்து கொடுக்கப்பட்டு விட்டது என்ற நிலையிலும்;
௩. எதிலும், எங்கும் பாரபக்ஷமில்லையென்ற நிலையிலும்,
௪. **உன்னால்!** ஒன்றும் ஆகாது என திட்டவட்டமாக; தெளிந்த பின்னும் முற்கவனம் **ஏன்? எதற்கு** வேண்டும் என உணர்க?????

புதிய படைப்பு - ௩/௩௪, ௩5

**௪௯5. அறிவால் உணரக் கூடியதை மனதால் காண முடியாது!**

1. எண்ணம் என்றால் கற்பனை! கற்பனை என்றால் மனம்! மனம் என்றால் நாம ரூபம்! நாம ரூபம் என்றால்

உலகம். அப்படியானால் உலகம்தானே தோற்றும். சூட்சும ஸ்ரீபகவான் எவ்வாறு தோற்ற கூடும்???

2. மனதினும் சூட்சுமம் அறிவு. மனதில் காண்பது நாம ரூப உலகையாகும். ஸ்ரீபகவானை உணர்வதும் பின் கண்டு பேசி உரையாடுவதும் அறிவாகும். அறிவால் உணரக்கூடியதை மனதால் காண முடியாது.

புதிய படைப்பு - 3/36, 37

596. **மறந்தால்! மரத்தால்!! இறந்தால்!!! மூன்றின் விளக்கம்:-**

1. **மறந்தால்:-** எல்லா நாம ரூபங்களும்! இல்லை! இல்லை!! இல்லை!!! இல்லவே இல்லை! என **மறக்க** வேண்டும்.

2. **மரத்தால்:-** எல்லாம் மண்ணே! என உணர வேண்டும். இந்நிலை பெற்றால் எல்லாம் மரத்து போகும்.

**இறந்தால்:-** மான, ஈனம், சூடு, சுரணை, வெட்கம்! லஜ்ஜை! கூச்ச சுபாவம் என்ற தன்மானம்!சர்வ நாசமடையும். இந்நிலை பெற்றாலே, கண் இருந்தும் குருடாய்! காது இருந்தும் செவிடாய்! வாய் இருந்தும் ஊமையாய் ஆன **இறந்த** நிலை ஆகும்.

புதிய படைப்பு - 3/39

597. **திரை மறைவு இல்லாமை!**

மனத்திரை. நாம, ரூப, குண தோஷம் இல்லாமையினால்; ஸத்வகுணம் இயல்பாகி ஸ்ரீபகவத் குணானுபவமும், நிலை

கண்டு ஸ்ரீபகவத் சொரூப தர்ஸனமும் லபிதமாகும். இதுவே திரை மறைவு இல்லாமை.

புதிய படைப்பு - 3/41

498. **உன்னை உள்ளபடி உணரும் நிலை!**

ஸத்வகுணம் நாசமாகி, நிர்க்குணம் சர்வ சாட்சி நிலை பெறும்போது; **நமக்கு அன்னியமாய் எவரும், எதுவும், இல்லா நிலையில்** அகண்டான்ம சொரூபநிலை பெறுவதுவே உன்னை உள்ளபடி உணரும் நிலை என உணர்க.

புதிய படைப்பு - 3/42

499. **ஜீவ விடுதலை பெறும் நிலை!**

எல்லோரும் நல்லவரே! எல்லோரும் நம்மவரே! நடப்பதெல்லாம் நலமே! என்ற ஓர்மித்த **ஆன்ம பாவனை!** ஒன்றிலேயே **ஜீவ!** விடுதலை பெற முடியும் என உணர்க.

புதிய படைப்பு - 3/74

500. **ஓர் குருவின் தகுதி! பெறும் நிலை!**

1 **குருவாக!** (சாமான்ய குரு) இருந்து போதிக்கும் **ஆசானாக!** இருக்க ஆசை கொள்ளாதே, ஓர் தகுதி வாய்ந்த **மாணவன்!** ஸ்தானத்தையும் இழந்து விடுவாய்.

2. ஓர் **உத்தம மாணவனாக!** இருக்க, இறை அருளால் கடும் முயற்சி செய். **ஓர் குருவின் தகுதி!** முழுமையாக பெற்று விடுவாய். இது ஸத்தியம்.

புதிய படைப்பு - 3/85

501. **எந்த பிரயத்தனமும் இன்றி ஜீவன் முக்தி பெற!**

தினமும் காலை 05.00 *to* 07.00 மணி வரை அந்த பர கருணையால் பர ஒலி ஒலிப்பதால் (அதுவே பர கருணை நிலையில் யோக மாயாவினால் இயங்குவதால்;) ஸ்வய ஞானானுபவ நூலை அக்காலத்தில் மோக்ஷ சாதனையாளன் பாராயணம் செய்வானாயின் அவன் வேறு எந்த பிரயத்தனமும் இன்றி ஜீவன் முக்தி பெறுவான் என்பது ஸத்தியமே.

புதிய படைப்பு - 4/126, 127

502. **பர ஒலி:- முமுட்சுக்களே!** (மோக்ஷ இச்சை உள்ளவர்களே) காலாதீத **பரமே!** உங்களுக்காக ஓர் தூலம் தாங்கி வந்திருக்கிறது என உணர்க.

புதிய படைப்பு - 4/127

503. **விழிப்பு நிலை! உறக்க நிலை!**

1. **விழிப்பு நிலை! இருந்தும்! இறந்த** நிலை ஞான விழிப்பு நிலையாகும் என அறிக.
2. **உறக்க நிலை!** நாம, ரூப, ஜக, ஜீவ தோற்றங்களை உண்டு என சுவைத்து புசிப்பது அறிவின் உறக்க நிலையாகும்.

முன் கூறியது **மனம்!** உடையவர்களுக்கு மட்டும் இன்ப துன்பத்தை கொடுப்பதால் **மனோ!** நிலையில் விழிப்பாகும். **அறிவு!** நிலையில் உறக்கமாகும்.

புதிய படைப்பு - 4/136, 137

504. **ஜீவ மயக்கம் நாசம் அடைய:-**

1. நடைபெறும் எல்லா நிகழ்ச்சிகளும் திட்டமிட்டு! பாரபக்ஷ தோஷமில்லாமல் விகிதாச்சாரப்படி! தயார் செய்து வெளியிடப்பட்ட, ஓர் திரை காட்சியெனவும்.
2. இதை **மாற்றவோ! மறுக்கவோ! விளக்கவோ! விலகவோ! சேர்க்கவோ!! கழிக்கவோ!!! எவராலும் இயலாது!** என தலை வணங்கி பணிந்து ஏற்றுக்கொண்டால்; இவ்வுலகம் உனக்கு தலை வணங்கும் என்பதே ஸத்தியம்.

புதிய படைப்பு - 4/172, 173

505. **உலகம் ஆனந்த மயமே!**

எல்லாம் நலமே, தீமையும் இல்லை. தீயவர்களும் இல்லை. என்றும், நம் மனோ எண்ணமே நம்மை பயமுறுத்துகிறது என்ற திட உறுதியும் இருந்தால் உலகம் ஆனந்த மயமே என அறிக.

புதிய படைப்பு - 4/174

506. 1. **குணதோஷம்!** பின்னலிடுவதால் அது புண்ணிய பாபத்தின் ஜனன மரணமாகிறது என்று அறிக.

2. ஆகவே **மூலமாகிய!** காலாதீத பரமே **நாம்!** என ஆகிவிட்டால் குணமுமில்லை. குணத்தின் வினையுமில்லை, வினையின் ஜனன மரணமும் இல்லையென அறிக.

புதிய படைப்பு - 4/178

507. **இறை உணர்வு! பர உணர்வு!**

இறை உணர்வு! என்பது **சர்வார்ப்பணம்** ஆகும். பர உணர்வு என்பது **பிரம்மார்ப்பணம்** ஆகும். பிரம்மார்ப்பணத்தால் 84 லக்ஷம் ஜீவ கோடிகளிலும் நாமே நிறைந்திருக்கிறோம் என்ற நிலையில்; பேத திருஷ்டி நீங்கி அபேத திருஷ்டி ஆக வேண்டும்.

புதிய படைப்பு - 4/187

508. **அறிவுக்கண் பிரகாசிக்கும் நிலை:-**

நாம ரூபங்களின் **வினோத! விரோத!** காட்சிகள் எந்த வினாடி மறைந்து ஸாந்தி உண்டாகிறதோ, அந்த வினாடி அறிவுக்கண் பிரகாசிக்கும்.

புதிய படைப்பு - 4/188

509. **மனக்கண்!** நாம, ரூப, ஜக, ஜீவ தோற்றங்களை மட்டும் காண்பதாகும்.

புதிய படைப்பு - 4/189

510. **அறிவுக்கண்!** உன் ஸ்ரீபகவானையும்! சூட்சும தேவதெய்வம்! அதீத நிலையடைந்த ஸ்ரீமஹான்களையும் காண்பதாகும்.

புதிய படைப்பு - 4/189

511. **பேரறிவில் உள்ளவர் நிலை!**

1. காலாதீத பரத்தை அறிவுக் கண்ணாலும் காணமுடியாது. ஆனால் பேரறிவுக்கு கண் இல்லை.
2. பேரறிவு என்பது எல்லா உயிரினங்களையும் நாம, ரூப பேதம் காணாமல் **யாம் இருக்கிறோம்** என்ற

ஓர் இருப்பை மட்டும் உணர்வுபூர்வமாய் **உணர்ந்து!** (கண்டல்ல) சொல்லவெண்ணா! விளக்கவெண்ணா! **அகண்டானந்த நிலை பெறுவதாகும்.**

3. இது பேரறிவு நிலை பெற்றவர்கே பொருந்தும். அறிவு படைத்தோர்க்கோ ஏனைய சக்தி படைத்தோர்க்கோ **இது** இயலாது.

புதிய படைப்பு - 4/190 *to* 193

512. **ஸிதாகாயம்** என்பது அகண்ட **பர**வெளியான **ஆகாயத்தை!** குறிக்கும் என உணர்க.

புதிய படைப்பு - 4/205

513. ஆகாயம் ஒன்றே! யோக மாயா அம்ஸம் கொண்ட பரத்தின் நிழலாகும். பிரணவமும்! பிரணவத்தின் ஒலியும் ஆகாயமாகும்! என உணர்க.

புதிய படைப்பு - 4/206

514. ஆகாயம் ஒன்றே பஞ்சபூதங்களில் ஒன்றாக இருந்தாலும் அது பரத்தின் மறு வடிவமென்று ஆதி ஸ்ரீமஹான்களால் சொல்லப்படுகிறது என உணர்க.

புதிய படைப்பு - 4/207

515. 48வது சதுர்யுகத்தின் போது அனைத்து அண்ட, ரண்ட, பிரம்மாண்டங்களும் ஆகாயத்தில்தான் ஒடுங்கி மறைந்து மயமாகும் என ஆதி ஸ்ரீமஹான்கள் வாக்காக அறிகிறோம்.

புதிய படைப்பு - 4/208

516. **இறை கருணை! பர கருணை! குரு கருணை!**

1. **இறை கருணை:-** நாம, ரூப, ஜக, ஜீவ! சொந்த பந்த! பாச **வினையின்!** மனோ தோஷகுணம் நாசம் செய்யும்.

2. **பர கருணை:-** நடப்பன! பறப்பன! நீந்துவன! ஊர்வன! ஆகிய 84 லக்ஷம்! ஜீவகோடிகளின் நாம ரூப! குணபேதங்களை நாசம் செய்து. **அபேத!** திருஷ்டியினால் **பேத மனதை!** சர்வ நாசம் செய்து, உன்னை **ஜீவன் முக்தன்!** என ஆக்கிவிடும்.

3. **குரு கருணை:-** மேலே கூறிய இறை மற்றும் பரகருணை அவ்விரண்டையும் **தன்!** மயமாக்கிக்கொண்டு; தான்தானாய் ஆக்கி **அகண்டானந்தத்தில்** கரைந்து மயமாக்கிவிடும்.

புதிய படைப்பு - 4/211, 212

517. **நாம் என்ற சொல்லானது,** பரமாத்மா & ஜீவாத்மா! என ஈசனையும்! ஜீவனையும்! குறிப்பதாக அமைகிறது. ஸ்ரீபகவானையும் நம்மோடு சேர்த்துக் கொள்வதால் **வினையின் குணதோஷம் நாசமாகிறது** என ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

நாம் யார் - 2

518. ஆதி ஸ்ரீமஹான்களெல்லாம் **நாம்** என பேசுபவன் **பக்தன்!** என்றும், **யாம்** என பேசுபவன் **ஞானி!** என்றும் சொல்வர். இங்கு யாம் என்றால், யாம் & எம்மை! என்ற நிலையில்; எல்லாம் & அனைத்தும்! என்ற அர்த்த பாவனையை குறிக்கும்.

நாம் யார் - 2, 3

519. **யாம்!** என்பது ஓர் நிலையில் ஓர்மையாகும். மற்றோர் நிலையில் மனித இனம் உட்பட 84 லக்ஷம் ஜீவகோடிகளையும் இணைத்த நிலையில், **சர்வ சாட்சி பாவனையை** குறிக்கும் என ஸ்ரீமஹான்கள் சொல்லக் கேள்வி.

நாம் யார் - 3

520. **நான்:-** காட்சி பாவனை என்றும்,

**நாம்:-** சாட்சி பாவனை என்றும்,

**யாம்:-** சர்வ சாட்சி பாவனை என்றும் உணர்வால் தெளிக, உணர்க, ஆகுக.

நாம் யார் - 4

521. **அது!** (பரம்) இயங்காத! இயங்க இயலாத தன்மையால், இறைவனை (ஸ்ரீபகவானை) உண்டு பண்ணி, மாயா! மனம் என்னும் இரண்டை வைத்துக் கொண்டு பதுமை விளையாட்டு விளையாடிக் கொண்டிருக்கிறது.

நாம் யார் - 8

522. **நீயும்! யாமும்! கனிகாண்! தேனும், பாலும் போல் சிவம் என்பது:-**

1. தேன் என்ற நாம ரூபத்தினுள் **மதுரம்** என்ற சுவை (பரம்) நிறைந்திருப்பது போலும்;
2. **பால்** போன்ற பரத்தினுள், **ஜலம்** போன்று நாம, ரூப, ஜக, ஜீவ சொரூபங்கள் எப்படி மறைந்திருக்கிறதோ அப்படி பாலைக் காண்கிறோம். உள்ளே மறைந்திருக்கும் ஜலத்தை காண முடியவில்லை.

3. தேனைக் காண்கிறோம். தேனினுள் உள்ள மதுரத்தை காண முடிவதில்லை.

4. பால் என்ற பரத்தில், ஜலம் என்ற நாம, ரூப, ஜக, ஜீவ தோற்றம் மறைந்திருக்கிறது.

5. தேன் என்ற நாம, ரூப, ஜக, ஜீவ, தோற்றத்தில், சுவை என்ற பரம் மறைந்திருக்கிறது.

6. அதாவது கல் தோன்றினால் நாய் தோன்றாது. நாய் தோன்றினால் கல் தோன்றாது. நாம ரூபத்தை தள்ளி பரத்தில் ஒன்றுவாயாக.

நாம் யார் - 23 *to* 25

523. **ஆத்மானந்தம்** என்பது:-

எல்லாம் **நீயே**! எல்லாம் உன்னால்! எல்லாம் உனதே! என்ற நிலையில் **நாம், எமதாக** உணர்ந்து புசித்தால் இன்ப, துன்பம் நாசமாகி **ஆத்மானந்தம்!** இயல்பாக உண்டாகும்.

நாம் யார் - 29

524. **அதுவே யாம்!** என்பதில் வாய் ஞானம் இல்லாமல் அனுபவ ஞானம் வேண்டும். அப்படி அனுபவ ஞானம் ஸ்திரமானால்தான் பரிபூரண வைராக்கியம் **யாமே அது** என்ற **உறுதி** திடம் பெறும்.

கண்டுணர்வது - 5

525. **ஸ்வய அனுபவம் உண்டாக!**

1. உங்கள் பரிபூரண நம்பிக்கையால்தான் ஸ்வய அனுபவம் உண்டாகும்.

2. உங்கள் ஸ்வய அனுபவத்தால் பரிபூரண வைரக்கியம் உண்டாகும்.
3. உங்கள் பரிபூரண வைராக்கியத்தால் நீங்கள் ஜீவன் முக்தனாகவே பிரகாசிப்பீர்கள்.

கண்டுணர்வது - 5

526. **நித்திய பாராயணம்** என்பது:-

1. **அது உண்டு** என்பதில் **நம்பிக்கை.**
2. **அதுவே யாம்** என்பதில் **ஸ்வய அனுபவம்.**
3. **யாமே அது** என்பதில் **பூரண வைரக்கியம்.** இப்படி ஸ்வய அனுபவம் பெறுவதற்கு; **தைலதாரை போல் தடையறாத அப்யாசம் வேண்டும்,** இதையே நித்திய பாராயணம் என ஆதி ஸ்ரீமஹான்கள் சொல்வர்.

கண்டுணர்வது - 5, 6

527. **செயற்கையின் வாஸனை நாசமாக!**

கலியுகத்தின் கடைசிக் காலமாக இருப்பதால்; பழக்க வழக்கம் தவிர்க்க முடியாமல் இருப்பதால் செயற்கையின் வாஸனை நாசமாவதற்கு, **இடையறாத அப்யாசம் (பாராயணம்) செய்ய வேண்டும்.** நித்திய பாராயணமாவது தைலதாரை போல் இடையறாது செய்து வந்தால்; அர்த்தமும் அதன் கருத்தும் நிலை பெற்று நிற்கும்.

கண்டுணர்வது - 6, 7

528. **அதிசய பந்து நீயே** என்றால்:-

வினைத் தொடர்பில்லாமல் வரவு, பற்று செய்யக் கூடியவர்கள் அதிசய பந்து ஆகும்.

கண்டுணர்வது - 18

529. **சொந்த, பந்துக்கள்** என்றால்:-

வினைத்தொடர்புடன் பற்று வரவு செய்பவர்கள் நாம, ரூப, சொந்த, பந்துக்களாகும் என உணர்க.

கண்டுணர்வது - 18

530. **சர்வார்ப்பணம்! பிரம்மார்ப்பணம்!**

1. தனது மன முயற்சி **சர்வார்ப்பணம்** ஆகும்.
2. தனது அறிவின் முயற்சி **பிரம்மார்ப்பணமாகும்.**

கண்டுணர்வது - 22

531. **பரமே! யோக மாயாவினால்! பர ஒலியினால் ஒலித்தது!!!**

ஓ எம் முமுட்சுக்களே! ஓர் உண்மையை உணர வேண்டும்.

1. **சாஸ்திரம்** பக்குவ ஆன்மாவுக்கு.
2. **வேதம்** தெய்வத்திற்கு.
3. **வேதாந்தம்** பரத்திற்கு, என உணர வேண்டும். இவை மூன்றையும் பாடம் படிப்பாக படிக்காமல் உணர்வால் உணர்ந்து கரைந்து மயமானவனே ஓர் **சாது** (அதிவர்ணாஸ்ரமி) ஆவான் என முதலில் உணர வேண்டும்.

கண்டுணர்வது - 31, 32

532. 1. அறிவின் நிலையில் பொம்மை & பொம்மலாட்டமாக **காணவேண்டும்.**

2. பேரறிவு நிலையில் எல்லாம் மண்மயமே, எல்லாம் மண்ணே என **உணர வேண்டும்.**

கண்டுணர்வது - 48

533. 1. **நாம, ரூப, மனோமய கற்பனை** நிலையில், **இன்பம்** என்றும்; சொல்வர்.

2. **நாம ரூப கற்பனை நாசமான அறிவின் பாவனை** நிலையில்; **ஆனந்தம்** என்றும் ஸ்ரீமஹான்கள் வாயிலாக அறிகிறோம்.

3. இன்பம் மனோ நிலையாகும்.

4. நலம் & சுகம்! அறிவின் ஸ்திரம் ஆகும்.

5. ஆனந்தம் அறிவின் பாவனையாகும் என உணர்க. (ஸ்திரம்:- ஆரம்பம். பாவனை:- அதீத முடிவு)

கண்டுணர்வது - 66

534. 1. **ஸத்:-** இருப்புத் தன்மையோடு கூடி செயலற்ற ஒன்றாகும்.

2. **ஸித்:-** இயக்கமற்றது. ஆனால் இயக்கத்திற்குரியதாகும்.

3. **ஆனந்தம்**:- சாட்சியின் அறிவு நிலையில் ஆனந்தமாகும்.

கண்டுணர்வது - 67

535. **சித்தம்:- ஸித்தின்!** மறுவடிவமாகும். செயலுக்கு அதிகாரியாகும். இதை மனம் என்றும் சொல்லலாம். புத்தி என்றும் சொல்லலாம்.

கண்டுணர்வது - 68

536. **பேதம் களைதல்:-** ஒருவன் இருப்பே. ஒருவன் பொருளே. ஒருவன் இயக்கமே. என **ஓர்மித்தால்!** பேதம் நாசமாகும்.

அரிய கருத்து - 19

537. **விருப்பு வெறுப்பற்றல்:-**
வினை விதியின்படி **இருப்பதிலும்! கிடைப்பதிலும்** இவ்விரண்டையும் வைத்து **நடப்பதிலும்! போதும் இறைவா!** என திருப்தி அடைந்தால் விருப்பு வெறுப்பு நாசமாகும்.

அரிய கருத்து - 19

538. **குற்றம் குறை நாசமாகுதல்:-**
ஜீவர்களின் உலகம் என்பது; திட்டமிட்ட காரியம் திட்டமிட்டபடியும்! விகிதாச்சார நிலையிலும்! பாரபக்ஷமில்லாமலும்! நடைபெறுகிறதென உணர்ந்தால், குற்றம் குறை நாசமாகும்.

அரிய கருத்து - 19

539. **நண்பன்** என்றால் **அறிவாகும்!** இறை குரு உணர்வோடு, எண்ணம், சொல்! செயல்! இம்மூன்றிலும் சர்வசதா இருத்தல்! மேலே கூறிய மூன்றிலும் பொறுமை! பணிவு! இவைகளை ஏற்றல்.

அரிய கருத்து - 24

540. **பகைவன்** என்றால் மனமாகும்! ஆத்திரம்! அவசரம்! வேகம்! படபடப்பு! விரோத குரோதம்! போட்டி பொறாமை! எதிர்பார்ப்பு, மூற்கவனம்! மோஹாவேசம்! இந்த ஒன்பதும் உன் எண்ணம், சொல், செயலில் வரலாகாது. வந்தால் மனமாகும்.

அரிய கருத்து - 24

541. **சர்வார்ப்பணம்:-** ஜீவன் இருப்பாகிய அதாவது ஜீவகர்த்ருத்வமாகிய **நான்! எனது!** நாசமாகி எல்லாம் **நீ!** எல்லாம் **உனது!** என்ற **ஈச!** கர்த்ருத்வம் ஸ்திரமாகும் போது; **சர்வார்ப்பணமாகும்.**

அரிய கருத்து - 31

542. **தத்துவ ஞானம்:-** தத்துவ ஞானம் என்றால் த்வம்பத லக்ஷிய ஜீவனும்! தத்பத லக்ஷிய ஈசனும்! உபாதி பேதத்தால் தான் பேதமேயன்றி; **இருப்பில் ஒன்றே** என ஐயம் திரிபுற உணர்ந்துவிட்டால்; **தத்துவ ஞானமாகும்.**

அரிய கருத்து - 31, 32

543. **வாஸனாக்ஷயம்:- வாஸனை!** என்ற **குணதோஷம்** நாசமாகும் என அறிக. அதாவது தோற்றம், இருப்பு, மாற்றம், மறைப்பால் எண்ணமில்லாத் தன்மையால் மயக்கம், கலக்கம் இராது. **இது வாஸனாக்ஷயமாகும்.**

அரிய கருத்து - 31, 32

544. **மனோ நாசம்:-**

எண்ணத்தால் தோன்றிய மனம் தேய்ந்து, தேய்ந்து, தேய்ந்து, தேய்ந்து வந்து **பிரம்மார்ப்பணத்தால்!** மனமும் எண்ணமும், பிணம் சுடும் தடிபோல சர்வநாசமாகும். மனோ நாசத்தால் **ஜீவன் முக்தி!** இயல்பாகி விடும். இது மனோ நாசம்.

அரிய கருத்து - 31, 32

545. **படிப்பற்று, கேள்வியற்று, பற்றற்று நெஞ்சம் துடிப்பவற்குத்! தான் ஆனந்தம் ஸாத்தியமாகும்!**

1. **படிப்பற்று:-** உடல், உலகத்திற்காக படிக்கும் பாடம் படிப்பு வேண்டாம்.
2. **கேள்வியற்று:-** நாம, ரூப, சம்பந்த கேள்வி வேண்டாம். (ஸத்தான விளக்கம் சில காலம் வேண்டும்).
3. **பற்றற்று:-** நான்! எனதற்று!
4. **நெஞ்சம் துடிப்பவர்கே:-** உருக்கம், ஊக்கம், ஏக்கம்! கண்ணீர் பெருக்க இதய குழைவு! உள்ளவர்க்கே.
5. **ஆனந்தம் உண்டு:-** இருமையற்ற, ஓர்மையான ஆனந்தம் நிலைபெறும்.

அரிய கருத்து - 35

### 546. ராஜகிரீடை!

தரையில் நடைபெறும் ராஜகிரீடையால் ஜீவகர்த்ருத்வம் நாசமாகி **மனோ பக்குவம்** இயல்பாகும் என உணர்க.

அரிய கருத்து - 41

### 547. ஜலக்கிரீடை!

ஜலத்தில் நடைபெறும் ஜலக்கிரீடையால் ஈச கர்த்ருத்வம் பக்குவப்பட்டு **ஜீவன் முக்திக்கு தகுதி!** உடையவன் ஆகிறான் என உணர்க.

அரிய கருத்து - 42

548. 1. **சர்வார்ப்பணம்!** செய்த நிலையில் இருமைகள் நாசமாகும், ஓர்மை பிரகாசிக்கும்.

2. நம் தலையெழுத்து நாசமாகும். ஆனந்தம் பிரகாசிக்கும்.
3. **எல்லாம் ஒருவனே!** என உணரப்பட்டுவிட்டால் **பொல்லாத பவ, பய, பீதி நாசமாகும்.**

அரிய கருத்து - 45

549. ஸ்ரீஸத்குருதேவரை! முழுமையாக நம்பியவர் **எவரெவரோ!** அவர் அனுபவத்தாலும், **தூல சேவையாலும்!** முக்தராவர். **உன்! நம்பிக்கையே! உன்** பலம் ஆகும். பலன் ஆகும்.

அரிய கருத்து - 46, 47

550. 1. **லௌகீகம்:- காரியம்!** ஆகும், **அது** மனம்! வினை! விதி! கர்ம காரியம் சம்பந்தம் கொண்டது. **அது தூலம்!** ஆகும்.
2. **தெய்வீகம்:- காரணம்!** ஆகும். **அது** அறிவும்! ஏக குணமும்! கொண்டது என உணர்க. அது அறிவுக் கண்ணால் கண்டுணர்வதாகும். **அது சூட்சுமம்** ஆகும்.
3. **பரமார்த்தீகம்:- மஹாகாரணம்!** ஆகும். அது **பேரறிவாகும்! குணாதீதம் என்ற நிர்க்குணம்** ஆகும். **தாம் தாமான! நிலையாகும்** என உணர்க.

அரிய கருத்து - 47

551. ஸ்ரீபகவானிடம் **சரண்புகுவோரை!** மட்டும்! கடுமை கொடுமைகளை தளர்த்தியும்; முன் பின் மாற்றி அமைத்தும், **மாயா சகாயம் பண்ணும்** என அறிக.

அரிய கருத்து - 49

552. விதியின் வழியே மதி செல்லும் என்றாலும்; விதியை **மதியால்!** (அறிவால்) (இறை & குரு உணர்வால்) **மாற்றி!** அமைத்து, சாதகமாக ஆக்கலாம்.

அரிய கருத்து - 58

553. நம்பினார் கெடுவதில்லை! என்பதையும்; யத்பாவம் தத்பவதி! என்பதையும்! உள், உணர்வால் உணர்ந்தால் **போதும்! அவர் ஜீவன் முக்தரே!!!**

அரிய கருத்து - 59

554. **பாவனை, கற்பனை என்பது:-**

1. மெய்யை எண்ணும்போது அது **பாவனை** ஆகிறது.
2. பொய்யை எண்ணும் போது அது **கற்பனை** ஆகிறது.
3. முந்தையது நிதானம், பிந்தையது அவசர, அசுர வேகம். **பயந்த** கற்பனையை நாசம் செய்! ஆகிவிட்டோம் என்ற உணர்வில் உறுதியாக ஒன்று. **நீ ...ஜீ...வ...ன்... மு..க்..த..னே.**

அரிய கருத்து - 59, 60

555. 1. நம் வினை பக்குவப்படும் நிலைக்காக மட்டும் **ஈசனை ஸ்ரீபகவானாக** பாவனை செய்து **சர்வார்ப்பணம்** செய்ய வேண்டும்.

2. ஈசகர்த்ருத்வம் நாசமாகும் நிலைக்கு **ஈசனையும் ஸ்ரீஸத்குருவாக** உணர்ந்து அங்கு **பிரம்மார்ப்பணம்** செய்ய வேண்டும் என அறிக.

அரிய கருத்து - 70

556. **மித்தை** என்றால் பொய் எனப் பொருள்படும், அதாவது **எல்லாம் மண்ணாகிய பிரம்மம் தான்** என்று உணராத தன்மையால், (நாம, ரூபமே தோற்றுவதால்) பொய் என கூறப்படுகிறது என உணர்க.

அரிய கருத்து - 72

557. **பொறுமையின் சகித்தல்:-**

1. **வளைந்த கிளை!** நிமிரும்! வளரும்!! **முறிந்த கிளை!** வளராது. மரத்தில் இருக்காது. இருக்க முடியாது.
2. அதைப்போல்? வாழ்விலும் பணிந்து, வளைந்து, நெளிந்து. சகித்துக் கொண்டால் உலக நிலையில் உன் வாழ்வு மட்டும் உன் ஒருவனுக்காக மாற்றி அமைக்கப்படும். இது ஸத்தியம்.

அரிய கருத்து - 80, 81

558. உலகம் இல்லை என்பதில் **வைராக்யம்** வேண்டும். **அது நாம்! நாமே அது!** என்பதில் **பரிபூரண வைராக்யம்** வேண்டும்.

அரிய கருத்து - 83

559. **விளையாட்டு** என்பது, நாம ரூப வஸ்துக்களுக்கல்ல. வினை & விதியால் சிக்கி; **நான் எனதினால், விளையாடும் மனதிற்கே** என உணர்க. மற்றும் அனைத்தும் அறிவற்ற ஜட சொரூபமே என அறிக.

அரிய கருத்து - 87

560. அத்வைத ஸ்வய அனுபவ பாடத்தில் சிரத்தை உள்ளவனுக்கு **சேவை செய்ய இயலாது.** காரணம் நாம, ரூபங்கள் மறந்து, மறைந்து விடுகின்றன. அங்கு நாம, ரூபம், குணம், குறி! மறைந்து (மறந்து) நாசம் ஆவதால், மனமும் வினையும் ஏக காலத்தில் நசிக்கிறது. ஆகவே அவன் ஜீவன் முக்தனே!

அரிய கருத்து - 92

561. **ஓர் முக்கிய உணர்வு!**

1. **ஸ்ரீஸத்குரு தேவரை மட்டும்! துவைதமாக (நாம, ரூபமாக)** காண வேண்டும். **(அவரை) அத்வைதமாக! (பர சொரூபமாக!)** உணர வேண்டும்.
2. காண்பது தூலமாகும் (மனக்கண்கள்), உணர்வது சைதன்யமாகும். (அறிவுக்கண்). அப்படியானால்தான் **சேவை!** செய்ய முடியும் **பாடம் கேட்டு!** அனுபவம் பெறவும் முடியும்.

அரிய கருத்து - 94

562. **உன்னை நீ காணலாம்!**

1. ஸ்வய அனுபவம் பெற்று **அது நாம்! நாமே அது!** என்ற நிலை பெற்றுவிட்டால், இந்த நாம, ரூப, குணதோஷங்கள் உனக்கு தோற்றாது மறைந்துவிடும்.
2. அங்கு **நீ! உன் ஸ்ரீஸத்குருவை!** உன் கண்களால் காண முடியாது. அவரை! உன் சைதன்யமாகவே கண்டுணர்வாய் (உன்னை நீயே காண்பது போல்). உனக்கன்னியமாய் எவரையும் எதையும் நீ காண முடியாது. உன்னை நீ காணலாம்.

அரிய கருத்து - 94, 95

563. **நம்பினார்** கெடுவதில்லை என்ற வாசகமும், **யத்பாவம் தத்பவதி!** என்ற வாசகமும் சேவைக்கும் & பாடத்திற்கும் பொருந்தும் என உணர்க.

அரிய கருத்து - 96

564. பாடம், **சேவை!**

1. **பாடம்:-** நான் எனதை நாசம் செய்து; **அதுவே யாம்! யாமே அது!** என்ற ஸ்வய அனுபவத்தில் இரு.
2. **சேவை:-** நான் எனதற்று, முற்கவனம்! வியாபாரம் இல்லாத தற்கவனத்தோடு இரு.

அரிய கருத்து - 97

565. **காண்பதையும் & கேட்பதையும்! மாற்றிப் பழகு! மறக்கப் பழகு. மறந்து பழகு.**

ஒருவன் உனக்கு **தீமை செய்தால்!** அதாவது அடித்தாலோ? அல்லது வேறு சிரமம் கொடுத்தாலோ? **இவன்!** செய்யவில்லை, **அவன்** செய்கிறான் என்று, உன் உபாசனா மூர்த்தி மீது அசைக்க முடியாத **நம்பிக்கையுடன்!** (சந்தேக, கலக்க, பயமில்லாமல்) இருந்தால், **மறு வினாடி!** இவ்வுலகை **அவன்** (ஸ்ரீபகவான்) (சம்பவத்தை) மாற்றிக் காட்டுவான். இது இவ்வேழையின் அனுபவமாகும்.

அரிய கருத்து - 98

566. **மாயா!** ஒன்றே **நாம, ரூப,** சர்வ **ஜக, ஜீவ** தோற்றங்களாக இருக்கிறதென உணர்க.

அரிய கருத்து - 99

567. **நீ!** ஸ்ரீபகவானை சரணடைந்தால், **மாயா!** உனக்காக ஆவண செய்யக் காத்திருக்கிறதென ஸ்ரீமஹான்கள் வாக்காக அறிகிறோம்.

அரிய கருத்து - 100

568. குற்றம், குறை எமக்கில்லை என **நீ!** ஒதுங்கும் போது, அதை தாங்கும் பொறுப்பையும் தாமே ஏற்றுக்கொள்ளும் **மாயா!** என்பதில் சந்தேகமில்லை.

அரிய கருத்து - 101

569. **உண்மை அறிவு!** எதையும் பிரித்தறியாமல், எல்லாம் ஒருவனே, ஒருவன் பொருளே, ஒருவன் செயலே, என ஒன்றுபடுத்துவது உண்மை அறிவாகும் என உணர்க!

பரிபூரண பிரம்ம ரகஸ்யம் - 7

570. சர்வார்ப்பணம் என்ற ஓரறிவால் மட்டுமே பிரித்தறியும் **(பகுத்தறியும்!)** பிரிவினை அறிவு நாசமாகும் என உணர்க.

பரிபூரண பிரம்ம ரகஸ்யம் - 8

571. **விசித்திரம் & வினோதம்** என்றால்:-

எக்காட்சியிலும், நிகழ்ச்சிகளிலும் **ஆச்சர்யம்! அதிசயம்** முதலிய வியக்கத்தக்க காரியம் கூடாது. இயல்பாக இருக்க வேண்டும்.

பரிபூரண பிரம்ம ரகஸ்யம் - 9

572. **எண்ணமற்ற! நிலை எது? சுத்த சூனியம் எது?**

1. **சூட்சுமமாய்!** கருதப்படும் **அது நாம்! நாம் அது!** என்ற உணர்வு **ஒன்றே! எண்ணமற்ற!** நிலையை

பெறுவதால் அவ்வுணர்வு ஒன்றே! ஜீவன் முக்தியைத் தரவல்லது என உணர்வால் உணர்க.

2. மற்ற எண்ணமற்ற நிலையெல்லாம் **சுத்த** சூனியமாகும். அது ஜீவன் முக்தி அல்ல.

பரிபூரண பிரம்ம ரகஸ்யம் - 13

573. **அந்த இறைவனை நாமே என நம்பு,** நீ இறைவனாவாய். எல்லாம் மண்ணே என நம்பு, எல்லாம் மண்ணாகிய பரமே, பரமாகிய மண்ணே, பரமாகிய யாமே, யாமாகிய பரமே என உறுதி பண்ணு. இதுவே முடிவு.

பரிபூரண பிரம்ம ரகஸ்யம் - 16

574. **தம் இருப்பை உணரும் நிலை!**

நாம, ரூபமோ! ரூப, நாமமோ! **அற்ற** நிலையில்; **அது அதுவாய்! யாம் யாமாய்! அவ் இருப்பு** தான் தானாய் உடையவனெவனோ அவனே தம் இருப்பை உணர்வான். **தமக்கன்னியமாய் எவரும்! எதுவும்! இல்லாமை**யினால் அதை விளக்க வாக்கும்! வரியும்! இல்லையென்பதே ஸத்தியம்.

பரிபூரண பிரம்ம ரகஸ்யம் - 19

575. **ஆகாயமாகிய யோக மாயாவின் மாயா ஜாலம்!**

**ஜட சொரூப** உலகங்களோ, (கோள்களோ) **நாம** ரூப ஜீவ சொரூபங்களோ எது எதுவாயினும், **மனக்கண்களுக்கு** இருப்புடையதைப் போல் தோற்றுவதெல்லாம், ஆகாயமாகிய யோக **மாயாவின்** மாயா ஜாலத்தினாலென்று ஸத்தியமாக உணர வேண்டும்.

பரிபூரண பிரம்ம ரகஸ்யம் - 20

576. **இதுவும் அதுவே!**

**அவனை!** (ஸ்ரீபகவானை) காண வேண்டும், **அதை!** (பரத்தை) அடைய வேண்டும் என்ற **தீவிர வேட்கை!** உள்ள ஒருவனுக்கு மட்டும்; பாடத்திலும்! சேவையிலும்! **பிளவு** ஏற்படாது. **வினை & விதி** (பிராரப்த) வசத்தால் அப்படி ஏதேனும் அஸம்பாவிதத்தால் பிளவு ஏற்பட்டால் நிலைக்காது. இது ஸத்தியம்.

பரிபூரண பிரம்ம ரகஸ்யம் - 30

577. **ஓர் சீடன், குரு ஸ்தானம் பெறும் நிலை!**

குழந்தை! தந்தையின் அனுபவத்தால் எப்படி தந்தை என ஆக முடியுமோ; அப்படியே **ஓர் சீடனும் ஸ்ரீஸத்குருவின் ஸ்வய அனுபவத்தால்** குரு ஸ்தானம் பெற முடியும். அது வரை துவைதம் தான் வேண்டும்.

பரிபூரண பிரம்ம ரகஸ்யம் - 37

578. **பிரம்ம ரகஸ்யம்!**

1. **நாம்!** என்றால் **இருமை.** அங்கு ஸ்ரீபகவானையும் நம்மோடு இணைத்த நிலையாகும். இணைந்தால் பிரியலாம். (பிரித்து விடலாம்.)
2. **யாம்!** என்றால் **ஓர்(ரு)மை.** இங்கு காலாதீத பரத்தோடு நாம் கலந்த நிலையாகும். இரண்டறக் கலந்தால் பிரிக்க முடியாது. (பிரிய இயலாது) இவ்வாசகங்களை ஸத்தியமாய் உணர வேண்டும்.

பரிபூரண பிரம்ம ரகஸ்யம் - 42

## 579. **லோக மாயா! யோக மாயா!**

1. எண்ணம் உள்ள இடம் **லோக மாயா!** ஆகும்.
2. எண்ணமற்ற இடம் **யோக மாயா!** எண்ணமற்ற இடம் அகண்டம். நிஷ்டை. ஞானம். மோக்ஷம். சகஜம். பிரம்மம். சுத்த சிவம் என கூறப்படுகிறது.

பரிபூரண பிரம்ம ரகஸ்யம் - 44

## 580. **காலாதீத பரத்தின் ஆலயம்!**

நமக்கு அன்னியமாய், எவரும்! எவனும்! எவளும்! இல்லை. சுத்த சூனியம் என கூறப்படும் எண்ணமற்ற இந்த இடம்; யோக மாயாவின் பிறப்பிடம்! இருப்பிடம்!! சிறப்பிடம். ஆகவே இந்த இடம் காலாதீத பரத்தின் **ஆலயம்!** என ஸ்ரீமகான்கள் கூறுவர். ஆலயம் காலாதீத பரத்தின் (பரம் என்ற) மூர்த்தி ஆகாது.

பரிபூரண பிரம்ம ரகஸ்யம் - 46

## 581. **அறிவின் பாவனை நாசமாகும் நிலை!**

1. எண்ணமற்ற ஆலயம் வரை சென்ற நாம், கருவறை மூர்த்தியாகிய **காலாதீத பரம் நாம்** என ஆக வேண்டும். **அதன் வழி! அது நாம்! நாம் அது!** என்ற ஓர் எண்ணத்தை வைக்க வேண்டும் (பிரம்மான்ம பாவனையை வைக்க வேண்டும்) **இது எண்ணமல்ல!** என உணர்க. இது **ஆன்ம பாவனையாகும்** என உணர்க. இது **அறிவின் பாவனையாகும்** என உணர்க.
2. **இப்பாவனையின்** இறுதியில், **நீ! அது!!** என **ஆன!!! மறுக்ஷணம்** பிணம் சுடும் தடியைப் போலவே!

**இப்பாவனையும் நாசமாகும்** என உணர்க. இது ஸத்தியம்! இது ஸத்தியம்!! இது ஸத்தியம்!!! (எந்த சாதனையும் முயற்சியும் இன்றி இப்பாவனை நாசமாகும் என அறிக.)

பரிபூரண பிரம்ம ரகஸ்யம் - 47, 48

582. **ஸாஸ்திர ஒழுக்கக் கட்டுபாடு** என்பது:-

1. பொறுமை. 2. பணிவு. 3. நாவடக்கம். 4. முற்கவனமின்மை. 5. தீயதைத் தீயதாகக் காணாமை. 6. தீயதைத் தீயதாகக் கேளாமை. 7. தீயதைத் தீயதாகப் பேசாமை. 8. விட்டுக் கொடுப்பது. 9. எதையும் நலம் என ஏற்றல். 10. எங்கும், எதிலும், எல்லாம் ஒருவனே ஒன்றே என்ற உணர்வோடிருத்தல். உணர்ச்சிக்கு அடிமை ஆகாமை. ஆகிய இந்த பத்தும் ஸாஸ்திர ஒழுக்கக் கட்டுப்பாடாகும். இதில் ஏதேனும் ஒன்றை ஏற்றால் போதும், பத்தும் அனுபவமாகும்.

பரிபூரண பிரம்ம ரகஸ்யம் - 64

583. அத்வைதத்திற்கு அல்லது ஜீவன் முக்திக்கு அல்லது காலாதீத பரமாகிய **பிரம்மத்திற்கு! ஈடு இணை! அதுவே** ஆகும். **வேறு!** எதுவும்; எவரும்! எவனும்! எவளும்! இல்லை; இல்லை; இல்லவே இல்லை. **யாம்** இருக்கிறோம் என்ற ஓர் **இருப்பை** மட்டும் உடைய அது உண்டு. அதுவே யாம்! அதுவே நீங்கள்!! அதுவே எல்லாம்.

பரிபூரண பிரம்ம ரகஸ்யம் - 67

584. 1. **எதுவும்:-** வேறு பிரம்மம்.

2. **எவரும்:-** எந்த மஹானும்.

3. **எவனும்:-** எந்த ஈசனும்.
4. **எவனும்:-** எந்த ஜீவனும்.
5. **எவளும்:-** எந்த யோக & லோக மாயாக்களும் இல்லவே இல்லை.

பரிபூரண பிரம்ம ரகஸ்யம் - 67

585. நாம ரூபங்களை **வேண்டாம்!** என்று சொல்வதை விட, **இல்லை!** என சொல்வதால் சாதனையில் முதிர்ச்சி! பெறலாம் என சொல்வர்.

பரிபூரண பிரம்ம ரகஸ்யம் - 68

586. **'ஒளி'** என்றால் **வெளிச்சம்** என்பது மட்டும் பொருளல்ல. நாம ரூப விளக்கமாகிய அர்த்தம் & அனர்த்த பாவனையும் ஒளியே ஆகும் என மஹான்கள் சொல்வர்.

பரிபூரண பிரம்ம ரகஸ்யம் - 78

587. **தேகாத்ம புத்தி** என்றால்:-
சரீரத்தையும், உடைமைகளையும் நான் & எனது என பாராட்டுவது தேகாத்ம புத்தி.

பரிபூரண பிரம்ம ரகஸ்யம் - 88

588. **பரமாத்ம புத்தி** என்றால்:-
நாம, ரூபங்கள் கெட்டழிந்து ஆத்மாவே நாம் என உணர்வது பரமாத்ம புத்தி என உணர்வால் உணர்க.

பரிபூரண பிரம்ம ரகஸ்யம் - 88

589. பல நூற்றுக்கணக்கான குருஸ்துதிகளில் நம் ஶ்ரீபிரம்மதேவனால் ஸ்தாபனம் பண்ணப்பட்ட **இரு குரு**

**ஸ்துதிகளே** இன்று அன்பின் குடிலில் (வானுலகிலும்) ஆனந்தமாக முழங்கி வருகிறது என உணர்க.

பரிபூரண பிரம்ம ரகஸ்யம் - 108

590. **நாம்** என்றால்: இறைவனும் நாமும் ஒன்றாகி விடுகிறோம்.

பரிபூரண பிரம்ம ரகஸ்யம் - 136/8

591. **யாம்** என்றால்: அதுவும், நாமும் ஒன்றாகி விடுகிறோம்.

பரிபூரண பிரம்ம ரகஸ்யம் - 136/8

## 592. ஸ்ரீபரமாத்மா & ஜீவாத்மா விளையாட்டு!

1. உலகமாகிய இந்த நாடக மேடையில் ஸ்ரீபரமாத்மாவும் & ஜீவாத்மாவும் தான் விளையாடுகிறார்கள் என ஸத்தியமாக உணர வேண்டும். வேறு எந்த விபரீதமும், வினோதமும் இல்லையென்பதே உண்மையாகும்.
2. ஸ்ரீபகவான் அறிவுடன் (ஆத்மாவுடன்) இணைந்து விளையாடுகிறான். ஜீவனாகிய நாம் (ஆத்மாவே நாம்) மனம் வசம் அகப்பட்டுக் கொண்டு விளையாடுகிறோம். நான் & எனதற்று, நாம் & யாமாக இணைந்து விளையாடுவது அறிவாகிய ஸ்ரீபகவானாகும்.

பழமை - 21

## 593. அகண்டானந்த நிலை!

1. **யாம்** என நாம் ஸ்ரீபகவானிடமும் & ஸ்ரீகுரு தேவருடனும் இணைந்து கலந்து இருமை நாசமாகி, ஒருமை ஸ்திரமானதால்; ஓம் என்ற பிரணவாஹாரமுடன் கலந்து விடுவதால் மனம் செயல் இழந்து மஹத்தாகி விடுகிறது. இந்நிலையில்

அறிவாகிய ஸ்ரீபகவானும் லோக மாயாவுடன் செயல் இழக்கிறான். இந்நிலை **அறிவு பேரறிவாகும்** நிலையாகும்.

2. அறிவு செயல் இழந்து பேரறிவானால் ஜட, கட, படாதிகள்! அனைத்தும் யோக மாயாவின் செயல்களிலிருந்து விலகி; எல்லாம் வெறும் ஜடமாகிவிடும் (இது சுத்த சூனியம்).
3. அங்கு குரு அருளும் யாம் அது! அது யாம்! என்ற இருமையும் நாசமாகி, **யாம் யாமாகவே** இருக்கிறோம் என்ற அகண்ட பேரொளியின் **அகண்டானந்த நிலை** பெற்று விடுவோம். இல்லை, இல்லை பெற்றுவிட்டோம்.

பழமை - 24

594. எல்லாம் ஒருவனே! ஒருவன் பொருளே! ஒருவன் செயலே! என்ற நிலை பெறாமல்; எல்லாம் பிரம்மமே என்ற நிலை பெற முடியாது.

பழமை - 29

595. **மௌனமே பதில்!**

வார்த்தைக்கு வார்த்தை பதில் ஆகாது. வார்த்தைக்கு **மௌனமே** பதிலாகும். முதலில் சற்று கடினம்தான், பின்பு அனுபவம் ஆனந்தமே என அறிக.

பழமை - 33

596. **சிவம்** என்பது அசைவற்றது. காலாதீத பரசொரூபமாகும். சுத்த பிரம்மமாகும், யாம் யாமாக இருக்கிறோம் என்ற ஓர் இருப்புத் தன்மையோடு கூடியதாகும்.

பழமை - 54

597. **தடை இல்லாமல் சாதனை செய்ய!**

பக்திக்கோ? முக்திக்கோ? சாதனை செய்யும் ஓர் முமுட்சுவானவன், இக்கலியில் ஸ்ரீபகவன் நாம தியானத்தில் ஒன்றி, **ஏதோ ஒரு ஸ்ரீபகவான் நாம ஸ்மரணையுடன் ஒன்றி மயமாக வேண்டும்.** அப்போதுதான் மாயாவானது, மனதை ரக்ஷித்து மன இடர்பாடுகளை! நாசம் செய்யும். தடை இல்லாமல் சாதனை செய்யலாம்.

பழமை - 61

598. **பிரம்மாஸ்திரம்!**

எத்தொழில் செய்தாலும், ஏதவஸ்தை (தூல & மனோ சிரமங்கள் அனுபவித்தாலும்) பட்டாலும் முக்தர் மனம் இருக்கும் மோனத்தே. அதாவது **இறை நாம உணர்வோடு இருப்பான்!** இருக்க வேண்டும்! இருந்தே ஆக வேண்டும். (உன் லக்ஷியத்தில் உறுதிகொள்.) அது ஒன்றே மனம் & வினை & விதியை! சர்வநாசம் செய்யும் பிரம்மாஸ்திரம் ஆகும்.

பழமை - 64

599. **வேதாந்தம் பேசலாம்** என்றால்:-

வேதமே ஸ்ரீபகவான், ஸ்ரீபகவானே வேதம் ஆகும். ஸ்ரீபகவான் என்றும், நாம் என்றும் உள்ள உபாதிபேதம் களைந்து நாம் ஸ்ரீபகவானே என உணர்ந்தால் **நாம் வேதம் உணர்ந்த நிலை.** அதுவே ஸ்ரீபகவான் நாம் என உணர்ந்த நிலை. அதாவது ஸ்ரீபகவானின் ரூபமான நிலையல்ல.

ஸ்ரீபகவானின் குணாதிசயங்களை பெற்ற நிலை. இந்நிலை பெற்று விட்டால் நீயும் வேதாந்தம் பேசலாம்.

பழமையின் ரகஸ்யம் - 1/22

## 600. சாதனையின் நான்கு நிலைகள்!

1. **ஜீவ** நிலையில் நன்மை தீமை; சுகம் துக்கம்; இன்பம் துன்பம்; புண்ணியம் பாபம்; என்ற இருமையற்று! **ஆனந்தம்** என ஒன்றாகி;
2. **ஈச** நிலையில் **பேரானந்தம்** என ஒன்றாகி;
3. **பரமார்த்தீக** நிலையில் **பிரம்மானந்தம்** என ஒன்றாகி,
4. முடிந்த முடிவில் **அகண்டானந்த** நிலையில் **யாம் யாமாகவே இருக்கிறோம்!** என்ற நிலை பெறலாமே.

பழமையின் ரகஸ்யம் - 1/26

## 601. ஸ்ரீபாதமும் ஸ்ரீபாதுகையும்!

1. குழந்தைகளே! **ஸ்ரீபாதம்** என்றால் **ஸ்ரீபகவான்** ஆகும்.
2. **திருவடி** என்றால், அதாவது **பாதுகை** என்றால் **ஸ்ரீஸத்குரு** ஆகும். இதை நன்றாக கவனிக்கவும்.
3. திருவடி என்ற ஸ்ரீஸத்குரு ஸ்ரீபகவானின் ஸ்ரீபாதத்தை தாங்கக் கூடியவராகவும், ஸ்ரீபாதம் பின்னப்படாமல் இருப்பதற்கும் (பாதுகாக்க) உபகாரமாகவும் இருக்கிறார்.
4. இயங்குவது **ஸ்ரீபாதம்** என்ற ஸ்ரீபகவானாகும்.
5. இயக்கத்திற்கு ஆதாரமாக (சாட்சியாக) இருப்பது ஸ்ரீஸத்குரு என்ற **திருவடி** ஆகும்.

பழமையின் ரகஸ்யம் - 1/42

602. **பாத சேவை! பாதுகா சேவை!**

ஸ்ரீமஹான்களின் அனுபவ வாக்கானது, ஸ்ரீபாதுகையே (திருவடியே) ஸ்ரீபாதத்தை (ஸ்ரீபகவானை) தாங்குவதால் ஸ்ரீபாத சேவையை விட; ஸ்ரீதிருவடி பாதுகா சேவையே முதல் இடம் பெறும் என அறிக.

பழமையின் ரகஸ்யம் - 1/43

603. **இறை நம்பிக்கை!**

ஸ்ரீபகவன் நாமாவில் எந்த நாமாவேனும் ஒருவன் தெரிந்தோ? தெரியாமலோ? அறிந்தோ? அறியாமலோ? புகழ்ந்தோ? இகழ்ந்தோ? கூறுவானாயின் அவன் **"சொர்க்க கதியை"** அடைவான்.

பழமையின் ரகஸ்யம் - 1/44

604. **சாதனை** என்பது:-

1. துவைதத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
2. பின் உன் சாதனையால் துவைதத்தை விஸிஷ்டாத்வைதமாக மாற்றி உணர வேண்டும்.
3. பின் உன் சாதனையால் விஸிஷ்டாத்வைதத்தை அத்வைதமாக சாதித்து உணர வேண்டும்.

பழமையின் ரகஸ்யம் - 1/90

605. **நாம்** : ஸ்ரீபகவானை இணைத்த **விஸிஷ்டாத்வைதம்.**

பழமையின் ரகஸ்யம் - 2/158

606. **யாம்** : பரத்தோடு இணைந்த **சுத்த அத்வைதம்.**

பழமையின் ரகஸ்யம் - 2/158

607. **அது தாங்கி இருக்கும்** என்றால்?

அது **"சைதன்யமான ஆன்மா"** ஆன்மாவை எதுவும், எவரும், தாங்கவில்லை. தாங்க இயலாது. நாம, ரூப, ஜக, ஜீவ தோற்றம் அனைத்திற்கும் **"ஆன்மாவே"** ஆதாரம்! ஆதரவு! ஆகாரம்! என மெய்யுணர்வால் உணர்க.

பழமையின் ரகஸ்யம் - 2/171

608. 1. மனதின் எண்ண பின்னலே **புண்ணிய பாப,** சரீர ஜனன மரணமாகும்.

2. "இருமைகள்" அனைத்தும்! சரீர **"அசைவும்"**! மனதின் **"குணங்கள்"** ஆகும். இவைகள் **"சரீர தர்மங்களாகும்"**. அதாவது மனதின் இயக்கங்களாகும் (உண்மையின் தர்மமல்ல).

3. இவைகள் **"ஆன்மாவாகிய"** அறிவுக்கு இல்லை, ஆன்மாவாகிய **"அறிவின்"!** செயல் (சாந்தி பொறுமையோடு கூடிய) **"சாட்சி"** பாவனை ஆகும். அதாவது மேலே கூறிய இருமைகள் அனைத்தையும் நீக்கி **"சமமாக்குவது"** ஆகும்.

பழமையின் ரகஸ்யம் - 2/173, 174

609. **ஒழுக்கக் கட்டுப்பாட்டின் அடிப்படை குணங்கள்!**

1. தயை, தாக்ஷண்யம், கருணை, காருண்யம், பக்ஷாதாபம், ஈவு, இரக்கம் ஆகியவை **மனம் &** அதன் **குணம்** உள்ள வரையில்தான் உண்டு.

2. **மனம்** ஸாந்தி அமைதியின் அறிவானால் மறுவினாடி கானல் ஜலமென மேலே கூறியவைகள் மறைந்து விடும் அதாவது ஆனந்தம் ஒன்றே நிலைபெறும்.

3. மேலே கூறியவைகள்தான் ஒழுக்கக் கட்டுப்பாட்டின் அடிப்படை குணங்களாகும். அவைகள் இல்லாமல் பக்தீ நிலைபெறாது. பக்தீ ஸ்திரப்பட்டு விட்டால் மேலே கூறியவைகள் தாமே மறைந்து விடும் மறந்துவிடும்.

பழமையின் ரகஸ்யம் - 2/179, 180

610. **வியாபாரம்:-** என்பது நான் எனதை விட முடியாதவன். காம்ய கர்மா, காம்ய பக்தீ, எதிர்பார்ப்புகள் உடையவன் எவனாயினும் **அவன் "வியாபாரியே" ஆகும்.**

பழமையின் ரகஸ்யம் - 2/185

611. **விளம்பரம்:-** என்பது பேர், புகழ், பட்டம், பதவி, மதிப்பு & மரியாதையை வேண்டி சாதனை செய்பவன் **எவனோ அவன்** ஓர் "**விளம்பர**"தாரியே!

பழமையின் ரகஸ்யம் - 2/186

612. **ஆடம்பரம்:-** என்பது ஆசையும்! தேவையும்! அதிகமாக விரும்புபவனும்; எளிமையை விரும்பாதவனும் சாதனை செய்பவன் எவனோ அவன் "**ஆடம்பர**"தாரியே!

பழமையின் ரகஸ்யம் - 2/187

613. மனித இனம் உட்பட 84 லக்ஷம்! ஜீவகோடி சரீரங்களையும் ஒன்றுபடுத்தி மண்ணாக பார்த்து உணர்ந்தாலும்; (கண்டுணர்ந்தாலும்) அவைகளின் உள் இருப்பு

சைதன்யமும், அகண்ட பேரொளி சைதன்யமும்! **இருமையல்ல! ஒன்றே** ஆகும்.

பழமையின் ரகஸ்யம் - 2/194

614. கோடானு கோடி கோள்களும்! சூர்ய சந்திராதி, அண்ட ரண்ட பிரம்மாண்டங்களும்! அனைத்து ஜீவ கோடி சரீரங்களும்! எல்லாம் **மண்ணே!** இந்நிலையில் பார்த்து உணர்ந்தாலும்; (கண்டுணர்ந்தாலும்) இருமையல்ல! **ஒன்றே** ஆகும்.

பழமையின் ரகஸ்யம் - 2/194

615. **தெய்வீக தாய் தந்தையர்** இறை வழியாகிய ஆன்மீகத்திற்கு (பக்தீ & முக்திக்கு) உறுதுணையாக இருப்பர். இவர்களே தெய்வீகத்திற்கு வழிகாட்டும் குருவும் ஆவார்கள்.

கண்ட ஆனந்தம் - 1/7

616. **ஓர் சாதகனின் சேவை:-**

1. சர்வாங்க சேவை 12 ஆண்டுகள்.
2. ஸத்பாவ சேவை 6 ஆண்டுகள்.
3. ஆத்மபாவ சேவை 6 ஆண்டுகள்.
4. சேவையின் பலன் அனுபவம் பெறுவது 12 ஆண்டுகள். மொத்தம் 36 ஆண்டுகள். இது ஓர் சாதகனின் பொறுமையின் சகிப்பு தன்மை, இதுவே கண்ணனின் வயது. எம் கண்ணன் 36 வயது வாலிபனாகவே 150 வயது வரை வாழ்ந்ததாக அவன் வாயிலாக அறிகிறோம்.

கண்ட ஆனந்தம் - 1/21

617. **தெய்வீக குணாதிசயங்கள்!** ஸ்ரீபகவானின் மாயா அபூர்வ சக்திகளாகும்.

கண்ட ஆனந்தம் - 1/42

618. **தெய்வீக குணானுபவங்கள்!** ஸ்ரீபகவானின் ஸாந்தி, ஸத்வ குணம் (ஏக குணம்) இதுவே பகவானின் நிலை. இது தெய்வ நிந்தனை அல்ல. தெய்வ ஸ்வரூபமாகும்.

கண்ட ஆனந்தம் - 1/42

619. **பக்தீ எதுவரை தேவை!**

1. **அவனன்றி** ஓர் அணுவும் அசையாது என்ற; **திட உறுதி** லபிதமாகும் வரையிலும்;
2. இன்ப துன்பம்! நன்மை தீமை! சுக துக்கம்! **புண்ணிய பாபம்**! என்ற இருமைகள் நாசமாகி! **ஆனந்தம்! பேரானந்தம்** என்ற ஓர்மை ஸ்திரமாகும் வரையிலும் **பக்தீ** தேவையென உணர்க.

கண்ட ஆனந்தம் - 1/64, 65

620. **ஞானம்!**

1. ஞானம் என்றால் **அறிவு!**
2. அறிவு என்றால் **ஆன்மா!**
3. ஆன்மாவே **பரமான்மா** ஆகும்.
4. பரமான்மாவே **பரப்பிரம்மம்** ஆகும்!
5. பரப்பிரம்மமே **காலாதீத பரம்** ஆகும்!
6. காலாதீத பரமே **அகண்டபேரொளி** என்ற; **அகண்டானந்தமாகும்** என அறிவால் உணர்க.

கண்ட ஆனந்தம் - 1/67

621. **அஞ்ஞானம்!**

1. அஞ்ஞானம் என்றால் **அறியாமை** ஆகும். (அறியாமை என்றால் கவனக்குறைவு ஆகும்.)
2. அறியாமை என்றால் நாம, ரூப கற்பனையின் **மனம்** ஆகும்.
3. மனதின் சொரூபம்:- நான்! என்னால்! எனது என்ற **அஹங்காரம், அதிகாரம், ஆதிக்கம், அபிமானம்** என்ற நான்கின் விஸ்வரூபம் ஆகும்.
4. மற்றோர் நிலையில் அஞ்ஞானம் என்பது **சொந்த, பந்த, பாசப்பற்றின் பின்னலாகும்** "இது இதுதான்" எனத் தெரிந்தும்; **அதை விட** முடியாத ஓர் **பசை!** ஆகும் (அஞ்ஞானம் ஆகும்) எனவும் உணர்க.

கண்ட ஆனந்தம் - 1/67,68

622. பைத்தியமாகவும், மூடனாகவும், முட்டாளாகவும், மடையனாகவும், மட்டியாகவும் இருந்தால் தான் பக்தியோ? முக்தியோ? ஸாத்தியமாகும் என உணர்க.

கண்ட ஆனந்தம் - 1/95

623. **உலகம் ஆனந்தமே!**

எல்லாம் அவனே. அவன் செயலே. அவன் பொருளே. அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்ற **திட உறுதி நம்பிக்கையுடன்** எல்லாம் நலமே என்றும், எல்லோரும் நல்லவர்களே என்றும், பார்க்க பழகி விட்டால் மட்டும் உலகம் ஆனந்தமே என உணர்க.

கண்ட ஆனந்தம் - 1/96

624. **ஸ்ரீகண்ணனின் ஐந்து ஸத்திய வாசகம்:-**

ஓர் நாம ரூபமுள்ள இறைவனிடம்!!!

1. **"எல்லாம் நீ"!** என சரண்புக வேண்டும், ஜீவ கர்த்ருத்வம் நாசமாகும்.
2. "எல்லாம் உனதே"! என ஒப்படைக்க வேண்டும், உடைமை & உரிமை நாசமாகும்.
3. **"அவனன்றி அணுவும் அசையாது"** என்ற திட உறுதியின் நம்பிக்கை வேண்டும். (உலகம் ஸ்தம்பித்து விடும்).
4. **"எல்லாம் நலமே"!** என்ற திட உறுதி வேண்டும், வினை & விதி! இன்ப துன்பம் நாசமாகி, ஆனந்தம் அணு அணுவாகக் கூடும்.
5. **"எல்லோரும் நல்லவரே!"** என்ற ஓர்மை வேண்டும், தீயவர்கள் & தீமை! சர்வ நாசமாகும்.

கண்ட ஆனந்தம் - 1/101

625. **மனம் அறிவு ஆகும் நிலை!**

1. பாலில் வெண்ணை உண்டு என்பதை **கண்** காணாவிட்டாலும்; **உண்டு** என அறிவு எப்படி நம்புகிறதோ?
2. அவ்வண்ணம் ஒவ்வொரு தோற்றத்திலும், கண் காணா அந்தர்யாமியாக **ஒருவன்!** இருக்கிறான் என்று; **இந்த மனமானது** மூடத்தனமகவும்! முட்டாள்தனமாகவும்! மடத்தனமாகவும்! மட்டித்தனமாகவும்! சுத்த பைத்தியக்காரத் தனமாகவும்!!! மனதை நம்பச் செய்வதே சாதனை ஆகும்.

3. மஹாத்மா (மஹா ஆத்மாவாகிய நாம்) ஒரு முறை! ஒரே ஒரு முறை!! இந்த மனம் நம்பினால் திரும்ப **மனம்** இராது. **அறிவே** உண்டு. இது ஸத்தியம்.

கண்ட ஆனந்தம் - 2/137, 138

626. நாம, ரூப மயக்கத்தை **நாசம் செய்ய, அசையும் நிலையில்; ஒருவனே**! என்றும், **அசையா நிலையில்; ஒன்றே** என்றும்; உறுதி நிச்சயம், வைராக்கியம் ஆகவில்லையானால், சாதனையும் இல்லை. சாத்தியமும் இல்லை.

கண்ட ஆனந்தம் - 2/139

627. **நமக்கென்ன வேலை?**

1. நாம ரூப தோற்றங்கள் **எல்லாம்!** வருவதும்! இருப்பதும்! விளையாடுவதும்! மாறுவதும்! மறைவதும்! **மாயா & மனம்!** இவைகளின் வினை! & விதி! இவைகளின் **தி**ருவிளையாடல்களே! தெய்வ விளையாட்டேயன்றி; ஜீவ விளையாட்டல்ல!

2. இங்கு நமக்கென்ன வேலை??????? அவனை பணிவதும்! பின் அவன் அருளால் அவன் ஆவதும்! ஸ்ரீஸத்குரு கிருபையால் அது ஆவதுமே நம் வேலை! என சும்மா இருக்கவும்.

கண்ட ஆனந்தம் - 2/140

628. **உலகம் ஜடமாகி, பின் மண் ஆகி மறையும் நிலை!** எல்லாம் மண்ணே! எல்லாம் ஒன்றே என உன் மனமும் வாக்கும் ஏற்கவும்! பழகி அனுபவிக்கவும் பழகிக்கொண்டால் **"நாம, ரூப, ஜக, ஜீவ"**

தோற்றங்களால் "உண்டான இவ் **உலகமும்!" ஜடம்** ஆகி; பின் **மண்** என ஆகி; "**யோக** மாயாவால்! மண்ணும் மறைந்து;" "**யோக** (ஸ்கை புருஷும்) மாயாவும் மறைந்து!;" **"அகண்ட பேரொளியாய்"! "இருக்கிறோம்!"** என்ற ஓர் இருப்பை மட்டும் உடையதாய் சர்வ வியாபியாய் நீக்கமற நிறைந்திருக்கும்.

கண்ட ஆனந்தம் - 2/155, 156

629. **"நிருவிகல்ப சமாதியில்"!** இருக்கும் போது உலகம் உன்னை விட்டு **"தற்காலிகமாக"** விலகும். "சமாதி கலைந்தவுடன்" உலக எண்ணம் மீண்டும் தொடரும் என உணர்க.

கண்ட ஆனந்தம் - 2/161

630. **அகண்டானந்த ஸகஜ சமாதி நிலை** "ஸ்ரீஸத்குரு கிருபையால்" பெற்றுவிட்டால், நாம ரூப உலகம் சர்வ நாசமாகும்; திரும்பி எழாது.

கண்ட ஆனந்தம் - 2/161

631. அலக்ஷிய **புத்தியினால்** தம் **லக்ஷியம்** இழக்கப்படுவதை இவன் அறிய முடிவதில்லை. அதன் காரணம்:- நான்! எனது! நாசமாகவில்லையென உணர்க. பணிவே பாதை. பொறுமையே கவசம்.

அன்பின் குடில் நிலை, உயிர், உயில் - 4

632. **நான், எனது நாசமானவன்!**

**உண்மையான சாதகன்** தம் குற்றம் குறைகளையும், தப்பு தவறுகளையும், சுட்டி காட்டுவதையே விரும்புவான்

புகழுரையை விரும்பான். இவன் நான்! எனது நாசமானவன் என அறிக.

அன்பின் குடில் நிலை, உயிர், உயில் - 5

633. **நாம்** "இன்னாருடைய **கொழந்தை"!** என்பதை உங்களால் நிரூபிக்க வேண்டும், நிரூபிக்க முடியும். யாம் உடன் இருப்போம். இது ஸத்தியம்.

அன்பின் குடில் நிலை, உயிர், உயில் - 10

634. **பாராயணம்** பாரா(த) அயனம் (நீண்ட தூர பயணம்) அதாவது பாராயணம் என்றால்????? நாம ரூப உலகை பாராத; பார்க்க முடியாத; பார்க்கக் கூடாத; நீண்ட தூர பிரயாணம் என பொருள்படும்.

அன்பின் குடில் நிலை, உயிர், உயில் - 2/5

635. **கண்டுணர்தல்** கண்ணால் கண்டு, உண்டு என உறுதி நிச்சயிப்பது. **இது மனம்.**

அன்பின் குடில் நிலை, உயிர், உயில் - 2/6

636. **அறிந்துணர்தல்** ஜலத்திலுள்ள உப்பை சுவையால் அறிந்து உணர்ந்து உண்டு என உறுதி நிச்சயிப்பது. **இது அறிவு.**

அன்பின் குடில் நிலை, உயிர், உயில் - 2/6

637. வினை & விதியை கண்டு பயம் வேண்டாம், அது உடல் & உலகிற்கே, உங்களுக்கு இவ்விரண்டும் இல்லவே இல்லை. நீங்கள் எம் குழந்தைகள் ஆகும். இறை & குரு! உணர்வே உங்களுக்கு வேண்டும்.

அன்பின் குடில் நிலை, உயிர், உயில் - 2/8

## 638. வினையின் விளையாட்டே உலகம்!

1. நான் & எனதால் உண்டானதே மனம். நான் & எனதை வைத்து வினையை தேடியது மனம். வினை, புண்ணிய பாபத்தால் உருவானது. புண்ணிய, பாபம் அனுபவிப்பதற்காக உடலை ஏற்றுக் கொண்டது.

2. அவ்வுடலை வைத்து புண்ணிய, பாபத்தை அனுபவித்து முடிக்க வந்ததே **விதி என்னும் காலதேவன்.** வினையை வைத்து விளையாடுகிறான் காலதேவன். அவ்வினை விளையாட்டே இவ்வுலகம் என அறிவால் உணர்க.

அன்பின் குடில் நிலை, உயிர், உயில் - 2/12, 13

## 639. யார் உண்மையான பக்தன்!

"நான் & எனதை"! முழுமையாக நாசம் செய்தவன்; அவனே "இறை & குரு" உணர்வோடு "எல்லாம் நீ!" "எல்லாம் உனதே" "என சர்வசங்க பரித்தியாகம்!" செய்தவனாகும். அவனே உண்மையான **பக்தன்** ஆகும் என ஸத்தியமாய் உணர்க. ஏனையோர் எவனாயினும், எவளாயினும், எவராயினும் பக்தனை போன்றவர்களே.

பரிபூரண அறிய கருத்து - 1

640. **"நான் & எனதை!"** முழுமையாக நாசம் செய்து; "ஸ்ரீபகவத் குணானுபவத்தை" பெற்று; "ஸ்ரீஸத்குரு! வாக்கால்" "அது நாம்!" "நாம் அது!" என்றும் பின் அனுபவத்தால் "அதுவே யாம்!" "யாமே அது!" என்று **"பரிபூரணத்துவம்"** பெற்றவர் "எவனோ?" "எவளோ?"

"எவரோ?" "அவரே" "அத்வைத" நிலையை அடைந்த, "ஜீவன் முக்தனாகும்!" (ஞானியாகும்) ஏனையோர், ஞானியைப் போன்றவர்களாகும்.

பரிபூரண அறிய கருத்து - 1, 2

## 641. ஜீவ அணுக்கள்! பரமாணுக்கள்!!

1. ஜீவ சரீரங்களாகவும்!, தாவரங்களாகவும் காணும் அனைத்தும் **"ஜீவ அணுக்கள்"** என உணர்க.
2. பூமி, கோள்கள், சூரிய சந்திராதி மற்றும் அனைத்து ஜட சொரூபங்களும் **"பரமாணுக்கள்"** என உணர்க.
3. ஜீவாணு & பரமாணுக்கள் "எல்லாம் ஒன்றானதே" **காலாதீத பரப்பிரம்மம்** ஆகும் என உணர்க.

பரிபூரண அறிய கருத்து - 4

## 642. தற்கவனம், முற்கவனம்!

1. குற்றம் குறை பிறரிடம் தோற்றினால்; ஆத்திரம் அடையாதே. இது நம்மிடம் உள்ளதே என உணர். நீ, திருந்த, உன்னை திருத்த முயற்சி செய், **தற்**கவனம் ஆனந்தம் ஆகும் என உணர்.
2. **முற்**கவனம், குற்றம் குறை, தப்பு தவறு; பழிபாபமாகும் என ஸத்தியமாய் உணர்ந்து அடங்குவாயாக. அடக்காதே.

பரிபூரண அறிய கருத்து - 5

643. ஸ்ரீஆழ்வார் பாடிய பாசுரம் ஒன்று. துஞ்சும் போது நினைமின், துயர்வரின் அழைமின் நம்முடைய (இரு)

வினைக்கு; நஞ்சுதான் கண்டீர் நமோ நாராயணா என்னும் நாமம்.

பரிபூரண அறிய கருத்து - 5

## 644. வெள்ளைத் திரை, மனத்திரை!

1. வெள்ளைத் திரையில் ஓடும் திரைகாட்சி அத்திரையில் ஒட்டுவதில்லை, அத்திரைக் காட்சியில் "ஓடும் **சம்பவம்**" அனைத்தும் **"உண்மை"** இல்லை. அது திட்டமிட்டு தயாரித்த ஓர் திரை காட்சி ஆகும்.
2. அதே போல் ஒவ்வொரு ஜீவனுடைய இரு வினையை கொண்டு **"காலதேவனால்"** (ஸ்ரீபகவானால்) தயாரிக்கப்பட்ட **"மனத்திரை"** காட்சி ஆகும். அதை மாற்றவோ, மறுக்கவோ, விலக்கவோ எவராலும் முடியாது. இயலாது கூடாது. இதுவே பிரமாணமான உண்மை.

பரிபூரண அறிய கருத்து - 12

## 645. மனம் உலரும் நிலை!

மறப்பதும், மரத்துப் போவதும் **"சர்வசதா"** இறை உணர்வினால்தான் பெற முடியும். அதனால் ஸாந்தீ, அமைதீ, திருப்தி பெற முடியும். இது மனம் உலர்ந்து போகும் நிலையாகும். **மனம் உலர்ந்தால்தான் குருவால் எரிக்க முடியும்.**

பரிபூரண அறிய கருத்து - 13

## 646. கனவு நிலை!

நீ உறங்கும் போது உன் **"கனவில்"** "காணும் காட்சிகள் அனைத்தும்" **விழித்தவுடன்** பொய் என உணர்கிறாய்

அல்லவா? **இந்த விழிப்பு "உடனே தெரிகிறது"**. இதன் காரணம் இந்த உறக்கம் உன் **ஆன்மாவோடு மனம் சேரும் நிலையின் உறக்கமாகும்.** மன உறக்கம் மனம் ஆன்மாவோடு சேர்ந்ததனால் உடனே நீங்கிவிட்டது.

பரிபூரண அறிய கருத்து - 13

## 647. விழிப்பு நிலை!

**இந்த விழிப்பு** உடனுக்குடன், அப்போதைக்கப்போது உடனே தெரிவதில்லை. இந்த உறக்கம் உன் ஆன்மாவோடு உன் மனமும், நாம ரூப, ஜக, ஜீவ, சொந்த பந்த, பாசப்பற்றினால் வந்த **மயக்கமும்** சேர்கிறது என உணர்வாயாக. இந்த மன உறக்கம்; **"நாம ரூப!"** "ஜக ஜீவ தோற்றங்களின்; பழக்க வழக்க தோஷ குண" **"மயக்கத்தினால்!"** (அறியாமையால்) வந்ததாகும். "பக்தி மற்றும் ஞான வைராக்கியத்தினால்" மட்டுமே இந்த உறக்கம் நாசமாகும்.

பரிபூரண அறிய கருத்து - 13, 14

## 648. காரிய ஸித்தி ஆக!

ஸ்ரீபகவானிடம் கெஞ்சி கெஞ்சி, கெஞ்சி கெஞ்சி, கெஞ்சி கெஞ்சி அழுது முறையிட்டால், அவன் மாயா அதை செய்து முடிக்கும். முறையிடுவது ஸ்ரீபகவானிடம், காரிய ஸித்தி ஆவது மாயாவால் ஆகும் என உணர்க.

பரிபூரண அறிய கருத்து - 14

## 649. "உன்னையே நம்பும் பக்தன் நிலை என்ன பிரபோ"??? ???????? அவன் பதில்:-

1. எம்மை முழுமையாக நம்பினோர் **“கைவிடப்படார்”.**
2. அவரவர் ஏற்று வந்த கர்மாவால் **“சிறிது” தடுமாற்றம்.**
3. கனவு காட்சியில் வெட்டுண்டால் **“அந்த க்ஷணம்”** துன்பம் துன்பந்தானே? ஆனால் உண்மையில்லையே.
4. ஒரு நாம, ரூபத்தில் தாக்குண்டால்; **“மறு நாம ரூபத்தால்”** அதை ஸாந்தி செய்து விடுகிறோம்.
5. நாம, ரூப, கலக்க **“மயக்கத்தில்”** இருப்பதால் அதை உணர முடியவில்லை, காலக்கிரமத்தில் உணரலாம்.
6. **“மயக்க, கலக்க, உறக்கம்”** நீங்க தருணம் வந்து விட்டது.
7. எம்மை **“பரிபூரணமாக நம்பும்”** அனைவரும் அவரவர் **“லக்ஷியத்தை”** அடைவர். இது ஸத்தியம், ஸத்தியம், ஸத்தியம். **கண்ணன்!**

பரிபூரண அறிய கருத்து - 17

650. **நாம, ரூபம் தோற்றினால் அதன் விளைவுகள்!**

1. **நாம, ரூப** தோற்றும் வரை அதன் “குணதோஷமும்” தோற்றிக் கொண்டுதான் இருக்கும்.
2. நாம, ரூபம் நாசமானாலன்றி குணதோஷமும்; அதனால் புண்ணிய பாபமும்; அதனால் ஜனன மரணமும் இருந்தே தீரும்.
3. நாம, ரூபங்களை **நான் & எனதாக மனம்** கற்பனை செய்யும் வரையிலும்; குணதோஷமும், புண்ணிய பாபமும்; ஜனன மரணமும்; தொடர்ந்தே வரும் என்பது ஸத்தியமே.

பரிபூரண அறிய கருத்து - 18

651. **விஷிஷ்டாத்வைதம், அத்வைதம்!**

1. **ஓர்** நாம ரூப இறைவனிடம் **"எல்லாம் நீயே"!** என்றும்; **"எல்லாம் உனதே"** என்றும்; விட்டு விட்டால், நாம ரூபமும் அதைச் சார்ந்த அனைத்தும் சர்வ நாசமாகி, எல்லாம் பொம்மையே, எல்லாம் பொம்மலாட்டமே என்பது உறுதியாகும். அந்த நிலையில் தான் "எல்லாம் **மண்ணே!**" என உணர முடியும். **எல்லாம் பதுமைகளே என காண்பது விஷிஷ்டாத்வைதம்.**
2. **எல்லாம் மண்ணே** என்றும்; மண்ணாகிய பரமே என்றும்; பரமாகிய யாமே என்றுணர்ந்து **"மௌனானந்தமாய்"** இருப்பதே **"அத்வைதம்"** ஆகும்.

பரிபூரண அறிய கருத்து - 18, 19

652. ஆன்ம சுகமும், மனோ நலமும் பெற்றுவிட்டால் போதும், அதுவே **ஆனந்தம்.**

பரிபூரண அறிய கருத்து - 25

653. பிரம்மானந்த நிலை பெற்றுவிட்டால் போதும், அதுவே **அகண்டானந்தமாகும்.**

பரிபூரண அறிய கருத்து - 25

654. **மனோ நலம்!**

நான், என்னால், எனது ஒழிந்தால் மனோ நலம்.

பரிபூரண அறிய கருத்து - 26

655. **ஆன்ம சுகம்:-**

யாம் ஜீவனல்ல, யாம் ஸ்ரீபகவானின் குழந்தையே என உணர்வது (ஜீவாத்மாவும், பரமாத்மாவும், ஒன்றான நிலை) ஆன்ம சுகம்.

பரிபூரண அறிய கருத்து - 26

656. அழகு ஆபத்து! ஆடம்பரம் அழிவுப்பாதை! புகழ்ச்சி மரணகுழி! பணம் உயிர்கொல்லி! வீண் பேச்சு வினைத்தொடர்! இப்படி இந்த ஐந்திலும் சாதனையாளர்கள் ஜாக்ரதையாக இருக்க வேண்டும்.

அருளுரை - 21

657. 1. **இறை காட்சி வேண்டாம்! அவன்** உங்களுடனே இருக்கிறான்.

2. **இறை கருணை வேண்டும்!! அது** உங்களுக்கு கிடைத்து விட்டது.

அருளுரை - 35

658. 1. இறை கருணையால் வினையாகிய விதியை மாற்ற முடியாது!

2. பரகருணையால் வினையாகிய விதியை மாற்ற முடியும்!! ஆனால் **"அழிக்க முடியாது!"**

அருளுரை - 40

659. **இறை கருணை** என்றால்:-

சிவனே, முருகா, கண்ணா, வினாயகா, ராமா என இன்னமும் வித விதமான **நாம ரூபத்தோடு கூடிய இறைவன் நாமாக்களை மந்திரமாக**

**உச்சரிக்கும்போது** அதற்குரிய நாம ரூபத்தையும் எண்ணி எண்ணி ஸ்மரணை செய்தால் நாம் பெறுவது இறை கருணையாகும்.

அருளுரை - 50

660. **பர கருணை** என்றால்:-

கடவுளே என்றும்; இறைவா என்றும்; தெய்வமே என்றும்; ஆண்டவா என்றும்; இன்னமும் பல விதமாக; **ரூபம் இல்லாமல் நாமத்தை மட்டும்!!** கொடுக்கும் பக்தனோ, பாமரனோ, அவனையும் ரக்ஷித்து ஆக வேண்டுமே என்ற கருணையால் இறங்கி வருவது பர கருணையாகும்.

அருளுரை - 50

661. தெய்வ பலத்தை விட, **தெய்வ நாம பலம்** அதிக சக்தி வாய்ந்தது என ஸ்ரீமஹான்கள் சொல்ல கேள்வி.

அருளுரை - 51

662. 1. இறை கருணை என்றால் **நாம ரூபம்!**
2. பர கருணை என்றால் **நாமா மட்டும்!!**

அருளுரை - 52

663. முதலில் மனோமய சிருஷ்டியை நிர்மூலம் செய்து அனைத்தும் இறை சிருஷ்டியாக **(மஹேசன் சிருஷ்டியாக)** பாவனை பண்ணினால், மனோமய சிருஷ்டியில் பின்னிக் கொண்டிருக்கும் **நான்; என்னால்; என்னுடையது;** முழுவதும் அழிந்துபோகும்.

அருளுரை - 52

664. **தம் எண்ணத்தால் பிறவி உண்டு!** எண்ணம் முழுவதும் சர்வார்ப்பணம் ஆகிவிட்டால் வினையும் இல்லை, பிறவியும் இல்லை.

அருளுரை - 53

665. **ஆட்கொள்ளும்!** என்றால்:-

ஓர் பக்தனை **"ஆட்கொள்ளும்"** (ஆத்மாவை ஆண்டு வினையை கொல்லும்) நிமித்தமாகவே அந்த காலாதீத ஒன்று ஓர் காலத்தை ஏற்படுத்திக் கொண்டு இறைவனாக வந்து; மேலும் தெய்வீகத்தையும் தடுத்து **"ஆட்கொள்ளும்"** (ஆத்மாவை ஆண்டு மன மாயையை கொல்லும்) நிமித்தமாக **ஸ்ரீஸத்குருவாக அருள்கிறது!**

அருளுரை - 55

666. உன் வாழ்க்கை என்னும் நாடக மேடையில் உன் வினையின் காரணமாக விழும் அடிகள் அனைத்தும் ஸத்ய வழியில் ஏறிச்செல்லும் படிக்கட்டுகளாகும் என உணர்.

அருளுரை - 71

667. தெய்வீகத்திலும், மனோ எளிமையிலும், ஆன்மீக உள் உணர்விலும் முறையே நாம் அடைவது **ஆனந்தம்; மனோ நலம்; ஆத்ம சுகம்** என மூன்றாகும்.

அருளுரை - 76

668. **இன்ப, துன்பம்! நலம், சுகம்!**

1. ஓர் சாதகனிடம் **அன்பு, கருணை, எளிமை, பொறுமை, அடக்கம், சமபாவனை** இந்த ஆறும்

இருந்தால் அவஸ்யம் ஆனந்தமும், மனோ நலனும், ஆத்ம சுகமும் பெறலாம்.

2. ஆகவே உடல் உலகை பொருத்தது **இன்ப துன்பம்;** மனதையும் ஆன்ம உணர்வையும் பொருத்தது **நலம், சுகம்.**

அருளுரை - 76

669. 1. "**அது நாம்** என்ற உணர்வால் அதை தொடவேண்டும்".

2. உடல், உலக பொருள்கள் உன்னுடையதே என **இறைவனிடம்** விட வேண்டும்.

3. இதனால்? மண்ணில் வினையால் வந்த தூலம் மண்ணோடு மண்ணாகும்! பரமோடு ஒன்றிய நாம் அதுவான **பரமாகலாம்!!**

அருளுரை - 79

670. **மன வியாபாரம் ஒழிந்த நிலை!**

1. எண்ணம், சொல், செயல் இவை மனதினால் நடைபெறுவதால் **சர்வார்ப்பணத்திலும்; நாம் அந்த ஒன்றே என்ற திட ஞானத்திலும் சார்ந்திருப்பதுவே,** மன வியாபாரம் ஒழிந்த நிலையாகும்!

2. "நான், என்னால், என்னுடையது" என்ற மனோ எண்ண வியாபாரத்தை விடுவதே மனோ வியாபாரம் விடும் நிலையாகும். இப்படி பூரணமாக விட்ட நிலை பெற்று விட்டால் மனோ ஜெயம் ஆகிவிடும். **மனோ ஜெயமே மனம் மஹத்தான நிலையாகும்.**

அருளுரை - 80

671. **"மனோ ஜெயமே சூரிய உதயம்";** "அஞ்ஞானமே இருள்"; ஞான சூரியன் உதயமாகிவிட்டால் அஞ்ஞான இருள் இருக்காது. இது உறுதி!

அருளுரை - 80

672. **மோட்சம் என்பது இல்லவே இல்லை!**

"நாம் அது; அது நாம்" எனவும்; உன்னிடமே உனக்கயலாக எதுவும் இல்லை, இல்லை எனவும், சர்வ சதா நிலைத்து நிற்பதுதான் மோட்சமேயல்லாமல் **வேறு மோட்சம் இல்லவே இல்லை.**

அருளுரை - 89

673. **பந்தம்!**

"நாம் அது; அது நாம்" நிச்சயம் உறுதிபடாமல் சர்வசதாவும் ஜகத், ஜீவ ஈஸ்வராதிகளை தமக்கன்னியமாய் உப்பை போலும் உப்பு பதுமை போலும் நாம ரூப குணமாய் கற்பனை பண்ணினால், அது சர்வசதா அசைக்கின்ற சமுத்திரம் போலாகும்; **அதுவே பந்தமாகும்.**

அருளுரை - 89

674. **ஸ்ரீஸத்குரு வாக்கியம்:-**

யாம் இது கால பரியந்தம் உணர்ந்தவற்றில்

1. **"மூன்றில் ஒரு பாகம்"** மட்டும் முழுமையாக உள்ளீர்கள்.
2. **"மூன்றில் ஒரு பாகம்"** முக்கால் நிலையில் உள்ளீர்கள்.
3. **"மூன்றில் ஒரு பாகம்"** பாதி நிலையில் உள்ளீர்கள். அவஸ்யம் **"நம்பிக்கை"** உள்ள அனைவரையும்

**"கரையேற்றாமல்"** எம் தூலம் மறையாது. அன்று தான் யாம் வந்த காரண காரியம் இரண்டும் பூர்த்தியாகும்.

அருளுரை - 100

675. **பாசம்:-** உயிர் உள்ள ஒன்றைப் பார்த்து **"உயிர் துடிப்பு"** உனக்கு வந்தால் அது **"பாசம்"!**

குரு கிருபை - 10

676. **அன்பு:-** உயிர் உள்ள ஒன்றைப் பார்த்து **"இறை சிந்தனை"** உனக்கு வந்தால் அது **"அன்பு!".**

குரு கிருபை - 10

677. **"நாம் இங்கு என்றால் உண்டு!"**
"நாம் அங்கு என்றால் இல்லை!!"

1. இங்கு என்றால் விவகாரம் எதுவரையில் உண்டோ **அதுவரையில் இங்கு!**
2. அங்கு என்றால் விவகாரம் அற்ற இடம் எதுவோ **அது அங்கு!!**
3. விவகாரத்திற்கு இருவர் வேண்டும். **அது இங்கு!**
4. ஒருவர் இருந்தால் அங்கு விவகாரம் இல்லை. **அது அங்கு!!**
5. ஒருவர் இருந்தும் இல்லாதவரே! **"அது சுக சொரூபம்"** அதை சொல்பவர் இல்லை! கேட்பாரும் இல்லை! சொல்லுக்கும் பொருளும் இல்லை! **ஒன்றுண்டு, அதை சொல்பவர் இல்லை!!**

குரு கிருபை - 22

678. **சாட்சி நிலை, சர்வசாட்சி நிலை!**

1. "சாட்சிநிலை **மனித இனத்தை** மட்டும் குறிக்கும்"!
2. "சர்வ சாட்சியாகிய அகண்ட நிலை **அனைத்து ஜீவ கோடிகளையும் குறிக்கும்"!**
3. "சாட்சி நிலையை" "அந்தர்யாமி" "எனவும் சொல்லலாம்!" "சர்வசாட்சி நிலையை" "சர்வாந்தர்யாமி" எனவும் "சொல்லலாம்"!

குரு கிருபை - 29

679. **நமது ஸ்ரீஸத்குரு, ஸ்ரீபரமகுருவுக்கு செய்த சேவை!**

1. ஸ்ரீகுருதேவரான ஸ்ரீவியாச பகவான் கருணையினால் இந்த பைத்தியம் (ஸ்ரீதூளி பாபா). ஸ்ரீஸத்குரு தேவருக்கு 1970 *to* 1982 வரை **சர்வாங்க சேவை முடிவுற்றது.**
2. ஸ்ரீஸத்குரு தேவருக்கு 1982 *to* 1988 வரை **ஸத்**பாவ **சேவை முடிவுற்றது!**
3. ஸ்ரீஸத்குரு தேவருக்கு 1988 *to* 1994 வரை **ஆத்ம** பாவ **சேவை முடிவுற்றது!.**

குரு கிருபை - 57

680. **ஞானத்தின் இதயம்! சிகரம்!**

அந்த ஒன்றுக்கு இவ்வுலகமெங்கும் சுற்றி அலைந்தாலும் இந்த **"திருஅண்ணாமலை"** போன்று வேறு பூமி இல்லையெனலாம். **"இது ஞான பூமி"! இது** குரு பீடமாகிய **"அண்ணாமலை"! இது ஓர் அக்கினி**

**க்ஷேத்திரம்!** இது ஞானத்தின் **இதயம்!** கைலாயம் ஞானத்தின் **சிகரம்** (சிரசு).

குரு கிருபை - 61

௬௮௧. **அகண்ட ஞானம்** = ஸ்ரீகுருதேவர் = இங்கு செயல்பாடு உண்டு!

குரு கிருபை - 62

௬௮௨. **அகண்டைக ரஸம்** = பிரம்மானந்த சமுத்திரம் = காலாதீத பரம்! இது செயல்பாடற்றது!

குரு கிருபை - 62

௬௮௩. **விட்டல்** என்றால் **"விட்டு அகல்"** என பொருள்படும். (அதாவது **விட்டு + அகல் = விட்டல்**) அப்படியானால் எது அகல வேண்டும்? எனக்கேட்டால்,

1. உடல் உலகத்தை விட்டு அகல்.
2. நாம ரூப குணதோஷங்களை விட்டு அகல்.
3. சொந்த, பந்த, பாச பிணைப்புகளை விட்டு அகல்.
4. "அஞ்ஞானத்தை விட்டு அகல்" என உணர்த்துகிறது. அப்படியானால் அஞ்ஞானம் நம்மை விட்டு அகன்றுவிட்டால் அனைத்தும் **"மெய் ஞானமே"**. அந்த மெய் ஞானமே **"இறைவன் கிருபை"**. அதைப் பெற்றுவிட்டால் வேறு பெறுவதற்கு என்ன இருக்கிறது? மேலும் இங்கு மூர்த்தி பேதம் இல்லாமல் ஹரியையும் ஹரனையும் இணைத்தே **"ஜெய ஜெய"** என்றும், **"ஹர ஹர"** என்றும் அறுதிட்டு கூறுகிறது இந்த மந்திரம்.

குரு கிருபை - 76

684. **"கடந்த ஞானியும்; கடப்பரோ" (தம்) "மக்கள் மேல் காதல்"** என்ற ஓர் மஹான் பாடிய பாட்டுக்கிணங்க நம் ஸ்ரீஸத்குருதேவரான **வசிஷ்டரும் பாச வலையில் ஓர் "நொடிதான்"** (நிமிஷமல்ல, மணி அல்ல, ஓர் நாள் அல்ல) வீழ்ந்தார். அந்நிலையை எமதய்யன் உணர்ந்தான்! **"ததாஸ்து"** என்றான்.

குரு கிருபை - 86

685. 1. பிரம்மா! விஷ்ணு! சிவபெருமான்! ஆகிய மூவரும் **லோக மாயா** சம்பந்தம் உடையவர்கள்.
2. மஹேஸ்வரன் மட்டும் **யோக மாயா சம்பந்தம்** உடையவனாகும்.
3. சதாசிவம் **எந்த மாயாவும் கலப்பில்லாததாகும்,** ஆனால் இவ்வைவரும் ஸ்ரீஸத்குரு ஸ்தானம் பெற முடியும்.

குரு பரம்பரை - 8

686. **ஸத் குரு:-** உன் ஸத்குருவையும் உன் **அறிவுக்கண்ணால் ஸத் உருவாக பார்க்கப் பழகு.** உன்னால் முடியும். அப்படிப் பழகிக்கொண்டால்; அவரை ஸ்ரீஸத்குருவாக அவஸ்யம் காணலாம், உணரலாம்.

குரு பரம்பரை - 9

687. 1. **பாடம்** சொல்லும் குரு ஆக, ஆசை கொள்ளாதே.
2. **பாடம்** கேட்கும் மாணவனாக **பணிய** ஆசை கொள், ஸ்வய அனுபவம் பெறுவாய்.

குரு பரம்பரை - 15

688. ஸ்ரீஸத்குரு கிடைப்பது அரிதினும் அரிதாகும். அது உங்கள் அனைவர்க்கும் கிடைத்திருக்கிறது. உலக நிலையில் 100/100 குருமார் உண்டு. உலக நிலையில் 1/100 மாணவன் இல்லை. **"குரு பரம்பரையில்!"** வந்தவர்கள் நீங்கள் அனைவரும் என உணர்க.

குரு பரம்பரை - 16

689. "பார்க்கும் பக்கம் எல்லாம் பரமனை பார்க்க வேண்டும்! கேட்கும் ஒலியிலெல்லாம் அவன் ஒலியை கேட்க வேண்டும்!"

ஒரு பைத்தியத்தின் பயணம் - 9

690. **கடவுளை உணர!**

1. நீ காணும் எப்பொருள்களிலும் **ஓர் தன்மை** அதாவது ஓர் குணம் அவஸ்யம் தோற்றும். ஆனால் கடவுளிடம் எந்த குணமும் கிடையாது!
2. **பால் போன்றது கடவுள்! ஜலம் போன்றது ஜகம்!** பாலில் எவ்வளவு ஜலம் விட்டாலும் அது இந்த ஜலத்தை தனியே காட்டாது. **தன் வெண்மை மாறுவதில்லை.**
3. அதிக ஜலத்தில் குறைந்த பாலை கலந்தால் பால் தோற்றாது, ஜலம் தான் தோற்றும். **பால் அழிவதில்லை; மறைந்திருக்கும்.** ஜகம் (ஜலம்) என்ற குணம் மேலோங்குவதால் அங்கு பால் (ஸ்ரீபகவான்) தோற்றுவதில்லை. அதேபோல் உன்னுள் கடவுளை உணரவேண்டுமானால் வாஸனை (குணம்)

ஏறி இருக்கும் உன் கல் போன்ற உள்ளத்தை **கடவுள்** என கனிய வைக்க வேண்டும்.

ஒரு பைத்தியத்தின் பயணம் - 10

691. "இரண்டு இருந்தால் ஒன்றாக முடியாது!
ஒன்றாகி விட்டால் இரண்டு வராது".

ஒரு பைத்தியத்தின் பயணம் - 10

692. **பொறுமை, சகிப்புத்தன்மையின் பலன்!**

1. ஆழ்ந்த பக்தியோ, முதிர்ந்த ஞானமோ ஓர் பக்குவ ஆன்மாவிற்கு சித்திக்க வேண்டுமேயானால் **அளவற்ற பொறுமையும்,** எதையும் ஏற்றுக்கொள்ளும் **சகிப்புத்தன்மையும்** வேண்டும்.
2. **பொறுமையில்** காலம் செல்லும், ஆனால் காலன் அவனை அணுகான்! **சகிப்புத்தன்மையில்** வினை சம்பந்தத்தால் (பிராரப்தம், ஆகாமியம், சஞ்சிதம் இவைகளால்) வரும் பாபம் இவனை உண்ணாது. இவன் அந்த வினைகளை (பாபம்) உண்டு விடுவான்!!

ஒரு பைத்தியத்தின் பயணம் - 38

693. **பக்தி வேறு, ஞானம் வேறல்ல!**

1. **பக்தி:-** ஸ்ரீ பகவானை அன்றி வேறு எதுவும் முக்காலும் இல்லை என்ற **நம்பிக்கை!!**
2. **ஞானம்:-** ஸ்ரீ பகவானும் நாமும் ஒன்றே! இந்த இரண்டும் ஒன்றுபடும் போது எங்கும் வியாபகமாக இருக்கின்ற அந்த ஒன்றும் , யாமும் ஒன்றே என்ற

**பரிபூரணத்தில் வைராக்யம்!** ஆரம்பம்: "சாதனை மிக மிக முக்கியம்."

**முடிவு:-** ஒன்றில் நிலைத்து சாதனையை கொஞ்சம் கொஞ்சமாக விட்டு அனுபவத்தை மட்டும் கூட்டவேண்டும்.

ஒரு பைத்தியத்தின் பயணம் - 38, 39

694. **வினை பரிபாகம், மன பரிபாகம் என இரண்டு உண்டு!**

1. **வினை பரிபாகம்:-** இந்த ஜீவனுடைய பூர்வ புண்ணியமும், இந்த ஜன்மாவில் கேட்டு வாங்கி வந்ததும் பக்குவப்பட்டு வந்தால் **வினை முடியும்.**
2. **மன பரிபாகம்:-** ஆசை, கோபம், மோகம், பயம், துக்கம், சந்தேகம் ஆகிய குணதோஷங்களினால் பீடிக்கப்பட்ட மனமானது பக்குவம் அடைந்து மனம் மஹத்தானால் **மனம் முடியும்.** இந்த இரண்டும் முடிந்தால் ஸத்யம் தாமே பிரகாசிக்கும்.

ஒரு பைத்தியத்தின் பயணம் - 89

695. **உண்மை எது! பொய் எது!!**

1. "மௌன ஸ்திதியில் சகலமும் **உணரலாம்!**
2. பேச்சின் நிலையில் சகலமும் **அறியலாம்!**
3. ஆனால் உள் உணர்வு மட்டுமே **உண்மை!**
4. தோற்றத்தை அறிவது **பொய்.**"

ஒரு பைத்தியத்தின் பயணம் - 103

696. அவனுள் (ஸ்ரீபகவான்) தம்மை முழுமையாக அர்ப்பணித்து விட்டால் **நம்மைப் பற்றிய கவலையை** அவன் எடுத்துக்

கொள்கிறான். ஒவ்வொரு நிமிஷமும் கண்ணும் கருத்துமாக இருக்கிறான்.

ஒரு வைத்தியத்தின் பயணம் - 128

697. பக்தி என்னும் கடலில் மூழ்கி ஞானம் என்னும் நல்முத்து பெற்று விட்டால், பக்தியின் பிணைப்பில் உள்ள **ஸ்ரீபகவான் இரும்பாகவும்!** அவனை ஈர்த்துக்கொள்ளும் **பக்தனாகிய ஞானி ஓர் காந்தமாகவும்!** ஆகி விடுகிறான்.

ஒரு வைத்தியத்தின் பயணம் - 129

698. காமம் அற்றவன் இருந்தும் பிரேதமே! **காமமே உலக இயக்கத்திற்கு காரணம்!** காமம் இல்லையானால் உலகம் இல்லை!

ஒரு வைத்தியத்தின் பயணம் - 134

699. **மாயா திரை நீங்க!**

1. புருஷனுக்கும், ஆன்மாவுக்கும் இடையில் **பிரகிருதி** என்ற மஹாமாயையாகிய திரை இருக்கிறது.
2. இந்த திரையை புருஷனானவன் தம் விவேகத்தினாலும், சாதுக்கள் சேவையினாலும், ஸ்ரீஸத்குரு உபதேச கிரமத்தினாலும், ஸ்ரீ இறையருளாலும் நீக்க முடியும். ஸ்ரீ ஆன்ம சொரூபம் ஆக முடியும்!

ஒரு வைத்தியத்தின் பயணம் - 140

700. எதையும் முதலில் நீ அனுபவி! உன் அனுபவ நிலையை உணரத்துடிக்கும் பக்குவான்மாக்களுக்கு மட்டும் அதை புகட்டு! நீ கண்டதையும், கேட்டதையும், படித்ததையும் புகட்டாதே! அதை நீ உணர்ந்து ஸ்வய அனுபவம்

சாத்தியமானால் உணரும் ஜீவர்களுக்கு உணர்த்து. உன் **ஸ்வய அனுபவத்தை சொல்வதுதான் உண்மையாகும்!** அது பலன் கொடுக்கும்!

ஒரு பைத்தியத்தின் பயணம் - 144

701. மனக்கண்ணினால் காணும் காட்சியையும், கேட்கும் வார்த்தைகளையும், நடைபெறும் நிகழ்ச்சிகளையும், **முதலில் "அவனாக" "அவனுடையதாக" உணரவேண்டும்.** இந்த மெய்யுணர்வை (அறிவை) மட்டும் வைத்துக்கொண்டு மேலே சொன்ன மூன்றையும் தள்ளிவிடலாமே?

ஒரு பைத்தியத்தின் பயணம் - 147

702. **ஸ்ரீஸத்குரு பக்தியும்,** ஸ்ரீஇறை நம்பிக்கையும் உங்களுக்கு இருக்குமானால் இந்த (இல்லாத) உலகம் உங்கள் திருவடிக்கு கீழே அடங்கிவிடும் இது உறுதி!

ஒரு பைத்தியத்தின் பயணம் - 163

703. **துக்கம் இல்லவே இல்லை!**

**உடல் உலகத்தை உண்மையாகவே மறந்தால்** ஸத்யம் பிரகாசிக்கும். உங்களுக்குள் ஸத்யம் பிரகாசித்துவிட்டால் அனைத்தும் ஆனந்தமே. துக்கம் இல்லவே இல்லை!

ஒரு பைத்தியத்தின் பயணம் - 182

704. **வாழ்க்கை சுகம் பெற, நலம் பெற!**

**வைராக்கியம்!** உங்கள் ஒவ்வொரு அசைவிலும், ஒவ்வொரு நிகழ்ச்சியிலும், ஒவ்வொரு வார்த்தையிலும், ஒவ்வொரு பார்வையிலும், அனைத்து நிகழ்ச்சிகளிலும்,

அவனையே காணுங்கள். அவனையே பேசுங்கள். அவனோடு உறவாடுங்கள். அவனோடு உரையாடுங்கள். உங்கள் வாழ்க்கை சுகம் பெறும், நலம் பெறும், முடிவில் ஒன்றாகும். இதுவே வைராக்கியம்!

ஒரு பைத்தியத்தின் பயணம் - 200

705. 1. "கற்பூர ஜோதி" **பக்தர்களுக்கு!**

2. குண்டலினி ஜோதி **யோகிகளுக்கு!**

3. ஆத்ம ஜோதி **ஞானிகளுக்கு!** இதில் நீ எந்த ஜோதியை உணரவேண்டுமோ அதை உணர். "காணும் ஜோதி மறையும், உணரும் ஜோதி உன்னுள் கலந்துவிடும்".

ஒரு பைத்தியத்தின் பயணம் - 219

706. 1. உள்ளத்தால் உணரும் ஶ்ரீஆத்மஜோதியின் பிரகாசத்தினாலேயே இவ்வனைத்து அண்டங்களும், அதன் ஜீவகோடிகளும் நிலை பெற்று தாமே இயங்குகின்றன!

2. அப்படி இயங்கும் மாயா இயக்கத்திற்கு ஓர் வடிவம் கொடுத்து பக்தர்கள் அனைவரும் சகுணப் பிரம்மமாக வழிபாடு செய்கின்றனர்.

3. இந்த ரகசியம் அனைத்தும் நீ உன் அனுபவத்தினால் ஶ்ரீகுருதேவர் உணர்த்த உணர முடியும், காண முடியாது

ஒரு பைத்தியத்தின் பயணம் - 219, 220

707. **ஸ்வய ஞான அனுபவ நூல் உலக எல்லா மொழிகளிலும் பிரபல்யமாகும்!**

ஸ்வய ஞான அனுபவ 150 பாடல்களும் எல்லா மொழிகளிலும் இது பிரபல்யமாகும். காலக்கிரமத்தில் விரிவடையும். யார் யாருக்கு தேவைப்படுகிறதோ ஆளுக்கொன்று கொடுத்துடலாம். யார் யாருன்னு கேட்டு வச்சுக்கோங்க. யார் யார் படிக்கிறார்களோ அவர்களுக்கு கொடுத்திடலாம். **உலக மொழிகள் எல்லா மொழிகளிலும் இது பிரபல்யமாகும்.**

அகண்டானந்த யாத்திரை (கனடா) ஸத்ஸங்கங்கள் - 1/27, 28

708. **அதனுடைய கருணை!**

ஸ்ரீஸத்குருதேவர் பல ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கிறாரே காண முடியவில்லை, அவர் குரலை கேட்க முடியவில்லை, அவருடைய உபகாரத்தை பெறமுடியவில்லையே என்கிற மாதிரி கொஞ்சம் வருந்தினாலும் போதும். மறுவினாடி அந்த வருத்தம் தீர்ப்பதற்கு என்ன உண்டோ அத்தனை காரியமும் தானே நடக்கும். அது அதனுடைய கருணை.

அகண்டானந்த யாத்திரை (கனடா) ஸத்ஸங்கங்கள் - 1/36

709. **ஜனன - மரணம் இல்லாத இடத்திற்குப் போக!**

1. தருமம் பெரும்பாலும் என்ன சொல்கிறது என்றால்? யாருக்கும் தீங்கு பண்ணாதே. நீ செய்யக்கூடிய தர்மமானது உன்னைக் காபாற்றும், நீ எது எதையெல்லாம் காப்பாற்றினாயோ அது, அதெல்லாம் உன்னைக் காப்பாற்றும். எது எதெற்கெல்லாம் நீ தீங்கு செய்தாயோ, அது அதெல்லாம் உனக்குத் தீங்கு செய்யும்.

2. **நன்மை செய்தால் நன்மை கிடைக்கும் தீமை செய்தால் தீமை கிடைக்கும். இது ஜனன மரணத்திற்குரியது. இந்த ஜனன - மரண தர்மத்தை அனுஷ்டித்து வந்தால் தான் ஜனன - மரணம் இல்லாத இடத்திற்குப் போக முடியும்.**

அகண்டானந்த யாத்திரை (கனடா) ஸத்ஸங்கங்கள் - 1/42

710. **தர்மம் எது!**

1. தர்மத்தைப் புறக்கணித்தோம் என்றால், புண்ணிய பாவம் தர்மமாக மாறாது. புண்ணியம் தர்மமாக மாற வேண்டுமானால் கூடுமானவரை தர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.
2. நம்மால் பிறருக்கு சிரமம் ஏற்படக்கூடாது. பிறர் சிரமம் ஏற்படுத்தினால் பொறுத்துக்கொள், சகித்துக்கொள், மறக்கப்பழகு, மன்னிக்கப்பழகு **இது தான் தர்மம்.**

அகண்டானந்த யாத்திரை (கனடா) ஸத்ஸங்கங்கள் - 1/42

711. **நான்கு மஹா வாக்கியங்கள் எது?**

1. வெற்றிடம் என்று சொல்லக்கூடிய சூனியமானது **மனமில்லாத நிலை, அறிவும் மௌனமான நிலை.** அறிவு அழியவில்லை அறிவு இருக்கத்தான் செய்யும்.
2. **அறிவு என்பது ஆன்மா,** அது நம்மிடம் இருக்கப்பட்ட துவேஷ குணங்கள், ஜீவத்தன்மை அனைத்தும் நாசமாக்கிவிடுகிறது. அப்படி இருக்கும் போது, **சுத்தமான ஆன்மாவாகும்.**

3. அந்த ஆன்மா, பரமான்மாவாகிய சுத்த பரப்பிரம்மத்திற்குள் ஐக்கியமாக வேண்டும். அப்படி ஐக்கியமாகக் கூடியது தான் வேதாந்தம் சொல்லக்கூடிய **நான்கு மஹா வாக்கியங்கள் ஆகும்.**

அகண்டானந்த யாத்திரை (கனடா) ஸத்ஸங்கங்கள் - 1/43

## 712. எண்ணமல்ல, பாவனை!

1. நான்கு மஹா வாக்கியங்களுக்கும் அதீதமாக இருக்கக் கூடியது, **யாம் அதுவாக இருக்கிறோம், யாம் யாமாக இருக்கிறோம், யாம் இருக்கிறோம்.** இவை எண்ணமல்ல, பாவனை. இந்த மூன்று பாவனையை நாம் அறிவோடு உள்ளத்தில் இணைந்து விட்டோம் என்றால் அது **அகண்டானந்தத்திற்கு** கொண்டு போய்விடும்.
2. யாம் அதுவாக இருக்கிறோம் - கண்டம்; **கண்டானந்தம்.** இது என்று சொல்ல முடியாது. ஏனென்றால் அதுவும், நாமும் ஒன்றாகிவிட்டோம்.

அகண்டானந்த யாத்திரை (கனடா) ஸத்ஸங்கங்கள் - 1/43

## 713. **முழுநிலை** என்றால்!

யாம் அதுவாக இருக்கிறோம், யாம் யாமாக இருக்கிறோம், யாம் இருக்கிறோம் என்று மூன்று வரும். **அந்த மூன்றிலும் இருக்கிறோம் என்ற ஒன்று தான் வரும்.** அங்கே யாம் இருக்காது,

அப்படி வந்தால் தான் முழுநிலை. அந்த சூன்யத்தை அடையாதபடி சுத்த பிரம்மத்தை அடைய முடியாது, ஜீவன் முக்தி பெற முடியாது.

அகண்டானந்த யாத்திரை (கனடா) ஸத்ஸங்கங்கள் - 1/43

## 714. பாவனையே ஜீவன் முக்தி!

1. பெரும்பாலும் மஹான்கள் எல்லோரும் சூன்யத்தையே சுட்டிக்காட்டுகிறார்கள். எண்ணம் இல்லாமல் இருந்தால் போதும். நாம் பெரும்பாலும் அந்த பிரம்மத்தோடு ஐக்கியமாகி விட்டோம். ஜீவன் முக்தி அடைந்து விட்டோம் என்பது மாதிரி சொல்கிறார்கள்.
2. எண்ணமற்ற நிலையும் தாண்டி அதற்கப்புறம் **எண்ணத்தையும் பாவனையாக வைத்தால் தான் முடியும்.** எண்ணம் பாவனையாகாதபடி ஜீவன் முக்தி அடைய முடியவே முடியாது.

அகண்டானந்த யாத்திரை (கனடா) ஸத்ஸங்கங்கள் - 1/44

## 715. பாஷை முக்கியமில்லை, உணர்வே முக்கியம்!

1. உலகத்தில் நூற்றுக்கணக்கான பாஷைகள் இருக்கலாம் ஆயிரக்கணக்கான பாஷைகள் இருக்கலாம். பாஷை முக்கியமில்லை.
2. நாம் அதை அடைய வேண்டும், வாழ வரவில்லை என்ற உணர்வு இருந்தால் போதும்.
3. **இன்ப துன்பத்தோடு வாழ வரவில்லை.** இன்பமும், துன்பமும் சகஜம். அது உடலுக்கு உரியது.

5. அந்த உடலோடு ஒட்டி நாம் வாழ வரவில்லை. நாம் அதை அடைய வந்தோம். அதுவே நாம் என்ற திட உணர்வு இருந்தால் மட்டும் போதும்.

அகண்டானந்த யாத்திரை (கனடா) ஸத்ஸங்கங்கள் - 1/56

716. **சந்தேகப்படுவது அனைத்தும் மனமே!**

1. **மனதின் திட உறுதி என்பது அறிவின் இயக்கம்.** மனதிற்கு தொடர்பே கிடையாது. லௌகீக சம்பந்தப்பட்ட அனைத்தையும் மனது தான் செய்கிறது. மனம் தான் எண்ணுகிறது. அந்த எண்ணத்தைத் தடுக்க வேண்டும்.

2. எல்லாம் நன்மைக்கே எல்லாம் நலமே, எல்லோரும் நல்லவர்களே என்ற திட உறுதியை ரொம்ப ஸ்திரப்படுத்த வேண்டும். கண்டிப்பாக முடியும். சந்தேகப்படுவது அனைத்தும் மனம் தான். வேறொன்றும் இல்லை.

அகண்டானந்த யாத்திரை (கனடா) ஸத்ஸங்கங்கள் - 1/59

717. கொஞ்சம் எண்ணத்தைக் குறைத்தால் போதும். வார்த்தை குறைந்து போகும். வார்த்தை குறைந்தால் செயல் கண்டிப்பாக இருக்காது. **மனித இயக்கமே எண்ணம், சொல், செயல்.** இந்த மூன்றையும் நாசம் பண்ணலாமே. அவசியம் முடியும்.

அகண்டானந்த யாத்திரை (கனடா) ஸத்ஸங்கங்கள் - 1/62

718. **எல்லாம் மண் என்று உணர்ந்துவிட்டால்** வேறு கேள்வி ஏது? சலனம் ஏது? சந்தேகம் ஏது? பய - துக்கம் ஏது?

**கேள்வி கேட்டு, கேட்டு, கேட்டு** *மனதை திணறடிக்கிறோம்.* எல்லாம் அந்த ஒன்றிற்கு அன்னியமில்லை, மண்ணிற்கு அன்னியமில்லை, **எதுவானாலும் சரி என்ற திட உறுதி இருந்தால்** கண்டிப்பாக தவறே ஏற்படாது.

*அகண்டானந்த யாத்திரை (கனடா) ஸத்ஸங்கங்கள் - 1/52*

719. **ஆனந்தமாக இருக்க!**

1. நாம, ரூப மயக்கம் இல்லையானால் கண்டிப்பாக **நீ எந்த வினாடியும் அதுவாகத் தான் இருக்கிறாய்.** நாம, ரூப மயக்கம் இருக்கும் பரியந்தம் அந்த எண்ணம் வராது.
2. நாம, ரூப மயக்கம் நாசமாகிவிட்டால் அது **நாம்** என்ற உணர்வு திடமாக இருக்கும், அதற்கு அன்னியமாக எந்த பயிற்சியும் தேவையில்லை, ஆனந்தமாக எப்பொழுதும் இருக்கலாம்.

*அகண்டானந்த யாத்திரை (கனடா) ஸத்ஸங்கங்கள் - 1/53*

720. **ஒலி** என்பது மாயா. **ஒளி** என்பது பரம். பரமும், மாயாவும் சேர்ந்ததே ஜக ஜீவ ஈஸ்வராதி தோற்றங்கள்.

*அகண்டானந்த யாத்திரை (கனடா) ஸத்ஸங்கங்கள் - 1/90*

721. **சூட்சுமத்தை உணர!**

1. சூட்சுமம் என்பது **அறிவு** சம்பந்தப்பட்டது. தூலம் என்பது **மனோ** சம்பந்தப்பட்டது.
2. மனம் சம்பந்தப்பட்ட **நாம ரூபத்தை கெடுப்பதனால்** அறிவு சம்பந்தப்பட்ட சூட்சுமத்தை அவசியம் உணரமுடியும்.

*அகண்டானந்த யாத்திரை (கனடா) ஸத்ஸங்கங்கள் - 1/115*

## 722. அஞ்ஞானம் மறையும் நிலை!

1. கேள்வி என்பது பெரும்பாலும் அஞ்ஞானம்தானே, அறியாமைதான் கேள்வி என்று சொல்லக் கூடியது. அஞ்ஞானம் அதிகமாக இருக்கும் போது கேள்விகள் அதிகம் உண்டாகும்.

2. அஞ்ஞானம் வர வர வர குறைந்து ஒரு நம்பிக்கை ஏற்படும் போது, **இறை நம்பிக்கையும், குரு நம்பிக்கையும்** ஏற்படும் போது அஞ்ஞானம் தானே மறையும்.

அகண்டானந்த யாத்திரை (கனடா) ஸத்ஸங்கங்கள் - 2/33

## 723. சமுத்திரமும், உப்பு பதுமையும்!

1. சமுத்திரத்தில் தோன்றிய உப்பு பதுமையானது விண்ணளாவி நின்றாலும் தோற்றத்தில்தான் வேறாகவும், விகாரமாகவும், மிகப் பெரியதாக தோற்றுகிறதே தவிர, சமுத்திரத்தில் இறக்கி விட்டோமானால் அந்த உப்பு பதுமை தன் சொரூபத்தை இழந்து ஜலமயமாகிவிடும்.

2. அப்படி தோற்றத்தால் வந்த நாம் இன்னாருடைய கணவன், இன்னாருடைய மனைவி, இன்னாருடைய குழந்தை என்று விவரிக்கிறோமே தவிர, **உண்மையில் நமக்கு தோற்றம் இல்லவே இல்லை. சமுத்திர ஜலமே நாம்.**

அகண்டானந்த யாத்திரை (கனடா) ஸத்ஸங்கங்கள் - 2/136

## 724. நமக்கு தோற்றமும் இல்லை, இருப்பும் இல்லை!

1. சரீரம் என ஒரு தோற்றம் எடுத்துவிட்டால், அவஸ்தை என்பது மனோ நிலையில் தோற்றும். அறிவு நிலையில் தோற்றாது.
2. நாம் ஏற்று வந்த கர்மாவை முடிப்பதற்காக சரீரத்தை எடுத்து வந்து சில காலம் விளையாடிக் கொண்டிருக்கிறோம், விளையாட்டு முடிந்து விட்டதானால் இந்த தோற்றமும் இல்லை, நமக்கு இருப்பும் இல்லை. எந்த வினாடியும் **நாம் அந்த சமுத்திர ஜலமே.**

அகண்டானந்த யாத்திரை (கனடா) ஸத்ஸங்கங்கள் - 2/136

## 725. தெய்வ நம்பிக்கையை விட, குரு நம்பிக்கை ரொம்ப பிரதானம்!

1. தெய்வம் உலகத்தை ரட்சிக்கும், ஜீவர்களை ரட்சிக்கும், ஜீவ ரட்சகன் தெய்வம்.
2. குரு அப்படி அல்ல. ஆத்ம ஞான குரு என்பவன் ஜீவ அழிப்புக்காக வந்தவன். ஜீவ அழிப்பு என்பது ஒரு மனிதனை கொல்லுவது அல்ல. அவனுடைய மனதை அழிப்பது. அந்த **மனதை அழிப்பவன்தான் உண்மையான ஸ்ரீஸத்குரு**வே தவிர, மனதை வளர்ப்பவர்கள் எல்லாம், மனதை பலப்படுத்தக்கூடியவர்கள் எல்லாம், மனதிற்கு ஆதரவாக இருக்கப்பட்டவர்கள் எல்லாம் சாமான்யர்கள்.

அகண்டானந்த யாத்திரை (கனடா) ஸத்ஸங்கங்கள் - 2/175

## 726. சாமான்ய குருவினுடைய வேலை!

1. சாமான்ய குரு என்பவர், உன்னுடைய ஆசைகளை நிறைவேற்றி வைப்பார். தேவைகளை பூர்த்தி பண்ணுவார், சில அபூர்வ சக்திகளையும் கொடுக்க முடியும்.

2. ஒரு பொருளை வரவைப்பது, ஒரு பொருளை மறைய வைப்பது. கூடு விட்டு கூடு பாய்வது. சில மந்திர சக்திகளோ, சில செப்படி வித்தைகளோ கற்றுக்கொண்டு சில விஷயங்களை காட்டி உன்னை மயக்கலாம், இது சாமான்ய குருவினுடைய வேலை.

அகண்டானந்த யாத்திரை (கனடா) ஸத்ஸங்கங்கள் - 2/178

## 727. ஸ்ரீஸத்குருவினுடைய வேலை!

1. ஸ்ரீஸத்குருவாய் இருந்தால் ஒரு காரியமும் பண்ணமாட்டார். உன்னுடைய ஆசைகளை துப்புரவாக துடைத்து காலி பண்ணுவாரே தவிர, ஆசைகளை பூர்த்தி பண்ணமாட்டார், அதிலிருந்தே புரிந்துகொள்ளலாம். நம்முடைய தேவைகளை ஸ்ரீஸத்குரு கண்டிப்பாக பூர்த்தி செய்ய மாட்டார்.

2. எது நடந்தாலும் சரி, உலகின் ஆசாபாசங்கள் அத்தனையுமே, சர்வ நாசமாக்கி **உன்னை சுத்தப் படுத்துவாரே தவிர உனக்கு ஏதும் கொடுக்க மாட்டார்.**

அகண்டானந்த யாத்திரை (கனடா) ஸத்ஸங்கங்கள் - 2/178

728. ஸ்ரீஸத்குருவானவர் தன்னுடைய **சுய அனுபவத்தையே புகட்டிக் கொண்டு வந்தாரானால்** பாடம் கேட்ட எந்த மாணவனும் ஜீவன் முக்தி ஆகாமல் போக மாட்டான். கண்டிப்பாக ஜீவன் முக்தி பெற்றே தீருவான்.

அகண்டானந்த யாத்திரை (கனடா) ஸத்ஸங்கங்கள் - 2/190

729. ஸத்தை உணர வேண்டும், ஸத்தாக நாம் மாற வேண்டும், அதுவாகவே நாம் எந்த வினாடியும் ஆனந்தத்தில் மூழ்க வேண்டும் என்ற **திட வைராக்கியம்**, உறுதியுடன் ஒருவன் சாதனை செய்தானானால் அவன் அவசியம் ஜீவன்முக்தி பெற்றே தீருவான்.

அகண்டானந்த யாத்திரை (கனடா) ஸத்ஸங்கங்கள் - 2/191

730. சாமான்ய குருக்கள் எல்லாம் பெரும்பாலும் நான் ஒரு குரு, நான் அதீத சக்தி படைத்தவன், வல்லமை உடையவன், அபார ஆற்றல் உடையவன் என்று மார்தட்டிக்கொண்டு நான், எனது சாகாத்தன்மையினால் அவர்கள் கற்ற செப்படி வித்தைகளை காட்டி தன்னை விளம்பரப்படுத்திக் கொள்கிறார்கள்.

அகண்டானந்த யாத்திரை (கனடா) ஸத்ஸங்கங்கள் - 2/191

731. **யார் ஸ்ரீஸத்குரு ஆக முடியும்!**

**விளம்பரம், வியாபாரம், ஆடம்பரம்** இந்த மூன்றையுமே சர்வ நாசம் செய்தவன்தான் ஸ்ரீஸத்குரு ஆகமுடியும். அவனிடம் **நான், எனது** என்பது அணுப்பிரமாணமும் இராது. அனுபவத்திலேயே உணரலாம்.

அகண்டானந்த யாத்திரை (கனடா) ஸத்ஸங்கங்கள் - 2/191

**732. ஸ்ரீஸத் குருவுக்கும், ஆத்ம ஞானிக்கும் என்ன வித்தியாசம்!**

1. ஆத்ம ஞானியை **பர குரு** என சொல்ல கேள்விப்படுகிறோம். அவனுக்குத்தான் அந்த தகுதி உண்டு..
2. ஸ்ரீஸத்குரு பகவானிலிருந்து வரலாம், பகவானால் அனுப்பப்படலாம். அங்கே பேதம் இராது.
3. ஆத்ம ஞானி ஸ்ரீஸத்குருவிடம் பாடம் கேட்டாலும் கூட அதை வெளிப்படுத்திக் கொள்ளமாட்டான்.
4. இந்த பாடத்தை பெரும்பாலும் யோக மாயாதான் நடத்துகிறது. லோக மாயா இல்லை. அதற்கு தகுதியானவர்களை யோக மாயா தேர்ந்தெடுத்து **ஸ்ரீஸத் குருவாக்குகிறது.** மற்றவர்கள் எல்லாம் ஞானியோடு சேர்ந்து ஜீவன் முக்தர்கள் ஆவார்கள்.

அகண்டானந்த யாத்திரை (கனடா) ஸத்ஸங்கங்கள் - 2/191

**733. அருள்வாக்கு, அமுதவாக்கு!**

1. "கர்மாவை எண்ணிச் சொல்வது **அருள் வாக்கு**".
2. "மனம் மஹத்தில் ஒன்றி தாமே வருவது **அமுதவாக்கு**".

வெள்ளை புத்தகம் பழையது - 40 புதியது - 48

**734. "சும்மா" இருக்கும் நிலை!**

"சும்மா இருப்பதுவே **சுட்டற்ற** பூரணமென்று எம்மால் அறிதற்கு எளிதோ பராபரமே" என்றார் தாயுமானவர். **சுட்டற்ற = சுட்டு + அற்ற.** விளக்கம்: **வினை** சுட்டு சாம்பலாக வேண்டும். **மனம்** எண்ண விருத்தி அற்றுப்போக

வேண்டும். இந்த இரண்டும் முடிந்துவிட்டால் அதுவே "சும்மா" இருக்கும் நிலையாகும்.

வெள்ளை புத்தகம் பழையது - 41 புதியது - 49

## 735. ஓர் சாதகன் எப்படி இருக்க வேண்டும்?

1. தேவதைகளுக்கு (காவல் தெய்வங்களுக்கு) ஸ்தோத்திரம், நமஸ்காரம், வழிபாடு **செய்யாதவனாகவும்.**
2. பித்ருக்களுக்கு நமஸ்காரமோ, பிண்ட தர்ப்பணமோ **செய்யாதவனாயும்.**
3. **யதேச்சையாய்** கிடைப்பதை உண்டு, உடை மற்றும் இருப்பிடத்திலும் கிடைத்தது போதும் என நிறைவுடன் ஓர் சாதகன் இருக்க வேண்டும்.

வெள்ளை புத்தகம் பழையது - 53, 54 புதியது - 67, 68

## 736. கர்மா செயலற்றுப் போகும் நிலை!

1. ஞானம் **அனுபவ சித்தி** அடைவதற்கு முன் எவரும் கர்மாவை துறக்க முடியாது. **பலவந்தமாக** கர்மா நிறுத்தப்பட்டால் அந்த கர்மா (ஆசையின்) காரணமாக ஜன்மா எடுக்க வேண்டும்.
2. அதாவது பூவில் தோன்றிய பிஞ்சானது பருத்து முதிர்ச்சி ஆகும் போது, பூ உலர்ந்து கருகி தாமே விழுந்து விடும் அதுபோல **ஸ்வயமாக** பிரம்மானந்தம் தோன்றும்போது கர்மா (ஆசை) செயலற்றுப்போகும்.

வெள்ளை புத்தகம் பழையது - 54 புதியது - 68, 69

737. **ஆத்மாவின் இருப்பிடம்!**

ஆத்மா ஜீவ வடிவங்களில்தான் இருக்கிறது என எண்ண வேண்டாம். **க்ஷரம் (அழியக்கூடியது), அக்ஷரம் (அழியாதது), ஜட கட படாதிகள், பஞ்ச பூதங்கள்** அனைத்திலும் எங்கும் ஊசி நாட்ட இடம் இல்லாமல் சர்வ வியாபியாக நீக்கமற நிறைந்திருக்கிறது என உணர்.

வெள்ளை புத்தகம் பழையது - 62 புதியது - 77

738. **ஸ்ரீபகவானை கரைத்த நிலை!**

நாம ரூபத்தை மறந்து, சேவை செய்தலே அவனைக் கரைக்கும் நிலையாகும். அவனைக் கரைத்த நிலையே ஞானமாகும்.

ஞான தீப மலர் இதழ் 2 - 3

739. எது பரியந்தம் ஒருவனுக்கு **ஜாக்ரத்தில் சுழுப்தி நிலை வராதோ,** அது பரியந்தம் சரீர ஸ்மரணையும் நான், நீ என்ற பாவனையும் தொடர்ந்தே இருக்கும்.

ஞான தீப மலர் இதழ் 2 - 56

740. உன் தூல அவஸ்தைகளையும், உபாதைகளையும் மறக்கும் பரியந்தம், ஸ்ரீபகவானை மறக்க வேண்டாம்.

ஞான தீப மலர் இதழ் 2 - 57

741. 1. பக்தர்களுக்கு **அன்பும்.**
2. யோகிகளுக்கு **வைராக்கியமும்.**
3. ஞானிகளுக்கு **மௌனமும்** அடையாளமாகும்.

ஞான தீப மலர் இதழ் 2 - 70

742. **கருமம்** - ஈனத் தொழில்; அது கடும் பாபத்தொழில். **கர்மம்** - இயற்கையாகவே நடைபெறும் புண்ணிய பாபங்கள்.

மஹான்கள் வரலாறு - 19

743. **ஓ எம் ஆனந்த வடிவே!** இவ்வுலகில் அவன் அருளால் கோடான கோடி மார்க்கங்களும், அதன் அனுபவ முறைகளும், அதன் அணுகு முறைகளும் இருந்தாலும் "**அத்வைதம்**" ஒன்றைத் தவிர மற்றும் 63 கலை ஞானங்களும் "**போக்குவரவு**"க்கு உட்பட்டதே. இதை நீ தெரிந்தவனே, அறிந்தவனே சற்று உணர்ந்தவனே. அப்படி இல்லாமல் இந்த உதவாக்கரை வைத்தியத்தை கண்டிருக்க மாட்டாய்.

மஹான்கள் வரலாறு - 26

744. **நாம் பிறக்கவும் இல்லை; இறக்கவும் இல்லை;** இது தான் உண்மை. நாம் அந்த நாம ரூப குணம் குறி கடந்த காலாதீத ஒன்றே! "**அதுவே நாம், நாமே அது**". இதுவே ஸத்யம்; ஸத்யம்; ஸத்யம்!!!

மஹான்கள் வரலாறு - 26

745. இந்த உலகமே நிர்மூலமானாலும், உங்கள் உடலே சிதைந்து போனாலும் "**ஸ்ரீஸத்குரு கிருபை**" உங்களை ரக்ஷிக்கும்.

மஹான்கள் வரலாறு - 33

746. "**ஸ்ரீஸத்குரு பக்தி**" என்பது அவர் மீது நீங்கள் வைக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்"

மஹான்கள் வரலாறு - 33

7௪7. **ஸ்ரீஸத்குரு சேவையென்பது;** "அவர் வாக்கியார்த்த சிரத்தையாகும்".

மஹான்கள் வரலாறு - ௩௩

7௪8. **ஸ்ரீஸத்குரு கிருபையை பெறுவதென்பது;** கலக்கம் பயமற்ற நிலையாகும். இதை **"தற்கவன சக்தி"** உள்ள அனைவரும் பெற்றுவிட்டீர்கள்.

மஹான்கள் வரலாறு - ௩௩

7௪௯. **இறைவன் உண்டு! இறைவன் இல்லை!!**

1. உன் அனுபவ ஞானம் தோன்றும் முன்; **"உலகமும் பொருளும் தோற்றினால்** அவற்றை இயக்க இறைவன் உண்டு"!.
2. உனக்கு அனுபவ ஞானம் ஸ்வயமாகிவிட்டால்; **உலகமும் பொருளும் உனக்கு தோற்றவில்லையானால்** இறைவன் இல்லை"!

ஸ்வய ஞானானுபவ விளக்க உரை - ௯

750. **உனக்கு அன்னியமாய் எந்த பொருளும் இல்லையடா!** எந்த பொருளும் உன் சொரூபமே! **துவைதம்** (இரண்டு) இல்லவே இல்லையென்று உறுதி நிச்சயம் செய்வாய்! அனைத்தும் அந்த காலாதீதமான அந்த ஒன்றே என உறுதி செய்! "அதுவே நீ; நீயே அது" **இது ஸத்யம்!**

ஸ்வய ஞானானுபவ விளக்க உரை - 11, 1௨

751. **அனைத்தும் நன்மைக்கே!**

உன் உடைமைகளுக்கோ, உன் தூலத்திற்கோ, **தாங்க முடியாத இழப்பு** வரும் காலும் மனம் சேர்ந்து போகாமல்

எந்த பயனும் இல்லாமல், **அனைத்தும் நன்மைக்கே** என்ற திட உறுதியுடன் அந்த ஒன்றிலேயே ஒன்றி இருந்தால் அது **அனுபவ ஞானமாகும்.** அது வாய் ஞானம் ஆகாது!

ஸ்வய ஞானானுபவ விளக்க உரை - 22

752. **அடே அறிவில்லாத மனிதா! நீ கெட்டுப் போனாயே! உன் உள்ளம் கெட்டுப் போனதே!**

1. **வாழ்வை நம்பாதே!** வாழவைப்பவனை நம்பு!!
2. **அவன் கொடுத்த பொருளை நம்பாதே!** அதை கொடுத்தவனை நம்பு!!
3. **உடல், உறவு ஆட்டத்தில் மயங்காதே!** உன்னை **ஆட்டுவிப்பவனை** உணர்!!
4. **பசி; பணம்; ஸ்ரீபகவான்;** எனப் போகாதே! ஸ்ரீபகவான்; பணம்; பசி; என வருவாயாக!!

காவிரி அன்னையுடன் உரையாடல் - 30

753. உலகம் கெட்டாலும், ஊர் கெட்டாலும், உன் சமூகம் கெட்டாலும், உன் குடும்பம் கெட்டாலும், நீ கெடாமல் அந்த ஒன்றிலேயே ஒன்றுவாயாக! **நலம் பெறுவாய்; சுகம் பெறுவாய்!!!** "இதுவே எம் ஆசி"!!

காவிரி அன்னையுடன் உரையாடல் - 30

754. **சாக்ஷாத்காரம் நிலை பெற!**

குழந்தாய்! என்னதான் ஸாஸ்திர, வேதபாடம், மந்திரங்கள், அத்யயனங்கள், செய்தாலும், **"எல்லாம் ஒன்றே"** என்ற **அத்வைத உணர்வு** இல்லையாயின், "பேத உணர்வும், பேத பார்வையும்" சாமான்யமாக போகாது. இவை

போகவில்லையாயின், ஆழ்ந்த ஓர்மித்த பக்தீயும்; ஸ்வய ஞானானுபவ **"சாக்ஷாத்காரம்"** (ஆத்ம ஞானம்) பெறமுடியாது.

பக்தர்கள் சரித்திரம் - 9, 10

755. **ஞானப் பழம் என ஆக!** பற்பல ஞான சாஸ்திரங்களும், அதனதன் நிலைக்கு தக்கபடி, பலன் தரும். ஆனால் இந்த **"ஆத்ம ஞானம்"** மட்டும்

1. பூர்வ புண்ணியம்,
2. இறை கடாக்ஷம்,
3. ஸ்ரீமஹான்கள் ஆசி,
4. ஸ்ரீஸத்குரு அனுபவ ஞான பயிற்சி,
5. அந்த மாணவனின் **"சிரத்தை"!** ஆகிய இந்த ஐந்தினாலும்தான், **ஞானப் பழம் ஆக முடியும்!!**

பக்தர்கள் சரித்திரம் - 15

756. **ஸ்ரீபகவான் கண்ணன் வாக்கு!**

எம் தரிசனத்தினால் மட்டும் முக்தி இல்லையென்றும். ஸ்ரீகுரு தரிசனமும், ஸ்பரிசனமும், சேவையும், வாக்கியார்த்த சிரத்தா சேவையும், பெற்றால்தான் முக்தி உண்டு.

பக்தர்கள் சரித்திரம் - 22

757. 1. மண் தான் பானை ஆனது; பானை மண் ஆனதில்லை; பானை உடைந்தால் மண் ஆகும்!

2. அது போல பரமே கர்த்தாக்களாகவும், ஜீவனாகவும் ஜகமாகவும் ஆனது. பானை உடைந்து மண் ஆனது போன்று **கர்த்தாக்களும், ஜீவனும், ஜகமும்** ஆகிய

**"நாம ரூபம்"** அழிந்தால் **பரம் ஒன்றே** எஞ்சி **இருக்கும்!!**

பக்தர்கள் சரித்திரம் - 95

758. **இந்த கர்த்தாக்களையும் ஜீவனையும் உலகையும் உடைத்தெறிய வேண்டும்!**

உடைத்தெறிய வேண்டுமென்றால் அந்தந்த கற்பனா நாம ரூபங்களை மனதால் ஸ்மரிக்காமல் அனைத்தும் அந்த காலாதீத ஒன்றே என்றும்; அதுவே நாம் வணங்கும் தேவ தெய்வங்கள் என்றும்; அதுவே நாம் என்றும்; நாம் அது என்றும்; வழுவாத உறுதி நிச்சயம் வேண்டும்!

பக்தர்கள் சரித்திரம் - 95

759. **எந்த வினாடியும் உணர்ச்சிகளுக்கு அடிமையாகாதே!** இனம், மதம், மொழி, இவைகளை பிரிக்காமல் அனைத்தும் **"நம் இறைவனே"** என்றும். அவனும் நாமும் வேறல்ல **"ஒன்றே"** என்றும்; நாமும் இறைவனும் **அந்த காலாதீத ஒன்றே** என்றும்; அனைத்தும் அந்த ஒன்றுக்கன்னியம் இல்லையென்றும் அது நலமே என்றும்; "அது சுகமே" என்றும் உன் உள் உணர்வால் உணர்வாயாக. உன்னால் முடியும்.

பக்தர்கள் சரித்திரம் - 109

760. **போதும் என்ற திருப்தியும்,** நிறைந்த மனமும்; இருந்தால் நின்மதி உண்டு!!! **"நின்மதி"** இருந்தால் பிராரப்தத்தை வெல்லலாம். இது ஸத்தியம்.

பிராரப்தத்தை பரகர்மா வெல்லும் - 2, 3

761. நின்மதி என்றாலே சாந்தி, மௌனம், ஆனந்தம் என பொருள்படும்.

பிராரப்தத்தை பரகர்மா வெல்லும் - 6

762. **சர்வார்ப்பணத்தில் பலன் இல்லை!**
அதை ஏன் செய்ய வேண்டும்!

1. **"சர்வார்ப்பணத்தில்" எந்த பலனும் எவருக்கும் இல்லை!** காரணம் அது கொடுக்கும் வஸ்தும் இல்லை; அதை வாங்கும் ஈஸ்வரனும் இல்லை.
2. பின் சர்வார்ப்பணம் ஏன் செய்கின்றோம் என்றால்? "மனதின் பிணைப்பும், வினையின் தொகுப்பும்" எண்ணத்தாலே வந்தது தான். ஆகவே **எண்ணத்தைக் கொண்டே எண்ணத்தை கெடுத்து இரண்டு எண்ணத்தையும் விடுவதற்கே சர்வார்ப்பணம் செய்கின்றோம்.**

பிராரப்தத்தை பரகர்மா வெல்லும் - 7

763. **விதி உண்டு! விதி இல்லவே இல்லை!**

1. உங்கள் உடலுக்கும், அது சம்பந்த உறவுகளுக்கும், அதன் உடைமைகளுக்கும், நீங்கள் காணும் அனைத்திற்கும் விதி (பிராரப்தம்) அவஸ்யம் உண்டு! உங்கள் **ஞான சாதனைக்கு விதி இல்லவே இல்லை.**
2. "மனோமய மயக்கத்திற்கு விதி உண்டு!" "மனோ மஹா சாதனைக்கு அவஸ்யம் விதி இல்லை!!"

பிராரப்தத்தை பரகர்மா வெல்லும் - 10

764. ஸ்ரீபாதங்களின் தூளியே **ஸ்ரீபகவான்** என்றும்; ஸ்ரீபகவானே தூளி என்றும்; **அதுவே ஆத்மா என்றும்; "அதுவே நாம்!" "நாமே அது!"** என பிரமாணமாக உணர்த்துவது **திருவடியே ஆகும்!!!** எல்லாம் ஒன்றே! அது நலமே! அது யாமே! அது நீங்களே! இது ஸத்தியம்! இது ஸத்தியம்!! இது ஸத்தியம்!!!

திருவடியின் ரகசியம் - 27

765. **பணிவின் சிறப்பு!**

1. **"பணிவே" பரமபதமும்** ஆகும்! **"பணிவே"** பர **சொரூபமும்** ஆகும்!!
2. பணிவு இல்லையானால் எதையும் சாதிக்க முடியாது!
3. பணிந்தால் **"பாதகங்கள்"!** நீங்கும்.
4. பணிந்தால் **"பாத கமலம்"!** சாத்தியமாகும்.
5. பணிந்தால் பாதம் என்னும் **"திருவடியும்"** அதன் அம்ஸ தூளியும், சாத்தியமாய், அதன் அம்ஸ **"ஆத்மா"! நாம் ஆகவும் "நாம்"! ஆத்மாவாகவும் ஆவோம்** என சொல்லி, அதுவே நீங்கள் என முடிக்கிறோம். அதுவே யாம்! அதுவே நீங்கள். இது ஸத்தியம்!

திருவடியின் ரகசியம் - 28

766. நான் அற்ற நிலையில் நீயே அவனாகி! அவனே நீ ஆகி! அவனும் நீயும் அதுவாகி! இருக்கும் நிலையில் **நீ பிறக்கவே இல்லை!**

பொங்கல் பரிசு - 2

767. நாம, ரூப, ஜக வாழ்வில், எக்கேள்வியும் கேட்காதே. தூல வரவு செலவு! தூல போக்கு வரவு! தூல கொடுக்கல் வாங்கல்! தூல பண்டபரிவர்த்தனம்! ஒழுங்காக நடைபெறுகிறதென **"அடங்கி"** இருப்பாயாக.

பொங்கல் பரிசு - 6

768. 1. இறை குரு உணர்வோடு பொறுமையுடன் **எண்ணி** காரியம் செய்தால்; நலமே தோற்றும்! தீமை தோற்றாது!

2. ஆத்திரம் அவசரத்துடன், ஓர் **"முடிவு"** எடுத்தால் சந்தேக கலக்க பயம் உண்டாகும்!.

பொங்கல் பரிசு - 6

769. வாழ்வு வேணும் என்றால் **நரகமே!** சாதனையில் **"நான்"** முழுமையாக அழிந்தால் அதுவே **முக்தி!**

பொங்கல் பரிசு - 6

770. 1. **நீ அடங்கினால்** உலகமும் ஸ்ரீபகவானும் உன்னுள் அடங்கும்.

2. **நீ அடக்கினால்** உலகம் உன்னை அடக்கி ஒடுக்கிவிடும். அங்கு ஸ்ரீபகவான் கிருபையையும் நீ பெறமுடியாது .

பொங்கல் பரிசு - 7

771. 1. கல்லாலான தேவ தெய்வத்திலும்!

2. மண்ணாலான ஆலயங்களிலும்!!

3. பிரேம் போட்ட படங்களிலும்!!!

"யாம்" இல்லவே இல்லை, என ஸத்தியமாய் உணர்வாயாக! **"யாம்"** (ஸ்ரீகண்ணன் & ஸ்ரீபாபா) உன்னுள்ளே **யாமாய்!** எம்முள்ளே **நீயாய்!** அனைத்திலும் **"நாமாய்"** இருக்கிறோம் என்பதே ஸத்தியம்!

ஜெயம் கடிதம் - 22

**772. அனைத்தும் ஒன்றே அது நாமே என்ற பரிபூரண நிலைபெற!**

1. குற்றம் குறைகள், பேத உணர்வுகள், விருப்பு வெறுப்புகள் போன்ற **"குணதோஷங்கள்"** முழுமையாக நீக்கப்பட வேண்டும்.
2. **"ஓர் அணுப்பிரமாணம்"** மேலே கூறியவைகள் இருந்தால் "மஹான்கள் ஆசியோ, தெய்வ தரிசனமும் கிருபையும் பெற்றாலும், ஸ்ரீஸத்குரு ஆசி முழுமையாக இருந்தாலும்" உங்களால் **"அது நாம்"** என்ற பரிபூரணத்துவம் பெறமுடியாது.

ஓர் உண்மை - 11

**773. பிரம்மானந்தம் எல்லோருக்கும் கூடுவதில்லை என்ன காரணம்?**

1. பசியின் வேட்கை உள்ளவனுக்கு மட்டும் எப்படி பசியின் **"உணர்வு"** தெரியுமோ;
2. தாக வேட்கை உள்ளவனுக்கு மட்டும் எப்படி தாகத்தின் **"உணர்வு"** தெரியுமோ;
3. மேற்படி இவ்விரண்டும் ஏற்பட்டவனுக்கு மட்டும் தான் அந்த அனுபவ சுவையை **உணர முடியும்;**

4. மற்றவர்களுக்கு தொட்டு காட்டவோ, சுட்டிக் காட்டவோ, விளக்கம் கொடுக்கவோ **"எப்படி முடியாதோ"** அதே நிலையில்; **"ஞான வேட்கை"** உள்ளவர்களுக்கு மட்டும் தான் இதை **"அறிவுபூர்வமாக" "உணர்த்த"** முடியும் இதுவே பிரமாண உண்மை!

ஓர் உண்மை - 12

774. 1. **விஷ்ணு** என்றால் **ஆகாயம் போல் சர்வ வியாபகம்;** அதாவது ஆகாயம் போல் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறது.

2. **நாராயணா** என்றால் ஜல சொரூபமாக எங்கும் வியாபித்து **சர்வ மங்களங்களையும்** கொடுக்கும் என்பதாகும்.

3. **சிவம்** என்றால் பிரவர்த்தியும் இல்லை; கர்மாவும் இல்லை; **"சும்மா சுகமாக"** இருக்கவும் என பொருள்படும்.

4. **"ஹரி"** என்றால் காலாதீத அந்த ஒன்றை அறிந்து **அறிவு சொரூபமாக இருப்பாயாக** என பொருள்படும்.

5. **ஹரி, ஹர, பிரம்மா** என்றால் **"ஸத்தியம் பேசி;** தர்ம சொரூபமாகி; அந்த **பிரம்மமாக"** இருப்பாயாக எனப் பொருள்படும்.

6. **ஹரி ஓம்** என்றால் **அந்த ஒன்றை அறிவோம்** என்றும், அறிவு சொரூபமாகவே இருப்போம் எனப் பொருள்படும்!

ரிபு முனிவரும் ரிபு கீதையும் - 3

775. 1. மனித மனம் படைத்தவன் தவறுவது **மனித இயல்பு !**
2. அதை உணர்ந்து திருந்துவது தான் **தெய்வீக இயல்பு!!**
3. இவ்விரண்டையும் மறந்து ஆனந்தமாத்திரமாயிருப்பது **பரமார்த்தீகம்!!!**

ரிபு முனிவரும் ரிபு கீதையும் - 14

776. 1. குற்றம் குறை காண்பதே **உலகம்!**
2. எதிலும் நிறைவைக் காண்பதே **தெய்வீகம்!!**
3. எங்கும் பரிபூரணமாக இருப்பதே **பரமார்த்தீகம்!!!**

ரிபு முனிவரும் ரிபு கீதையும் - 16

777. **"எந்த சாதகனோ"**; அல்லது **"சந்நியாசியோ"**, ஸத்தியத்தை நோக்கிப் போகப்பட்டவனுக்கு; **"பணம் (பொன்) பெண்"** (விஷய ஆசை) அணுப்பிரமாணமாயினும் இருக்குமாகில் அவன் சாதனையில் பாதியிலேயே திசை திருப்பப்படுவான். **"இது கலியுக பிரமாண உண்மை."**

ரிபு முனிவரும் ரிபு கீதையும் - 17/1

778. ஈசனோ, ஜீவனோ, உலகமோ காலாதீத **"அந்த ஒன்றின்"** விளையாட்டேயன்றி வேறு எந்த விகாரமும் இல்லை; அதன் விவகாரமும் இல்லை!

ரிபு முனிவரும் ரிபு கீதையும் - 17/5

**779. பயிற்சியும் முயற்சியும் தேவை இல்லாத நிலை! தேவையான நிலை!!**

1. ஸாது தர்மம் எனச் சொல்லப்பட்டது; **இயல்பாகவே அமைதி காப்பதே!** இங்கு எந்த பயிற்சியும் முயற்சியும் இல்லை எனலாம்.
2. இக்கலியில் **"குணவிகாரமும் அதனால் மன எழுச்சியும்"** தோன்றியதால் தான் சாதனையென்ற பெயரில் முயற்சியும் பயிற்சியும் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது .

ரிபு முனிவரும் ரிபு கீதையும் - 17/6

**780. ஸாது தர்மம்!**

1. ஓர் ஸாதுவானவன் தம்மை தாமே அழித்துக் கொள்வானே தவிர புலன்களால் **எழுச்சியை** காட்டமாட்டான்.
2. இதற்கு உதாரண புருஷர்கள் **ஜெயதேவ், கபீர், நாமதேவ், துகாராம்** இப்படி இன்னமும் அனேகரைச் சொல்லலாம் இவர்கள் எந்த தர்மத்தையும் அனுஷ்டிக்காமல் **"ஸாது தர்மத்தை"** மட்டும் அனுஷ்டித்தவர்களாகும்.

ரிபு முனிவரும் ரிபு கீதையும் - 17/6

**781. பொறுமையை கடைப்பிடிக்க முடியாத நிலை, முடியும் நிலை!**

1. எதையும் **"என்னுடையது"** என்ற அபிமான எண்ணம் உறுதியானால் அங்கு **"பொறுமையை"** கடைப்பிடிக்க முடியாது!

2. எல்லாம் **"அவனுடைமையே"** என்ற எண்ணம் உறுதியானால் அங்கு **"பொறுமையை"** கடைப்பிடிக்க முடியும்!!

பொறுமையின் பெருமை - 15

## 782. ஓர் ஜீவனை திருத்தமுடியாத நிலை!

நம் பொன், பொருள் பலத்தாலேயோ; அதிகார அஹங்கார சொரூபத்தாலேயோ; படைபல பக்கபலத்தாலேயோ; பட்டம் பதவிகளினாலேயோ; உலகின் எந்த ஆதிக்க பலத்தாலேயோ; **"நான்"** என்றும் **"என்னுடையது"** என்ற அஹங்கார அபிமான பலத்தாலேயோ; **"ஓர் ஜீவனை திருத்தமுடியாது"**!!

பொறுமையின் பெருமை - 16

## 783. ஓர் ஜீவனை திருத்தும் நிலை!

அன்பினாலும், அரவணைப்பினாலும், பணிவினாலும், கனிவினாலும், நாம் தெய்வத்துள் அடங்கி இருப்பதனாலும் தான் நாம் ஓர் ஜீவனை திருத்த முடியும்!! அடங்கு அடக்காதே!!!

பொறுமையின் பெருமை - 16

## 784. ஆத்மா எது?

சப்த, ஸ்பர்ச, ரூப, ரஸ, ஸ்கந்த வடிவமான இந்திரிய நுகர்ச்சிகளை எந்த அறிவால் மனிதன் அனுபவிக்கிறானோ, **அந்த அறிவே ஆத்மாவாகும்.**

கடோபநிஷத் - 92

785. 1. ஸத்தியம் பேச வேண்டும்!
2. தர்மம் செய்ய வேண்டும்!!
3. நாவை அடக்க வேண்டும்!!!
4. வாக்கை காக்க வேண்டும்!!!!
5. கருணையோடு இருக்க வேண்டும்!!!!!

கலியுக தர்மம் - 2

786. **தர்மம் இரண்டு வகைப்படும்!**
1. உணவு, உடை, இருப்பிடம், பண்டப் பொருள் கொடுப்பது ஒன்று.
2. வார்த்தையினால் கொடுப்பது. அதாவது ஒருவன் ஒருவனுக்கு **ஸத்யம் பேசி உண்மை நிலையை உணர்த்துதல்** என்று இப்படி இரண்டாகும்.

கலியுக தர்மம் - 7

787. **புண்ணியம், பாபம்!**
கால்களால் நடந்தும், கைகளால் கொடுத்தும், வாங்கியும் நடைபெறும் கர்மாக்கள் **"இறைவனை எண்ணாமல் இறைவனுக்கு சமர்ப்பணம் பண்ணாமல்"** செய்பவை அனைத்தும் நிலை கண்டு **புண்ணிய பாப** கர்மா எனப்படும். இதற்கு பிறவி அவசியம் உண்டு.

கலியுக தர்மம் - 13

788. **புண்ணியம், தர்மம்!**
இறைவனை எண்ணி அவனுக்கே சர்வார்ப்பணமாக செய்யும் கர்மா அனைத்தும் **புண்ணியம்** என்றோ **தர்மம்** என்றோ அமையும். ஆனால் அவசியம் **பாபம்** கிடையாது.

**அவசியம் மனுஷ்ய ஜன்மா உண்டு!** பின்னும் சத்கர்மா செய்யும் வாய்ப்பும் உண்டு!

கலியுக தர்மம் - 13&14

789. **பிறவி அறும் தர்மம்!**

1. வாக்காக பயன்படும் **ஒலியானது, ஒளியாக மாற வேண்டும்!**
2. இறைவன் நாமாவையும், அதை உணரும் நிலையையும், உடல் உலக எண்ணம் தோற்றாமல் **அனைத்தும் இறைவனே** என்ற பேருணர்வை ஊட்டுவதாகும்.
3. நிலை கண்டு, இடம் கண்டு, பக்குவம் கண்டு, அனைத்தும் இறைவனுக்கே என **சர்வார்ப்பணம்** செய்யும் பக்குவத்தை ஸத்திய வாசகத்தை ஒருவர் ஒருவருக்கு வழங்குதல் **பிறவி அறும் தர்மம் செய்ததாகும்!!**

கலியுக தர்மம் - 14

790. **மாதா, பிதாவின் வாக்கிய சிரத்தை தேவை, தேவையில்லாத நிலை!**

1. உங்கள் அன்னையும் பிதாவும் பக்தி சம்பந்தமான இறை வழிபாட்டுக்கு உரியவர்களானல் அவர்கள் **"வாக்கிய சிரத்தை"** உனக்கு அவஸ்யம் தேவை! இங்கு! தான் உங்கள் தந்தை சொல்லே வேத மந்திரம் எனவும் உங்கள் தாய் சொல்லே மோக்ஷம் எனவும் ஆகிவிடும்!
2. அவர்கள் இருவரோ ஒருவரோ **ஸத்தியத்திற்கு** உபகாரமாக இல்லையானால் **வாக்கிய**

**சிரத்தை வேண்டாம்.** ஆனால், அவர்களுக்கான பணிவும், பக்தியும், சேவையும் அவஸ்யம் வேண்டும்.

கலியுக தர்மம் - 49

791. **புறச்சின்னம் தேவை இல்லாத நிலை!**

ஆரம்ப சாதனை காலங்களில் **புறச்சின்னம்** அவசியம் தேவை. நெற்றியில் விபூதியோ திருநாமமோ அவஸ்யம் தரிக்க வேண்டும்! உங்கள் புறச்சின்னமே அகவுணர்வை பெருக வைக்கும். **சாதனை நிறைவுறும் போது** புறச்சின்னத்தை நிறுத்திவிடலாம்!

கலியுக தர்மம் - 54 & 55

792. 1. **நிஷ்டையென்றால் நீ** இஷ்டப்பட்டால்தான் கிடைக்கும். அதாவது இறை சிந்தனையோடு ஒன்று பட்டால் அவஸ்யம் கிடைக்கும்.

2. **அதிர்ஷ்டம்** என்றால் அது இஷ்டப்பட்டால் உனக்கு கிடைக்கும்.

கலியுக தர்மம் - 58

793. **உங்கள் காணிக்கை** (உங்கள் பொருளல்ல, பிரசாதமல்ல) **உங்கள் உள்ளமே!** இறைவன் உங்கள் உள்ளத்தைத்தான் காணிக்கையாக கேட்கிறான்! உங்கள் உள்ள உருக்கத்தையும் உங்கள் கண்ணீரையுமே காணிக்கையாக கேட்கிறான்!

கலியுக தர்மம் - 69

794. 1. கிருத யுகம் **மஹான்கள்** ஆயுள் **ஒரு கோடி!**

2. திரேதா யுகம் **மஹான்கள், தபஸ்விகள்** ஆயுள் **ஒரு லக்ஷம்!!**

3. துவாபர யுகம் **பிரம்ம ரிஷிகள், ராஜ ரிஷிகள்** ஆயுள் **ஒரு ஆயிரம் !!!**

4. கலியில் **மனித** ஆயுள் **ஒரு நூறு ஆகும்.**

கலியுக தர்மம் - 14

715. **திருஷ்டி சிருஷ்டி! சேர்க்கை சிருஷ்டி!**

திரேதா யுக கடைசியில் இருந்த மஹான்களும், ராஜரிஷிகளும், தபஸ்விகளும் **தமக்குள் இருக்கும் சக்தியை** பிரித்தெடுத்து ஓர் தூலம் **துணையாக** ஏற்படுத்தி கொண்டார்கள். இவையே பெண் சொரூபமாகும். அங்கும் **திருஷ்டி சிருஷ்டியே** தவிர **சேர்க்கை சிருஷ்டி** இல்லவே இல்லை.

கலியுக தர்மம் - 15

716. **திருஅண்ணாமலை மற்றும் இமயமலையின் சிறப்பு!**

1. அந்த காலாதீதமான அந்த ஒன்றானது விஷ்ணு, பிரம்மா, சிவன் என தன்னை வகுத்துக் கொண்டது. அப்போது இப்பூமியில் ஒரே ஜலமயமாகவே இருந்தது.

2. முதலில் நிலப்பரப்பாக உண்டாகிய இடம் **திருஅண்ணாமலை** ஆகும். பின் **இமய மலையாகும்!**

3. இதில் **இதயம் திருஅண்ணாமலை,** சிரம் அதாவது தலை அதாவது **சிகரம் இமயமலை.** அதன் முழுமையான **சரீரம் பாரத பூமி** ஆகும்.

கலியுக தர்மம் - 16

௭௯௭. ௧. நாம ரூபம் அனைத்தும் **தூல விருத்தி** என்றும்,

௨. அவற்றில் குண சம்பந்தப்படுத்திப் பார்த்தால் **காட்சி விருத்தி** என்றும்,

௩. அவற்றை மனம் அசையாமல் (குணதோஷம் இல்லாமல்) பார்த்தால் **சாட்சி விருத்தி** என்றும்,

௪. அனைத்தும் அந்த காலாதீத ஒன்றாக உணர்ந்தால் **அகண்டாகார விருத்தி** என்றும்,

௫. உணர்வுக்கும் எட்டாத **சுக சொரூபமாக** உணர்ந்தால் **பிரம்மானந்த சமுத்திரம்!** எனவும் ஆகும்!

கலியுக தர்மம் - ௧௪௫

௭௯௮. **ஸ்ரீஸத்குரு தூளி பாபாவின் அமுத வாக்கு!**

உங்களுக்காக எம் பணி தொடர்கிறது.

௧. யாம் மனிதனை ஜயிக்க வரவில்லை. **மனதினை** ஜயிக்க வந்த **ராணுவ வீரனாகும்.** மனதை ஜயித்தவன் ஞானி!

௨. யாம் மில்ட்ரிமேன்! (ஆங்கிலம்):- ராணுவ மனிதன் (தமிழ்) அதாவது இங்கு **(ரா)** என்பது **(அ)** என மாறுகிறது. அப்படியானால் **அணு மனிதன்** ஆகும்.

௩. அதாவது **அணு = ஆத்மா. ஆத்மா = பரமாத்மா. பரமாத்மா = பரப் பிரம்மம்.**

௪. **மனிதன்** என்றால் **மனதை உடையவன்** மனிதன்.

௫. மனதை ஜயித்தால் **அறிவு.**

6. அறிவை ஜயித்தால் **பேரறிவு.**

7. பேரறிவை ஜயித்தால் **ஜீவன் முக்தி.** இந்நிலையில் யாம்! அணு மனிதன்! ஆகும். **காணும் நிலை மனிதன். உணரும் நிலையில் பரம்** ஆகும்.

- கடிதம்




எல்லாம் நீ!




Abode of Love

You Are Everything!